# இன்பத்தமிழ்

(வானலையில் வந்தவை)

கலாபூஷணம், சைவப்புலவர்
சு. செல்லத்துரை

இணுவில் - இளவாலை
சிவகாமசுந்தரி செல்லத்துரை
நான்காம் ஆண்டு நினைவு நூல் - 5

03.07.2014

தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களவெளியீடு

உ

சிவமயம்

# இன்பத்தமிழ்

## (வானலையில் வந்தவை)

**கலாபூஷணம், சைவப்புலவர்**

**சு. செல்லத்துரை**

இணுவில் – இளவாலை

**சிவகாமசுந்தரி செல்லத்துரை**

நான்காம் ஆண்டு நினைவு நூல்–5

03.07.2014

தெல்லிப்பழைக் கலை இலக்கியக்கள வெளியீடு

ஜய வருடம் ஆடி 03ஆம் திகதி

**இன்பத் தமிழ்**

(சைவத் தமிழின்பம், இலக்கியத் தமிழின்பம்)

**கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை**

உரிமை:

**ஆசிரியருக்கு**

பதிப்பகம்:

**கீதா பப்ளிகேஷன், கொழும்பு - 13**

வெளியீடு:

**தெல்லிப்பழைக் கலை இலக்கியக்கள வெளியீடு**

# முன்னுரை

என்றும் என்னுள் கலந்திருக்கும் எனதருமை நாயகி சிவகாமசுந்தரியின் நாலாவதாண்டு நினைவு நூலாக '**இன்பத் தமிழ்**' எனும் இந்நூல் வெளிவருகின்றது.

இது **சைவத்தமிழின்பம், இலக்கியத்தமிழின்பம்** எனும் இரு பகுதிகளையுடையது. வானொலியில் பேசிய பேச்சுக்களை நூலாக்கி வெளியிட்டால் அவை நிலைத்திருந்து பலருக்கும் பயன்தரும் எனும் பெரியோரின் ஆலோசனைக்கமைய அவை நூலாக்கப்பட்டுள்ளன.

இலங்கை வானொலியில் கலைக்கோலத்தில் பேசிய பேச்சுக்கள் சிலவற்றின் தொகுதி கடந்த ஆண்டில் **இலக்கியத் தமிழின்பம்** எனும் பெயரில் சிவகாமியின் மூன்றாவதாண்டு நினைவு நூலாக வெளி வந்தது.

இபபொழுது, இலங்கை வானொலியில் நிகழ்த்திய சைவப் பேச்சுக்கள், நற்சிந்தனைகள் சிலவற்றின் தொகுதி **சைவத் தமிழின்பம்** எனும் பெயரில் சிவகாமியின் நாலாவதாண்டு நினைவு நூலாக வெளிவருகிறது.

இவற்றின் பயன்பாடுகருதி இருநூல்களையும் சேர்த்து **இன்பத்தமிழ்** எனும் ஒருநூலாக்கப்பட்டுள்ளது.

எனக்கு ஊக்கம் தந்து வழிகாட்டி இலங்கை வானொலிக் கலைகோலத்தில் பேசவைத்த தொடர்பியல் வித்தகர் செல்வி

சற்சொரூபவதி நாதன் அவர்களுக்கும், அதேபோலச் சைவப் பேச்சுக்கள், நற்சிந்தனைகள் பேசவைத்த திருமதி கலைமகள் மகேந்திரன் அவர்களுக்கும் நன்றியுடையேன்.

அரிய அணிந்துரை தந்த, ஆழ்ந்த அறிவும் அனுபவமும் மிக்க திருமதிகள் ஞானலட்சுமி ஞானசேகர ஐயர் அவர்களுக்கும், கோகிலா மகேந்திரன் அவர்களுக்கும் நன்றியுடையேன்.

வழமைபோல நூலை அழகாக அச்சேற்றித்தந்த கொழும்பு கீதா பப்ளிகேஷன் நிறுவனத்தாருக்கும், நூலை வெளியீடு செய்யும் தெல்லிப்பழைக் கலைஇலக்கியக் களத்தினருக்கும் நன்றியுடையேன்.

**நூலாசிரியர்**

# பதிப்புரை

உலகம் உய்வதற்கென்றே காலத்திற்குக் காலம் உன்னதமான சான்றோரை உருவாக்கித் தன் பணியை இலகுவாக்கிக் கொள்கிறான் இறைவன். பண்டு தொட்டு இன்றுவரை மக்கள் வாழ்வதற்கென்றே வழிகாட்டிய பலரை நாம் வரிசைப்படுத்தலாம். நோயறிந்து மருந்தளிக்கும் மருத்துவர்களாக சமூகம் நலிடையும் போதும் மேன்மை பெற விழையும்போதும் அவர்கள் மருருந்தும் விருந்தும் அளிக்கிறார்கள்.

நம்மிடையே அத்தகைய ஒரு சான்றோராகத் திகழ்பவர் கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள். ஆசிரியராய் தன் பணியை ஆரம்பித்து இளவாலை மெய்கண்டான் தமிழ் மகா வித்தியாலயத்தின் புகழ்பூத்த அதிபராய் விளங்கி இன்றுவரை தொடர்ந்து சமூகநலங்கருதி, பணிபுரிகிறார். தன் மாணவர்களை மானிடப் பண்போடு வாழ்பவர்களாக உருவாக்கியவர். முத்தமிழிலும், சைவத்திலும் தான் கொண்ட அறிவையும் ஆற்றலையும் மக்கள் மனத்திருள் நீக்கப் பயன்படுத்துபவர்.

பன்முக ஆளுமையாளராக விளங்கும் இவர் சமூகநல மன்றங்களோடு இணைந்து தனது சொற்பொழிவுகள் மூலமும் நாடக ஆற்றுகை மூலமும் சமூகநலப் பணியில் ஈடுபட்டுள்ளார். தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் செயற்பாடுகளில் பங்கு கொண்டதோடு கடந்த சில வருடங்களாக தலைவராக இருந்து இலக்கியப் பணி புரிகிறார். களத்தின் ஒரு கூறாகிய சோலைக்குயில் ஆற்றுப்படுத்தல் மையம் இணைச் செயலர், இயக்கிய வித்தகர் திருமதி.கோகிலா மகேந்திரனின் பொறுப்பில் இவரது தலைமையில் உளநலச் சேவை புரிகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சொல் ஒன்றும் செயலொன்றுமாகப் பலர் வாழும் இவ்வுலகில் மனம், வாக்கு, காயம் என்பவற்றால் தூய்மையான செயற்பாடுகளைக் கொண்டவராய் வாழ்ந்து வருபவர். எனவே அகிலத்திற்கு அறிவுரை கூறும் தகைமையோடும் உரிமையோடும் திகழ்பவர். இல்லறத்தை நல்லறமாய் நடத்தி வாழ்வாங்கு வாழ வழிகாட்டியவர். தன் ஆற்றலை வெளிக்கொணர்ந்து, தனக்கோர் கிரியா ஊக்கியாக அமைந்தவர் தனது மனைவியார் என அவர் கூறுவதுண்டு.

அத்தகைய சிறப்புக் கொண்ட அமரர் சிவகாம சுந்தரி செல்லத்துரை அவர்களின் மறைவின் பின்னர் அவரின் நினைவாக ஆண்டுதோறும் சிறந்த நூல்களை ஆக்கி வெளியிட்டு வருகிறார். ஏற்கனவே சைவசமயம், வாழ்வியல் என்பவற்றைச் சார்ந்த பதினைந்து நூல்களை எழுதியுள்ளார். துணைவியாரின் மறைவின் பின் எழுதும் ஆக்கங்களை அவருக்கே சமர்ப்பணமாக்கித் தருவது இவரது ஆழ்ந்த அன்பின் வெளிப்பாடாக உள்ளது.

சைவமும் தமிழும் நமது சமூகத்தின் கண்கள். அவை வாடாதிருக்கும் வண்ணம் செழிக்கச் செய்பவர். அரங்குகளில் மட்டுமன்றி வானலைகளிலும் அவரது ஆழமான கருத்துக்கள் தெளிவான தொனியோடு கேட்போர் உள்ளத்தை வசப்படுத்தும்.

காற்றலைகளில் கலந்தவற்றைச் சிறைப்பிடித்து "இன்பத்தமிழ்" என்ற தலைப்பிட்டு நூலாக்கியுள்ளார். தமிழ் இலக்கியம் சார்ந்த உரைகள் "**இலக்கியத் தமிழ் இன்பம்** " என்றும் சைவம் சார்ந்த உரைகள் "**சைவத்தமிழ் இன்பம்**" என்றும் உபதலைப்புக்களோடு அமைக்கப்பட்டுள்ளது. பாலோடு தேன் கலந்தாற்போலச் சுவைத்துக் களிக்கும் வகையில் நயப்புக்கும், சிந்தனைக்கும் ஏற்ற பல செய்திகள் அவரது செந்தமிழால் சிறப்புப் பெறுகின்றன.

இணுவிலில் பிறந்து இளவாலையில் இல்லத்தரசியான அமரர் சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின் நான்காம் ஆண்டு நினைவுநூல், ஐந்தாவது நினைவு நூலாகத் தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தின் வெளியீடாக வருகிறது. களத்தின் தலைவரின் நூல் களத்தின் வெளியீடாக அமைவது மகிழ்ச்சிக்குரியது.

இவரது மொழியாற்றலும் தமிழ்ப் புலமையும் சைவசமய அறிவின் ஆழமும் பிரகாசிக்கும் இந்நூல் தமிழுலகிற்குப் பெரும் பயன்தரும் என்பது வெளிப்படையானது.

இந்நூலுக்கு அணிந்துரை அளித்த 'ஞானம்' சஞ்சிகையை வழிநடத்தும் திருமதி.ஞானலட்சுமி ஞானசேகரன் அவர்களுக்கும் இந்நூலைக் கவினுறக் கட்டமைத்துத் தந்த கீதா பப்ளிகேஷன் அச்சகத்தாருக்கும் எமது உளமார்ந்த நன்றி உரித்தாகட்டும்.

**திருமதி.இராஜி கெங்காதரன்**

**தெல்லிப்பழைக்கலை இலக்கியக்களம்** **இணைச் செயலாளர்**

## சமர்ப்பணம்

என்னுள்ளே கலந்திருந்து என்னையிங்கு வாழ்விக்கும்
என்னருமை நாயகியே என்னவளே சிவகாமி
உன்னைநான் இழந்திட்ட நான்காண்டு நினைவாயுன்
பொன்னார் திருவடிக்கு இந்நூல் சமர்ப்பணம்



இணுவில் - இளவாலை

**சிவகாமசுந்தரி செல்லத்துரை**

**1944-03-24 - 2010-07-03**



சிவகாமசுந்தரி செல்லத்துரை தம்பதியினர்

# சைவத்தமிழின்பம்

# பொருளடக்கம்

| விடயம் | பக்கம் |
|---|---|
| அணிந்துரை | 09 |
| **பேச்சுக்கள்** | |
| 01. திருவடி ஞானம் | 13 |
| 02. திருமூலர் காட்டும் சிவநெறி | 21 |
| 03. சம்பந்தரும் மெய்கண்டாரும் | 26 |
| 04. மங்கல வாழ்த்தின் மாண்பு | 31 |
| 05. சைவசித்தாந்தத்தில் வல்வினையும் மெல்வினையும் | 37 |
| 06. இறையனாரின் திருமுகப்பாசுரமும் கைச்சீட்டும் | 43 |
| 07. நவராத்திரி வழிபாடும் சகலகலாவல்லி மாலையும் | 48 |
| 08. ஆன்ம யாத்திரை | 55 |
| 09. கோமாதா குலம் காப்போம் | 62 |
| 10. இறப்பு | 73 |
| 11. அகத்தியர் தேவாரத் திரட்டு | 77 |
| **நற்சிந்தனைகள்** | |
| 01. குறைவிலாதுயிர்கள் வாழ்க | 82 |
| 02. எல்லா உயிரும் இன்புற்றிருக்க | 85 |
| 03. அறம் செய்தல் யார்க்கும் எளிது | 87 |
| 04. திரிகரண வழிபாடு | 89 |
| 05. சிவனை நினைத்து வழிபடுவோம் | 91 |
| 06. தானம் செய்யும் வழி | 93 |
| 07. தீபாவளி | 95 |
| 08. கந்தபுராணம் | 97 |
| 09. முருகப் பெருமான் | 99 |
| 10. வள்ளி திருமணம் | 101 |

# அணிந்துரை

கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள், சிவபதமடைந்த பாரியார் திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் நினைவு நூல்களை வெளியிட்டு வருகிறார். அந்த வரிகையில் ஏற்கனவே, 'வாழ்வாங்கு வாழ்தல்', 'சிவகாமிதமிழ்', 'இலக்கியத் தமிழ் இன்பம்' ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. நான்காவது ஆண்டு நினைவு நூலாக 'சைவத்தமிழ் இன்பம்' என்னும் மகுடத்தில் இந்நூல் அமைந்துள்ளது.

நூலாசிரியர் ஆழ்ந்த தமிழ்ப்புலமையும் அனுபவச் செழுமையும் மிக்கவர். ஆசிரியராக நீண்டகாலம் பணியாற்றியவர். சைவநெறியில் திளைத்தவர். நாடகம், கவிதை, இலக்கியம் ஆகிய துறைகளில் வல்லவர். சிறந்த பேச்சாளர்.

வானொலியில் அவர் ஆற்றிய சைவநெறி தொடர்பான பதினொரு வானொலிப் பேச்சுக்களும் பத்து நற்சிந்தனைகளும் இந்நூலில் கட்டுரை வடிவில் இடம்பெற்றுள்ளன.

சைவநெறி சார்ந்து மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய அடிப்படை விடயங்களை மிகவும் இலகுவான மொழியில் எளிய நடையில் சகலரும் விளங்கிக் கொள்ளத் தக்க வகையில் இந்நூலில் தந்துள்ளார். கற்றல், கற்பித்தல் தொழிற்பாட்டில் தொடர்ந்தும் ஈடுபட்டு வரும் ஆசிரியரின் அனுபவம் சார்ந்த அணுகுமுறையை ஒவ்வொரு கட்டுரையினதும் அமைப்பில் தெட்டத் தெளிவாகக் காணமுடிகிறது.

இக்கட்டுரைகள் சைவநெறிகள் தொடர்பாகவும் அவற்றுடன் தொடர்பான தத்துவ விசாரத்தையும் வழிபாட்டியல் தொடர்பான நடைமுமுறை விளக்கங்களையும் தெளிவூட்டுகின்றன. எல்லாக் கட்டுரைகளையுமே இலக்கிய இலக்கணத் திறன்கள் சார்ந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

சிவ சின்னங்களை அணிவதால் மட்டும் ஒருவர் சிவனடியார் ஆகமாட்டார். சிவபிரானை மனம் மொழி மெய்களால் அர்ச்சித்து சிவபெருமானின் திருவடிகளைத் தம் உள்ளத்தில் நிறுத்துபவரே சிவனடியார் எனப் போற்றப் பெறுவர் என்பதனை **திருவடி ஞானம்** என்னும் கட்டுரை விளக்குகிறது. சமயகுரவர் பெற்ற திருவடி ஞானப்

பேற்றினையும் திருமூலரின் திருவடி ஞானம் தொடர்பான பாடல்களை யும் இதற்கான சான்றுகளாக ஆசிரியர் தந்துள்ளார். இதன் வாயிலாகத் திருவடிஞானம் தொடர்பான தெளிவான விளக்கத்தினை பெற முடிகிறது.

**சம்பந்தரும் மெய்கண்டாரும், மங்கல வாழ்த்தின் மாண்பு,** ஆகிய தலைப்பிலான கட்டுரைகள் ஒப்புமை சார்ந்த வகையின தெனலாம்.

இறைவனின் சிவஞானம் பெறுவதற்கு பூர்வீகஞானமும் துணை யாகிறது என்பதனை திருமுறைகளின் முதல்வரான சம்பந்தரையும் சாத்திர முதல்நூலாசிரியரான மெய்கண்டாரையும் ஒப்புமை செய்து ஆசிரியர் அருமையாக விளக்கியுள்ளார். மெய் கண்டார் இரண்டு வயதிலும், சம்பந்தர் மூன்று வயதிலும் குமரகுருபரர் ஐந்து வயதிலும் சங்கரர் ஏழு வயதிலும் சிவஞானம் பெற்றுள்ளனர் என்பது பூர்வஜென்ம புண்ணியமே ஆகும். இதற்குத் தெளிவான முறையில் கட்டுரையில் விளக்கம் கொடுத்துள்ளார்.

மங்கல வாழ்த்தின் மாண்பு என்ற கட்டுரையில், ''ஒரு நூலினை ஆக்குவதற்குமுன் அதன் ஆசிரியர் அந்த நூல் தடையின்றி இனிதே நிறைவேற வேண்டுமெனத் தான் வழிபாடு செய்யும் கடவுளை வாழ்த்திப் பாடி வணங்குதல் மரபு''. இதனை விளக்கி, சிவஞான போதத்தின் மங்கல வாழ்த்துப்பாடலையும் சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தின் மங்கல வாழ்த்தையும் உதாரணமாகத்தரும் ஆசிரியர் வாழ்த்தின் உள்ளுறையாக வாழ்த்து வணக்கம் வருபொருள் உரைத்தல் என்பன அடங்கி இருக்கும் என்பதனையும் சிறப்புறக் கூறியுள்ளார்.

தோத்திரத்துக்குத் திருவாசகம், சாத்திரத்துக்குத் திருமந்திரம் என்பர். ''திருமூலர், நந்தி எம்பெருமானாகிய சிவபெருமானின் அருள பெற்று மூவாயிரம் தமிழ் எனும் திருமந்திரத்தைப் பாடினார் என்றும் இதனைத் தினமும் காலையில் கருத்தறிந்து ஓதி வழிபட்டால் ஞான முதல்வனாகிய சிவபெருமானை அடைய முடியும் என்பதையும் திருமூலரே கூறியிருப்பதை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார். திருமூலர் காட்டும் சைவநெறி என்ற தலைப்பில் அமைந்த இக்கட்டுரை மிகவும் முக்கியத்துவம் உடையது சைவம், சிவநெறி, சிவபிரான், நந்தி, சிவகதி, சைவசித்தாந்தம், முப்பொருளுண்மை, குருநெறி, சன்மார்க்கம், அன்பே சிவம், உள்ளம் பெருங்கோயில் ஆகிய விடயங்கள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. திருமந்திரத்தை தமிழ் ஆகமநூல் எனச் சிறப்பிப்பர்.

இன்று உலகம் உள்ளங்கையில் உள்ளது. நாம் விஞ்ஞான கணினி யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கடிதம் எழுதும் கலாசாரம் அருகிவருகிறது. **திருமுகப்பாசுரமும் கைச்சீட்டும்** என்ற கட்டுரையில் ஆசிரியர், சிவபெருமான் எழுதிக் கைச்சாத்திட்ட இரு திருமுகங்களைக் குறிப்பிட்டுள்ளார். ஒன்று, மதுரை சோமசுந்தரப் பெருமான் பாணபத்திரனுக்கு எழுதிக்கொடுத்தது. மற்றது, சிற்றம்பல வன் தனது பக்தனான பெற்றான் சாம்பானுக்கு கொடுத்தது. இக் கட்டுரையும் மிகவும் பயன் மிக்கதாகும்.

**சைவசித்தாந்தத்தில் வல்வினையும் மெல்வினையும்** என்ற கட்டுரையில் எந்தக் கருமங்களையும் எவர் பயன் கருதி ஆற்றினாலும் அது பிறவிக்கு ஆளாக்கும். பயன்கருதாது யாவும் சிவனுக்கே என்று ஆற்றும் செயல்கள் பிறவித் தொடர் குறைய வழிவகுக்கும் என்பதனை அடியார்களின் வரலாறுகள் மூலம் விளக்கியுள்ளார். கர்மம் மறுபிறப்பு தொடர்பான தெளிவான விளக்கத்தினை இக்கட்டுரை தருகிறது.

எமது சமய வழிபாடு பக்திமயப்பட்டது. பக்தி மூலம் பாமர மக்களும் இறைவழிபாட்டினை இயற்றலாம். இவற்றை **கோமாதா குலம்காப்போம், நவராத்திரி வழிபாடும் சகலகலாவல்லி மாலையும்** என்னும் இரண்டு கட்டுரைகள் மூலமாக விளக்கியுள்ளார். எமது சமயத்தில் பசுவை கோமாதாவெனப் பூசித்து கோபூசை செய்வது மரபானதாகும். சிவபெருமானது வாகனமான தர்மதேவதை ரிஷபம் கோமாதாவின் அருளாகும். மேலும் எமது வழிபாட்டியலில் பஞ்சகௌவியம் மற்றும் சமய சின்னமான விபூதியும் கோவின் மூலம் பெறப்படுகின்றது என்பவற்றை விளக்கி கோதரிசனம் கோடி புண்ணிய மாகும் என ஆசிரியர் விளக்கியுள்ளார்.

நவராத்திரி விழாவில், வழிபாட்டின்போது பாடப் பெறுவது குமரகுருபரர் பாடிய சகலகலாவல்லி மாலையாகும். இப்பாடல்கள் குமரகுருபரரால் ஏன் பாடப்பட்டது? அவர் இதன் வாயிலாக எத்தகைய பலனைப்பெற்றார்? என்பதனை நவராத்திரி வழிபாடும் சகலகலாவல்லி மாலையும் என்ற கட்டுரை விளக்குகிறது.

ஒருவரது குறிக்கோளானது இப்பிறவியினைத் துய்த்து ஆன்ம ஈடேற்றம் பெறுவதாகும். அதற்காக எம்மை உளரீதியாகப் பண்படுத்த நாம் என்னென்ன பாடல்களைப் பாராயணம் செய்ய வேண்டும் என்பதனை மிகவும் நேர்த்தியான முறையில் **அகத்தியர்திரட்டு** என்ற கட்டுரை மூலமாகத் தந்துள்ளார். இப்பாடல்களை ஒவ்வொருவரும்

நியமமுறையில் பாராயணம் செய்யுமிடத்து எமது ஆன்ம ஈடேற்றப் பாதைக்கு நாம் தயாராகிவிடுவோம்.

வானொலியில் ஆற்றிய நற்சிந்தனைகள் பத்தும் நூலின் பின் இணைப்பாக அமைந்துள்ளன.

மேடையில் ஒரு பேச்சினைப் பேசுவதனைவிட வானொலியில் உரையாற்றுவது சிரமமானது. தான் எடுத்த தலைப்பிற்குள் நிற்கவேண்டும் குறித்த நேரத்திற்குள் கேட்போர் பயனுறும்வண்ணம் பேச்சு அமைய வேண்டும். செவியின்பம் தருவதாகவும் இருக்க வேண்டும். இல்லையெனில் கேட்போர் வேறு அலைவரிசையைத் தேடிச் செல்வர். ஆசிரியரது நற்சிந்தனை உரைகள் கேட்போரைப் பிணிக்கவல்லன என்பதனை நாம் அவற்றை வாசிக்கும் போது அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வுரைகள் யாவும் கருத்தாழம் கொண்டவையாகவும் சிவசிந்தனையைத் தருவனவாகவும் யாபேரும் பின்பற்றக்கூடிய நடைமுறைகளைக் கொண்டவையாகவும் அமைந்துள்ளன. இவ்வுரைகளில் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய சைவநெறிகளை இலக்கியச்சுவை ததும்பத் தந்துள்ளார்.

நிறைவாக, இந்நூல் சைவத்தின் சாற்றினை தமிழ் இலக்கியச் சுவையுடன் தருகிறது. ஆசிரியர் தமது சமய அறிவினை வானொலி உரைகள் வாயிலாக உணர்வு பூர்வமான கேள்விச் செல்வமாக அளித்தது மட்டுமன்றி இன்று அவற்றை நூல்வடிவில் வெளிக் கொணர்ந்ததன் மூலம் காலந்தோறும் மக்கள் அவற்றை வாசித்துப் பயன்பெறுவதற்கான பணியினையும் செய்துள்ளார். ஆசிரியர் தொடர்ந்தும் இத்தகைய பணிகளை ஆற்றுவதற்குரிய உளவலிமையை எம்பெருமான் அருளவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

அப்பனை நந்தியை ஆரா வமுதனை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற வாமே!

**திருமதி. ஞானலட்சுமி ஞானசேகர ஐயர்**
**முன்னாள் இந்துசமய பாட இணைப்பாளர்**
**மத்திய மாகாண கல்வித் திணைக்களம்,**
**கண்டி, இலங்கை.**

உ
சிவமயம்

# திருவடி ஞானம்

சிவபெருமானைத் தம் உள்ளத்துள் வைத்து எந்நேரமும் வழிபடுபவர் சிவனடியார் எனப்படுவர். சிவசின்னங்களாகிய திருநீறு, உருத்திராக்கம் முதலிய சிவ வேடங்கள் மட்டும் ஒருவரைச் சிவனடியார் ஆக்கமாட்டா. சிவபெருமானுடைய திருவடிகளை - சிவன் அடிகளைத் தம் உள்ளத்துள் வைத்திருப்பவரே சிவன் அடியார் ஆவர்.

தமிழ்நாட்டில் சைவம் குன்றி வருதலைக் கண்ட ஒரு சிவன் அடியார், சிவபெருமானை இடையறாது தொழுது வணங்கித் தென் நாட்டில் வேதநெறி தழைத் தோங்கவும் மிகுசைவத்துறை விளங்கவும், பூதபரம்பரை பொலியவும் செய்யவல்ல ஒரு புனிதக் குழந்தையைத் தர வேண்டுமென்று தவமிருந்தார். அவர் தான் சிவபாதஇருதயர். அவர் பெயரே சிவன் பாதத்தைத் தன் இருதயத்திலே பூண்ட சிவபாத இருதயர் ஆயிற்று. சிவனை நினைத்து வழிபட்டதால் அவருக்குக் கிடைத்த ஞானக் குழந்தை தான் ஆளுடையபிள்ளையார் என்னும் திருஞானசம்பந்தப் பெருமான்.

அவர் மூன்று வயதுக் குழந்தையாய் இருக்கும் போதே தந்தையார் சிவபாத இருதயரின் தோள் மீதிருந்து சிவாலய வழிபாட்டுக்காகச் சீர்காழிப் பெருமானிடம் சென்றார். தந்தையார் நீராடும் போது அவரைக் காணவில்லையே என அழுதார். தந்தையார் வேண்டியது வேதநெறி தழைத்து ஓங்கவும், மிகுசைவத்துறை விளங்கவும், பூதபரம்பரை பொலியவும் புனிதவாய் மலர்ந்து அழுதார். சிவபெருமான் உமாதேவியுடன் காட்சி கொடுத்து இந்தக் குழந்தைக்கு ஞானப்பாலை ஊட்டினார்.

ஞானப்பால் உண்ட குழந்தை ஞானசம்பந்தரானார். ஞானத்துடன் சம்பந்தம் - தொடர்புபட்டார். அக்கணமே அவர் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவம் அதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம். உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய் ஞானம் தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் எனப் பாடுகின்றார் தெய்வப்புலவர் சேக்கிழார் சுவாமிகள்.

சம்பந்தருக்குச் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் சிந்தித்தது. தந்தையார் நீராடி முடித்து வந்தார். குழந்தை வாயில் பால் வடியக் கண்டார். பால் தந்தார் யார் எனக் கடிந்தார். சிவனடி ஞானம் சித்தித்த குழந்தை ''போதையார் பொற்கிண்ணத்தடிசில் பொல்லாதெனத் தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டான்'' எனச் சிவன் திருவடிகளையே நினைத்து தான் கண்ட சிவக்காட்சியைத் தோடுடைய செவியன் எனத் தொடங்கி ஞானத் தமிழில் பாடியது. அவருக்குச் சிவனடி ஞானம் சிந்தித்ததாலே தமிழ்நாட்டிற்குத் தேவாரத் திருமுறைகள் கிடைத்தன. வேதநெறிதழைத் தோங்கியது. மிகுசைவத்துறை விளங்கியது. பூதபரம்பரை பொலிந்தது. பக்தி இயக்கம் தலையெடுத்தது. ஞானத்தமிழ் நமக்குக் கிடைத்தது.

சைவத் திருமுறைகளில் முதலாவது திருமுறையே சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பெற்ற சம்பந்தப் பெருமானின் ஞானத்தமிழாக ஊற்றெடுத்தது.

சைவத் திருமுறைகளில் பத்தாவதாக வைத்துப் போற்றப்படு வது திருமந்திரம். திருமூலர் சுவாமிகள் திருவடி ஞானம் பற்றிய சைவசித்தாந்தக் கருத்துக்கள் எல்லாவற்றையும் ஒன்றாகத் திரட்டி திருவடி ஞானம் சிவம் ஆக்குவிக்கும், திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும், திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும், திருவடி ஞானம் திண்சித்தி முத்தியே. என உபதேசிக்கின்றார்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாம் திருமுறையான திருமந்திரமே காலத்தால் முந்தியது. ஞானசம்பந்தப் பெருமான் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து ஞானத்தமிழ் பாடியவர். திருமூலர் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து தமிழ் மந்திரம் பாடியவர். தன் தமிழ் மந்திரத்தில் சைவம், சிவநெறி, சிவன், சிவகதி, சிவசிவ, சித்தாந்தம், சித்தாந்த முத்தி, சிவபெருமான், பதி பசு பாசம் என்னும் சொற்களைத் தமிழில் அறிமுகப் படுத்தியவர் திருமூலர் சுவாமிகளே.

சைவப் பெருமைத் தனி நாயகன் நந்தி என்றும் தெய்வச் சிவநெறி என்றும், சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை என்றும், சிவகதியே கதியாகும் என்றும், சித்தாந்தத்தே முத்தி சித்திக் கும் என்றும், சிவசிவ என்னச் சிவகதி தானே என்றும், சிவபெருமான் என்று பாடுமின் என்றும், சைவம் சிவனுடன் சம்பந்தமாவது என்றும், பதியினைப் போல் பசு பாசம் அநாதி என்றும் பாடினார்.

திருமுறைகள் எல்லாம் தோத்திரங்களாக இருக்கத் திருமூலர் திருமந்திரம் மட்டும் தோத்திரமாகவும் சாத்திரமாகவும் விளங்கும் தனிச் சிறப்புக்குரியது. ஆதலினாலேயே திருவடி ஞானம் பற்றிய சைவசிந்தாந்த விளக்கமாகத் திருவடி ஞானமே ஆன்மாக்களை அநாதியே பீடித்துள்ள ஆவணம் முதலிய மலபந்தங்களை நீக்க வல்லது என்பதை திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும் என்றும், அதுவே சிவலோகம் சேர்ப்பிக்கும் என்பதை திருவடி ஞானம் சிவ லோகம் சேர்க்கும் என்றும், அதுவே சிவமாம் தன்மையைத் தரும் என்பதை திருவடி ஞானம் சிவம் ஆக்குவிக்கும் என்றும் அதுவே முடிவிலாப் பேரின்ப நிலையாகிய முத்திப் பேற்றைச் சித்திக்க வைக் கும் என்பதை திருவடி ஞானம் திண்சித்தி முத்தியே என்றும் தரும் விளக்கம் அருமைப்பாடுமிக்கதாகும்.

திருமுறைகள் தோறும் சிவனடியே சித்திக்கும் திருப்பெருகு சிவஞானமே உயிர் ஓட்டமாக இருப்பதைக் காணலாம். அது மட்டுமல்லத் திருமுறைகளைத் தந்த அருளாளர்கள் சிவனடியே சிந்தித்துச் சிவகதி சேர்த்த செய்திகளையும் காணமுடியும்.

திருப்பெருந்துறையிலே சிவபெருமான் ஆகிய பரமாசாரியாரால் திருவடி தீட்சை பெற்று ஞானம் சித்திக்கப் பெற்ற திருவாதவூரடிகள் பெருமானைப் பாடத் தொடங்குகின்றார்.

அவருடைய வாக்கிலே வந்த முதல் திருவாசகத் தொடர் ''நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க'' என்பதாகும். நமச்சிவாய எனும் நாமத்தை உடைய சிவப்பரம் பொருளாய நாதனின் தாள்கள் - திருவடிகள் வாழ்க எனத் திருவடிகளையே முதலில் பாடுகின்றார். தொடர்ந்து இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என இமைக்கும் அளவு நொடிப் பொழுது கூட என் நெஞ்சை விட்டு நீங்காத திருவடிகள் வாழ்க என்கின்றார். என் நேரமும் சிவனடியையே சிந்திக்கும் பேறு அவருக்குக் கிடைத்தது. தொடர்ந்து திருவாசகத்தின் முதற் பாடலாகிய சிவபுராணத்தில் சிவபெருமானின் திருவடிகள் வாழ்க வென்றும்; வெல்கவென்றும்; போற்றியென்றும் இருபது தரம் வாயார, மனமாரப் பாடித் தொடர்வதைக் காண முடிகிறது.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க எனச் சிவபுராணம் பாடத் தொடங்கிய திருவாதவூரர் தன் மாணிக்கவாசகங்களால் மாணிக்கவாசகர் ஆகிறார். சிவபுராணத்தில் நிறைவுப் பகுதியில் சிவனடி ஞானத்தால் பெறக் கூடிய பேற்றையும்

**சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்**
**செல்வர் சிவபுரத்தில் உள்ளார் சிவனடிக்கீழ்ப்**
**பல்லோரும் ஏத்தப் பணிந்து.**

எனச் சிவனடி ஞானத்தின் பயனையும் கூறுகின்றார். சிவனடியைச் சிந்தை வைத்துச், சொல்லிய பாட்டின் பொருளை உணர்ந்து சொல்லு பவர்கள், சிவபுரத்தில் உள்ள சிவனடிக் கீழ்ப் பல்லோரும் பணிந்து ஏத்தச் செல்வர் என்கின்றார்.

இவ்வாக்கிற்கு அவரே இலக்கியமாகும் சிறப்பையும் நாம் இங்கு நோக்கலாம்.

சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டு ஆலயந்தோறும் சென்று அற்புதங்களை நிகழ்த்தி எம் பெருமான் திருவடிகளைப் போற்றித் தேனினும் இனிய திருவாசகங்களைச் தித்திக்கப் பாடிய திருவாதவூரர் ஈற்றில் சிதம்பரத்தில் தங்கியிருந்து ஆடவல்லானைப் பாடிப் பணிகின் றார். ஆனிமகத்துக்கு முதனாள் ஒரு அந்தணர் வந்து அவர் பாடும் மாணிக்கமனைய வாசகங்களை அவர் வாயால் கேட்டுத் தன் கையால் ஏட்டில் எழுதிச் செல்கின்றார்.

மறுநாள் ஆனிமக நாளில் ஒரு ஆச்சரியம் நடந்தது. அதிகாலை தீட்சிதர்கள் வந்து நடராசப் பெருமான் சந்நிதியைத் திறக்கும் போது பெருமானின் திருவடியின் கீழ் ஒரு ஏட்டுக்கட்டு இருப்பதைக் கண்டு அதிசயித்தார்கள். பெருமானுக்குத் தீபாரதனை செய்து ஏட்டினை எடுத்துப் பிரித்துப் பார்த்தார்கள். முதல் நாள் திருவாதவூரர் சொல்லச் சொல்ல அந்தணர் எழுதிய பாடல்கள் அவையெனக் கண்டார்கள். ஏட்டின் முடிவில் ''அழகிய சிற்றம், பலமுடையான் கைச்சாத்து'' எனக் கைமுத்திரையும் பொறிக்கப் பட்டிருப்பதைக் கண்டு ஆனந்தமும் அதிசயமும் கொண்டார்கள்.

ஓடோடிச் சென்று திருவாதவூரரை வழிபட்டு வணங்கி அழைத்து வந்து இந்த அதிசயத்தைக் காட்டினார்கள். நடராசப் பெருமானின் திருவிளையாடலை வியந்து மெய்விதிர் விதிர்க்க கண்கள் ஆனந்த அருவிசோரத் திருவாதவூரர் மெய் மறந்து ஆனந்த பரவசமாகி நின்றார்.

தீட்சிதர்கள் அவரைப் பணிந்து சுவாமி, இதுவரை காலமும் தாங்கள் காட்டிய இப்பாடல்களில் அருமை பெருமையை அறியா திருந்து விட்டோம். இன்று அப்பனின் திருவிளையாடலே எங்கள் அகக் கண்களைத் திறந்தது. பெருமானே நாமும் கேட்டுணர்ந்து

உய்தி பெறுவதற்கு இந்தத் திருவாசகப் பொருளை எமக்குச் சொல்ல வேண்டும் என்று விண்ணப்பித்துநின்றார்கள்.

இதன் பொருள் சொல்லுத்தரத்ததன்று. இதன் பொருளைக் காட்டுகின்றேன் எல்லோரும் வாருங்கள் பாருங்கள் என்று நடராசப் பெருமான் திருவடிகளைக் காட்டிய படியே கோயிலின் உட்சென்றார். கண் இமைக்காமல் எல்லோரும் பார்த்து நின்றார்கள். உள்ளே சென்றவரை அவர்களால் காண முடியவில்லை. இந்தக் காட்சியை மாணிக்கவாசக சுவாமிகளின் வரலாற்றைத் திருவாதவூரடிகள் புராணம் எனும் நூலாகப் பாடிய கடவுள் மாமுனிவர்

**செய்காட்டும் கமுகடவித்தில்லையுள்ளார் பொருள்கேட்ப**
**கைகாட்டித் தன்னுருவம் காட்டாமல் மறைந்தாரைப்**
**பைகாட்டும் பேரரவப் பணியுடையார் தமக்கன்பு**
**மெய்காட்டிப் பாலுடனே மேவிய நீராயினார்.**

என்கின்றார்.

வளப்பம் பொருந்திய கமுகஞ் சோலைகள் சூழ்ந்த தில்லையிலுள்ளவர்கள் திருவாசகத்தின் பொருள் என்ன என்று கேட்ப, அவர் தனது இரு கைகளையும், நடராசப் பெருமானுடைய திருவடிகளை நோக்கிக் காட்டிய வண்ணம் சென்று அப்பெருமானுக்குத் தனது அன்பின் மெய்ப்பாட்டைக் காட்டிப் பாலுடன் கலந்த நீர் போல நடராசப் பெருமானுடன் இரண்டறக் கலந்து சாயுச்சிய முத்தி பெற்றார்.

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் சிவபுரத்தில் உள்ளார் சிவனடிக் கீழ் பல்லோரும் பணிந்து ஏத்தச் செல்வார் என்று சிவபுராணம் பாடிய மாணிக்கவாசகரே அச்சொல்லுக்கு இலக்கியமாகி தில்லையுள்ளார் பல்லோரும் பணிந்தேத்தப் பேரின்ப நிலை பெற்றார்.

''தாடலை போல் கூடியவை தான் நிகழா வேற்றின்பக் கூடலை நீ ஏகமெனக் கொள்'' என்ற சைவசித்தாந்த உண்மையே தாள் + தலை எனும் இரு சொற்கள் சேர்ந்து பிரிப்பின்றித் தாடலை என ஒரு சொல்லாவது போலப் பெருமானின் தாள்களில் தன் தலை சேர அத்துவித முத்தி பெற்றார்.

''நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தோறெப்போதும் அனைத் தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையானுக்கே சென்றுதாய் கோத்தும்பி'' எனப் பாடியவர் தானே அத்தும்பியாகிப் பெருமான் திருவடிமலரில் சேர்ந்தார்.

சிவனடி ஞானம் சிந்திக்கப் பெற்ற ஒவ்வொருவரு நாயனார் வரலாற்றிலும் சிவனடி ஞானம் சிவம் ஆக்குவித்த செய்தியைக் காண முடியும். மூன்று வயதில் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் சித்திக்கப் பெற்ற திருஞானசம்பந்தர் கோயில் தோறும் சென்று ஞானத்தமிழால் ஞானப் பொருளைப் பாடிப் பக்தி எழுச்சியை ஏற்படுத்தியவருக்கு பதினாறு வயது எய்திய போது அவரைத் தம் குல தருமப்படி மணஞ் செய்ய வேண்டும் என பெற்றார் விரும்புகின்ற னர். தனக்கு அது தகாது சிவன் திருவடிகள் சேரல் தான் தனக்கு வேண்டியதென்பதையுணர்ந்த போதும் பெற்றார் சொற்கேட்டல் பிள்ளைகள் கடன் என்பதற்கிணங்கத் திருமணத்துக்குச் சம்மதிக்கிறார். திருமணம் நடந்து முடிந்ததும் திருநல்லூர்ப் பெருமணம் எனும் திருக்கோயிலுக்கு மணமகளின் கைபற்றிச் செல்கின்றார். சிவன் திருவடி சேரும் காலம் வந்ததென உணர்ந்து பெருமானை வேண்டுகின்றார்.

**அன்புறு சிந்தையர் ஆகிஅடியவர்**
**நண்புறு நல்லூர்ப் பெருமணம் மேவிநின்று**
**இன்புறும் எந்தை இணையடி ஏத்துவார்**
**துன்புறுவாரல்லர் தொண்டு செய்வாரே**

எனப் பணிந்து 'காதலாகி' எனும் பதிகம் பாடினார். சிவஜோதி தோன்றியது. திருமணம் காண வந்தவர்களுடன் அன்று வைகாசி மூலத்தில் சிவசோதியுட் கலந்தார். இங்கும் சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் சிவபுரத்தில் உள்ளார் சிவனடிக்கீழ் பல்லோரும் பணிந்து ஏத்தச் செல்வர் என்ற படி திருமணங்காணவந்த பல்லோரும் பணிந்தேத்தச் சிவகதி சேர்ந்த காட்சியைக் காண முடிகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமான் இட்ட கட்டளைக்கு இணங்கிப் பாடியவர். பிராமணராக வந்து நீ எனக்கு அடிமை என்று ஓலை காட்டித் திருமணத்தைத் தடுத்து ஆட்கொண்ட சிவபெருமான் திருவெண்ணெய் நல்லூரின் சிவாலயத்தில் மறைந்து விடுகின்றார்.

அவரைக் காணாத சுந்தரர் ''என்னை ஆட்கொண்ட பெருமானே என்னை விட்டு மறைந்தீர்களே நான் என் செய்வேன்'' எனத் தவித்த போது ''நமக்கு அன்பின் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால் மண் மேல் நம்மைச் சொற்றமிழ் பாடு'' என்று ஆணையிட்டார். சுந்தரர் பித்தா என எடுத்துச் சுந்தரச் செந்தமிழில் தேவாரம் பாடினார். கோயில் தோறும் சென்று பாடியவர் நிறைவில் சிவலோகத்தில் இருந்து வந்த வெள்ளை யானையில் ஒளியுடல் வடிவாகச் சிவலோகம் நோக்கிச் செல்கின்றார்.

இந்தக் காட்சி தனது ஆச்சிரமத்தில் சீடர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருந்த உபமன்யு முனிவருக்குத் தெரிந்தது. சிவனை அன்றி வேறு எவரையும் வணங்காத இயல்புடையவர் திடீரென்று எழுந்து வானைப் பார்த்து வணங்கினார். இதனைச் சீடர்கள் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். சிவனை அன்றி வேறு எவரையும் வணங்காத எங்கள் குரு இன்று எதையோ வணங்குகின்றாரே என்று திகைத்தனர். அவரிடமே கேட்டும் விட்டனர். இதனைத் தெய்வப்புலவர் சேக்கிழார் சுவாமிகள்

**சம்புவின் அடித்தாமரைப் போதலால்**
**எம்பிரான் இறைஞ்சாய் இது என்னெனத்**
**தம்பிரானைத் தன் உள்ளம் தழீஇயவன்**
**நம்பியாரூரன் நாம் தொழும் தன்மையான்**

எனப் பாடுகின்றார்.

குருவே சம்புவாகிய சிவனுடைய திருவடிகளையேயன்றி வேறு எதனையும் வணங்காத நீங்கள் எதையோ வணங்குகின்றீர்களே என்ன; முனிவர், சீடர்களே தம்பிரானாகிய சிவபெருமானைத் தமது உள்ளத்தில் வைத்திருக்கும் நம்பியாரூரன் சிவலோகம் செல்கின்றார். அவர் சிவன் அடியார் ஆதலால் சிவனாகவே வணங்கத்தக்கவர் ஆவார் என்கிறார். எல்லோரும் ஒளி வடிவாய்ச் செல்கின்ற சுந்தரரை இமை கொட்டாமல் பார்த்த வண்ணம் நிற்கின்றனர். இது பூலோகத்தில் நிகழும் போது கைலாயத்தில் ஒரு காட்சி நிகழ்கிறது. அங்கே நிகழ்வதைச் சுந்தரரே தனது நொடித்தான் மலை - கயிலை மலைப் பதிகத்தில் பாடுகின்றார்.

**இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்**
**வந்தெதிர் கொள்ள என்னை மத்தயானை அருள்புரிந்து**
**மந்திரமாமுனிவர் இவன் ஆர் என எம் பெருமான்**
**நந்தமர் ஊரன் என்றான் கொடித்தான் மலை உத்தமனே.**

கயிலாயத்திலே இந்திரன் திருமால் பிரமன் முதலான தேவர்களும் முனிவர்களும் கூடி நின்று வரவேற்கிறார்கள். அப்போது அங்கு நின்ற முனிவர்கள் இவர் யார் என்ன, இவன் நம்மவன் என்று சிவன் திருவாய் மலர்ந்தார் என்கின்றார்.

சுந்தரத் செந்தமிழால் அர்ச்சித்த சுந்தரர் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொன்னதால் சிவபுரத்தில் உள்ள சிவபெருமான் திருவடி சேர்ந்தார். அவ்வேளை கயிலையில் இந்திரன் பிரமா முதலான தேவர்களும், பூவுலகில் உபமன்யு முதலான முனிவர்களும் ஆகிய பல்லோரும் பணிந்து வணங்கக் கயிலை சேர்ந்த செய்தி எத்தனை அற்புதமானது. சிவனடி ஞானம் முத்தி சித்திக்கும் என்பதற்கு ஐயமும் உண்டோ.

**திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்**
**திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்**
**திருவடி ஞானம் சிவம் ஆக்குவிக்கும்**
**திருவடி ஞானம் திண்சித்தி முத்தியே.**

11.06.2012 வானொலிப்பதிவு

உ
சிவமயம்

# திருமூலர் காட்டும் சிவநெறி

எமது சமயம் சைவசமயம்; எங்கள் முழுமுதற் கடவுள் சிவபெருமான்; சிவசம்பந்தமுடையது சைவம், இது சிவநெறி எனவும்படும், ஆன்மாக்கள் சைவசித்தாந்த நெறி நின்று அகப்புற வழிபாடு செய்து சிவனுடன் இரண்டறக் கலந்து, சாயுச்சிய முத்தி பெறுவதே வாழ்வின் பயனாகிய பேரின்பப் பேறு. இந்நிலையே வீடுபேறு, முத்திப்பேறு, சிவகதி எனவும் சொல்லப்படும்.

சைவசமயத்தைப் பற்றிக் கூறும் நூல்கள் வடமொழியில் உள்ள வேதசிவாகமங்களும், தமிழ்மொழியில் பன்னிரு திருமுறைகள், சைவ சித்தாந்த சாத்திரங்களும் ஆகும். வடமொழி வேதசிவாகமங்களின் உட்பொருளையே திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் தமிழிற் கூறுகின்றன. இது பற்றியே திருமுறைகள் தமிழ் வேதம் எனவும் தமிழ் ஆகமம் எனவும் போற்றப்படுகின்றன.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாவது திருமுறையாக உள்ளது திருமந்திரம்., இதுவே சைவத் திருமுறைகள் எல்லாவற்றிலும் காலத்தால் முந்தியது. கி.பி.ஐந்தாம் நூற்றாண்டுக்கு முந்திய மூவாயிரம் ஆண்டு காலத்தில் ஆண்டுக்கு ஒன்றாக அருளிச் செய்யப்பட்ட மூவாயிரம் மந்திரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது திருமந்திரம் என்பது பெரியோர் முடிவு.

திருமூலர் நந்தியெம்பெருமானாகிய சிவபெருமானின் அருள் பெற்று மூவாயிரம் தமிழ் எனும் திருமந்திரத்தைப் பாடினாரென்றும், இதனைத் தினமும் காலையில் கருத்தறிந்து ஓதி வழிபட்டால் ஞால முதல்வனாகிய சிவபெருமானை அடைய முடியும் என்பதைத், திருமூலரே

**மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்**
**ஞாலம் அறியவே நந்தி அருளது**
**காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்**
**ஞால முதல்வனை கண்ணுவரன்றே.**

எனக் கூறுகின்றார்.

இது தமிழ் மந்திரம் எனவும், தமிழ் ஆகமம் எனவும், மூவாயிரம் தமிழ் எனவும் போற்றப்படுகின்றது. அத்துடன் ஏனைய திருமுறைகள் எல்லாம் தோத்திரங்களாக இருக்க இது தோத்திரமாகவும் சாத்திரமா கவும் விளங்குகின்றது. வேத ஆகம, அறநூல்களின் கருத்துக்களை யெல்லாம் மந்திர வடிவில் தரும் தனிச்சிறப்புக்கும் உரியது. சைவ சமயத்தைப் பற்றிய எல்லாக் கருத்துக்களையும், முழுமையாகத்தரும் தனிப்பெரும் நூலாக உள்ளது திரமந்திரம் எனின் மிகை இல்லை.

சைவம், சிவநெறி, சிவபெருமான், சைவசித்தாந்தம், சிவகதி, சாயுச்சிய முத்தி முதலான சைவம் சார்ந்த சொற்களையும், அவை பற்றிய தத்துவ விளக்கங்களையும் முதன் முதலில் தமிழிற் கூறிய காலத்தால் முந்திய மூத்த நூலாகத் திருமந்திரமே விளங்குகின்றது. உதாரணத்துக்குச் சிலவற்றைக் காண்போம்.

சைவப்பெருமைத் தனி நாயகன் நந்தி, தெய்வச் சிவநெறி சன்மார்க்கம், தேடித் திரிந்து சிவபெருமான் என்று, சைவம் சிவனுடன் சம்பந்தமாவது, சிவசிவ என்கிலர் தீவினையாளர். சிவனோ டொக்கும் தெய்வம் தேடினும் இல்லை, சிவகதியே கதி, சித்தாந்தத்தே சீவன் முத்தி சித்திக்கும் என்பன போன்ற பல தொடர்களையும், விளக்கங் களையும் திருமந்திரத்தில் காணலாம்.

பின்வரும் மந்திரத்தில் சைவம், சிவநெறி, குருநெறி, சன் மார்க்கம் எனும் சொற்கள் இடம் பெற்றிருப்பதையும் இம்மந்திரப் பொருள் அதற்கு விளக்கம் அளிப்பதையும் காண முடிகிறது.

**சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி**
**உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு**
**தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய**
**வையத்து உள்ளார்க்கு வகுத்து வைத்தானே**

என்பது அந்த மந்திரம்.

இதன் பொருள் சைவசமயத்துக்குப் பெருமை தேடித்தரும் ஒப்பற்ற பரம்பொருள் ஞானத் தலைவனாகிய நந்தியெம் பெருமான் எனும் சிவன். அவன் ஆன்மாக்கள் கடைத்தேறுவதற்குச் சொல்லி வைத்த குருஉபதேசமாகிய ஞானநெறி ஒன்று இருக்கிறது. அதுதான் தெய்வச் சிவநெறியாகிய சன்மார்க்க நெறியாகும். இந்தப் பூமியில் உள்ளவர்கள் அதனை மேற்கொண்டு, ஞானநெறி ஒன்று இருக்கிறது, அதுதான் தெய்வச் சிவநெறியாகிய சன்மார்க்க நெறியாகும். இந்தப் பூமியில் உள்ளவர்கள் அதனை மேற்கொண்டு வாழ்வின் பயனாகிய முத்தியின்பத்தைப் பெற அந்த நன்நெறியை வகுத்து வைத்துள்ளான் எனக் கூறுகின்றது இந்த மந்திரம்.

சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்பதை யும், சிவசம்பந்தமுடையது சைவம் என்பதையும்

**சைவம் சிவனுடன் சம்பந்த மாகுதல்**
**வைசம் தனைஅறிந்தே சிவம் சாருதல்**
**சைவம் சிவன்தன்னைச் சாராமல் நீங்குதல்**
**சைவம் சிவானந்தம் சாயுச்சியமே**

எனும் மந்திரம் சொல்கிறது.

சைவசமய நெறியாவது சிவனுடன் சேர்ந்திருத்தல்; சைவம் என்பது சைவ நெறிமுறை அறிந்து சிவனோடு கூடியிருத்தல். சைவம் என்பது சிவப்பரம் பொருளோடு தாம் ஒன்றிக் கலந்து இருக்கிறோம் என்ற உணர்வுமற்று, அந்த நினைப்பையும் விட்டொழிந்து இருத்தல். இப்படிச் சிவத்தோடு சிவமாகக் கலந்து சிவசிந்தனையில் சிவானந்தம் பெற்றுப் பரம்பொருளோடு இரண்டறக் கலந்து நிற்றலே சாயுச்சிய நிலை அடைதலாம்.

அதுமட்டுமல்லாமல் பாசஞானத்தில் அழுந்தும் ஆன்மா எப்படிப் பசுஞானம் பெற்றுப் பின் பதிஞானம் சித்திக்கச் சாயுச்சிய முத்தி பெறுகிறது எனும் சைவசித்தாந்தச் செம்பொருளையும், இம்மந்திரம் தெட்டத்தெளிவாகச் சொல்வதையும் காண முடியும்.

முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்பதையும் எவ்விடத்தில் அவனைப் பணிந்தால் பணிபவர் உள்ளத்தைக் கோயிலாகக் கொள்வான் என்பதையும் பின்வரும் மந்திரம் உணர்த்துகிறது.

**நாடும் நகரமும் நற்திருக் கோயிலும்**
**தேடித் திரிந்து சிவபெருமான் என்று**
**பாடுமின், பாடிப்பணிமின், பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே**

நாடுநகரங்கள் எல்லாம் நல்திருக்கோயில்கள் இருக்கின்ற இடங்கள் என்று தேடிப்போய் அங்கெல்லாம் இருக்கின்ற சிவப்பரம் பொருளைக் கண்டு சிவபெருமானே என்று பணிந்து போற்றிப் பாடுங்கள், பாடிப்பரவி வணங்கி நில்லுங்கள். இப்படி வணங்கிப் பணிந்தால் பணிபவர் உள்ளமே கோயிலாகக் கொண்டு எழுந்தருளுவான் பரம்பொருள் என இம்மந்திரம் கூறுகின்றது.

அதுமட்டுமல்லச் சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மையையும் திருமந்திரம் சித்தாந்த சாத்திரங்கள் தோன்றுதற்கு முன்னே கூறிவிட்டது. முப்பொருள்கள் பதி பசு பாசம் எனும் மூன்று. அவை மூன்றும் அநாதியான உள்பொருள் என்பதை

**பதிபசுபாசம் எனப்பகர் மூன்றில்**
**பதியினைப் போல் பசு பாசம் அநாதி**
**பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்**
**பதியணுகில் பசுபாசம் நிலாவே.**

என்கின்றது மந்திரம்.

பதி பசு பாசம் என்று சொல்லப்படும் மூன்றில் இறைவனைப் போலவே உயிர்களும், அவற்றைப் பற்றியிருக்கும் பந்த பாசங்களும் அநாதியானவை. தலைவனாகிய இறைவனை ஆன்மாக்கம் அணுகுவதில்லை. காரணம் அவற்றைப் பற்றியுள்ள பாசங்கள் ஆம். ஆனால் இந்த ஆன்மாக்கள் தலைவனாகிய பதியை நெருங்கினால் அவற்றைப் பீடித்துள்ள பாசங்கள் நில்லாது விலகிப்போம் எனும் சைவசித்தாந்த உண்மையை இம்மந்திரம் சொல்கிறது.

சித்தாந்த நெறி நின்று இறைவனைத் தொழுதால் சீவன் முத்தி சித்திக்கும். வேதாந்தத் தெளிவே சைவசித்தாந்தம். இது காட்டும் பொருள் சிவமே எனப் பின்வரும் மந்திரம் உணர்த்துகிறது.

**சித்தாந்தத்தே சீவன்முத்தி சித்தித்தலால்**
**சித்தாந்தத்தே நிற்போர் முத்திசித்தித்தவர்**
**சித்தாந்தத்தே வேதாந்தம் செம்பொருள் ஆதலால்**
**சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே**

சித்தாந்த வழிநிற்கும் சீடர்களுக்கு திருவடிப் பேரின்பமாகிய முத்தி கிட்டுதலால் சித்தாந்த நெறி நிற்போர் முத்தி இன்பம் பெற்றவர் ஆவார். சித்தாந்தம் வேதாந்தம் என்ற இந்த இரண்டும் உயர்ந்த பரம்பொருளாகிய சிவத்தைப் பற்றிய தாதலால் சித்தாந்தம் வேதாந்தம் எனும் இரண்டுமேசுட்டுவது சிவனின் காட்சியையே, எனும் இம்மந்திரக் கருத்து மிக உயர்வானதாகும்.

இக்கலியுகத்தில் சைவம் என்றும், சிவநெறி என்றும், சைவ சித்தாந்தம் என்றும், சிவபெருமான் என்றும் சொல்லுவதற்குக் கூச்சப் படுபவர்களையும், தமது சமயத்தின் பெயர் எது எனத் தெரியாது தடுமாறுபவர்களையும் பரவலாகக் காண்கின்றோம். இவர்கள் திருமூலரின் திருமந்திரத்தைப் படிப்பார்களேயானால் தமது அறியா மையைப் புரிந்துகொண்டு தெளிவு பெறுவர்.

அதுமட்டுமல்ல உங்கள் சமயத்தை அறிய எந்த நூல் இருக்கிறது.

**கிறீத்தவத்தை அறியப் பைபிள் இருக்கிறது;**
**ஸ்லாத்தை அறிய குர்ஆன் இருக்கிறது;**
**பௌத்தத்தை அறியத் திரிபிடகம் இருக்கிறது;**
**சைவத்தை அறிய என்ன இருக்கிறது?**

என்று கேட்போர்க்குச் சைவத்தை அறிய எங்கள் தமிழில் திருமந்திரம் இருக்கிறது படித்துப் பாருங்கள்; சைவத்தின் மேன்மை தானே தெரியும் என்று சொல்லத் தோன்றுகிறது.

சைவத்தை அறிய மிகத் தொன்மையான ஆழமான அகலமான நுண்ணிய கருத்துக் களஞ்சியமாயுள்ள திருமந்திரத்தைப் படித்து வாழ்வின் பயனைப் பெறுவோம்;

01.04.2011 ஒலிப்பதிவு

உ
சிவமயம்

# சம்பந்தரும் மெய்கண்டாரும்

இறைவனுடைய படைப்பிலே ஒவ்வோர் உயிரினத்துக்கும் வாழும் காலம் வகுக்கப்பட்டுள்ளது. இவற்றுள் மனிதருக்குத் தான் வாழும் வயது அதிகம். 'மனிதர்க்கு வயது நூறல்லதில்லை' என்பது பழமொழி. மனிதர் ஒழுங்காக வாழ்ந்தால் 100 வயது வரை வாழலாம்.

வயது என்பது உடலுக்குரியதேயாகும். உடலை இயக்கும் உயிருக்கு வயதில்லை. உயிர் அநாதியானது ஆதலால் உயிரின் வயதைக் கணக்கிட முடியாது. அறிவுக்கு வயது உண்டு. உடல் வளர்வது போல அறிவும் வளர வேண்டும். அறிவு உயிர் எடுக்கும் பிறவிகள் தோறும் வளர்ந்து கொண்டே போகும்.

வாழ்வின் பயன் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதல் ஆகும். நாவலர் பெருமான் ''இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்து நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்'' என அறிதியிட்டுச் சொல்கின்றார். சிவஞானம் பெற்றவரே முத்தி சித்திக்கப் பெறுவர்.

சிவஞானம் பெறுவதற்கும் வயதெல்லை இல்லை. மிகச் சிறுவயதில் சிவஞானம் பெற்ற பலரைப் பார்க்கலாம். மெய்கண்டதேவர் 2 வயதில் ஞானம் பெற்றார். திருஞானசம்பந்தர் 3 வயதில் ஞானம் பெற்றார். குமரகுருபரர் 5 வயதில் ஞானம் பெற்றார். சங்கரர் 7 வயதில் ஞானம் பெற்றார்.

இவர்களில் மிகக் குறைந்த வயதாகிய 2 வயதில் ஞானம் பெற்ற மெய்கண்டாருக்கும் 3 வயதில் ஞானம் பெற்ற சம்பந்தருக்கும் உள்ள தொடர்பைப் பார்ப்பது உவப்பாகும். திருஞானசம்பந்தர் 7ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்தவர். மெய்கண்டார் அவருக்கு ஏறக்குறைய 600 வருடங்களின் பின் 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சம்பந்தர் சைவத்திருமுறை இலக்கியமாகிய தேவாரப் பதிகங்களைப் பாடியவர். மெய்கண்டார் திருமுறை இலக்கியத்துக்கு இலக்கணமாயமைந்த மெய்கண்ட சாத்திரமாகிய சிவஞானபோதம் எனும் சைவஇலக்

கணத்தைப் பாடியவர். சம்பந்தர் தேவாரம் பாடிச் சைவத்திருமுறை களைத் தொடக்கி வைத்தார். மெய்கண்டார் சிவஞானபோதம் பாடி மெய்கண்ட சாத்திரங்களைத் தொடக்கி வைத்தார்.

இவர்கள் இருவரும் இட்ட ஞான வித்து முளைத்து வளர்ந்து பரந்து பன்னிரு சைவத்திருமுறைகளாகவும் 14 மெய்கண்ட சாத்தி ரங்களாகவும், சைவசமயத்தவரின் இரு கண்களாகத் தோத்திரமும் சாத்திரமுமாக விளங்குகின்றன. சிறப்பாகத் தமிழர்களாகிய எமக்குத் தமிழில் எழுந்த முதனூல்களாக விளங்குகின்றன.

சம்பந்தர் காலத்துக்கு முன்பு பல புறச்சமய தத்துவங்களின் குழப்பநிலையால் தமிழ்நாடு இருண்ட காலகட்டத்தில் இருந்தது. இந்நேரத்தில் தான் அறியாமை இருளகற்றும் ஞானசூரியனாகச் சம்பந்தப் பெருமான் அவதாரம் செய்தார். சைவசமய வரலாற்றில் பக்திநெறிக் காலத்தைத் தொடக்கி வைத்தவர் திருஞானசம்பந்தப் பெருமான். அவர் 3 வயதில் சீர்காழியில் சிவபெருமானிடம் ஞானப்பால் உண்டு ஞானத்தமிழ் பாடத் தொடங்கினார். அந்த ஞானத்தமிழ் தான் பக்திநெறிக் காலத்தைத் தொடக்கி வைத்தது எனலாம்.

சீர்காழியில் 3 வயதில் தன் தந்தையாருடன் கோயிலுக்குப் போன பிள்ளையார் தந்தையார் புண்ணியத் தீர்த்தக் குளத்தில் அமிழ்ந்து நீராடும் போது அவரைக் காணவில்லையே என்று முன்னால் இருந்த கோயிற் கோபுரத்தைப் பார்த்து அம்மே அப்பா என அழு கின்றார். இந்த அழுகை தான் ஞானத்தமிழாகத் தேவாரமாக ஊற்றெடுத்தது என்பது தெய்வப்புலவர் சேக்கிழார் சுவாமிகள் வாக்கு.

அவர் ஏன் அழுதார் எனும் வினாவைத் தொடுத்து வேத நெறிதழைத் தோங்க மிகுசைவத்துறை விளங்கப் பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்து அழுதார் என்கின்றார். அவர் அழுகை யால் வேதநெறி இப்புவியில் தழைத்தது, சைவத்துறையாகிய ஆகம நெறியாகிய சைவநெறி தழைத்தது. இம்மண்ணில் பஞ்சபூத பரம்பரை யாகிய எல்லா உயிரினமும் தழைத்தன.

அவர் அழுததால் ஞானப்பால் உண்டார், ஞானப்பால் உண்டதால் அவருக்கு சிவனடியே சித்திக்கும் திருப்பெருகு சிவஞானம் கிடைத்தது. உவமையிலாக் கலைஞானம் கிடைத்தது. உணர்வரிய மெய்ஞானம் கிடைத்தது. அதன் பேறாக ஞானத்தமிழாகிய தேவாரம்

எமக்குக் கிடைத்தது. சமண பௌத்த பொய்நெறி இருளில் இருண்டு கிடந்த தமிழ்நாடு சிவஞான ஒளி பெற்றுப் பக்தி நெறி தழைத்தது.

சம்பந்தரைத் தொடர்ந்து அவர் காலத்தில் வாழ்ந்தவராகிய திருநாவுக்கரசரும், அவரின் சற்றுப் பின் காலமாகிய எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அதன்பின் மாணிக்க வாசகரும் சம்பந்தரைப் போலவே சிவாலய யாத்திரை செய்து பாடி சம்பந்தர் தொடக்கி வைத்த பக்திநெறியைப் பெருவெள்ளமாகப் பாய்ந்தோட வைத்தார்கள்.

சைவத்திருமுறைகள் வளர்ச்சி பெற்றிருந்த போதும் அவை மக்கள் கைக்குக் கிடைக்காமையாலும், அவற்றின் உட்பொருளாய சைவசித்தாந்த தத்துவ நெறியை மக்கள் சரியாக விளங்கிக் கொள்ளாமையாலும் சைவம் தளர்ச்சியுற்றது. வேதவழியில் வந்த அத்வைதம், துவைதம், விசிட்டாத்வைதம் முதலான ஒன்றுக்கொன்று மாறுபட்ட சமய தத்துவக் கருத்துக்களால் மக்கள் மயக்கமுற்றனர். இந்த மயக்கம் தீர்க்க மெய்கண்டார் அவதாரம் செய்தார்.

கி. பி. 13ஆம் நூற்றாண்டில் திருப்பெண்ணாகடம் என்ற ஊரில் அச்சுதகளப்பாளர் என்னும் வேளாளர் ஒருவர் சைவ நன்நெறி நின்று வாழ்ந்து வந்தார். அவருக்குப் பிள்ளைச் செல்வம் இல்லாமையால் மனம் வருந்தினார். அச்சுதகளப்பளாரும் மனைவியும் தம் குல குருவாகிய சகலாகம பண்டிதர் என்பாரிடம் சென்று விண்ணப்பம் செய்தனர். அவர் திருமுறைக்குப் பூசை செய்து கயிறு சாத்திப் பார்த்தால் வழிபிறக்கும் என்று சொல்லி அப்படியே செய்தனர். கயிறு விழுந்த ஏட்டை எடுத்து விரித்துப் பார்த்த போது ஞானசம்பந்தப் பெருமானுடைய தேவாரமாகிய

**பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடுள்ள நினை**
**வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டாவொன்றும்**
**வேயனதோள் உமைபங்கள் வெண்காட்டுமுக்குளநீர்**
**தோய் வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே**

எனும் திருவெண்காட்டுப் பதிகத் தேவாரம் கிடைத்தது. அதில் திருவெண்காட்டுமுக்குள நீர் தோய் வினையால் தம்மை தீவினை தோயாவாம், பேயடையாது பிரிவெய்தும், பிள்ளையினோடு உள்ளம் நினைவாயினவே வரம் பெறுவர். ஐயுற வேண்டா என்று இருந்தது.

ஞானசம்பந்தப் பெருமானின் ஞான வாக்கின் படி அச்சுதகளப்பா ளரும் மனைவியும் திருவெண்காட்டிலுள்ள சூரிய, சந்திர, அக்கினி குண்டம் எனும் மூன்று தீர்த்தங்களிலும் நீராடி நோன்பிருந்தனர். பத்தாம் மாதம் பெருமான் கிருபையால் ஆண் குழந்தை ஒன்று கிடைத்தது. குழந்தை திருவெண்காட்டிலுள்ள சுவேதவனப் பெருமான் கிருபையால் கிடைத்தமையால் அப்பெயரையே குழந்தைக்கு இட்டு வளர்த்தனர்.

குழந்தை மாமனாரின் ஊராகிய திருவெண்ணெய் நல்லூரில் இருந்து வளர்ந்து வந்தது. 2 வயதான போது கயிலாயத்திலிருந்து வான் வழியே போய்க் கொண்டிருந்த பரஞ்சோதி முனிவர் குழந்தையின் ஞானப் பக்குவத்தைக் கண்டு கீழிறங்கி வந்து தீட்சை கொடுத்து மெய்கண்டார் எனும் தீட்சாநாமமும் இட்டுச் சென்றார்.

குழந்தைக்குச் சைவசித்தாந்த ஞானம் பெருக்கெடுத்துப் பாய்ந் தது. கேள்விப்பட்ட பல பெரியோர் அவரிடம் வந்து சித்தாந்த உபதேசம் பெற்றனர். குழந்தை அவர்களுக்குச் சிவஞானபோதத்தை உப தேசித்தது.

இந்த அதிசயத்தைக் கேள்விப்பட்ட தந்தையின் குலகுருவும் இவரின் பிறப்புக்கு வழிகாட்டியவருமான சகலாகம பண்டிதர் அவ்விடம் வந்தார். அவ்வேளை குழந்தை மெய்கண்டார் ஆணவம் பற்றி உப தேசித்துக் கொண்டிருந்தார். மெய்கண்டாரைப் பார்த்து ஆணவமாவது யாது எனக் கேட்டார். மெய்கண்டார் அவரையே சுட்டிக் காட்டி நீர் நிற்கும் கோலமே அது என உணர்த்தினார். உண்மையுணர்ந்த சக லாகம பண்டிதர் மெய்கண்டார் காலில் வீழ்ந்து நீரே என் குருவாவீர் எனப் பணிந்தார். மெய்கண்டார் அவருக்குத் தீட்சை கொடுத்து அருணந்திசிவம் எனும் தீட்சா நாமமும் கொடுத்துத் தனது முதல் மாணாக்கராக ஏற்றுக் கொண்டார்.

மெய்கண்டார் 12 சூத்திரங்களும் அதற்கு விளக்கமாக 81 எடுத்துக்காட்டு வெண்பாக்களும் பாடிச் சிவஞானபோதத்தைச் செய்தார். அவரது மாணாக்கள்கள் வழிநூல் சார்பு நூலாகளாக மெய்கண்ட சாத்திர நூல்களைச் செய்தனர். மெய்கண்ட சந்தானம் தழைத்தது.

ஞானசம்பந்தப் பெருமானுடைய தேவாரத் திருமுறை வாக்கால் உதித்தவர் மெய்கண்டார். திருமுறையின் சாரமாகிய சித்தாந்த தத்துவத்தை அவர் தந்தார்.

இங்கு 3 வயதில் சிவஞானம் பெற்றுச் சைவத்திருமுறையைத் தொடக்கி வைத்தவர் சம்பந்தர். 2 வயதில் சிவஞானம் பெற்று திருமுறைச் சாரமாகிய மெய்கண்ட சாத்திரத்தைத் தொடக்கி வைத்த வர் மெய்கண்டார். மெய்கண்டாரைத் திருமுறை தந்த செல்வர் எனவும் மெய்கண்ட சாத்திரத்தைத் திருமுறை தந்த செல்வம் எனவும் சைவர்களாகிய நாம் போற்றுதல் வேண்டும்.

சைவத்திருமுறையும் மெய்கண்ட சாத்திரமும் எமக்கு இரு கண்கள் போன்றவை. அவற்றைத் தந்த சம்பந்தரும் மெய்கண்டாரும் எமது கண்களின் மணி போன்றவர்கள்.

சம்பந்தரையும் மெய்கண்டாரையும் மனதில் இருத்தித் திரு முறைகளையும், மெய்கண்ட சாத்திரங்களையும் ஓதியுணர்ந்து உய்தி பெற முயல்வோம்.

21.03.2014 ஒலிப்பதிவு

உ
சிவமயம்

# மங்கலவாழ்த்தின் மாண்பு

ஒரு நூலைச் செய்யத் தொடங்கும் போது அதன் ஆசிரியர் அந்த நூல் தடையின்றி இனிதே நிறைவேற வேண்டுமெனத் தான் வழிபடு கடவுளையோ அல்லது அந்த நூலுக்கு ஏற்புடைய கடவுளையோ வாழ்த்திப் பாடி வணங்கித் தொடங்குதல் மரபு. அதுவும் ஞானநூல் செய்வோர்க்கு இது இன்றியமையாததாகும். வாழ்த்தின் உள்ளுறையாக வாழ்த்து வணக்கம் வருபொருள் உரைத்தல் என்பன அடங்கி இருக்கும்.

இந்த வாழ்த்து சூத்திரம் போலச் சிறியதாயும் பொருள் விரிக்க விரிக்கப் பெருகுவதாயும் இருக்கும். சூத்திரம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கே ஒரு சூத்திரம் உண்டு.

**சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருளைச்**
**செவ்வண் ஆடியற் செறித்தினி துணர்த்தும்**
**திட்ப நுட்பம் சிறந்தன சூத்திர நிலை**

என்பது அந்தச் சூத்திரம்.

மிகச் சுருங்கச் சொல்லும் சில எழுத்துக்களில், பல்வகைப்பட்ட பெரிய பொருளை, சிறிய கண்ணாடிக்குள்ளே பென்னம் பெரிய பொருட்கள் தெரிவது போலச் செறிவாக அடக்கித் திட்பநுட்பமாகச் சொல்வதே சூத்திரம் ஆகும், என்பது இதன் விளக்கம்.

இதற்கு அமைவாக உள்ள ஒரு மங்கல வாழ்த்தினைக் காண்போம். சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு. அவற்றுக்கு மணிமுடியாகத் திகழ்வது சிவஞானபோதம். சிவஞானபோதத்தைப் பாடியவர் இரண்டு வயதில் சிவஞானம் பெற்ற மெய்கண்டார். அவர் சிவஞானபோதத்தைப் பன்னிரண்டு சூத்திரங்களில் பாடி முடித்துள்ளார். இப்பன்னிரண்டு சூத்திரங்களிலும் அடங்கியுள்ள பொருளையே ஏனையபதின்மூன்று சாத்திரங்களும் விரித்துச் சொல்கின்றன. அது மட்டுமல்ல சிவஞான மாபாடியம் எனும் வியாக்கியான விரிவுரை நூலும் எழுந்துளது.

பன்னிரு சூத்திர வடிவிலமைந்த சிவஞானபோதத்திற்குப் பன்னிரண்டு சொற்களில் மெய்கண்டார் மங்கல வாழ்த்துப் பாடியுள்ளார். அதன் மகிமையைக் கண்டு இன்புறலாம்.

**கல்லால் நிழல் மலை**

**வில்லார் அருளிய**

**பொல்லார் இணைமலர்**

**நல்லார் புனைவரே**

என்பதே அந்த மங்கல வாழ்த்து. இதன் வெளிப்படையான பொருள் ''கல்லால விருட்சத்தின் நிழலிலே இருந்து வேதப் பொருளை மயக்கமின்றி உபதேசித்த சிவபெருமான் தந்த பொல்லாப்பிள்ளையாரின் இரண்டாகிய திருவடி மலர்களை வணங்கும் பேறு பெற்றவர் நல்லவராவர்'' என்பதேயாகும்.

சூத்திரம் போன்ற இந்த மங்கல வாழ்த்து, நூலுக்கு ஏற்புடைக் கடவுளை வாழ்த்தும் வகையில் அமைந்துளது. சிவஞானபோதம் ஞானநூல். ஆதலால் இந்த நூல் முட்டின்றி முடிவதற்கு ஞானமுதல்வனாகிய விநாயகப் பெருமானை வாழ்த்தி வணங்குவதாகக் கொள்ளலாம். அதேவேளை மூலமுதற் கடவுளாகிய சிவனையும் நினைவது சிறப்புடையதாகின்றது.

இந்த மங்கல வாழ்த்தில் உள்ளுறையாகச் சொல்லப்பட்டிருக்கும் பொருளை இனி விரித்துப் பார்ப்போம்.

- சிவஞானபோதம் 12 சூத்திரங்களால் ஆனது. அது
- பொது அதிகாரம் சிறப்பு அதிகாரம் என இரண்டு அதிகாரப் பிரிவுகளை உடையது.
- பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயனியல் என நான்கு இயல்களை உடையது.
- இந்த நாலு இயல்களும் முறையே

| | |
|---|---|
| பிரமாண இயல் | - இடத்தின் தன்மையையும் |
| இலக்கண இயல் | - செயல் கூறுதலையும் |
| சாதன இயல் | - திருவடியையும் |
| பயனியல் | - பயனையும் உணர்த்துகின்றன |

- ஒவ்வொரு இயலிலும் மூன்று மூன்று சூத்திரங்கள் உள்ளன. இவ்வமைப்பு முறையை இந்த மங்கல வாழ்த்து உள்ளுறையாக உணர்த்தும் நுட்பத்தை இனிக் காண்போம்.

- இம்மங்கல வாழ்த்தில் கல், ஆல், நிழல், மலைவு, இல்லார் அருளிய, பொல்லார், இணை, மலர், நல்லார், புனைவர், ஏ எனும் பன்னிரண்டு சொற்கள் வந்துள்ளன. இவை சிவஞானபோத நூல் பன்னிரண்டு சூத்திரங்களால் ஆனது என்பதை உணர்த்து கின்றன எனலாம்.

- இதில் கல்லால் மலை வில்லார் அருளிய எனும் ஒரு தொடரும் பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே எனும் இன்னொரு தொடருமாக இரு தொடர்கள் வந்துள்ளன. இவை இந்த நூல் பொது அதிகாரம் உண்மை அதிகாரம் எனும் இரு பிரிவுகளை உடையது என்பதை உணர்த்துகின்றன எனலாம்.

- இனிச் சிவஞானபோதம் பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயனியல் என நான்கு பிரிவுகளை உடையது. இந்த உட்பொருளுக்கு அமைவாக மங்கல வாழ்த்திலும் முதல் வரியில் கல் ஆல் மலை எனும் மூன்று சொற்களும் இடத்தின் தன்மையைக் குறித்துப் பிரமாண இயலை உணர்த்துகின்றன. இதில் மூன்று சொற்கள் இருப்பது பிரமாண இயலில் மூன்று சூத்திரங்கள் இருப்பதை உணர்த்துகின்றன.

இரண்டாவது அடியில் மலைவு இல்லார் அருளிய என்ற மூன்று சொற்களும் செயல் கூறுதலில் இலக்கண இயலைக் குறிக்கும். இதில் வந்துள்ள மூன்று சொற்கள் இலக்கண இயலில் மூன்று சூத்திரங்கள் இருப்பதை உணர்த்தும். மூன்றாவது அடியில் உள்ள பொல்லார், இணை, மலர் என்னும் மூன்று சொற்களும் திருவடியை உணர்த்துதலால் அது சாதன இயலைக் குறிக்கும். இதில் வந்துள்ள மூன்று சொற்களும் மூன்று சூத்திரங்களைக் குறிக்கும்.

நாலாவது அடியில் நல்லார், புனைவர், ஏ என வந்துள்ள மூன்று சொற்களும் பயன் கூறுதலின் பயன் இயலைக் குறிக்கும். இங்குள்ள மூன்று சொற்களும் மூன்று சூத்திரங்களை உணர்த்து கின்றன எனலாம். ஆகவே சிவஞானபோத மங்கல வாழ்த்தாகிய

**கல்லால் நிழல் மலைவு இல்லார் அருளிய**
**பொல்லார் இணை மலர் நல்லார் புனைவர் ஏ**

எனும் இக்காப்பு அமைந்துள்ள சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களாலானது என்பதும் பொது அதிகாரம் சிறப்பதிகாரம் என

இரு அதிகாரங்களாயுள்ளது என்பதும் பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயனியல் என நான்கு இயல்களை உடையது என்பதும் ஒவ்வொரு இயலும் மும்மூன்று சூத்திரங்களை உடையன என்பதும் உள்ளுறை உவமமாக உய்த்துணரவைத்துள்ள திட்பநுட்பம் வியத்தற்கும் நயத்தற்கும் உரிய தன்றோ.

மங்கல வாழ்த்தின் மகத்துவத்தைத் தமிழ் மண்ணில் தமிழில் எழுந்த சைவசித்தாந்த முதனூலான சிவஞானபோதத்தில் கண்டோம்.

இனித் தமிழ் மண்ணில் தமிழில் எழுந்த தனித்துவமான காப்பியமான பெரியபுராணத்தின் மங்கல வாழ்த்தாகிய காப்புச் செய்யுளின் உட்பொருட் சிறப்பைப் பார்ப்போம். பெரியபுராணம் தில்லை நடராசப் பெருமான் உலகெலாம் என அடியெடுத்துக் கொடுக்கத் தெய்வப் புலவராகிய சேக்கிழார் சுவாமிகளால் பாடப்பெற்றது.

இதன் மங்கல வாழ்த்தாய் அமைந்த காப்புச் செய்யுள்

**உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்**
**நிலவுலாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்**
**மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம் என்பதாகும்.**

இதன் பொருள் -

இறைவனான சிவபெருமான் உலக உயிர்களால் இன்ன தன்மையன் என்று எடுத்துக் கூறுவதற்கு அரியவன். அரியவனாயினும் யாவரும் வணங்கும் படியாகப் பிறைச் சந்திரனையும் கங்கையையும் அணிந்த சடையினை உடையவன். அளவில்லாத ஒளி மயமானவன். தில்லையம்பலத்தில் திருக்கூத்து ஆடுபவன். மலர்கின்ற மென்மையானதும் சிலம்பினை அணிந்ததுமான திருவடிகளையுடைய அத்தகைய இறைவனை வாழ்த்தி வணங்குவோம். - என்பது இதன் பொருள் - இவ்வாழ்த்திலே மங்கல வாழ்த்திற்குரிய இலக்கணமான

**"வழிபடு தெய்வ வணக்கம் கூறி**
**மங்கல மொழிமுதல் வகுத்து எடுத்துக்கொண்ட**
**இலக்கண இலக்கியம், இடுக்கணின்றி**
**இனிது முடியும் என்மனார் புலவர்"**

எனும் சூத்திரத்திற்கு அமைவாக வழிபடு தெய்வ வணக்கம் முழுமுதற் பொருளான அம்பலத்தாடும் பெருமானுக்கே கூறப்பட்டுள்ளது. மங்கல மொழி முதலாக வகுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு அமைவாக உலகு எனும் மங்கலச் சொல்லிலேயே தொடங்குகின்றது. இச்சொல்லுக்கு இரண்டு தனிச் சிறப்புக்கள் இருப்பதைக் காணலாம். ஒன்று அம்பலத்தில் ஆடும் பெருமானே அடி எடுத்துக் கொடுத்த நூல். அதுவும் நாதமும் விந்துவுமான பிரணவத்தின் குறியீடான பிள்ளையார் சுழியான உவில் தொடங்குவது மற்றுமோர் சிறப்பு ஆகும். இம்மங்கல வாழ்த்துடன் தொடங்கும் பெரியபுராணம் உலகெலாம் என்று தொடங்கி இறுதிப்பாடலிலும் நின்றதெங்கும் நிலவி உலகெலாம் என்று முடியும் சிறப்பையும் நோக்கும் போது இந்த நூல் பதி வாக்கேயாகும் என உணர முடிகிறது.

உலகெலாம் எனச் சிவன் வாக்காகவே எழுந்த பெரியபுராணத்தின் மங்கல வாழ்த்தாகிய முதற்பாடல் நம் சைவ சமயத் தத்துவக் கருத்துக்களை கொண்டு உயர்ந்து நிற்கிறது.

பெரியபுராணத்தில் 63 தனியடியார்கள் வரலாறும், 9 தொகையடியார்கள் வரலாறும் சொல்லப்படுகிறது. இவ்வுண்மையை இக்காப்புச் செய்யுளில் உள்ள எழுத்துக்கள் உள்ளுறையாக உணர்த்துகின்றன. இதில் வரும் எழுத்துக்கள் 63. பதம் பிரித்து எண்ணினால் அவை 72 ஆகும். முதற்சொன்ன 63 எழுத்துக்களும் 63 தனி அயார்களையும் பின்வரும் 72 எழுத்துக்களும் தொகையடியார்கள் 9 பேரினையும் சேர்த்ததாயும் அமைந்துள்ளமை ஒரு தெய்வீகப்புதுமை.

இவ்வுலகு நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்களால் ஆனது. அவற்றின் கலப்பு வடிவமே நாம் காணும் உலகு. இவ்வுண்மையை இதில் வந்துள்ள உலகு, நீர், சோதி, ஆடுவான், அம்பலம் எனும் சொற்கள் உணர்த்துகின்றன.

சைவசித்தாந்த தத்துவம் இறைவன் நிலையை சொரூப இலக்கணம் என்றும் தடத்த இலட்சணம் என்றும் இருவிதமாகச் சொல்லும் உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன் என்பது சொரூப நிலையையும், நிலவுலாவிய நீர்மலி வேணியன் என்பது தடத்த நிலையையும் காட்டுவதைக் காணலாம்.

தடத்த நிலையில் இறைவன் அருவமாயும், உருவமாயும், அருவுருவமாயும் உள்ளான். இங்கு உலகெலாமுணர்ந்து ஓதற்கரிய வன் என்பது அருவத் திருமேனியையும், நிலவுலாவிய நீர்மலி வேணி யன் என்பது உருவத் திருமேனியையும் அலகில் சோதியன் என்பது அருவுருவத் திருமேனியையும் உணர்த்துவதை எண்ணி இன்புறலாம்.

பெரியபுராணத்தில்

**உலகெலா முணர்ந் தோதற் கரியவன்**
**நிலவுலாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர்சிலம் படிவாழ்த்தி வணங்குவோம்**

எனும் காப்புச் செய்யுள் பிரணவ எழுத்தாகிய உகரத்தில் உலகெலாம் எனத் தொடங்கி

**என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்**
**ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட**
**மன்றுளார் அடியாரவர் வான்புகழ்**
**நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்**

என உலகெலாம் எனவே முடிகிறது. உகரத்தில் தொடங்கி ம் எனும் மகர மெய்யுடன் முடிவது பெரியபுராணம் முழுவதும் பிரணவ வடிவமான பதி வாக்கே என அறிந்து வியக்க வைக்கின்றது.

தில்லையில் ஆன்மாக்களை உய்வித்தற் பொருட்டு பஞ்ச கிருத்தியம் செய்யும் நடராசப் பெருமானே உலகெலாம் என தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமானுக்கு அடியெடுத்துக் கொடுத்த அற்புதம் நூல் முழுவதும் பதி வாக்காக அமைந்துள்ள செம்மையைக் கண்டு வியக்க வைக்கிறது.

09.01.2013 ஒலிப்பதிவு

உ
சிவமயம்

# சைவசித்தாந்தத்தில் வல்வினையும் மெல்வினையும்

நாம் செய்யும் செயல்கள் எல்லாம் நல்வினை தீவினை எனும் இரு பிரிவுள் அடங்கும். நன்மை தரும் வினைகள் நல்வினை என்றும் தீமை தரும் வினைகள் தீவினை என்றும் ஆகின்றன. நல்வினைகள் புண்ணியமாகி இன்பத்தைத் தருகின்றன. தீவினைகள் பாவமாகித் துன்பத்தைத் தருகின்றன. அவரவர் செய்த வினைப் பயனை அவரவரே அனுபவிக்க வேண்டும். தாம் தாமுன் செய்த வினைதாமே அனு பவிப்பார் என்பது நன்கறிந்த பழமொழியாகும்.

இதனை ஔவையார் ''புண்ணியம் ஆம், பாவம்போம் போன நாட் செய்த அவை மண்ணிற் பிறந்தார்க்குவைத்த பொருள்'' என்று இலகு தமிழில் எளிமையாகச் சொல்லி வைத்துள்ளார். நாம் கடந்த காலத்தில் செய்த வினைகளே நம் வாழ்வுக்கு முதலீடு ஆகும். ஆதலால் இன்பத்தை வேண்டுவோர் செய்ய வேண்டியது புண்ணியம். அதுவே ஆம் ஆக வேண்டியது. செய்யக் கூடாதது பாவம். அதுவே போம் போக வேண்டியது. விலக்க வேண்டியது ஆகும் என்கின்றார்.

ஒவ்வொருவருடைய மனமும் இன்பத்தையே விரும்பும். துன்பத்தை விரும்புபவர் யாரும் இல்லை. தீதும் நன்றும் பிறர்தர வாரா. தீமையோ நன்மையோ மற்றவரால் தரப்படுவன அல்ல. அவற்றை நாமே முன் வினைப்பயனால் தேடிக் கொள்கிறோம். மற்றவர்கள் அதற்குக் கருவியேயன்றிக் காரணர்கள் அல்ல, நாமே காரணர்கள் ஆவோம் என்பது உறுதி.

நல்வினையிலும் இருவிதமானவை உள. உயிர்களுக்குச் செய்கின்ற நல்வினைகள் பசுநல்வினை என்றும் சிவனுக்குச் செய்கின்ற நல்வினைகள் சிவநல்வினைகள் எனவும் சொல்லப்படும். பசுநல்வினை யால் இன்பமே விளைந்தாலும் அது பிறவிக்குக் காரணமாகி மீண்டும் மீண்டும் பிறப்பதற்கு ஏதுவாகும். நல்வினை பொன் விலங்கு. தீவினை இரும்பு விலங்கு. இரண்டும் விலங்கு தான். சிவபுண்ணியம் ஒன்றே பிறவியினை நீக்கி இறை இன்பமாகிய வீடுபேற்றைத் தரும். அது

நான் என்ற முனைப்பைக் கைவிட்டுச் சிவன் செயல் என்றே செய்யப்படவேண்டும். அவ்விதம் செய்யப்படும் சிவபுண்ணியமே செய்யும் விதம் நோக்கி மெல்வினை எனவும் வல்வினை எனவும் கொள்ளப்படும். இவை தன் முனைப்பற்றுச் சிவன் செயலாகவே செய்யப்படுவதால் சிவதன்மம் எனப்படும்.

**மெல்வினையே யென்ன வியனுலகில் ஆற்றரிய**
**வல்வினையே யென்ன வருமிரண்டும் – சொல்லிய**
**சிவதன்மம் ஆயவற்றில் சென்றதிலே செய்வாய்**
**பவகன்மம் நீங்கும் படி**

எனத் திருக்களிற்றுப்படியார் சொல்கிறது.

சிவபெருமானை நோக்கிப் பயன் கருதாமல் நிஷ்காமியம் ஆகப் பற்றற்றுச் செய்யப்படும் புறவழிபாடு சரியை ஆகும். பயன் கருதாமல் செய்யப்படும் அகவழிபாடு கிரியை ஆகும். சிவபெருமானோடு முழுமை யாக ஒன்றாகக் கூடுமாறு செய்யப்படுவது யோகம் ஆகும். சிவப்பரம் பொருளே யாண்டும் நீக்கமற நிற்கின்றது என்னும் மெய்யுணர்வு வாய்க்கப் பெற்ற வழிபாடு ஞானம் ஆகும்.

நான் என்னும் முனைப்பு அறுமாறு யாராவது அன்பு செய்வார் களாயின் அவர்களிடத்தே யாராலும் காண்பதற்கரிய பெருமான் வெளிப்பட்டு அருள்வான். இவ்வுண்மையை திருக்களிற்றுப்படியார் என்னும் சித்தாந்த சாத்திரம்

**நல்லசிவ தன்மத்தால், நல்லசிவ யோகத்தால்**
**நல்லசிவ ஞானத்தால், நான் அழிய – வல்லதனால்**
**ஆரேனும் அன்பு செயின் அங்கே தலைப்படுங்காண்**
**ஆரேனும் காணா அரன்.**

எனக் கூறுகின்றது.

சிவதன்மம் என்பது சிவப்பரம் பொருளை நோக்கிச் செய்யும் அறமாகும். அப்பரம்பொருளை எளிய மென்மையான செயல்களைச் செய்தும் அடையலாம். அன்றிச் செயற்கரிய வன்மையான வினை களைச் செய்தும் அடையலாம். இவற்றுள் எந்த அறமும் ஏற்றதே.

ஆயினும் அவ்வாறு மேற்கொள்ளப் பெறும் அறம் பிறப்பு அறுத்தற்காம் குறிக்கோளுடனும், தன் முனைப்பு இன்றியும் உலகியல் பயன் கருதாதும் செய்யப்பட வேண்டும்.

இக்காலத்திலே நடைபெறும் வழிபாடுகள் எல்லாம், சரியை, கிரியை, யோகம் முதல் யாவும் இவ்வுலக இன்பம் கருதிய காமிய வழிபாடுகளாகவே அமைந்திருக்கக் காண்கின்றோம். நான் இன்னதைத் தருவேன், செய்வேன் அதற்குப் பதிலாக நீ எனக்கு இன்னதைத் தா என்னும் பாங்கில் அமைந்த வர்த்தக வழிபாட்டால் இறைவனின் அருளைப் பெறமுடியாது. மனதுக்குச் சாந்தி மட்டும் கிடைக்கக் கூடும். வழிபாட்டின் முழுமையான பயனைப் பெறவேண்டுமானால் அவ்வழிபாடு சிவதன்மம் ஆகச் செய்யப்பட வேண்டும்.

கோயிலைக் கூட்டுதல், கழுவுதல், வீதிகளைத் துப்பரவு செய் தல், நந்தவனம் அமைத்தல், திருமாலை கட்டுதல், புகழ்ந்து பாடி ஆடுதல், அடியவரை வழிபடுதல், மகேசுர பூசை செய்தல், திருவைந் தெழுத்தை ஓதுதல் முதலான செயல்கள் எல்லாம் மெல்வினையாகும். இந்த மெல்வினைகளை முன்காட்டியவாறு நான் எனும் தன்முனைப் பற்றுச் சிவன் செயல் எனவே செய்தால் இறைவன் அருள் கிடைக்கும் என்பதற்கு அப்பர் சுவாமிகளே சான்று ஆவார். அவர் தனது திருத்தாண்டகத்தில்

**நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சேநீவா**
**நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்**
**புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்**
**பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்**
**தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா**
**சயபோற்றி போற்றி என்றும்**
**அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதி என்றும்**
**ஆரூரா என்றென்றே அலறா நில்லே**

என்று சொல்லிய வண்ணம் தான் செய்து முத்தி பெற்றார். இது மெல்வினைப் பயனாகப் பெற்றபேறு எனலாம். சமய குரவர்கள் மெல்வினையே செய்து சிவகதி பெற்றனர்.

நாயன்மார்களில் ஒரு பகுதியினர் வல்வினையால் சிவகதி பெற்ற வரலாறும் சித்திக்கத்தக்கது. பாரனைத்தும் பொய்யெனவே தன் குபேரசம்பத்துக்கள் அனைத்தையும் துறந்து சிவனடியே தஞ்சம் என நின்ற பட்டினத்தார் வல்வினை செய்தவர்களைப் பார்த்து வியக்கின்றார்.

**வாளால் மகவரிந்தூட்ட வல்லேன் அல்லேன், மாது சொன்ன**
**சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லேன், தொண்டு செய்து**
**நாளாறில் கண்ணிடத் தப்ப வல்லேன் அல்லேன், நான் இனிச் சென்று**
**ஆளாவ தெப்படியோ திருக்காளத்தி அப்பனுக்கே.**

எனச் சிறுத்தொண்டரும், இயற்பகை நாயனாரும், கண்ணப்பரும் செய்த வல்வினைகளைக் கண்டு அஞ்சி வியக்கின்றார். அவர்கள் வல்வினையால் சிவகதி பெற்றமையை நினைத்து எனக்கும் கிட்டுமோ என ஐயுறுகின்றார்.

வயிரவ வேடங்கொண்டு வந்து பிள்ளைக் கறி கேட்ட இறை வனுக்குத் தம் பிள்ளை என்றும் மனம் இரங்காது, தமது கைகளினாலே தம் பிள்ளையைக் கறியமுதாக்குவதற்குக் கொலைத் தொழிலையும் செய்த சிறுத்தொண்டரின் செயல் வல்வினையேயாகும். பாச ஞானத் தில் அழுந்தி இருக்கும் உலகத்தோர்க்கு இது பொருந்தாததாகத் தெரிந்தாலும் பாசங் கடந்து தன்முனைப் பற்றுப் பற்றற்று எல்லாம் சிவம் எனும் பதிஞானம் பெற்று ஏகனாகி இறைபணி நின்ற சிறுத்தொண்டர்க்கு இது எளிதாயிற்று. இந்த வல்வினைப் பயனாய் பிள்ளையும் உயிர் பெற்றுப் பெற்றாரும் சிவகதி பெற்ற செய்தி இச்செயல் சிவபுண்ணியமே என்பதை உணர வைக்கின்றது.

இவ்வண்ணமே ஆறுநாள் உறவிலே தனது கண்ணையே தோண்டி இறைவனுக்கு அப்பிய கண்ணப்பர் செயலும், திருநீலகண்டம் மீது ஆணை எம்மைத் தீண்டாதீர் எனச் சத்தியம் செய்த மனைவியின் வாக்கிற்குக் கட்டுப்பட்டு வாழ்நாள் முழுதும் இளமை துறந்து வாழ்ந்த இயற்பகை நாயனாரின் செயலும் வல்வினையே.

தான் செய்த சிவபூசைக்கு இடையூறு செய்தவர் தன் தந்தை யென்றும் அவர் வேதியர் என்றும் பாராமல் அவர் காலை வெட்டி வீழ்த்திய விசாரசருமரின் வல்வினைக்குப் பரிசாகச் சண்டீசர் பதவியும் சிவபதமும் கிடைத்தன.

சிவனுக்கு நித்தமும் செந்நெல் அரிசியும் செங்கீரையும், மாவடுவும் கொடுத்து வந்த அரிவாள்தாயர் வறுமையால் தளர்ந்து ஒரு நாள் அவற்றைக் கொண்டு செல்லும் போது கால் தடுக்கி அவையெல்லாம் வயல் வெடிப்பில் வீழ்ந்தன. செய்வதறியாது தவித்த வர் பெருமானே இதனை ஏற்றருள வேண்டும் இல்லையேல் என் தொண்டையை அறுத்து இறப்பேன் என அரிவாள் கொண்டு அறுக் கப்புகச் சிவன் அதனைத் தடுத்துக் காட்சி கொடுத்து அவ்வல் வினைக்குப் பரிசாகச் சிவகதி கொடுத்தார்.

சிவனடியாரின் அழுக்காடையைத் தோய்த்துக் கொடுக்கும் தொண்டு பூண்ட திருக்குறிப்புத் தொண்டர் அப்பணி தவறியதால் தன் தலையைத் துணி அடிக்கும் கல்லில் மோதி இறைவனால் தடுத்து ஆட்கொள்ளப்பட்டார். அவர் செய்த வல்வினை அவருக்குச் சிவகதி சேர்ப்பித்தது.

இவ்விதமாகச் சிவார்ப்பணமாகத் தன்முனைப்பின்றிச் சிவன் செயலேயென்று வல்வினை செய்த பல நாயன்மார் வரலாற்றை திருத்தொண்டர் புராணத்தில் காணமுடிகிறது.

வல்வினை செய்தல் உலகியல் நோக்கில் தவறெனத் தெரியினும் அருளியல் நோக்கில் அவ்வாறு எண்ணுதற்கு உரியதன்று. இறைவனின் திருவருளில் திழைத்து நின்று தமக்கென யாதொரு பற்றுமின்றி வாழும் அருளாளர்களின் அருட்செயல்கள் யாவும் இறைவன் செயல்களேயாகும். அச்செயல்களில் அவ்வாறு வரும் தீமையும் தீமையாகாது, இதனை

**அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறமதுஆகும்**
**பரனடிக்கு அன்பிலாதார் புண்ணியம் பாவம் ஆகும்**
**வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி**
**நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மையாய்த்தே.**

எனச் சிவஞான சித்தியார் எனும் மெய்கண்ட சாத்திரம் சொல் கிறது.

சிவபெருமானது திருவடிக்கு அன்பு பூண்டவர்கள் செய்யும் செயல்கள் சில பாவம் போலத் தெரிந்தாலும் அவை புண்ணியமே யாகும். சிவபெருமான் திருவடிக்கு அன்பு இல்லாதவர் செய்யும் செயல்கள் புண்ணியம் போலத் தெரிந்தாலும் அவை பாவமேயாகும்.

உதாரணமாக சிவபெருமான் திருவடியில் அன்பு வைத்த விசாரசருமர் சிவபூசை செய்யும் போது அதனைக் காலால் இடறவந்த தந்தையின் காலை வெட்டினார். தந்தையின் காலை மகன் வெட்டியது பாவம் போலத் தெரிந்தாலும் சிவபூசைக்கு இடையூறு செய்தவர்களைச் சிவன் மீது கொண்ட அன்பால் அப்பூசை தடைப்படக்கூடாது என வெட்டியமை புண்ணியமேயாயிற்று. வெட்டிய விசாரசருமருக்குச் சண்டீசர் பதவி கிடைத்ததுடன் தந்தையும் எழுந்து அருள் பெற்றார்.

இதற்கு எதிர்மாறாகப் பெருந்தவம் உடையவனாகிய தக்கன் பெரும் புண்ணியச் செயல் போன்ற யாகம் செய்தான். ஆனால் அவன் சிவன் மீது அன்பு வைத்துச் செய்யவில்லை. சிவன் மீது கோபம் கொண்டு சிவத்துரோகமாகவே சிவனை நிந்திக்கச் செய்தான். அதனால் யாகமும் அழிந்து பங்கு கொண்டோரும் தண்டிக்கப்பட்டுத் தக்கனும் தலை இழந்தான்.

அரன்தனை மறந்து செய் அறங்கள் எல்லாம் வீண் செயலே யாகும். ஆதலால் மெல்வினையோ வல்வினையோ தன்முனைப் பற்று ஏகனாகி இறை பணி நின்று செய்யும் போதுதான் சிவகதி சித்திக்கும்.

09.01.2013 ஒலிப்பதிவு

உ
சிவமயம்

# இறையனாரின் திருமுகப்பாசுரமும் கைச்சீட்டும்

எங்கள் தமிழ்மொழி உலகச் செம்மொழிகளில் ஒன்றாகப் போற்றப்படும் சிறப்பிற்குரியது. இதற்குக் காரணம் தமிழில் உள்ள இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் வளங்களேயாகும். சங்ககாலம் முதல் இக்காலம் வரை காலத்தால் அழியாத இலக்கண இலக்கிய நூல்கள் எண்ணில்லாதன எழுந்துள்ளன.

சங்ககால இலக்கண இலக்கிய நூல்கள் பிற்காலத்து ஆக்கங்களுக்கு ஊற்றுக் கண்ணாக இருக்கின்றன. ஒரு விளை நிலம் எப்படி எக்காலத்துக்கும் விளைவு தந்து கொண்டிருக்கின்றதோ அப்படியே சங்க காலப் பாடல்களும் பிற்காலக் கலை வளங்களுக்கு விளை நிலமாக இருக்கின்றன எனலாம்.

புலமையுடையோர் புலவர்கள் எனப்படுவார்கள். அவர்கள் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்களாக இருந்திருக் கிறார்கள். நாடாளும் மன்னர்களும் பலர் புலவர்களாக இருந்திருக் கிறார்கள். அதுமட்டுமல்ல சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே சங்கப் புலவராக இறையனார் எனும் பெயருடன் இலக்கியம் படைத்த வரலாறும் உண்டு.

இங்கு நாம் இறைவன் படைத்த இலக்கியப் பாடல்கள் சிலவற்றை நயக்கலாம். அவை திருமுகப்பாசுரம் எனும் பெயரில் அழைக்கப்படுகின்றன. திருமுகம் என்றால் கடிதம், அல்லது தபால், அஞ்சல், முடங்கல், ஓலை எனும் பொருள் தரும். ஒரு தேவை கருதி இன்னொருவருக்கு எழுதப்படுவது திருமுகம் என இலக்கியங் களில் சொல்லப்படுகின்றது.

இங்கு மதுரைச் சோமசுந்தரப் பெருமான் சேரநாட்டு மன்னன் சேரமான் பெருமாளுக்கு எழுதிய திருமுகம் ஒன்று உளது. அது பக்தனாகிய தினமும் யாழ் வாசித்துப் பண்ணிசை பாடித் தன்னைத் தொழுகின்ற பாணபத்திரன் என்னும் இசைவல்லோனுக்காக எழுதப்பட்டது. அவனது வறுமையைப் போக்குவதற்குப் பொருள் கொடுத்தனுப்புமாறு கேட்டு எழுதிய திருமுகப்பாசுரம் இது.

இந்தத் திருமுகத்தில், ஒரு திருமுகம் எழுதும் போது எழுதுபவர் ஆகிய தான் யார், தன் தகைமை என்ன, யாருக்கு எழுதுகின்றேன் அவருடைய தகைமை என்ன எதற்காக யாருக்காக எழுதுகின்றேன், எழுதும் நோக்கத்தின் முக்கியத்துவம் என்ன என்பது செம்மொழியில் இலக்கியச் சுவை ததும்ப அதைப் படிக்கத் தொடங்கியவர் தொடர்ந்து சுவைத்துப் படித்துத் தன் விருப்பத்தை நிறைவு செய்யக் கூடிய மனமகிழ்வைத் தரக் கூடிய விதத்தில் எழுதப்பட்டுள்ள சிறப்பை இங்கு காணலாம்.

முதலிலே எழுதுபவர் தன்னை அறிமுகம் செய்கின்றார். ''மதிமலிபுரிசை மாடக் கூடல், பதி மிசை நிலவு பால் நிற வரிச்சிறகு, அன்னம் பயில் பொழில் ஆலவாயின் மன்னிய சிவன் யான் மொழி தரு மாற்றம்''

ஆகாய வீதியில் வலம் வரும் சந்திரனை முட்டக் கூடிய உயர்ந்த மாடமாளிகைகள் விளங்கும் கூடல் எனப்படும். மதுரை மா நகரின் மாடங்களில் பால் போன்ற வெள்ளைச் சிறகுகளையுடைய அழகிய அன்னப் பட்சிகள் இதுவல்லவோ நடையழகு என்று வியக்கும் வண்ணம் அன்னநடை பயில்கின்ற திருவாலவாய் என்று சொல்லப்படும் சிவத்தலத்தில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமான் ஆகிய நான் எழுதும் செய்தி என்று தொடங்கித் தொடர்ந்து யாருக்கு எழுதுகிறேன் என்பதை

**பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு**
**உரிமையின் உரிமையின் உதவிஒளிதிகழ்**
**குருமா மதிப்புரை குலவிய குடைக்கீழ்ச்**
**செருமா உகைக்கும் சேரலன் காண்க!**

என விழிக்கின்றார். மழைக் கால முகிலானது மண் செழிக்கக் காலமறிந்து மழை பொழிவது போல புலவர்களுக்கு அவன் வறுமை நீங்கும் வண்ணம் உரிமையுடன் வேண்டிய செல்வத்தை வழங்கி, அவர்கள் முகம் மலர்வதைக் கண்டு ஈந்து உவக்கும் இன்பத்துடன் தானும் முகம் மலர்ந்து நீதி தவறா வெண்கொற்றக்குடையின் கீழ் வீற்றிருந்து பகையை விரட்டும் வீரம் மிக்க சேரமன்னனே காண்பா யாக! என்று தான் பின்னால் கேட்கப்போகும் உதவியை வழங்கு

வதற்கு முற்றிலும் தகுதியுடையவன் நீ என்பதைச் சொல்லாமற் சொல்லி அதன் மேலே, தான் எழுதும் நோக்கத்தை எழுதுகின்றார்.

**பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்**
**தன்போல் என்பால் அன்பன் தன்பால்**
**காண்பது கருதிப் போந்தனன்**
**மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே.**

யாழ் இசைப்பதற்குரிய அத்தனை பண்பும் நிறைந்த உத்தமக் கலைஞனாகிய பாணப்பத்திரன் என்பவன் இந்தத் திருமுகத்தை உன் சமூகத்திற்குக் கொண்டு வருகின்றான். இவன் நீ என்மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கின்றாயோ அவனும் அந்தளவு அன்பை என்மீது வைத்துள்ளான். உன்போல் என்பால் அன்பன். இவன் உன்னைக் காண்பதற்காக வருகின்றான். இவனுக்குத் தேவையான பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பி வைப்பாய். மாண்பொருள் கொடுத்து வரவிருப்பாய் எனத் திருமுகத்தை முடிக்கின்றார்.

திருவாலவாய் இறையனார் எழுதிய இத்திருமுகத்திற்கு இணையான திருமுகம் எங்குமே இல்லை. இது திருமுகம் எழுதும் பாடத்தை எமக்குப் பண்பாக உணர்த்துவதைக் கண்டு பயன் கொள்ள லாம். இதோ இறையனார் திருமுகத்தை முழுமையாக நோக்கலாம்.

**மதிமலிபுரிசை மாடக் கூடல்**
**பதிமிசை நிலவு பால் நிற வரிச்சிறகு**
**அன்னம் பயில் பொழில் ஆலவாயின்**
**மன்னிய சிவன் யான் மொழிதரு மாற்றம்**
**பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு**
**உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்**
**குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்**
**செருமா உகைக்கும் சேரலன் காண்க**
**பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்**
**தன்போல் என்பால் அன்பன் தன்பால்**
**காண்பது கருதிப் போந்தனன்**
**மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே!**

என்பது திருமுகம்.

திருவாலவாய்ச் சிவன் ஆகிய இறையனார் எழுதிய இந்தத் திருமுகம் போல சிதம்பர நடராசன் ஆகிய சிற்றம்பலவன் எழுதிய திருமுகப்பாசுரமாகிய கைச்சீட்டும் ஒன்றுளது.

அது தில்லைச் சிற்றம்பலவன் கொற்றங்குடியார் எனும் உமாபதி சிவாசாரியாருக்குப் பெற்றான் சாம்பான் எனும் பக்தனுக்காக எழுதிய திருமுகம்.

பெற்றான் சாம்பான் எனும் பக்தன் தினமும் தில்லைச் சிற்றம்முடைய நடராசப் பெருமானுக்கு அமுது ஆக்குவதற்கு விறகு கொடுக்கும் தொண்டு புரிந்தவன். என்னேரமும் நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் நடராசப் பெருமானையே நினையும் கருத்துடையவன். தன்னை முழுமையாகச் சிவ தொண்டுக்கே அர்ப்பணித்த பக்குவ ஆன்மா ஆகிய அவனுக்கு முத்தி பெறும் பக்குவம் வாய்க்கப் பெற்றது.

அதேவேளை தன்னை முப்போதும் திருமேனி தீண்டி அர்ச்சிக்கும் தில்லை மூவாயிரவர்களில் முதல்வரான சைவசித்தாந்தம் தெளிந்த ஞானியாகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியாருக்கு ஞான குருவாகும் பக்குவம் வாய்க்கப் பெற்றிருந்தது.

இங்கு சிவன் ஒரு திருவிளையாடல் செய்யக் கருதினார். ஒரு பக்குவ ஆன்மாவுக்கு இன்னொரு பக்குவ ஞானகுரு மூலம் முத்தி கொடுப்பித்து இருவரின் பக்குவத்தையும் உலகுக்கு உணர்த்தக் கருதினார்.

திருமுகத்தை எழுதிப் பெற்றான் சாம்பானிடமே கொடுத்து உமாபதிசிவாச்சாரியாரிடம் அனுப்பினார். அத்திருமுகம் இது.

**அடியார்க்கெளியன் சிற்றம்பலவன், கொற்றங்**
**குடியார்க் கெழுதிய கைச்சீட்டு – படியின்மிசை**
**பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து**
**முத்தி கொடுக்க முறை.**

இத்திருமுகத்தைக் கைச்சீட்டு எனவே குறிப்பிடுகின்றார்.

தன் அடியவர்களுக்கு எளிதில் வெளிப்பட்டு அருள் புரியும் பண்புடைய தில்லைச் சிற்றம்பலவனாகிய நான், கொற்றங்குடியில் இருக்கும் உமாபதி சிவத்துக்கு எழுதும் கைச்சீட்டு இது. இப்பூமியிலே

பலரும் அறியும் படியாகப் பெற்றான் சாம்பான் என்னும் என் அன்பனுக்கு, அவனுடைய மலபந்தங்கள் எல்லாம் நீங்கும் படியான நிர்வாண தீட்சை கொடுத்துத் தூய்மையுடையவனாக்கி, அவனுக்கு நீர் முறையாக முத்தி கொடுப்பீராக, என்பது இக்கைச்சீட்டின் கட்டளை.

சிற்றம்பலவன் கட்டளைப்படியே உமாபதி சிவாசாரியார் சிவனை நினைத்து பெற்றான் சாம்பானுக்கு நயன தீட்சை நல்கி அவன் மீது அருட்கண்பார்வை செலுத்தினார். உடனே பெற்றான் சாம்பான் ஜோதிமயமான ஒளியுடல் பெற்று சிவபதமாகிய முத்தி பெற்றார் என்பது வரலாறு.

இதனை விளங்கிக் கொள்ளாத சிலர் மன்னனிடம் முறையிட மன்னனும் உமாபதியிடம் நீ முத்தி கொடுத்தது உண்மையானால் இன்னொருவருக்கும் கொடுத்துக் காட்ட வேண்டும் எனக் கட்டளை யிட்டான்.

அங்கு பக்குவர்கள் யாரும் இல்லாததால் தினமும் சிவனுக்குச் செய்யப்படும் அபிஷேக நீரான திருமஞ்சனத் தீர்த்தத்தில் நீராடும் பேறுபெற்ற கோமுகியின் பக்கத்தில் நின்ற முல்லைச் செடி ஒன்றின் பக்குவத்தை அறிந்து அதற்கு முத்தி கொடுத்துச் சிவசோதியுட் கலக்கச் செய்தார்.

சிற்றம்பலவன் கொடுத்த கைச்சீட்டின் மகிமையால் இந்த அற்புதச் செயல் நிகழ்ந்தது.

தமிழ் இலக்கியப் பரப்பிலே திருவாலவாய் இறையனாரின் திருமுகப்பாசுரமும் தில்லைச் சிற்றம்பலவனின் கைச்சீட்டும் தெய்வீகத் தமிழுக்கு அணி சேர்த்து என்றும் நின்று நிலவும் செம்மை இன்புறத்தக்கதே.

09.01.2013 ஒலிப்பதிவு

உ
சிவமயம்

# நவராத்திரி வழிபாடும் சகலகலாவல்லி மாலையும்

புரட்டாதி மாதப் பூர்வ பக்கப் பிரதமை தொடக்கம் தசமி வரையுள்ள காலம் நவராத்திரி காலம் ஆகும். நவ என்பது ஒன்பதைக் குறிக்கும். ஒன்பது இரவுகளும் சக்திக்குரிய சிறப்பான பூசை வழிபாடுகள் நடக்கும். தசமியாகிய பத்தாம் நாள் விஜயதசமி. வெற்றி பெற்ற பத்தாம் நாளென மாநோன்பு விழா நடைபெறும். இந்த நாளில் புதிதாக ஏடு தொடக்குதல், மற்றும் கவின் கலைகள் பயிலத் தொடங்குதல் முதலான நாட்கருமங்கள் நடைபெறும்.

புரட்டாதி மாதம் கன்னி மாதம் எனப்படும். முதுவேனிற் பருவம் முடிந்து கார்காலம் கருக் கொள்ளும் பருவம் இது. அதனால் இயற்கையில் எங்கும் நிறைந்து எல்லாமாய் உள்ள அன்னை பராசக்தியின் அருளை வேண்டி வழிபாடு செய்யும் காலமாய் இது அமைந்துள்ளது.

மனிதகுலம் செழிப்பாக வாழ்வாங்கு வாழ்வதற்கு மூன்று வித செல்வங்கள் தேவைப்படுகின்றன. முதலில் மனஉறுதியான வீரம் அடுத்துப் பொருட் செல்வம்; மற்றையது கல்விச் செல்வம். இந்த மூன்றும் ஒன்றில்லாமல் ஒன்று இல்லை என்ற வகையில் தொடர்புடையன. இவற்றில் ஒன்று இல்லாவிட்டாலும் நாம் நிறைவாக வாழ முடியாது.

வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றினையும் பெறுவதற்கு எமக்குச் சக்தி தேவைப்படுகிறது. சக்தி என்பது வல்லமையாகும். இவற்றைப் பெறுவதற்கு எங்கும் நிறைந்துள்ள மகாசக்தியை மூன்று வடிவங்களில் வைத்து நவராத்திரி காலத்தில் பூசை வழிபாடு செய்கின்றோம்.

வீரத்தை வேண்டித் துர்க்கையாகவும், செல்வத்தை வேண்டி இலக்குமியாகவும், கல்வியை வேண்டிச் சரஸ்வதியாகவும் மும்மூன்று

நாட்கள் வழிபாடு செய்து பத்தாம் நாள் மகாசக்தியை வணங்கி வரம் பெறுகின்றோம். புராணக் கதையின் படி பத்தாம் நாள் அன்னை மகாசக்தி மனித குலத்தை வருத்திய மகிஷாசுரனை வதம் செய்து மக்களை மீட்டு அருள் புரிந்த நாளாகச் சொல்லப்படும். இதற்கு அடையாளமாகவே அன்று வாழை வெட்டும் நிகழ்ச்சி நடை பெறுகின்றது.

இதன் உட்பொருளை நாம் சிந்தித்துத் தெளிந்து கொள்ள வேண்டும். அங்கு வெட்டப்படும் மகிஷாசுரன், மகிஷம் என்றால் எருமை. எருமை வடிவான அசுரன் யார் என்றால் எங்களிடம் குடி கொண்டுள்ள தீயகுணங்கள் இயல்புகளாகிய எருமைக் குணங்களே. அவை சோம்பல், முரட்டுச் சுபாவம், மற்றவர்களுக்கு இடங்கொடாமை, முட்டி மோதும் குணம், சிறிதும் மானம் அல்லது சுறனை இல்லாத இயல்பு, மந்த புத்தி, எதையும் குழப்பியடிக்கும் இயல்பு முதலான தீய குணங்களின் ஒட்டு மொத்த உருவமாகவே மகிஷாசுரன் உருவகிக்கப்படுகின்றான். இவ்விதமான தீய குணங்கள் எங்களை விட்டு விலகினால் தான் நாம் வீரம், செல்வம், கல்வி என்பவற்றைத் தேடவும், தேடியதைக் கொண்டு நல்வாழ்வு வாழவும் முடியும்.

அதனால் ஒன்பது நாட்களும் அன்னை மகாசக்தியை வணங்கி இத்தீய குணங்களை நீக்கி நல்ல சக்தியை, வல்லமையைத் தா என்று வேண்டுதல் செய்கின்றோம். இவ்வேண்டுதலின் பயனாக எமது நினைவிலும், சொல்லிலும், செயலிலும் அன்னை பராசக்தி குடி கொண்டு நினைவும் சொல்லும் செயலும் நல்லனவாக மலர அருள் புரிகின்றாள். இதனையே மகாகவி பாரதியார் அன்னை பராசக்தியிடம்

**எண்ணிய முடிதல் வேண்டும்**
**நல்லவே எண்ண வேண்டும்**
**திண்ணிய நெஞ்சம் வேண்டும்**
**தெளிந்த நல்லறிவு வேண்டும்**
**பண்ணிய பாவம் யாவும்**
**பரிதிமுன் பனியே போல**
**நண்ணில நின்முன் இங்கு**
**நசித்திடல் வேண்டும் அன்னாய்**

என்று வேண்டுதல் செய்கின்றார். பண்ணிய பாவம் யாவும் நசித்திடல் தான் மகிஷாசுரன் என உருவகிக்கப்பட்ட எங்கள் தீச்

செயல்களை அழித்தல். அவை நசிந்து விட்டால் திண்ணிய நெஞ்சம், தெளிந்த நல்லறிவு, நல்லவே எண்ணல், எண்ணிய முடிதல் சித்திக்கும் என்பதையும் உணர்த்துகின்றார். நாமும் இவ்வண்ணம் பராசக்தியை வேண்டி நல்லருள் பெறுங்காலமே நவராத்திரியாகும்.

நாம் எக்கருமத்தையும் மனதால் நினைந்து, நாவால் சொல்லி, உடலால் செய்வோம். மனம், வாக்கு, காயம் எனப்படும் இந்த மூன்றும் சுத்தமாய் இருக்க வேண்டும். இவற்றையே திரிகரண சுத்தி என்று பெரியோர் சொல்வர். திரிகரண சுத்தியுடன் செய்யப்படும் காரியங்கள் சித்தியடையும். எனவே தான் மகாசக்தியை நவராத்திரி காலத்திலே திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருவாய் என வேண்டுதல் செய்கின்றோம்.

மனம், வாக்கு, காயம் ஆகிய இந்தத் திரிகரணங்களிலும் நாம் நவராத்திரி காலத்தில் வழிபடும் இலக்குமி, சரஸ்வதி, துர்க்கை ஆகிய மூன்று சக்திகளும் இருக்கிறார்கள்.

திருமாலுடைய சக்தி இலக்குமி. இவர் திருமாலுடைய மார்பிலே இருக்கிறார். பிரமாவுடைய சக்தி சரஸ்வதி. இவர் பிரமாவினுடைய நாவிலே இருக்கிறார். சிவனுடைய சக்தி துர்க்கை. இவர் சிவனுடைய காயத்திலே அதாவது உடலின் இடப்பாகத்திலே இருக்கின்றார்.

இவர்கள் மூவரையும் நாமும் எங்களுடைய திரிகரணங்களிலும் குடி இருக்க வேண்டி வழிபட வேண்டும். செல்வத்துக்குரிய தெய் வமான மகாலட்சுமியை மனதிலே வைத்தால், போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற மனநிறைவான பெருஞ் செல்வத்தைப் பெறலாம். கல்விக்குத் தெய்வமான சரஸ்வதியை நாவிலே வைத்தால் அவள் வாக்கிலே இருந்து சகல கலை ஞானங்களையும் தருவாள். வீரத்துக்குத் தெய்வமான துர்க்கையை நமது உடலிலே வைத்தால் செய்யும் காரியம் எல்லாவற்றிலும் வெற்றியைத் தருவாள்.

இலக்குமி உள்ளத்தில் உண்மை வடிவாயும், சரஸ்வதி நாவில் வாய்மை வடிவாயும், துர்க்கை உடலில் மெய்ம்மை வடிவாயும் இருந்து எடுத்த காரியம் யாவிலும் வெற்றி தந்து எம்மை வாழ்வாங்கு வாழ வைப்பார்கள்.

ஒன்பதாவது நாள் இரவு வழிபாடு ஆயுதபூசை எனப்படும். ஒவ்வொருவரும் தத்தம் தொழிலுக்குரிய கருவிகளாகிய ஆயுதங்

களைப் பூசையில் வைத்து வழிபட வேண்டும். செய்யும் தொழிலே நம்மை வாழ வைக்கின்றது. அதனாலே தான் செய்யும் தொழிலே தெய்வம் எனும் பொன்மொழி பிறந்தது. நமது ஆயுதங்களின் மூலம் நம் தொழில் வளம் பெருக வேண்டும் என்பதுடன் அவற்றுக்குத் தெய்வ சக்தியும் கிடைக்க வேண்டும் என வேண்டித் தொழுகின்றோம்.

எந்த ஆயுதத்தைக் கொண்டும் நல்லதும் செய்யலாம் கெட்டதும் செய்யலாம். அது எழுது கோலானாலென்ன அரிவாளானாலென்ன. எழுது கோலைக் கொண்டு காவியம் படைக்கும் நற்பணியும் செய்யலாம். அடுத்தவரைக் கெடுக்கும் பொய்யுரையும் எழுதலாம். அரிவாளைக் கொண்டு காய்கறி அரியும் நற்பணியும் செய்யலாம். அடுத்தவர் கழுத்தை அரிந்து கொலைச் செயலும் செய்யலாம்.

ஆதலால் நமது ஆயுதங்கள் நல்லதையே செய்யும் வல்ல மையை உன் தெய்வீக சக்தியைத் தந்து வாழ்விப்பாய் என்று ஆயுதபூசையில் வழிபாடு செய்ய வேண்டும். இதற்காகவே ஆயுத பூசையில் ஆயுதங்களை வைத்து வணங்கி மறுநாள் விஜயதசமியில் ஆயுதங்களைக் கொண்டு நாட்கருமங்கள் செய்யப்படுகிறது.

நவராத்திரிக் கால வழிபாட்டிலே அவ்வத் தெய்வங்களுக்குரிய தெய்வீகப் பாடல்களைப் பாடி வழிபடுகின்றோம். அவையெல்லாம் தெய்வத்தின் அருள் வேண்டிப் பாடப்படுகின்றன. அவற்றுள் குமரகுருபர சுவாமிகளின் சகலகலாவல்லிமாலை எல்லா நாட்களிலும் எல்லா இடங்களிலும் பாடி வழிபாடு செய்யும் முறை வழக்கத்தில் உள்ளது. இதற்குக் காரணம் சகலகலாவல்லிமாலையின் மகத்துவமேயாகும். அதனையும் இங்கு சிந்தித்தல் தகும்.

சகலகலாவல்லிமாலை பாடிய குமரகுருபரர் பிறவியிலே ஊமைப் பிள்ளை. பாண்டி நாட்டில் ஸ்ரீ வைகுண்டத்தில் வேளாள குலத்தில் சண்முகசிகாமணிக்கவிராயருக்கும் சிவகாமசுந்தரி அம்மையாருக்கும் பிள்ளையாகப் பிறந்த இவருக்கு ஐந்து வயதாகியும் வாய் பேச முடியாத ஊமைப்பிள்ளையாகவே இருந்தார்.

தந்தைதாய் மனம் மிக வருந்தித் திருச்செந்தூர் முருகன் சந்நிதியில் கொண்டு போய் நேர்ந்து விரதமிருந்தார்கள். ஒரு நாள் இரவு குமரகுருபரர் கனவிலே முருகன் ஒரு அர்ச்சகராக வந்து அவருடைய நாவிலே சடாட்சரம் ஆகிய சரவணபவ எனும் முருக நாமத்தை எழுதி முருகனைத் தரிசிக்க வரும்படி சொல்லி மறைந்தார்.

குமரகுருபரர் விழித்தெழுந்தார். பேசும்திறன் வந்துவிட்டது. அம்மா அப்பா என்று பெற்றாரை அழைத்து எழுப்பினார். அவர்கள் ஆச்சரியத்துடன் எழுந்து முருகன் அருளை நினைந்து பிள்ளையைத் தழுவ அவர் கனவில் நடந்ததைச் சொன்னார்.

அதிகாலையிலே நீராடி மூவரும் பெருமான் தரிசனத்துக்குக் கோயிலினுள்ளே சென்றார்கள். என்ன அதிசயம், ஊமைப்பிள்ளை யாயிருந்தவர் முருகனைப் பாடிப்பாடி வணங்கினார். பாடல் என்றால் சாதாரண பாடல் அல்ல, பாடல்களிலே மிகக் கடினமான கலிவெண்பா வில் - கந்தர் கலிவெண்பாவில் முருகப் பெருமானின் அருள் ஆடல்கள் அத்தனையையும் ஐந்து வயதுக் குழந்தை, ஊமையாயிருந்த குமரகுரபரர் பாடுவதைக் கேட்டு அர்ச்சகர் முதல் அனைவரும் அதிசயித்து செந்திலாண்டவன் திருவருளை வியந்து போற்றினார்கள்.

சொந்த ஊராகிய மதுரைக்கு வந்தார்கள். மதுரை மீனாட்சி யம்மன் கோயிலில், மன்னர் திருமலை நாயக்கர் முன்னிலையில், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாடினார். வருகைப் பருவம் பாடும் போது மீனாட்சியம்மையே குழந்தையாக வந்து மன்னர் மடியில் இருந்து கேட்டதை அனைவரும் கண்டு ஆனந்தித்தார்கள்.

ஐந்து வயதிலே தெய்வீக ஞானம் பெற்ற குழந்தை குமர குருபரரை தருமபுர ஆதின மகாசந்நிதானம் ஸ்ரீ மாசிலாமணித்தேசிகர் அழைத்து தீட்சை கொடுத்துக் காசியிலே உனக்குப் பணி காத்திருக் கிறது அங்கு போ எனப் பணித்தார்.

அக்காலத்தில் காசி, மொகலாயர் படையெடுப்பால் சிதைந்து இருந்தது. டில்லி பாதுஷாவே மன்னராயிருந்தார். அவர்களுடைய மொழி இந்துஸ்தான். அங்கு போய் மன்னனுடன் பேசுவதற்கு இந்துஸ்தான் மொழிப் பாண்டித்தியம் வேண்டும். அத்துடன் சைவ வெறுப்புடையவராகிய அவர்களுடன் வாதாடி வெல்லக் கூடிய சொல்விற்பனவும் வேண்டும்.

குமரகுருபரர் இதற்கு வேண்டிய ஆற்றல் எல்லாவற்றையும் தர வேண்டும் என்று சகலகலாவல்லிமாலை பாடிச் சரஸ்வதியை வேண்டுதல் செய்தார்.

முதலாவது பாடலிலே சகலகலாவல்லியே! வெண்தாமரைக் கன்றி நின்பதம் தாங்க என் வெள்ளையுள்ளத் தண் தாமரைக்குத்

தகாது கொலோ என்று கேட்டார் கலைவாணி அவர் உள்ளத்தில் குடிகொண்டார்.

இரண்டாவது பாடலில் நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும் பாடும் பணியில் பணித்தருள்வாய் என்று கேட்டார். நாற்கவியும் பாடும் கவியுள்ளம் கிடைத்தது.

அடுத்த பாடலில், தூக்கும் பனுவல் துறை தோய்ந்த கல்வியும் சொற்சுவை தோய் வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் என்று கேட்டார். வாக்குவன்மையும் கைகூடியது.

தொடர்ந்து வரும் பாடல்களில், பண்ணும், பரதமும், கல்வியும், தீஞ்சொற்பனுவலும் யான் எண்ணும் பொழுது எளிது எங்கநல்காய் எனக் கேட்டார். அவர் எண்ணியதெல்லாம் சித்தித்தது.

அடுத்த பாடலில், சொல்விற்பனமும் அவதானமும் கல்வி சொல்லவல்ல நல்வித்தையும் தந்தடிமை கொள்வாய் என்று கேட்டார். இந்துஸ்தானி மொழி ஞானமும் சொல்விற்பனமும் கைவந்தது.

இறுதிப் பாடலில் டில்லி பாதுஷாவுடன் சரி நிகர் சமானமாக இருந்து பேசும் ஆற்றலையும் தர வேண்டும் என நினைந்து மண்கண்ட வெண்குடைக்கீழாக மேற்பட்ட மன்னரும் என்பண் கண்டளவில் பணியச் செய்வாய் கண்கண்ட தெய்வம் நீயே எனப் பாடிய மாத்திரத்தே அவர் முன் ஒரு சிங்கம் வந்து நின்றது. சிங்கத்தில் ஏறினார். டில்லி பாதுஷா முன் போய் நின்றார். பாதுஷாவுடன் இந்துஸ்தானி மொழியில் பேசினார். அங்குள்ளவர்கள் சைவத்தைப் பழித்தார்கள். தனது சொல்விற்பனவால் அவர்கள் மொழியிலேயே அவர்களுக்குச் சைவத்தின் மெய்யியலை எடுத்து விளக்கினார். தான் சொன்னது முழுவதும் சத்தியம் என நிரூபிக்க பழுக்கக் காய்ச்சிய மழுவைக் கையிலேந்தி மெய்ப்பித்தார்.

பாதுஷா அதிசயித்து மகிழ்ச்சு உங்களுக்கு வேண்டியதை பெறலாம் எனக் காசியில் முன் போல விசுவநாதரை வணங்கும் வசதியும் மடம் கட்டக் காணியும் பெற்று மீண்டார் கலைவாணி கடாட்சத்தால் இச்செயற்கரும் செயலைச் செய்த குமரகுரபரர் அங்கே தருமபுர ஆதீனத்துக்கொரு கிளை மடமும் கட்டி மகாசந்நிதானத்தின் ஆணையின் வண்ணம் தானே மடாதிபதியாயிருந்து சைவத் தொண்டாற்றிப் பல அரிய நூல்களையும் செய்து சிவனடி சேர்ந்தார்.

இன்றும் காசியில் அவர் நிறுவிய மடத்தையும் முன் போலக் காசி விசுவநாதரை வழிபடும் நிலையையும் காணலாம். இதன் மூலம், சகலகலாவல்லிமாலையின் மகத்துவம் எத்தகையது என்பதை நாமறிய முடிகின்றது.

ஆதலால், நவராத்திரி காலத்திலே திரிகரண சுத்தியுடன் அன்னை பராசக்தியை வழிபாடு செய்து, சகலகலாவல்லிமாலையைப் பொருளுணர்ந்து பண்ணுடன் பாடி, தெய்வீக சக்தியைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோம்.

**உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்**
**வாக்கினிலே ஒளியுண்டாகும்**
**வெள்ளத்தின் பெருக்கைப்போல் கவிப்பெருக்கும்**
**கலைப்பெருக்கும் மேவுமாயின்**
**பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்**
**விழிபெற்றுப் பதவிகொள்வார்**
**தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்**
**இங்கமரர் சிறப்புக் கண்டார்.**

**– மகாகவிபாரதி**

27.09.2011 ஒலிப்பதிவு

உ
சிவமயம்

# ஆன்ம யாத்திரை

மனித வாழ்வைப் பலரும் பலவாறு விமர்சிப்பர். சிலர் வாழ்க்கை ஒரு போராட்டம் என்பர். சிலர் வாழ்க்கை ஒரு சவால் என்பர். சிலர் வாழ்க்கை ஒரு சமுத்திரம் என்பர். சிலர் வாழ்க்கை ஒரு துன்பச் சுமை என்பர். சிலர் வாழ்க்கை ஒரு விளையாட்டு என்பர். இப்படியே ஒவ்வொருவரும் தத்தம் அனுபவத்தை முன்வைத்து விமர்சிப்பர்.

மனித வாழ்க்கை என்பது பலர் நினைப்பது போலப் பிறப்புக்கும் இறப்புக்கும் உட்பட்டது மட்டுமல்ல. இப்படி எத்தனையோ எண்ணில்லாத காலம் இறந்தும் பிறந்தும் தொடர்வது தான் வாழ்க்கை. மாணிக்கவாசக சுவாமிகள் ''புல்லாகிப் பூடாய்'' எனத் தொடங்கி ''இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்'' எனக் கூறுவது கொண்டு பிறப்புக்கள் எண்ணில்லாதன என்பதை அறிய முடியும். இப்படி எண்ணிலாப் பிறப்புகள் பிறந்த பின் இறுதியில் என்ன நடக்கும் என்பதையும் ''மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்'' எனச் சொல்கின்றார்.

எனவே பிறவியின் பயன் இறைவனை அடைதல் என்னும் உண்மை பெறப்படுகின்றது. ஆதலால் வாழ்க்கையை ஆன்ம யாத்திரை என்பதே பொருத்தம்.

எமது வாழ்நாளில் இறைவனுடைய அருளை வேண்டிப் பல புண்ணிய தலங்களுக்கும் புண்ணிய தீர்த்தங்களுக்கும் யாத்திரை செய்கின்றோம். களைத்த போது ஒரு இடத்தில் தங்கி இருந்து களைப்பு மாறிய பின் யாத்திரையைத் தொடர்ந்து நிறைவு செய்வோம்.

அதேபோல ஆன்மா ஒரு உடலை எடுத்து வாழ்ந்து அந்த உடல் பழுதான போது விட்டு விலகி இருந்து பின் வேறொரு உடலை எடுத்து வாழ்ந்து இப்படியே எண்ணிலாப் பிறவிகளை எடுத்து வாழ்கிறது. ஆன்ம யாத்திரையில் ஒவ்வொரு பிறப்பும் அது தங்கிச் செல்லும் இடமாகும்.

தலயாத்திரையில் ஒவ்வொரு தலமாகத் தரிசித்து மேலே செல்லச் செல்ல மனதில் மகிழ்ச்சியும், தெய்வ நம்பிக்கையும் வளர்வது போல ஆன்ம யாத்திரையிலும் ஒவ்வோர் பிறப்பும் உயர்வுடையதாக அமைதல் வேண்டும்.

ஒருவர் இறந்து விட்டார் என்றால் இறந்தது அவரது உடல் தான். உடலுள் வாழ்ந்த உயிர் இறப்பதில்லை. உயிர் அநாதியானது. என்றும் உள்ள பொருள். உயிருக்கு இந்த உடல் எப்படிக் கிடைத்தது என்றால் அது போன பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்பவே கிடைத்தது.

இறக்கும் போது உயிர் செய்த நல்வினை தீவினைகள் மட்டும் தான் உயிருடன் போகும். ஏனைய சொத்துக்கள் எல்லாம் உடலுடன் நின்று விடும்.

**அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே, விழிஅம்பொழுக**
**மெத்திய மாதரும் வீதிமட்டே, விம்மி விம்மி இரு**
**கைத்தலை மேல் வைத்தழும் மைந்தரும் சுடுகாடுமட்டே,**
**பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே.**

என்பது பட்டினத்தார் பாடல்.

இறந்த போது அவர் தேடிய செல்வமும் வாழ்வும் வீட்டுடன் நின்று விடும். கண்ணீர் சொரிந்து கதறியழும் பெண்கள் வீதியுடன் நின்று விடுவர். விம்மி விம்மி அழும் மைந்தரும் உறவுகளும் சுடலையுடன் திரும்பி விடுவர். அவருடைய உயிருடன் செல்பவை, அவர் வாழும் போது செய்த நல்வினையாலாகிய புண்ணியமும் தீவினையாலாகிய பாவமும் தான்.

இறப்பு எனப்படுவது இந்த உடலை விட்டு உயிர் பிரிதல் ஆகும். நாம் அணிகின்ற சட்டை பழுதாகி விட்டால் அதை எறிந்து விட்டுப் புதிய சட்டையை வாங்கிப் போடுகிறோம். அதேபோல உயிர் இருந்து வாழ்ந்த உடல் பழுதாகிவிட்டால் உயிர் அவ்வுடலை விட்டு விலகிப் புதிய உடலைப் பெறுகிறது. இதனைத் தான் இறப்பும் பிறப்பும் என்கின்றோம். அவரவர் வசதிக்கேற்ற சட்டையை வாங்கிப் போடுவதைப் போல உயிர் செய்த பாவ புண்ணியத்துக்கேற்ற உடலைப் (பிறப்பைப்) பெறுகின்றது.

பிறப்பு என்னும் போது உடம்பும், அந்த உடம்பு இயங்கு வதற்குரிய கருவி கரணங்களும், அதுவாழ்வதற்குரிய இடமும், அது அனுபவிப்பதற்குரிய போகமும் பெற்று வருதல் ஆகும். சைவ சமயத்த வர்களின் வாழ்வியலில் ஒரு வருடத்தில் வரும் 12 மாதங்களுமே வழிபாட்டுக்குரிய புண்ணிய காலங்களைக் கொண்டிருப்பது எங்கள் ஆன்ம யாத்திரையில் படிப்படியாக உய்திபெற்று உயர்வடைவதற்கு வாய்ப்பாக இருக்கின்றது.

**புரட்டாதி :**

- புரட்டாதி மாதத்தில் மகாளய பட்சம், எமது முன்னோர் களுக்கான பிதிர்க்கடமைகளைச் செய்து அவர்களது ஆன்ம யாத்திரைக்குத் தானதர்மம் செய்யும் காலமாய் அமைந்துள்ளது.
- நவராத்திரி காலம் எமது நல்வாழ்வுக்குத் தேவையான கல்வி, செல்வம், வீரம் என்பவற்றை அன்னை பராசக்தியை வழிபட்டுப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ வாய்ப்பாய் அமைந்திருக்கின்றது. விஜயதசமியில் ஏடு தொடக்கவும், கலைகளைப் பயிலத் தொடங்கவும் வாய்ப்பாகின்றது.

**ஐப்பசி :**

- ஐப்பசி மாதத்தில் வரும் தீபாவளி தீமைகள் எல்லாவற்றையும் ஒழித்து நல்லன செய்து புதுவாழ்வுக்கு வழிகாட்டுகின்றது.
- ஐப்பசி கந்தசஷ்டி காலம் முருகனை நினைத்து நோன்பிருந்து அவன் அருள் பெற வாய்ப்பாகின்றது.

**கார்த்திகை :**

- கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகையும் பூரணையும் கூடிய நன்னாள் அகத்திருளை நீக்கி ஞானஒளியைப் பெறுவதற்குரிய ஒளித் திருநாளாய் அமைந்துள்ளது.

**மார்கழி :**

- மார்கழி மாதம் திருவெம்பாவைக் காலத்தில் அதிகாலை நீராடி ஆலயம் சென்று திருப்பள்ளி எழுச்சி திருவெம்பாவை பாடி இறுதி நாளில் ஆர்த்திரா தரிசனம் என்னும் நடராசப் பெருமானின் திருவாதிரைத் தரிசனம் பெற வாய்ப்பாகின்றது.

**தை :**

- தை மாதம் தை பிறந்தால் வழி பிறக்கும் எனச் சூரியனுக்குப் பொங்கலிட்டு வணங்கி மறுநாள் மாட்டுப் பொங்கலில் கோ மாதாக்களையும் இடப தேவர்களையும் வணங்க வாய்ப் பாகிறது.
- தைப் பூச நாளில் எல்லாக் கோயில்களிலும் சிறப்பாக முருகன் கோயில்களிலும் விழாக் காணவும் நாட்கருமங்கள் செய்யவும் வாய்ப்பாகின்றது.

**மாசி :**

- மாசி மாதத்தில் மகாசிவராத்திரியில் பசித்திருந்து விழித்திருந்து, தனித்திருந்து சிவபெருமானின் நல்லருள் பெறவும்; மாசி மகத்தில் புண்ணிய தீர்த்தமாடி வரம் பெறவும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

**பங்குனி :**

- பங்குனி மாதத்தில் திங்கள் தோறும் அம்ப[illegible]தப் பொங்கலிட்டும் பங்குனி உத்தரத்தில் எம் பெ[illegible]னின் மணக்கோலம் கண்டும் அருள் பெற வாய்ப்பாகின[illegible]

**சித்திரை:**

- சித்திரை மாதத்தில் வசந்த காலத்தில் புதுவருடக் கொண்டாட் டங்களுடன் சித்திரைச் சித்திரையும் பூரணையும் கூடி வரும் நாளில் கோயில்களிலெல்லாம் விழாவெடுத்துச் சித்திரைக் கஞ்சி எல்லார்க்கும் பகிர்ந்தளித்து மகிழும் வாய்ப்புக் கிடைக்கிறது. இறந்த தாய்மாருக்காகப் புண்ணிய தீர்த்தத்தில் பிதிர்க்கடன் செய்யவும் வாய்ப்பாகிறது.

**வைகாசி :**

- வைகாசி மாதத்தில் வைகாசி விசாகத்தில் முருகப் பெருமானுக்கு நோன்பிருந்து விழாவெடுத்து மகிழ முடிகிறது.

**ஆனி :**

- ஆனி மாத உத்தரத்தில் நடராசப் பெருமானின் அபிஷேக தரிசனம் கண்டு ஆனந்திக்க முடிகிறது.

**ஆடி** :

- ஆடி மாதத்தில் இறந்த நம் முன்னோர்க்காக ஆடி அமாவாசையில் புண்ணிய தீர்த்தமாடிப் பிதிர்சங்கற்பம் செய்து வழிபட முடிகிறது.

**ஆவணி** :

- ஆவணிச் சதுர்த்தியில் விநாயகருக்குப் பெருவிழா எடுத்து ஞான விநாயகனின் நல்லருள் பெற முடிகிறது.

இப்படியே ஒவ்வொரு மாதமும் புண்ணிய காலமாகவே நம் ஆன்மயாத்திரை தொடர்கிறது.

**மாதங்கள் மட்டுமல்ல** வாரங்களில் கூட ஆடிச் செவ்வாய், ஆவணி ஞாயிறு, புரட்டாதிச் சனி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகைச் சோமவாரம், மார்கழி ஞாயிறு, தைச் செவ்வாய், பங்குனித் திங்கள் என எல்லா வார நாட்களுமே வழிபாட்டிற்குரிய புண்ணிய காலங்களாகின்றன.

ஆகவே நம் வாழ்நாளெல்லாம் இறைவனின் வழிபாட்டு நாட்களேயாகும் என்பதை உணரமுடிகிறது. ஆன்ம யாத்திரையில் எந்நாளும் வழிபாட்டு நாட்களேயாகும்.

வழிபாட்டிலும் ஞானசம்பந்தப் பெருமான் சொன்னது போலக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவதும், பாடிப் பரவுவதும் யாத்திரையின் வழித்துணையாகின்றன.

''அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற் தமிழ்பாடு'' என்பது சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாருக்குச் சொன்ன வாக்கு.

''பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக'' என்பது அருளாளர் வாக்கு.

''சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்'' என்பது திருநாவுக்கரசு சுவாமிகளின் வாக்கு.

''ஏழிசையாய் இசைப்பயனாய்'' இருப்பவன் இறைவன் என்பது அருளாளர் வாக்கு.

''பாடும் பணியே பணியாய் அருள்வாய்'' என்பது அருணகிரிநாதரின் விண்ணப்பம்.

ஆகவே பன்னிரு திருமுறைகளைப் பண்ணுடன் பாடுதல் இறைவழிபாட்டில் முக்கியமான செயல் என்பதை உணரலாம்.

நாம் உயிருடன் வாழும் போது திருமுறைகளைப் பண்ணுடன் பாடி வழிபடுவது எமக்குப் புண்ணியத்தைத் தரும். ஒருவர் இறந்த பின் அவர் பெயரால் பாடப்படுவது அவரது ஆன்மாவுக்குப் புண்ணியத்தைக் கொடுக்கும்.

**"சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்**
**செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்"**

என்ற மாணிக்கவாசக சுவாமிகளின் வாக்கின் படி திருமுறை களைப் பொருளுணர்ந்து பண்ணுடனும் பக்தியுடனும் பாடி வழிபட வேண்டும்.

பிறப்பும் இறப்பும் ஆன்ம யாத்திரையாகும். இந்த யாத்திரையின் புண்ணியப் பேறாக இறைவன் திருவடி சேர்தல் கைகூடும். அனுபவிப்ப தற்கேற்ற இன்ப துன்ப நுகர்வும் அதில் அடங்கும். இவை தனு, கரண, புவன, போகங்கள் எனப்படும்.

நல்வினையாகிய புண்ணியங்கள் செய்தவருக்கு இனி இந்தப் பிறப்பிலும் சிறந்த பிறப்புக் கிடைக்கும். தீவினையாகிய பாவங்கள் செய்தவருக்குக் கீழான பிறப்புக் கிடைக்கும். ஆதலால் நாம் வாழும் போது புண்ணியங்கள் செய்து இன்புறுவது போல அடுத்த பிறப்பிலும் நல்வாழ்வு கிடைக்கும்.

இதனையே ஔவையார் ''புண்ணியம் ஆம், பாவம்போம் போன நாட்செய்த அவை மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள்'' என்றார். அப்பர் சுவாமிகள் ''வந்தவா றெங்ஙனே போமாறேதோ'' என்று சிந்திக்க வைக்கின்றார்.

இறந்தவருக்கு அவர் வாழும் போது செய்த புண்ணியங்கள் மட்டுமல்ல அவர் உடலில் இறந்தபின் அவருக்காகச் செய்யப்படும் தான, தர்மங்கள், சிரார்த்தங்கள், பிரார்த்தனைகளும் அவர் நல்ல பிறப்பு எடுப்பதற்கும் அப்பிறப்பில் நல்வாழ்வு வாழ்வதற்கும் உபகாரமா கின்றன. இதனால்தான் இறந்தவர் பெயரால் இத்தனையும் செய்தல் இருப்பவர்கள் கடமையாகக் கொள்ளப்படுகிறது.

புண்ணியங்களில் மிக உயர்ந்ததும் அதிக பலனை தருவதும் கடவுள் வழிபாடு ஆகும். இதற்காகவே வேத ஆகமங்களும் திரு முறைகளும் இறைவன் அருளால் எமக்குத் தரப்பட்டன. வடமொழி யிலுள்ள வேதாகமங்களின் சாரமாகவே தமிழ்மொழியில் சைவத் திருமுறைகள் கிடைத்தன.

ஆதலால் வாழ்நாளெல்லாம் யாத்திரையாகக் கருதி வழிபட்டு நற்கதி பெறுவோம்.

27.09.2011 ஒலிப்பதிவு

உ
சிவமயம்

# கோமாதா குலம் காப்போம்

"ஆக்களி னுறுப்பெலாம் அமரர் வைகுவார்
ஆக்களே இம்மையில் அமுத தேனுவாம்
ஆக்களே இறைவனுக்கு ஐந்து நல்குமற்(று)
ஆக்களே பூதியும் அளிக்கும் அன்பினால்"
(ஈழத்துச் சிதம்பரபுராணம்)

சைவமக்களாகிய நாம் காலையில் எழுந்து காலைக் கடன் முடித்துவிட்டுச் சிவ சிவா என்று அணிவதற்குத் திருநீறு தருவது பசு. காலைத் தேநீருக்குப் பால் தருவது பசு. நண்பகல் உணவுக்குப் போஷாக்கு நிறைந்த தயிர், மோர், நெய் தருவது பசு.

தன் குழந்தைக்குப் பால் தருவாள் மாதா; குழந்தை முதல் முதியோர் வரை எல்லார்க்கும் பால் தருவாள் கோமாதா. மாதாக் களுக்கெல்லாம் அரசி கோமாதா. சைவசமயத்தவரின் எல்லாச் சுப கருமங்களிலும் முன்வைத்து வணங்கப்படும் பெருமைக்குரியது கோமாதா.

நம் முன்னோர் கோமாதா எனப் போற்றி வணங்கிய பசுக் குலத்தின் பெருமை மறந்து, பசுக்குலத்தைப் பாதுகாக்காமல் விடுவது மட்டுமல்ல அதனைத் தமக்கு உணவாக வெட்டியுண்ணும் கொடிய பழக்கம் வேரூன்றி வரும் இவ்வேளையில் பசுக்குலத்தின் பெரு மையைச் சிந்தித்துச் செயற்படவைக்கும் நோக்கத்துடனேயே இக்கட்டுரை எழுதப்பட்டுளது.

எமது கருத்தன்றித் தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமானின் நோக்கிலும் வாக்கிலும் கோமாதாவின் பெருமையைக் காணலாம். எமது வேதம், ஆகமம், திருமுறைகள் முதலான அனைத்து நூல்களும் பசுவின் பெருமை பேசுகின்றன.

சைவக்கிரியைகள் அனைத்தினதும் தொடக்கத்தில் நடை பெறும் புண்ணியாகவாசனத்திற்குரிய பாலைத் தருவது பசு. பாலின்றிப் பூசையில்லை.

கோயிலில் மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்யுமுன் கருவறையில் எழுந்தருளிச் சகல தெய்வங்களினதும் ஆசியை நல்குவது பசு. சிவாலய பூசையில் கோபூசை செய்து தரிசிக்கப்படுவது பசு. சிவபூசையின் நிறைவான கபிலபூசைக்குரியது பசு.

## சேக்கிழார் நோக்கில் கோமாதா

### அளவிலாத பெருமையர்

அளவிலாத பெருமையராகிய அளவிலா அடியார் புகழ் பாடியவர் சேக்கிழார் சுவாமிகள். அவர் பாடிய அடியார்கள் மாசிலாத மணிதிகழ் மேனிமேல் பூசுநீறு போல் உள்ளும் புனிதர்கள்; பாரம் ஈசன் பணியலா தொன்றிலார். கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினார்; கேடும் ஆக்கமும் கெட்டதிருவினார். ஆதலால் பசு கரணங்களை ஒழித்துப் பதி கரணங்கள் வாய்க்கப் பெற்றவர்கள்.

### தெய்வப்புலவர் பதிவாக்கு:

அவரகள் செயற்கரிய செய்த பெரியவர்கள். அவர்களின் செயற்கரிய செயல்களை உள்ளத்தால் உணர்ந்து உச்சி மேற் கொண்டு திருத்தொண்டர் புராணம் பாடியதால் சேக்கிழார் சுவாமிகளும் செயற்கரிய செய்த பெரியாரானார்; பதிகரணம் வாய்க்கப் பெற்றவரா னார்; சேக்கிழார் வாக்கும் நாயன்மார் வாக்குப் போலப் பதிவாக்கா யிற்று. சேக்கிழார் சுவாமிகள் தெய்வப் புலவர் எனப் போற்றப்படு கின்றார்.

பதிவாக்காகிய வேதாகமங்கள் உபநிடதங்கள் திருமுறைகளில் போற்றப்படும் கோமாதா பற்றிய சேக்கிழார் வாக்கின் திறத்தைச் சிந்திப்பதே எமது நோக்கமாகும்.

### கோமாதா

தன் குழந்தைக்குப் பால் தருவாள் மாதா; குழந்தை முதல் கிழவர் வரை எல்லார்க்கும் பால் தருபவள் கோமாதா. மாதாக்களுக கெல்லாம் அரசியாக இருப்பதால் பசு கோமாதா என அழைக்கப்படு கிறாள். எல்லார்க்கும் பூரணசத்துள்ள பாலும் பாலுணவும் தரும் பசு சைவசமயத்தவர்களின் எல்லாச் சுபகருமங்களிலும் முன்வைத்து வணங்கப்படும் தெய்வீக மேன்மையைப் பெற்றுள்ளது.

## புண்ணியாகவாசனம் - பால்

சைவசமயக் கிரியைகளில், வீட்டில் செய்யப்படும் பூர்வக் கிரியை, அபரக் கிரியை, மற்றும் கோயிலில் செய்யப்படும் அனைத்துக் கிரியைகளின் ஆரம்பத்திலும் புண்ணியாகவாசனத்துக்குரிய பாலைத் தருவது பசு. பால் இன்றிப் பூசை இல்லை. இறைவன் உவக்கும் அபிஷேகத்துக்குரிய பஞ்ச கௌவியமாகிய பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பவற்றைத் தருவது பசு.

## முன்னிற்பது

சைவாலயங்களில் மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்யுமுன் கருவறையைத் தூய்மை செய்து சகல தேவர்களின் ஆசியைப் பெறுவதற்கு அங்கு பயன்படுவது பசு; சிவாலய பூசையில் கோபூசை செய்து தரிசிக்கப்படுவது பசு; சிவபூசையின் நிறைவான கபில பூசைக்குரியது பசு.

புதுவீடு அமைக்கும் போது தானசுத்திக்காக அங்கு கட்டப்படு வது பசு; திருமணத்தின் போது மாங்கல்யதாரணம் செய்த மணமக்க ளுக்குத் தரிசனமாவது பசு; அபரக் கிரியையில் அந்தியேட்டி முடித்து வருபவருக்கு வீட்டுவாயிலில் தரிசனமாவது பசு.

இவ்வண்ணம் நம் வாழ்வின் எல்லாச் செயற்பாடுகளுக்கும் உடனிருந்து எம் வாழ்வைப் புண்ணிய நெறிப்படுத்த வல்ல பெருமை பசுவுக்கு எப்படி அமைந்தது என்ற இரகசியத்தைத் தெய்வப்புலவர் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்தில் மனுநீதி கண்ட சோழன் வரலாறு, சண்டேசுர நாயனார் புராணம், திருமூலநாயனார் புராணம், ஆனாய நாயனார் புராணம் முதலாமிடங்களில் திட்பநுட்பமாகச் சொல்லும் திறம் காணலாம்.

## எல்லாத் தேவர்க்கும் இடமாவது

எல்லாத் தேவர்களும், தெய்வங்களும், முனிவர்களும் புண்ணிய தீர்த்தங்களும் பசுவில் அமர்ந்திருக்கும் மகிமையைச் சண்டேசுர நாயனார் புராணத்தில் கூறுகின்றார்.

**தங்கும் அகில யோனிகட்கும் மேலாம் பெருமைத் தகைமையன**
**பொங்கும் புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்துவன**
**துங்க அமரர் திருமுனிகள் கணங்கள் சூழ்ந்து பிரியாத**
**அங்கம் அனைத்தும் தாமுடைய அல்லவோ நம் ஆனினங்கள்.**

எனப் பாடுகின்றார்.

நம் ஆனினங்கள் அனைத்தும் பொங்கும் புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்துவன - புனித தீர்த்தங்களாகிய யமுனை, கங்கை, கோதாவரி, சரஸ்வதி முதலானவை பசுவின் கொம்பின் நுனியிலும் கோசல கோமயத்திலும் என்றும் இருக்கின்றன.

துங்க அமரர் முனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத அங்கம் - இந்திரன் முதலான தேவர்களும், முனிவர் கணங்கள் மற்றும் உருத்திரர்கள் முதலாய தெய்வங்கள் எல்லாம் உறுப்புகள் தோறும் என்றும் பிரியாது நிலை பெற்றிருக்கின்றன.

ஆதலால் பசுவை வணங்கினால் அத்தனை தெய்வங்களின் ஆசியும் கிடைக்கும் என்பதாலேயே எங்கள் கருமங்கள் அனைத்திலும் கோமாதா முன் வைக்கப்படுகிறார் என்னும் உண்மையை அறிகிறோம்.

## வேதவாக்கு

இவ்வுண்மையைப் பதிவாக்காகிய வேதத்தின் முதற் பகுதியா யுள்ள பிரசித்தி பெற்ற ருக் வேதத்தில் காணமுடிகிறது. அதில்வரும் பசு பற்றிய ஒரு மந்திரம்

| | |
|---|---|
| **மாதா ருத்ராணாம்** | - பசு உருத்திரர்களது அன்னை |
| **ஸ்வஸா ஆதித்தியானாம்** | - பசு ஆதித்தியர்களின் சகோதரி |
| **துஹிதா வசூனாம்** | - அவர் வசுக்களின் மகள் |
| **அம்ருத ஸ்யநாபிம்** | - அமிர்தத்தின் ஊற்றுமையம் |
| **மகாம் அநாகாம் அதிதிம் வதிஷ்ட அநாகாம்** | - ஒரு பாவமுமறியாத அப்பிராணியும் எமது வீட்டு விருந்தாளியுமாகிய |
| **காம்** | - பசுவை |
| **மாவதிஷ்ட** | - கொல்லற்க. |

இனிச் சாம வேதத்தில் பசுவைப் பற்றிய ஒரு சுலோகத்தையும் பார்க்கலாம். சாம வேத சுலோகங்கள் பரிசுத்தமான பசுவினத்தைப் போற்றுகின்றன.

**"நீவிர் புண்ணியமானவர்கள்**
**நீங்கள் நன்றாக வாழுங்கள்**
**நன்றாகப் பாலைப் பொழியுங்கள்**
**காலையும் மாலையும் பால் தரும் நீவிர் கன்றுகளுடனும்**
**காளைகளுடனும் இன்னும் பொலிவீராக**
**இங்கேயுள்ள நீர் நிலைகள் உமக்கு வற்றாத ஊற்றாக**
**இங்கே மகிழ்ச்சியாய் வாழ்வீராக வளம் பெருக்குவீராக."**

மனித குலம் வாழ்வதற்காகப் பசுக்குலத்தை வாழ்த்துவதை ''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்'' எனும் ஞானசம்பந்தர் வாழ்த்திலும் காண்கின்றோம்.

## பஞ்சகௌவியம்

சுவாமிக்கு அபிஷேகத்துக்குரிய பஞ்சகௌவியங்களைத் தரும் மேன்மையை இன்னொரு பாடலில் சொல்கிறார்.

**''மேயவேணித் திருமுடிமேல் விரும்பி ஆடி அருளுதற்காம்**
**தூய திருமஞ்சனைமந்தும் அளிக்கும் உரிமைச் சுரபிகள்தாம்''**

சிவபெருமான் தனது திருமுடிமேல் விரும்பி ஆடி அருளுதற்குரிய தூய திருமஞ்சனமாகிய பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகிய பஞ்ச கௌவியத்தை உரிமையுடன் சுரந்து தருவதால் பசுக்களைச் சுரபிகள் என்று அழைக்கின்றார். வேறெந்த உயிரினத்துக்கும் இந்தப் புண்ணியப் பேறில்லை என்பதைச் சேக்கிழார் ''உரிமைச் சுரபிகள்'' எனச் சுட்டும் பாங்கு உவக்கத்தக்கது.

இவ்வுண்மையை நாயன்மார்களது கோதனத் திருமுறைகளில் பரக்கக் காணலாம். திருஞானசம்பந்தப் பெருமான் தனது தேவாரங்களில்

**"ஆடினாய் நறுநெய் யொடுபால்தயிர் அந்தணர்**
**பிரியாத சிற்றம்பலம் ..............................."**
**"ஆனிடை ஐந்தும் உகந்து ஆடினானை ..............."**
**"பாலொடு நெய்தயிர் பலவும் ஆடுவார் ..................;"**
**நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தான மென்னீரே**

என்றும்

அப்பர் சுவாமிகள்:

**பாலொடு நெய்தயிர் தேன் ஆடிகண்டாய் ...............**
**ஆனிடை ஐந்தும் வைத்தார் ...........................**
**ஆனெய் ஆறென ஆடுகின்றான் முடி ......................**
**ஆவினுக் கருங்கலம் அரனஞ்சாடுதல்**

என்றும்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

**நெய்யும் பாலும் தயிருங் கொண்டு நித்தல்பூசை செய்யலுற்றார்.........**

எனவும் பாடிப் பரவுவதைப் பார்க்கலாம்.

## நீறு தரும் மூலம்

சைவசமய சின்னங்களில் தலையாயது திருநீறு. நீறு தரும் மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம் கோமாதா என்பதை சேக்கிழார் சுவாமிகள் அழகாகச் சொல்லுவார்.

**"சீலமுடைய கோக்குலங்கள் சிறக்கும் தகைமைத் தேவருடன்**
**காலமுழுவதும் உலகனைத்தும் காக்கும் முதற் காரணராகும்**
**நீலகண்டர் செய்யசடை நிருத்தர் சாத்தும் நீறுதரும்**
**மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம் என்றால் முடிவென்னோ."**

தெய்வீகச் செழுமைமிக்க கோக்குலங்களுக்குச் சிறப்பைத்தரும் தகைமை என்னவென்றால் தேவருலகம் முதலான அண்டசராசரங் களையும் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளும் ஐந்தொழிற் கும் முதற்காரணராயுள்ள நீலகண்டராகிய சிவபெருமான் அணிகின்ற

திருநீற்றின் மூலப்பொருளான கோமயம் அவதாரம் செய்யும் தெய்வீக மூர்த்தமாகப் பசு இருப்பதே ஆகும்.

## திருநீறு சிவப்பேறு

சுத்தமான பசுவின் சாணியை அக்கியினாலே சுட்டு வருவது திருநீறு. அது பசுவாகிய ஆன்மாவின் ஆணவம், கன்மம், மாயை முதலான மலங்களைச் சிவமாகிய அக்கினியினாலே சுட்டு வருவது சிவப்பேறு. திருநீறு சமன் சிவப்பேறு. தன்னை அணிபவர்க்குச் சிவப்பேற்றைத் தரவல்ல திருநீற்றின் மூலப் பொருளாய சாணியைத் தரும் பசுவினை ஒரு மூர்த்தியாகவே சேக்கிழார் காட்டுகிறார்.

பசுவின் இத்தனை பெருமைக்கும் காரணம் சிவபெருமான் முதல் அனைத்துத் தெய்வங்களும் தேவர்களும் முனிவர்களும் தீர்த்தங்களும் பசுவில் இருத்தலேயாகும் என்பதை முன்னமே சொல்லியுள்ளார்.

உலகியலில் கூடப் பசுப்பால் போலப் பூரண சத்துணவு வேறொன்றுமில்லை. பால் பூரண சத்துணவாயிருப்பதற்குக் காரணமும் இதுவேயாகும் என்பதை உய்த்துணரலாம்.

## விடைத்தேவர் குலம்

சிவபெருமான் உமாதேவியாருடன் எழுந்தருளும் விடைத் தேவர் குலமன்றோ இச்சுரபி குலம் என வியப்பதைப் பார்க்கலாம்.

**உள்ளுந்தகைமை இனிப்பிறவேறுளதோ உமைமான்மறிக்கன்று**
**துள்ளுங்கரத்தார் அணிபணியின் சுடர்சூழ்மணிகள் சுரநதிநீர்**
**தெள்ளும் சடையார் தேவர்கள் தம் பிராட்டியுடனே சேரமிசைக்**
**கொள்ளுஞ் சினமால் விடைத்தேவர் குலமன்றோ இச்சுரபிகுலம்**

எனப் பாடுவார்.

தருமதேவதையே சிவனுக்கு இடப வாகனமானது. இடபமான விடைத் தேவரைத் தந்த பெருமை கோமாதாவுக்குளது. கோக்குலம் தருமசொரூபம் என்பதை வேதாகம சாஸ்திரங்களில் மட்டுமல்லாமல் உலகியலிலும் காணலாம்.

நாம் எமது உணவுக்காகாதெனக் கழித்துவிடும் தவிடு, வைக்கோல், கஞ்சி, கழுநீர், புண்ணாக்கு, புல், இலை குழை என்பவற்றையுண்டு அதிசயிக்கத்தக்க வகையில் பூரண சத்துணவாகிய பாலையும்

பாற் பொருட்களையும் உணவாகவும் மருந்தாகவும் தருகிறது. அது மட்டுமல்ல அதன் கழிவாகிய சாணியையும் சலத்தையும் கூட இயற்கை உரமாகவும், கிருமிநாசினியாகவும் தருகிறது. எருதுகள் வண்டியிழுத்தும் வயல் உழுதும், செக்கிழுத்தும், சூத்திரம் இறைத்தும் தம் உடல் உழைப்பு முழுவதையும் தருகின்றன. எனவே விடைத் தேவர் குலம் தரும தேவதையின் அவதாரம் என்பதை உணர வைக்கும் தெய்வப்புலவரைப் போற்றி வணங்காதிருக்க முடியுமா?

பெரியபுராணத்தில் திருவாரூர்த் திருநகரச் சிறப்புக் கூறுகையில் தன் மகனின் தேர்ச்சில்லுட் புகுந்து இறந்த பசுவின் கன்றுக்காகத் தன் மகனையே தேர்ச்சில் இட்டு நெரித்த செய்தியைக் கூறும் போது

**"ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளான் என்பதும் உணரான்**
**தருமந்தன் வழிச் செல்கை கடனென்று தன்மைந்தன்**
**மருமந்தன் தேராழிஉறவூர்ந்தான் மனுவேந்தன்**
**அருமந்த அரசாட்சி அரிதோ மற்றொளிதோ தான"**

எனப் பாடுவார்.

## கோகுலசாலை

### ஆனாயர் புராணம்

பசுக்குலம் மேய்க்கும் போது புல்லாங்குழலில் பஞ்சாட்சரம் இசைத்துச் சிவப்பேறு பெற்ற ஆனாயநாயனார் புராணத்தில் கோகுலசாலைகளின் அமைப்பைக் கூறுகையில்,

**கன்றொடு பால்மறைநாகு கறப்பனபாலாவும்**
**புன்றலை மென்சினை ஆனோடு நீடுபுனிற்றாவும்**
**வென்றி விடைக்குல மோடும் இனந்தோறும் வெவ்வேறே**
**துன்றி நிறைந்துள சூழலுடன் பல தோழுவங்கள்.**

எனப் பாடுவார்.

கன்றுகள் வேறாகவும், நாகுகள் வோறாகவும், பாற்பசுக்கள் வேறாகவும், இளங்கன்றுகளுடன் கூடிய பசுக்கள் வேறாகவும், சினைப் பட்ட பசுக்கள் வேறாகவும், காளைகள் எருதுகள் வெவ்வேறாகவும் தொழுவங்களில் காட்சி தருவதைக் காட்டி நேர்த்தியாகப் பசுக்

குலத்தை ஓம்ப வேண்டிய பண்பையும் காட்டும் அருமைப்பாடு போற்றுதற்குரியது.

## கோபுரம்

கோசாலையும் கோபுரம் எனப்படும் என்பதைச் சிவதரு மோத்திரத்திலிருந்து நாவலர் பெருமான் எடுத்துக் காட்டுகின்றார். கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்பது யாவருமறிந்த உண்மை. இதில் கோயிலின் முகப்பிலுள்ள தூலலிங்கமாகிய கோபுரம் மட்டுமன்றிக் கோசாலையும் கோபுரம் எனப்படும் என்பதை அறிய வைக்கின்றார். கோ - பசு, புரம் - இடம். ஆகவே கோபுரம் என்பது பசுக்குலம் தங்குமிடம் எனப்பொருள் தரும். பெண்கள் இருக்குமிடம் அந்தப்புரம் என்பது போல கோகுலம் தங்குமிடம் கோபுரம் ஆகும்.

சிவதருமோத்திரம் பன்னிரண்டியல்களில் ஒன்றாகிய கோபுர இயலில் கோசாலை அமைக்கும் முறை பற்றி 228 பாடல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில்

**சாலையானினம் தங்கச் சமைத்தவர்**
**காலகாலன் புரத்தைக் கலப்பர்தா**
**மேலவேண்டிய யாவையுமின்புறும்**
**வேலை வெங்கதி ரோற்கும் விதித்ததே.**

எனக் கோசாலை அமைத்துக் கோகுலத்தை ஓம்புவோர் கால காலனாகிய சிவபெருமானின் திருவடிப் பேறாகிய பேரின்பத்தை பெறுவர் எனும் உண்மை பேசப்படுகிறது.

இவ்வுண்மையைச் சேக்கிழார் திருமூலநாயனார் புராணத்தில் வைத்து உணர்த்துகின்றார். பசுக்களை மேய்ப்பவனாகிய இடையன் இறந்ததால் பசுக் கூட்டங்கள் அவனைச் சூழ்ந்து நின்று கதறி அழுகின்றன.

**'மற்றவன்தன் உடம்பினைக் கோக்குலங்கள் வந்தணைந்து**
**சுற்றிமிகக் கதறுவன சுழல்வன மோப்பனவாக**
**நற்றவ யோகியர்காண நம்பர் அருளாலே ஆ**
**உற்றதுயர் இவைநீக்க ஒழிப்பன் என உணர்கின்றார்."**

பசுக்குலங்கள் பட்ட துயர் ஒழிப்பதற்காக சுந்தர முனிவர் மூலன் எனும் இறந்த இடையன் உடலிற்புகுந்து திருமூலராகி

மூவாயிரந்தமிழ் எனும் திருமந்திரம் கிடைப்பதற்கு ஏதுவாகிய பசுவின் பெருமை கூறும் திருமூலர் புராணம் பாடுவார்.

திருமூலர் சுவாமிகள் ''யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை'' எனப் பாடி பசுவுக்கு உணவளித்தல் ஒவ்வொருவர்க்கும் கடன் எனும் அருமைப்பாட்டை உணர்த்தினார்.

இவ்வாறாகச் சேக்கிழார் சுவாமிகள் தனது தெய்வப் புலமையால் கோக்குலத்தின் பெருமையை

- **அங்கம் அனைத்தும் தெய்வங்கள் தாமுடைய ஆனினங்கள்** - என்றும்
- **தூய திருமஞ்சனமைந்தும் அளிக்கும் உரிமைச் சுரபிகள்** - என்றும்
- **நீறு தரும் மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம்** - என்றும்
- **விடைத்தேவர் குலமன்றோ இச்சுரபி குலம்** - என்றும்

கோக்குலத்தின் தெய்வீகத் திருமிளிரும் அருமை பெருமை களைக் கூறிக் கோக்குலத்தைக் காக்கும் முறையை

- ஆ இனந்தோறும் வெவ்வேறே அமைந்துள தொழுவங்கள் எனக் கூறி, பசுக்காத்தலின் இன்றிமையாமையை
- **ஆ உற்ற துயர் நம்பர் அருளாலே நீக்குவேன்** என்றும்
- **தருமந்தன் வழிச்செல்கை கடனென்றும்**

தனது நோக்கில் கோமாதா குலத்தைப் போற்றுவதைப் பார்த் தோம். இத்தகு தெய்வீகத் திருவுருவங்களாய கோக்குலத்தின் இனறைய நிலையை - எங்கள் மனித குலத்தின் இழிநிலையை நினைக்க நெஞ்சு பதறுகிறதே.

சிவபூமியாகிய ஈழத்திலே பசுக் கொலைக்கஞ்சிப் பரதேசம் போன ஞானப்பிரகாச முனிவர் அவதரித்த இந்த மண்ணிலே இன்று என்ன நடக்கிறது. சிவகதி தரவல்ல தெய்வப் பசுவையும் விடைத்தேவர் குலத்தையும் கொன்று தின்கிறார்களே. உடல் வளர்க்கும் மலிவான உணவென உண்டு மலிவாகப் பாவத்தைத் தேடுகிறார்களே திருநீறு பூசும் சைவசமயத்தவர்களும் உண்கிறார்களே.

**கோபூசை செய்தென்றும் கோயில்தோறும்**
**கும்பிட்டு வாழ்ந்த மக்கள் கோலம்மாறி**
**கோகுலத்தைக் கொல்களத்தில் வெட்டிவீழ்த்திக்**
**கொன்றுதின்னும் கொடுமையினைச் சகிக்கலாமோ.**

**தாமாகத் தாவரநல் லுணவை யுண்டு**
**தமதுழைப்பும் தகுபயனும் தந்துவாழும்**
**கோமாதா குலத்தினையே கொன்றுதின்னும்**
**கொடுமையினைப் போக்கிடவே திரண்டுவாரீர்.**

பூசைக்குப் பாலும், சிவசிவா என்று அணியத் திருநீறும், தீபத் துக்கு நெய்யும் தந்து முத்திக்கு வழிப்படுத்தும் கோமாதாக்களையும் இடபமாய விடைத்தேவர்களையும் கொன்று தின்னாமற் காப்பதை ஒவ்வொருவரும் எமது சைவப் பணியாகக் கொள்வோம்.

**வாழிய ஆனினம் வழுத்திடு தெய்வமாய்**
**வாழிய ஆனினம் வளம்நிறை நிதியமாய்**
**வாழிய ஆனினம் வாழ்வுதேர் அமுதமாய்**
**வாழிய ஆனினம் வையகம் வாழவே.**

உ
சிவமயம்

# இறப்பு

**"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"** **(குறள் 339)**

இறப்பு என்பது நாம் உறக்குவது போன்றது. பிறப்பு என்பது உறங்கி விழிப்பது போன்றது என்பது வள்ளுவர் நிலையாமை பற்றிச் சொல்லும் கருத்து. இறப்பு என்பது உடலுக்கே உரியது. உடல் தான் இறக்கும் பின் பிறக்கும். உயிருக்கு இறப்பும் இல்லை பிறப்புமில்லை. உயிர் உடல் எடுத்து வாழ்கிறது. உடல் பழுதானால் உடல் இறக்கிறது. உயிர் மீண்டும் வோறொரு உடலை எடுக்கிறது. அந்த உடல் பிறக்கிறது.

எனவே உயிர் என்றும் நிலையானது. இப்பிரபஞ்சம் எங்கும் ஓரறிவுடைய புல் பூண்டு முதல் ஆறறிவுடைய மனிதர் ஈறாக எண்ணில்லாத உயிரினங்கள் வாழ்கின்றன. அவை உடல் எடுத்துப் பிறப்பதும் குறிப்பிட்ட காலம் வாழ்ந்து அந்த உடல் இறப்பதுமாக மாறிமாறி உறங்குவதும் விழிப்பதும் போல நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

பிறப்பதோ இறப்பதோ உயிரின் கையில் இல்லை. அது இறைவன் கையில் தான் இருக்கிறது. இறைவன் தான் உயிர்களுக்குத் தனு, கரண, புவனம், போகம் என்னும் மாயாகரியங்களைக் கொடுக்கின்றான். தனு என்பது உயிருக்குரிய உடம்பு, கரணம் என்பது அந்த உடம்பால் அறியும் கருவிகளான பொறிகள் புலன்கள். புவனம் எனப்படுவது அவ்வுடல் வாழ்வதற்குரிய இடம் (உலகம்). போகம் எனப்படுவது அவ்வுடலால் அனுபவிக்கப்படும் இன்ப துன்ப அனுபவம்.

எல்லா உயிர்களுக்கும் உடல்கள் ஒரே மாதிரி இருப்பதில்லையே. தனு கரண புவன போகங்கள் ஒரே மாதிரி இருப்பதில்லையே. கடவுள் தான் உயிர்களுக்கு இவற்றைக் கொடுக்கின்றான் என்றால் இந்த வித்தியாசங்கள் ஏன் எனக் கேட்கத் தோன்றுகின்ற

தல்லவா. இதற்கு விடை ஒவ்வொரு உயிரும் செய்கின்ற நல்வினை தீவினைகளுக்கு ஏற்பவே இவை கிடைக்கின்றன. நல்வினை அதிகம் செய்த உயிர்களுக்கு நல்ல பிறப்பையும், தீவினை அதிகம் செய்த உயிர்களுக்கு இழிந்த பிறப்பையும் இறைவன் கொடுக்கின்றான். இறைவன் பாரபட்சம் விருப்பு வெறுப்பு அற்றவன். அவன் ஒவ்வொரு உயிரும் தான் செய்த வினைப்பயனை அனுபவித்துத் தீர்த்து முத்தி பெற வேண்டும் என்பதற்காகவே இதனைச் செய்கின்றான். இதனையே பஞ்ச கிருத்தியங்கள் அல்லது ஐந்தொழில்கள் என்கின்றோம். அவை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தும் ஆகும்.

படைத்தல் எனப்படுவது உயிர்களுக்குத் தனு கரண புவன போகங்களைப் படைத்துக் கொடுத்தல். காத்தல் எனப்படுவது உயிர் கள் அந்தந்த உடல்களில் வாழச் செய்தல். அழித்தல் எனப்படுவது குறிப்பிட்ட கால அளவில் அவற்றை அழித்தல், மறைத்தல் எனப்படுவது அவ்வுயிர்கள் செய்த வினைகளின் பயனை அனுபவிக்கத் தூண்டுதல். அருளல் எனப்படுவது வினைப் பயன்களை அனுபவித்து முடித்த உயிர்களுக்கு முத்தியைக் கொடுத்தல். ஆகவே இறைவன் ஐந்தொழில்களையும் உயிர்களின் நன்மைக்காகவே செய்கின்றான்.

அரசன் ஒவ்வொரு துறைக்கும் அமைச்சர்களை நியமித்து அவர்களுக்குத் தன் அதிகாரங்களைக் கொடுத்து அரசாட்சியை நடத்துவது போல இறைவனும் ஐந்து தொழில்களுக்கும் ஒவ்வொரு வரை நியமித்து அவர்கள் மூலம் ஐந்தொழிலை நடத்துகின்றான்.

படைத்தலுக்குப் பிரமனையும், காத்தலுக்கு திருமாலையும், அழித்தலுக்கு உருத்திரனையும், மறைத்தலுக்கு மகேஸ்வரனையும், அருளலுக்கு சதாசிவனையும் நியமித்து அவர்களோடே நின்று பஞ்ச கிருத்தியங்களையும் செய்பவன் இறைவனே.

பிறந்தோர் அனைவரும் இறப்பது உறுதி, அரசனாக இருந்தால் என்ன ஆண்டியாக இருந்தால் என்ன எல்லோர்க்கும் இறப்பு உண்டு. இதனைப் பட்டினத்தார்,

**"முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு**
**பிடிசாம்பர் ஆவதும் கண்டு பின்னும் இந்தப்**
**படிசார்ந்த வாழ்வை நச்சினல்லால் பொன்னின் அம்பலவன்**
**அடிசேர்ந்து நாமுய்ய வேண்டும் என்பார் இல்லையே."**

என்கின்றார்.

இப்படியே பிறந்து வினைகளைச் செய்து இறந்து, மீண்டும் பிறந்து இறந்து கொண்டிருந்தால் உயிர் வாழ்வின் முடிவு என்ன?. இதற்குரிய விடையைத் தான் பட்டினத்தார் இப்பாடலில் சொல்கின்றார். அது பொன்னின் அம்பலவன் அடிசார்ந்து உய்ய வேண்டும் என்பதே ஆகும்.

இதனையே நாவலர் பெருமான் ''இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்'' என உணர்த்துகின்றார்.

ஆகவே இறவாதிருக்க வேண்டுமாகில் பிறவாதிருக்க வேண்டும். இறவாதும் பிறவாதும் இருக்க வேண்டுமாகில் இறைவனை வணங்கிச் சிவபுண்ணியங்களைச் செய்தல் வேண்டும். இதனைக் காரைக்கால் அம்மையார் புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் அவர் இறைவனைக் கேட்பது போல்,

**"இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்னும் வேண்டுகின்றார்**
**பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி**
**அறவா நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்."**

என்கின்றார். நாமும் இதேபோல இறைவனிடம் கேட்கின்ற நிலையைப் பெறவேண்டும்.

இறப்பை வெல்ல வேண்டுமானால் இறைவனைத் துணைக் கொள்ள வேண்டும். இதனை நமது அருளாளர்கள் வாழ்ந்து காட்டியுள்ளார்கள். மார்க்கண்டேயருக்கு வயது பதினாறு வரை தான் என்பது பெற்றார் பெற்ற வரம். பதினாறு வயது நிறையும் வேளையில் மார்க்கண்டேயர் சிவலிங்கத்தின் முன்னால் இருந்து சிவபூசை செய்தார்.

அவர் உயிரை எடுக்க வந்த யமதூதர் அஞ்சி ஓடினர். இயமனாலும் அவர் உயிரை எடுக்க முடியவில்லை. அவர் என்றும் பதினாறு வயதுடன் சிவபெருமான் திருவடிக்கீழ் இன்புற்றிருக்கும் பேறு பெற்றார். இறப்பை வென்றார்.

அப்பர் சுவாமிகள் வைராக்கிய பக்தியுடன் கயிலை நோக்கி யாத்திரை போனார். ''ஆளும் நாயகனின் கயிலைக் காட்சி கண்டல் லாது பாழும் உடல் கொண்டு மீளேன்'' என உறுதியாக இருந்தார். திருவையாற்றிலே கயிலைக் காட்சியைச் சிவன் காட்டக் கண்டார். திருப்பூம்புகலூரில் சிவபெருமான் திருவடி சேர்ந்தார்.

சுந்தரர் சிவலோகத்திலிருந்து வந்த வெள்ளை யானையில் சோதியுடல் பெற்றுச் சிவபதம் சேர்ந்தார். சம்பந்தர் திருமணத்தின் போதே சோதியுட் கலந்தார். மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் யாவரும் காணக் கோயிலினுட் சென்று சிவத்துடன் இரண்டறக் கலந்தார்.

இவர்கள் எல்லாம் இறப்பை வென்றவர்கள்; இனிப் பிறவாத பேரின்பப் பெருவாழ்வு பெற்றவர்கள். நாமும் சிவபுண்ணியங்களைச் செய்து இறப்பை வெல்ல முயல்வோம்.

உ
சிவமயம்

# அகத்தியர் தேவாரத் திரட்டு

மூவர் முதலிகள் எனப்போற்றப்படும் சம்பந்தரும் அப்பரும் சுந்தரரும் பாடிய தேவாரப் பதிகங்கள் ஓரிலட்சத்துக்கு மேலானவை. அவற்றுள் காலவெள்ளத்தில் கரைந்தவை போக இன்று சம்பந்தர் பதிகங்கள் 384ம், திருநாவுக்கரசர் பதிகங்கள் 312ம், சுந்தரர் பதிகங்கள் 100ம் ஆக 796 பதிகங்கள் மட்டுமே எமக்குக் கிடைக்கின்றன.

மூவரும் பாடிய இத்தேவாரப் பதிகங்கள் 796ம் அடங்கன் முறை எனப் பிற்காலத்தில் வகுக்கப்பட்டன. கல்வி அறிவு ஒழுக்கங்களில் மேம்பட்டவரான சிவாலய முனிவர் என்பார் தினமும் அடங்கள் முறையை ஓதினால் முக்தி சித்திக்கும் என நினைத்து முயன்றார். அவற்றின் எண்ணிக்கை அதிகமாதலால் ஒரே நாளில் பாடி முடிக்க முடியாமையால் வருந்தினார்.

இதற்கோர் வழிகாட்ட வேண்டும் என்று தேவாரத்தின் உண்மைப் பொருளாய சிதம்பர சபாநாயகரைத் தரிசித்துத் பலகாலம் தவமிருந் தார். உன் எண்ணம் நிறைவேற அகத்தியரிடம் பொதிய மலைக்குப் போ எனச் சபாநாயகரின் அசரீரி கிடைத்தது. அதன்படி பொதிய மலைக்குப் போனார். அகத்திய முனிவரை நோக்கி 3 வருடம் தவம் இருந்தார்.

அகத்திய முனிவர் வெளிப்பட்டு அடங்கன் முறை முழுவதையும் சிவாலயமுனிவர்க்கு உபதேசித்து அவற்றில் இருந்து ஒரேநாளில் ஓதக்கூடிய வகையிலான 25 தேவாரப்பதிகங்களைத் திரட்டிக் கொடுத்து இதனைத் தினமும் உள்ளம் உருகிச் சிவனை நினைந்து ஓதி வழிபடுவாயானால் தேவாரப் பயனாகிய முத்தி சித்திக்கும் என அருளிச் செய்தார். குருவாக்கின்படி சிவாலயமுனிவர் அகத்தியர் தேவாரத்திரட்டை தினமும் ஓதி வணங்கி முக்தி பெற்றார்.

அக்காலம் முதல் தமிழ் வேதமாகிய அகத்தியர் தேவாரத் திரட்டினைச் சிவனடியார்கள் ஓதும் வழக்கம் தொடங்கி இன்றுவரை நின்று நிலவுகின்றது. இந்தச் செய்தியை அகத்தியர் தேவாரத்திரட்டின் பாயிரத்தில் உள்ள வெண்பா கொண்டு அறியலாம்.

**குருவருளும் வெண்ணீறும் எழுந்தைந்தும் கோயில்**
**அரனுருவும் என்றவை மேலாக்கும் – திருவடியும்**
**சிட்டான அர்ச்சனையும் தொ**ண்டு சிவாலயர்க்கென்று
**இட்டார் அகத்தியனார் எட்டு**

என்பது அப்பாடல். இங்கு குருவருள், திருவெண்ணீறு, அஞ் செழுத்து, கோயில் திறம், சிவனுருவம், திருவடிகள், அர்ச்சனை, அடிமைத்திறம், ஆகிய முத்தி தரும் எட்டு திறன்கள் சொல்லப்படு கின்றன.

மூவர் முதலிகள் ஆகிய ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூர்த்தி சுவாமிகள் மூவரும் இந்த எட்டு நெறிமுறைகளில் நின்று பாடிய பதிகங்களைத் தொகுத்து அகத்திய மாமுனிவர் வகுத்து திரட்டித் தந்தமை சிவனருளே ஆகும்.

திருப்பதிகக் கருத்துரை எனும் பாயிரத்தில் இந்த எட்டு நெறிமுறைகளும் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்ற.

1. **குருவருள் எனும் பகுதியில்**
தோடு கூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேரருளாகும்

என்பதற்கிணங்கத் திருஞானசம்பந்தப் பெருமான் ஞானப் பால் உண்டு பிரமபுரப்பதியில் நட்டபாடைப் பண்ணில் பாடிய ''தோடுடையசெவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி'' எனும் பதிகமும்.

திருநாவுக்கரசு நாயனார் திருவதிகை வீரட்டானப் பதியில் சூலைநோய் நீக்கம் பெறக் கொல்லிப் பண்ணில் அமைந்த ''கூற்றாயினவாறு விலக்ககலீர்'' எனும் பதிகமும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவெண்ணெய் நல்லூரில் சிவபெருமானால் தடுத்தாட் கொள்ளப்பட்டபோது இத்தளப் பண்ணில் பாடிய ''பித்தாபிறை சூடி பெருமானே'' எனும் பதிகமாகிய மூவர் முதலிகள் பாடிய முதற்பதிகங்கள் மூன்றும் இடம்பெறும் அருமைப்பாடு போற்றத்தக்கது.

2. வெண்ணீறு எனும் பரவையின் வரலாறு - அதாவது திருவருட் சக்தியின்றிறம் இதனை நீற்றுப்பதிகம் நிகழ்த்தும் காலை மாற்றப் பரையின் வரலாறாகும் என்கிறார். இப்பகுதியில் சம்பந்தப் பெருமான் திருவாலவாயில் பாண்டியனின் வெப்பு நோய் நீக்கிப் பாடிய காந்தாரப் பண்ணில் அமைந்த ''மந்திரமாவது நீறு'' எனும் பதிகம் இடம் பெற்றுள்ளது.

3. **எழுத்தஞ்சும் எனும் அஞ்செழுத்துண்மை என்பதில்.**

துஞ்சல் காதல் சொற்றுணை மற்று
அஞ்செழுத்துண்மை அருளியதாகும் என்றார்.

இப்பகுதியில் சம்பந்தர் பெருமான் தனது பூணூற் சடங்கின் போது பாடிய காந்தார பஞ்சமப் பண்ணில் அமைந்த ''துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்'' எனத் தொடங்கும் பஞ்சாக்கரப் பதிகமும், சம்பந்தப் பெருமானின் திருமணத்தின்போது தோன்றிய சோதியிற் கலக்கும் போது பாடிய கௌசிகப் பண்ணிலமைந்த ''காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுவார்'' எனத் தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகமும், திருநாவுக்கரசு நாயனாரைச் சமணர் கள் கல்லுடன் கட்டிக் கடலில் இட்ட போது கல்லே தோணியாக மிதக்கச் செய்த காந்தார பஞ்சமப் பண்ணில் அமைந்த ''சொற் றுணை வேதியன் எனத் தொடங்கும் நமச்சிவாய திருப்பதிகமும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பாண்டிக்கொடுமுடிப்பதியில் பாடிய பழம்பஞ்சுரப்பண்ணில் அமைந்த ''மற்றுப்பற்றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்'' எனத் தொடங் கும் பதிகமுமாக மூவர் முதலிகளும் பாடிய பஞ்சாக்கரப் பதிகங்கள் நான்கும் இடம்பெற்றுள்ள சிறப்பு நோக்கத்தக்கது.

4. **கோயில் திறம் எனும் பகுதி**

ஆரூர்தில்லை காட்டூர் மூன்றும்
சீரார் கோயில் திறமையதாகும் என்பார்.

இங்கு சிவாலயங்களின் திருவருள்திறம் கூறும். சம்பந்தப் பெருமானின் இந்தளப் பண்ணில் அமைந்த''ஆரூர்தில்லையம் பலம்'' எனத் தொடங்கும் சேத்திரக் கோவையும் திருநாவுக்கரசு நாயனாரின் சேத்திரக் கோவையாகிய ''தில்லைச் சிற்றம்பலமும்' எனத் தொடங்கும் திருத்தாண்டகப் பதிகமும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பழம்பஞ்சுரப் பண்ணில் அமைந்த ''காட்டூர்க்கடலே கடம்பூர்மலையே'' எனத் தொடங்கும் ஊர்த் தொகைப் பதிகமும் அமைந்துள்ளன. இப்பகுதியில் மூவர் முதலிகளும் சிவாலயப் பெயர்களை முன்வைத்துப் பாடிய தேவாரப் பதிகங்கள் இடம் பெறுகின்றன.

5. **சிவனுருவம் எனும் பகுதி**

ஓருருவரிய பாளைவடிவே
மருவார் என்ற வண்டமிழ் ஐந்தும்
திருவார் மேனிச் செய்தியதாகும். என்பதாகும்.

இதில் சம்பந்தப் பெருமானின் வியாழக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த ''ஓருருவாயினை'' எனத் தொடங்கும் திருவெழு கூற்றி ருக்கையும். சம்பந்தப் பெருமான் திருக்கடவூர் மயானத்தில் பாடிய காந்தாரப் பண்ணில் அமைந்த ''வரிய மறையார் பிறையர்'' எனும் பதிகமும்.

திருநாவுக்கரசு நாயனார் கோயில் எனும் தில்லையிற் பாடிய ''பாளையுடைக்கமுகு'' எனத் தொடங்கும் கோயில் விருத்தமும் அவரே திருப்பூவணத்தில் பாடிய ''வடிவேறுதிரி சூலம் தோன்றும் தோன்றும்'' எனும் திருத்தாண்டகமும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கடவூர் மயானப் பதியில் பாடிய பழம்பஞ்சுரப் பண்ணில் அமைந்த ''மருவார் கொன்றைமதி சூடி'' எனும் பதிகமும் இடம் பெற்றுள்ளன. இவை சிவபெருமானின் திருவுருவக் காட்சியை மனக்கண்முன் நிறுத்துவனவாகும்.

6. **திருவடிகள் எனும் பகுதி**

பொடியுடை அரவணை அந்தணாளன்
அடியிணை தந்த அருளேயாகும். எனப்படுகின்றது.

இதில் சம்பந்தப் பெருமான் திருவாழ்கொளிப்புத்தூரில் பாடிய தக்கராகப் பண்ணில் அமைந்த 'பொடியுடைமார்பினர்' எனும் பதிகமும், திருநாவுக்கரசர் திருவதிகையில் பாடிய ''அரவணை யான் சிந்தித்தரற்றும் அடி'' எனத் தொடங்கும் திருவடித்திருத் தாண்டகமும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புன்கூரில் பாடிய

தக்கேசிப் பண்ணில் அமைந்த ''அந்தணாளனுன் அடைக்கலம் புகுத'' எனத் தொடங்கும் பதிகமும் இடம்பெற்றுள்ளன. இவை திருவடிச் சிறப்பினை ஓதுகின்றன.

**7. அருச்சனை எனும் பகுதி**

பந்து வேற்றா கொன்றிவை மூன்றும்
நந்தலில் அருச்சனை நாட்டியதாகும் எனப்படுகிறது.

இதில், சம்பந்தப் பெருமான் திருப்பூந்தராயில் பாடிய காந்தார பஞ்சமப் பண்ணில் அமைந்த ''பந்து சேர்விலாள்'' எனும் பதிகமும், திருநாவுக்கரசர் ஸ்ரீகயிலாயம் பற்றிப் பாடிய ''வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி'' எனும் திருத்தாண்டகமும், சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருக்கழுக்குன்றத்தில் பாடிய நட்டபாடைப் பண்ணில் அமைந்த ''கொன்று செய்த கொடுமையால்'' எனத் தொடங்கும் பதிகமும் அமைந்துள்ளன.

**8. அடிமை எனும் பகுதி**

வேய்குலம் தில்லை எனுமிவை மூன்றும்
நாயனும் அடிமையும் நாட்டியதாகும் எனப்படுகிறது.

இதில், திருஞானசம்பந்தர் பாடிய பியந்தைக் காந்தாரப் பண்ணில் அமைந்த ''வேயுறுதோளிபங்கன்'' எனத் தொடங்கும் கோளறு பதிகமும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாரூரில் பாடிய கொல்லிக் கௌவாணப் பண்ணில் அமைந்த திருத்தொண்டத் தொகையும் அமைந்துள்ளன.

இவ்விதம் அகத்திய மாமுனிவர் அடங்கன் முறையின் சாரமாகத் திரட்டிக் கொடுத்த தேவாரத் திரட்டு ''எண்ணரும் அடங்கல் யாவையுமுணரும் புண்ணிய மிவையொடு பொருந்தும் என்றனர்'' என்பதற்கேற்ப பண்ணுடனும் பக்தியுடனும் தினமும் ஓதியுணர்ந்து பிறவிப்பிணி நீங்கி முத்திப்பேறுபெற முயல்வோம்.

01.04.2011 ஒலிப்பதிவு

உ
சிவமயம்

# குறைவிலாது உயிர்கள் வாழ்க

குறைவில்லாதுயிர்கள் வாழ்க, இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க' என்னும் தொடர்கள் எல்லோருக்கும் நன்கு பழக்கப்பட்டவை. இதற்கு நாம் செய்ய வேண்டுவது என்ன என்பதைச் சிந்திப்போம். உலக பொதுமறையாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல் திருக்குறள். மக்கள் வாழ்வியல் நூலாகிய திருக்குறளைத் தந்த வள்ளுவர்.

**"செய்தக்க அல்ல செய்க்கெடும் செய்தக்க**
**செய்யாமையானும்கெடும்"**

என்கிறார்.

அப்படியானால் இதில் திருக்குறளைப் படிக்க எங்களின் பங்கு என்ன என்று சிந்திக்க வேண்டியுள்ளது. வள்ளுவர் இதில் எங்களின் பங்கு என்ன என்பதை இரண்டு வகைப்படுத்துகின்றார். ஒன்று செய்தல் மற்றையது செய்யாமல் விடுதல். எதைச் செய்தல் வேண்டும் எதைச் செய்யாமல் விடவேண்டும். என்பதையும் அவரே அறுதியிட்டுச் சொல்கின்றார்.

தர்க்கரீதியாக எங்களைப் பார்த்துக் கேட்கின்றார். நீ அறிவுடையவனா? அறிவீனனா என்பதைப் பின்வரும் அளவு கொண்டு அறிந்து கொள். பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தை உனக்கு வந்த துன்பமாகக் கருதுவாயானால் நீ அறிவுடையவன், அப்படியில்லையென்றால் உன் அறிவால் பயனில்லை நீ அறிவற்றவன்.

**"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
**தன்நோய்போற் போற்றாக் கடை"** **(குறள் 315)**

என்பது குறள்.

ஆகவே பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தை எமக்கு வந்த துன்பமாகக் கருத வேண்டும் என்பதன் மூலம் நாம் செய்ய வேண்டியது

எமக்கு வந்த துன்பத்தைப் போக்குவது போலப் பிற உயிர்களுக்கு வந்த துன்பத்தையும் போக்க வேண்டும். இதன் மூலம் நாம் பிறஉயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் வாழவேண்டும் என்பதும் பெறப்படுகின்றது.

இதனையே மேலும் விரிவாக்கம் செய்து பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் வேண்டும் என்கிறார். பசித்துன்பம் தான் உயிர்களுக்கு என்றும் உள்ள கொடியதுன்பம். அதைப் போக்குவதற்கு நீ செய்யக்கூடியது உன் தேட்டத்தைப் பகுத்து இல்லாதோர்க்கும் கொடுத்து பல உயிர்களையும் பாதுகாத்தல் வேண்டும்.

**"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்று ளெல்லாம் தலை" (குறள் 322)**

எனும் குறள் மூலம் அறிஞர் கூறிய எல்லா அறங்களிலும் மேலானது ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்'' என்கின்றார்.

எனவே நாம் செய்யவேண்டுவன பிற உயிர்க்கு வரும் துன்பத்தை நமது துன்பம் போல மதித்து அவற்றைக் காத்தல், அதற்காகச் செய்ய வேண்டியது பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்பதையுணர்ந்து அதன்படி செய்து வாழ வேண்டும்.

அடுத்து நீ சிலவற்றைச் செய்யாது விடுவதாலும் எல்லா உயிரும் இன்புற்றிருக்க உதவலாம் என்கின்றார். அது உனக்கும் பிற உயிர்க்கும் நன்மை தரும். உன்னில் நீ அன்புடையவனானால் தீயது எதையும் செய்யாதே. தீயதைச் செய்தால் உனக்கும் கேடு வரும். உன்னால் பிறர்க்கும் கேடுவரும்.

**"தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்**
**துன்னற்க தீவினைப் பால்" (குறள் 209)**

என்பது குறள். எனவே தீயன செய்யாதிருப்பதன் மூலம் பிற உயிர்கள் இன்புற்றிருக்க உதவலாம் என உணர்த்துகின்றார்.

தீயதைச் செய்யாதிருத்தல் மூலம் பிற உயிர்கள் இன்புறுவது மட்டுமல்ல அவையெல்லாம் உன்னைக் கைகூப்பித் தொழும் எனும் உச்சநிலையையும் காட்டுகின்றார். உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் கைகூப்பித் தொழுவதை யார்தான் விரும்பமாட்டார்கள். அதற்காக நீ செய்வதல்ல செய்யாமல் விட வேண்டியவை இரண்டு. ஒன்று பிற

உயிர்களைக் கொல்லாமல் விடுதல், மற்றையது கொன்ற உயிர்களின் புலால் உடம்பை உண்ணாமல் விடுதல். இதனை,

**"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிருந் தொழும்"**

எனும் குறள் மூலம் உணர்த்துகின்றார்.

எனவே உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் இன்புற்று இருக்க வேண்டும் என்று விரும்பும் நாம்,

பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தை எமக்கு வந்த துன்பமாகக் கருதி உதவுதல்,

நமது தேட்டத்தைப் பகுத்து இல்லாதோர்க்குக் கொடுத்து பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் ஆகியவற்றைச் செய்தும்

தீயசெயல்களைச் செய்யாமலும் குறிப்பாக கொல்லாமலும் கொன்றதைத் தின்னாமலும் வாழ்வதன் மூலம் எல்லா உயிரும் இன்புற்றிருக்க உதவு வேண்டும்; திருக்குறளைக் கற்ற பயன் இதுவாதல் வேண்டும்.

10.4.2012 ஒலிப்பதிவு

உ
சிவமயம்

# எல்லா உயிரும் இன்புற்றிருக்க நாம் என்ன செய்யலாம் - வள்ளுவர் காட்டும் வழி

வள்ளுவப் பெருமான் இந்த உலகம் நல்லபடி வாழ வேண்டும்; எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடனே திருக்குறளைப் படைத்தார். அதனால்தான் உலகினர் எல்லோருமே திருக்குறளைப் போற்றுகின்றனர்.

திருக்குறளைப் படிப்பவர்கள் எப்படிப் படிக்க வேண்டும் படித்த பின் என்ன செய்ய வேண்டும் என்பதையும் சொல்லாமற் சொல்லி யுள்ளார். கற்றல் பற்றிச் சொல்லும் போது கற்க, கசடறக் கற்க, கற்பவை கற்க, கற்றபின் அதற்குத்தக நிற்க என்று சொல்கின்றார். இதன் மூலம் உலக நன்மை கருதி அவர் தந்த திருக்குறளை நாம் கற்க வேண்டும்; அதை கசடற அதாவது சந்தேக விபரீதம் அறத் தெளிவாகக் கற்க வேண்டும்; அவ்விதம் கற்கவேண்டிய முறையில் நல்லாசிரியரிடம் கற்றபின், அதற்குத்தக கற்றதற்குத்தக நிற்க வேண்டும்; கற்றபடி வாழ வேண்டும் என நாம் தெளிந்து கொள்ள வேண்டும்.

இதன் மூலம் ஏனைய இலக்கியங்களைப் போன்று இலக்கிய இன்பம் பெறுவதற்கு, பேசுவதற்கும், எழுதுவதற்கும் மட்டுமல்லாது அதன்படி வாழ்வதற்காகக் கற்க வேண்டும். அதனால்தான் பெரியோர் கள் திருக்குறளை ஒருவாழ்வியல் நூல் எனக் கூறுகின்றார்கள்.

வள்ளுவர் உலக உயிர்கள் நன்மை கருதித் திருக்குறளைப் படைத்தார் என்னும் போது இதனைப் படிப்போரும், அவர்கள்

மூலமாகப் படிப்பறிவில்லா மக்களும் மற்றும் பகுத்தறிவு இல்லா உயிரினங்களும் நன்மை பெற வேண்டும் என்பதே நோக்கமம் எனக் கொள்ளலாம்.

ஆன்மீக வாதிகள் முதல் சோஸலிச வாதிகள் வரை, ஆஸ்திகர் முதல் நாஸ்திகர் வரை, சமய வாதிகள் முதல் அரசியல் வாதிகள் வரை எல்லோருமே எல்லா உயிரினங்களும் இன்புற்றிருக்க வேண்டுமென்றே கூறுவர். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

பாரதியார் ''தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்பார். திருமூலர் இதையே ''யாவர்க்கும் ஆம் உணும்போதொரு கைப்பிடி" என்பார். கந்தபுராணம் ''குறைவிலாது உயிர்கள் வாழ்க'' என்னும். இக்காலச் சினிமாப் பாடல் ''எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்'' என்கிறது. இப்படி எங்கு பார்த்தாலும் எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற கொள்கை போற்றப் படுவதை காண்கின்றோம். அதைப் போற்றி வாழ்வோம்.

உ
சிவமயம்

# அறம் செய்தல் யார்க்கும் எளிது

''அறஞ் செயவிரும்பு'' என்பது ஔவையார் வாக்கு. இளமைப் பருவத்திலே இந்த விருப்பத்தை உண்டாக்கி விட்டால் பின் வளர்ந்து வருங்காலத்தில் அறத்தைச் செய்வார்கள் என்பது ஔவையார் கொண்ட ஒரு உத்திமுறை இது.

எல்லார்க்கும் அறம் செய்ய வேண்டும் என்ற விருப்பம் பெரும்பாலும் உண்டு. ஆனால் அறம் செய்வதற்குப் பொருள் அமைய வேண்டுமே. எங்களிடம் இருக்கும் பொருள் எங்கள் தேவைகளுக்கே போதாதே அப்படியிருக்க எப்படி அறஞ் செய்யமுடியும். தன்னைத் கண்டுதானே தானம் செய்ய முடியும் என்ற மனச் சஞ்சலம் தான் பலரை அறஞ் செய்ய விடாமல் குழப்பிக் கொண்டு இருக்கிறது.

இப்படிச் சஞ்சலப்படுபவர்களைப் பார்த்துத் திருமூலர் சுவாமிகள் பொருள் இல்லாமல் அறஞ்செய்யலாம்; அறஞ்செய்வதற்குப் பொருள் கட்டாயமில்லை, மனம்தான் வேண்டும் என்று கூறி அறம் செய்யும் உபாயத்துக்குரிய நான்கு வழிகளைக் கூறுகின்றார்.

கடவுளை வணங்க வேண்டும் என்ற விருப்பம் உண்டுதானே. அதற்குப் பொருள் தேவையில்லை. பூவோ மாலையோ பூசைப் பொருட்களோ இல்லை என்று கவலைப்படாதே. உன்னால் ஒரு இலையாவது பறிக்கமுடியாதா. ஒரு இலையைப் பறித்துக் கொண்டு போய் மனம் ஒன்றி, உண்மையான அன்புடன் அந்த இலையைப் போட்டு இறைவனை வணங்கு. இப்படி வணங்குதல் எல்லாரும் செய்யக்கூடிய இலகுவான வழிபாடல்லவா. **''யாவர்க்கும் ஆம் இறைவற்கொரு பச்சிலை''** என்கிறார்.

இரண்டாவது வழி, உன் அயலில் உலாவும் பசுவைப் பார் இந்தச் பசு இறைவன் பூசைக்குரிய பஞ்ச கௌவியங்களான பாலும் தயிரும் நெய்யும், கோமயம் கோசலமும் பெரியோர் வரை எல்லார்க் கும் பாலும் பால் பொருட்களும் கொடுத்து வளர்க்கும் புண்ணியப் பிறவியல்லவா. இந்தப்பசுவுக்கு ஒருபிடி தீனிபோடு. அது பசுவுக்கு

மட்டுமல்ல இறைவனுக்கும் மனிதர் எல்லார்க்கும் செய்யும் அறமாகுமே. "**யாவர்க்குமாம் பசுவுக்கொருவாயுறை.**" ஒரு பிடி தீனி போடுதல் எல்லார்க்கும் இலகுவான வழியல்லவா என்கிறார்.

மூன்றாவது வழி. நீ உண்ணும் போது உன் உணவில் ஒரு பிடி ஏழைகளுக்குக் கொடு. உன் வீட்டில் உள்ளார் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிடி கொடுத்தால் என்ன குறைவு வரப்போகிறது. அது ஒரு ஏழையின் பசியைப் போக்குமல்லவா. சோறாக்கும் உலையில் அரிசியைப் போடும் போது அதில் ஒரு பிடி அரிசியை எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு வைத்தால் பிச்சை என்று வருவார்க்கு இல்லையென்னாமற் கொடுக்கலாமே. இது எல்லாரும் செய்யக்கூடிய இலகுவான அறமல்லவா."**யாவர்க்கும் ஆம் உணும்போதொரு கைப்பிடி**" என்கிறார்.

நாலாவது வழி இந்த வழிகளிலும் செய்யமுடியவிடின் மற்றவர்களுடன் குறிப்பாக நொந்து போனவர்களுடன் கதைக்கும் போது நாலு இதமான இனிய வார்த்தைகளைப் பேசு. அவர்களுடைய மனம் ஆறுதல் பெறும், கவலை நீங்கும், மகிழ்வு உண்டாகும். பிறருடன் நாலு இனிய வார்த்தைகள் பேசுதல் யார்க்கும் இலகுவான வழியல்லவா? அது அறச் செயல் அல்லவா? "**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே**" என்கிறார். ஆகவே திருமூலர் சொல்லும் அறஞ்செய்யும் மந்திரம்

**யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கொருவாயுறை**
**யாவர்க்குமாம் உணும்போதொருகைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே.**

இந்த நான்கு அறவழிகளும் நாம் பெறவேண்டிய உறுதிப் பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கையும் தரும் அறச் செயல்கள் அல்லவா.

10.4.2012 ஒலிப்பதிவு

உ
சிவமயம்

# திரிகரணவழிபாடு

இந்த உலகத்திலே புல்பூண்டு முதலிய ஓரறிவு உயிரினம் முதல் ஆறறிவு படைத்த மனிதன் வரை என்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதமான பிறப்புகளைக் காண்கின்றோம். இவை அனைத்திலும் மனிதனே உயர்ந்த பிறப்பாக காணப்படுகின்றான். உடம்பால் ஸ்பரித்து உற்றறிதல், நாவால் சுவைத்தறிதல், மூக்கால் முகர்ந்தறிதல், கண்ணால் பார்த்தறிதல், காதால் கேட்டறிதல் ஆகிய ஐந்து அறிவுகளுக்கும் அப்பால் பகுத்து அறிதலுக்குரிய மனத்தை உடைய வன் மனிதன் மட்டுமே. ஏனைய உயிரினங்களுக்கு மனம் இல்லை. மனம் உடையவன் ஆதலால் மனிதன் எனப் பெயர் பெற்றான்.

ஆகவே பகுத்தறிகின்ற மனத்தினால் ஏனைய உயிரினங்களுக்கு இல்லாத மனமும் உயர்வும் எனக்கு எப்படிக் கிடைத்தது, ஏன் கிடைத்தது, மனதால் நினைக்க முடிகிறது, நாவால் சொல்ல முடிகிறது, உடலால் செய்ய முடிகிறது. இது எப்படி என்று சிந்தித்தால் மானிடப் பிறவியின் மகத்துவம் தெரியும்.

சைவ சமய சாத்திரமாகிய சித்தாந்த சாத்திரத்தில் சிவஞானசித்தி யார் இதற்கு விடை தருகின்றது.

**மானுடப்பிறவிதானும் வகுத்தது மனவாக்குக்காயம்**
**ஆனிடத் தைந்துமாடும் அரன்பணிக்காகவன்றோ**
**வானிடத்தோரும் மண்மேல் வந்தரன்தனை அர்ச்சிப்பர்**
**ஊனெடுத்துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ.**

மக்களின் பிறவிப்பிணியை நீக்குவதற்காகப் பசுவிடத்திலிருந்து உண்டாகும் பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்னும் பஞ்சகௌவியங்களையும் அபிடேகமாகக் கொண்டருளும் சிவபெரு மானை, மனத்தால் நினைத்தும் வாக்கினால் அவன் புகழைப் பாடித்

துதித்தும், உடம்பால் பணிந்தும் வழிபாடு செய்ய வேண்டும். இந்த வழிபாடு ஏனைய பிறவிகளில் செய்ய முடியாமையால் இந்த வழிபாட்டின் பொருட்டாகவன்றோ பிறவிகளில் விசேடமாகிய மானுடப்பிறவியை நாம் முன்செய்த தவத்தால் வகுத்துத்தந்துள்ளான்.

வானுலகிலுள்ள திருமால் பிரமன் முதலிய தேவர்களும் ஏனைய உலகங்களில் சிவபெருமானை வழிபட முடியாமையால் தேச விசேடமாகிய இந்த மண்ணுலகில் வந்து சிவனை அர்ச்சித்து வழிபடுகின்றனர்.

அவ்வாறு சிவனை வழிபடுதற்குரியதாகிய இவ்வுலகில், அதற்கு உபகாரமான மானுட உடலைப் பெற்றும், வழிபட வேண்டும் என்னும் உண்மையை உணராமல் இந்த மனிதர் மீண்டும் மீண்டும் பிறந்தும் இறந்தும் உழல்கின்றார்களே என வருந்துகின்றார். இதன்மூலம் மானுடப்பிறப்பின் பயன் சிவழிபாடேயாகும் என்பதை உணர்த்துகின்றார். இதனாலே தான் அப்பர் சுவாமிகள் எங்கள் உடல் உறுப்புகள் ஒவ்வொன்றையும் விழித்து,

தலையே நீ வணங்காய், கண்காள் காண்மின்களோ, மூக்கே நீ முரலாய், செவிகாள் கேண்மின்களோ, நெஞ்சே நீ நினையாய், கைகாள் கூப்பித் தொழீர், கால்களே கோலக்கோபுரக் கோகரணம் சூழ்ந்துவாருங்கள் என்று திரவங்கமாலையில் கட்டளை இடுகின்றார்.

மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் சிவனை வணங்குதல் வேண்டும் என்பதை ''வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்றியும் தந்ததலைவனை வணங்கி'' மானிடப்பிறவிப் பலனைப் பெறவேண்டும் என்பதை உணர்ந்து தொழுவோம்.

உ
சிவமயம்

# சிவனை நினைந்து வழிபடுவோம்

நாம் நம் கண்முன் யோகம், தியானம், தானம், தவம், தருமம், பாடல், ஆடல், பணிதல், யாகம் முதலான பலவித வழிபாடுகளைக் காண்கின்றோம். இவையெல்லாம் நாம் எதிர்பார்த்த பலனைத் தருகின்றனவா? இவற்றின் பலனைத் தருபவர் யார்? அவரை நினைத்து, அவரை முன்னிலைப் படுத்தி இந்த வழிபாடுகள் செய்யப்படுகின்றனவா என்பதைச் சிந்தித்தல் பொருந்தும்.

இறைவன் ஒருவன், அவன் எங்கும் இருக்கின்றான். எனினும் வழிபடும் இடங்களாகிய ஆலயங்களிலும், சிவனடியாரிடத்திலும், ஞானகுருவினிடத்திலும் தயிரில் நெய் போல இருக்கின்றான். ஏனைய இடங்களில் பாலில் நெய் போல இருக்கின்றான். தயிரில் இருந்து இலகுவாக நெய்யைப் பெறலாம், பாலில் நெய்யிருப்பினும் அதனைப் பெறுவது கடினம்.

ஆதலால் இறைவனை வழிபாடு செய்வதற்குரிய இடங்களில் வைத்து வழிபாடு செய்ய வேண்டும். அவனை நினைந்து வழிபட வேண்டும். இறைவனை - முழுமுதற்கடவுளை நினையாமல் செய்யும் யோகமோ, தியானமோ, யாகமோ பலன் தரமாட்டா. அரனை மறந்து செய் அறங்கள் எல்லாம் வீண் செயல் என்பது தத்துவம்.

பரம்பொருளாகிய இறைவனை முன்னிலைப்படுத்தி வழிபட்டுச் செய்யும் செயல் எதுவாயிருந்தாலும் அது பலன் தரும். பரம்பொருளை நினையாமல் செய்யும் செயல் எவ்வளவு உயர்ந்ததாயிருந்தாலும் பலன் தராது. இதனைச் சிவஞானசித்தியார் என்னும் சித்தாந்த சாத்திரம் பின்வருமாறு கூறுகிறது.

**அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்**
**பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்**
**வரனுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி**
**நரரினிற்பாலன் செய்த தீமையும் நன்மையாய்த்தே.**

என்கிறது.

அரனாகிய சிவபெருமானிடத்து அன்புவைத்துச் செய்யும் செயல் பார்வைக்கு பாவம்போல இருந்தாலும் அது அறப்பயனையே தரும். சிவபெருமானிடம் அன்பில்லாமல் செய்யும் செயல் புண்ணியச் செயலா யிருந்தாலும் அது பாவத்தையே தரும். உதாரணமாக

சிறு பையனாகிய விசாரசருமர் என்னும் சண்டேசுரர் மணலில் சிவலிங்கம் செய்து பால் கொண்டு சிவனை அன்போடு நினைந்து அபிடேகம் செய்தார். இதனைத் தடுத்த தந்தையின் காலை வெட்டினார். இங்கே தந்தையின் காலை வெட்டிய செயல் பாவம் போல் தெரிந்தாலும் சிவபூசைக்கு இடையூறு ஏற்படாவிதத்தில் சிவன் மீது அன்பு கொண்டு செய்ததால் அவர் சண்டேசுர பதம் பெற்றார். தந்தையும் வெட்டிய காலைப் பெற்று இன்புற்றார்.

தக்கன் என்பவன் சிவனிடம் பலவரங்களைப் பெற்ற பெருமைக்குரியவன். அவன் சிவனை நிந்தித்து, சிவனை நினையாமல் பெரும் யாகம் செய்தான். அந்த யாகம் புண்ணியச் செயலாயிருந் தாலும் சிவனை நினையாததால் யாகம் அழிந்தது. பங்குபற்றியோர் யாவரும் தண்டிக்கப் பெற்றனர்.

**தந்தையைத் தாளற வீசிய சண்டிக்கு இவ்வண்டத்துடனே**
**பூதலத்தோரும் வணங்கப் பெற்கோயிலும் போனகமும் அருளி**
**சோதி மணிமுடித்தாமமும் நாமமும் கொண்டர்க்கு நாயகமும்**
**பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே**

சிவனை நினைந்து செய்த விசாரசருமருக்கு சண்டேசுர பதவி கிடைத்தது. சிவனை மறந்து யாகம் செய்த தக்கனுக்குத் தலையும் போய் ஆட்டுத் தலையும் கிடைத்தது. ஆதலால் எவ்வித வழிபாடு செய்தாலும் முழுமுதற் பொருளாகிய சிவனை நினைந்து வணங்கிச் செய்யும் செயலே உண்மைப் பயன் தரும் என்பதை உணர்ந்து வழிபடுவோம்.

உ
சிவமயம்

# தானம் செய்யும் வழி

மனிதன் செய்யக்கூடிய காரியங்களிலே மிக உயர்ந்தது தானம். தானம் எனப்படுவது தனக்குக் கிடைத்ததைப் பிறர்க்கும் பகிர்ந்து கொடுத்தல் ஆகும். மழை எப்படி இன்னார் இனியார் என்று பாராமல் எல்லோர்க்கும் பயன்படப் பொழிகின்றதோ அதேபோல நாமும் இன்னார் இனியார் என்று பாராமல் எல்லார்க்கும் பகுத்துக் கொடுத்து வாழவேண்டும். இதனை வள்ளுவர்

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர், தொகுத்தவற்றுள் எல்லாம் தலை என்கிறார். அறவோர்கள் சொல்லிவைத்த அறச்செயல்கள் அத்தனையிலும் தலைசிறந்தது தான்பெற்றதைப் பிறர்க்கும் பகுத்துக் கொடுத்துத்தானும் அனுபவித்துப் பிறஉயிர்களைக் காத்தல் ஆகும் என்பது இதன் பொருள். இதனைத் திருமூலர் சுவாமிகள் திருமந்திரத்திலே

**ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்**
**பார்த்திருந்து உண்மின், பழம்பொருள் போற்றன்மின்**
**வேட்கையுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்**
**காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே.**

பிறக்கும் போது யாரும் செல்வத்தைக் கொண்டுவரவில்லை. இறக்கும்போதும் கொண்டு போவதில்லை. எங்கள் செல்வம் எல்லாம் இடைநடுவில் வந்தவை. ஆதலால் எல்லார்க்கும் பகிர்ந்து கொடுங்கள். நல்லவர் கெட்டவர் வேண்டியவர் வேண்டாதவர் என்ற பேதம் பாராமல் யார் யாருக்குத் தேவையோ அவர்க்கெல்லாம் கொடுங்கள். நீங்கள் உண்ணும்போது யாரும் விருந்தினர்கள் ஏழைகள் வருகின்றார்களோ என்று பார்த்து அப்படி வந்தவர்க்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணுங்கள். நீங்கள் மட்டுமே உண்ண வேண்டும் என்று எண்ணாதீர்கள். காகங்களைப் பாருங்கள் அவை ஒரு உணவைக்

கண்டவுடன் தன்னினத்தைக் கூவி அழைத்து இனத்துடன் சேர்ந்து உண்பதைப் பாருங்கள். அது காலமறிந்து அழைத்துக் கொடுத்து உண்பதுபோல நீங்களும் பசித்தோர்க்கு பகிர்ந்து கொடுத்து உண்ணுங்கள்.

யாரும் வந்து விடுவார்களோ, அதற்கு முன் நாமே இந்த நல்ல பண்டத்தை உண்டுவிட வேண்டுமென்று அவாப்பட்டு அவசரமாக உண்ணாதீர்கள். பசித்தோர் விருந்தினர் வந்தால் மகிழ்ந்து கொடுத்து உண்ணுங்கள். தானம் கொடுக்கும்போது இது பழமையானது இதை நாமே வைத்திருக்க வேண்டும் என்று பழமை பெருமை பாராதீர்கள். எது எனினும் கொடுத்து வாழுங்கள் என்று சொல்கின்றார்.

யார்க்கும் இடுவதே தானம் எனப்படும். இது கைமாறு கருதாமல் செய்யப்படும். உயர்வு தாழ்வு பார்த்துக் கொடுப்பது தானம் ஆகாது என்பதன் மூலம் தானம் என்றால் எது எனக்காட்டுகிறார்.

உண்ணும் உணவில் கூட யாரும் வருகின்றார்களா என்று காத்திருந்து வந்தவர்க்கும் கொடுத்து உண்பதே தானம் ஆகும் என்கிறார்.

பொருளைத் தானம் செய்யும் போது நல்லதை எடுத்து வைத்து விட்டு மற்றவற்றைக் கொடுத்தல் தானமாகாது. எதையும் கொடுத்தலே தானம்.

உதாரணமாகக் காக்கைகள் பிரதிபலன் கருதாமல் தன் இனத்தை அழைத்துப் பகிர்ந்துண்பதுபோலப் பலன்கருதாமல் செய் வதே தானம் என்பதை உணர்த்துகின்றார்.

நாமும் தானம் செய்து தவவாழ்வு வாழ்வோம்.

உ
சிவமயம்

# தீபாவளி

மாதந்தோறும் பலவிதமான பண்டிகைகள், விரதங்கள், விழாக்கள் வருகின்றன. நாம் அவற்றைக் கொண்டாடி மகிழ்கின்றோம். ஆனால் அவற்றின் அர்த்தம் என்ன. எப்படி, ஏன் கொண்டாடவேண்டும். அதனால் நாம் பெறும் நன்மை என்ன? என்பது பற்றி அதிகம் சிந்திப்பதில்லை. சில பண்டிகைகள் அவற்றின் நோக்கத்திற்கு எதிர்மாறாக கொண்டாடப்படுவதையும் காண்கின்றோம்.

உதாரணத்துக்கு ஐப்பசியில் வரும் தீபாவளிப் பண்டிகையைப் பற்றிச் சிந்திக்கலாம். இதற்குரிய புராணக்கதை, ஒருகாலத்தில் நரகாசுரன் என்பவன் சர்வாதிகாரக் கொடுங்கோல் ஆட்சி நடத்தினான். கடவுள் என்று ஒருவர் இல்லை, நானே கடவுள் என்னையே எல்லாரும் வணங்கிப் பணிவிடை செய்ய வேண்டும் என்றும் கட்டளையிட்டான்.

அவனுடைய ஆட்சியிலே பொய், களவு, கொலை, புலால், மது, காமம் முதலாகச் சொல்லப்பட்ட, விலக்கப்பட்ட அத்தனை தீச்செயல்களும் மலிந்தன. கொலையோடு களவு காமம் குறித்திடு வஞ்சமெல்லாம் நிலையெனச் செய்தான். வல்லவன் இட்டதே சட்டம் என அவன் ஆட்சி நடைபெற்றது.

இவனது கொடுமைகளுக்கு ஆற்றாத மக்கள் காத்தற் கடவுளாகிய திருமாலிடம் முறையிட்டார்கள். அவர் நரகாசுரனை வதம் செய்து அவனுக்கு நல்லறிவு புகட்டினார். நல்லறிவு பெற்ற அவன் உயிர்விடும் போது திருமாலிடம் ஒருவரம் கேட்டான்.

நான் செய்த தீச்செயல்கள் எல்லாம் பழிச் செயல்கள் என்பதை உணர்ந்தேன். அதனால் நான் இறக்கும் இன்னாளை ஆண்டுதோறும் மக்கள் நான் செய்த பொய்யும், கொலையும், புலாலும், மதுவும், களவும் முதலான தீச்செயல்களை விலக்கிப் பழைய கெட்ட

வற்றையெல்லாம் நீக்கிப் புத்தாடை புனைந்து, கடவுள் வழிபாடு செய்து தூயவர்களாய் மகிழ்ந்து கொண்டாடவேண்டும் என்று கேட்டான். அப்படியே ஆகட்டும் எனத் திருமால் வரங்கொடுத்து மக்களையும் அதன்படி தூயவர்களாய் இந்நாளைக் கொண்டாடி மகிழச் செய்தார்.

நம்மிற்பலர் இந்த உண்மை தெரியாமல் புத்தாடை உடுப்பதும், நன்றாகக் கூடிக்குடித்து மதுமாமிசம் உண்டு மகிழ்வதுமே தீபாவளி என எதிர்மாறாகக் கொண்டாடுகின்றார்கள். மற்றைய நாட்களில் சாதாரண மனிதராக உள்ளவர்கள் அன்று நரகாசுரன் போல் மாறி விடுகின்றார்கள். இந்தநிலை மாறவேண்டும். தீபாவளிநாளில், கழிக்கவேண்டியவற்றைக் கழித்து, புத்தாடை புனைந்து, ஆலய வழிபாடு செய்து உடலும் உள்ளமும் தூயவர்களாய் உற்றார் உறவினருடன் விருந்தோம்பி வாழவேண்டும். நாம் எல்லார்க்கும் இனிப்பாக வாழ்த்த வேண்டும்.

தீபாவளி என்ற சொல்லே தீப ஆவளி - தீபங்களின் வரிசை எனப் பொருள்தரும். இருள் அகற்றும் தீபங்களை எல்லா இடத்தும் வரிசையாய் ஏற்றி ஒளியூட்டவேண்டும். வெளி இருளை மட்டும் ஓட்டினால் போதாது. இதன் உண்மைப் பொருள் மக்கள் மனதில் குடிகொண்ட அறியாமையால் செய்யப்படும் தீச்செயல்களாகிய இருளை ஓட்டி அறிவொளி ஊட்டி மகிழ வேண்டும். புண்ணியமாம் பாவம்போம் என ஔவையார் சொல்வது போலப் பாவச் செயல்களை ஒழித்துப் புண்ணியச் செயல்களைச் செய்ய வேண்டும்.

21.10.2011 ஒலிப்பதிவு

உ
சிவமயம்

# கந்தபுராணம்

சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். சிவசம்பந்தம் உடையது ஆதலால் சைவசமயம் எனப்படுகிறது. சைவத்தின் தத்துவம் சைவசிந்தாந்தம். சைவசிந்தாந்தத்தை விளக்கும் சாத்திரங்களாக மெய்கண்ட சாத்திரங்கள் உள்ளன. தோத்திரங்களாகப் பன்னிரு திருமுறைகள் உள்ளன. சைவசித்தாந்தத்தைவிளக்கும் புராணமா யுள்ளது கந்தபுராணம். கந்தனது புராதனமான பெருமையைக் கூறுவதால் இது கந்தபுராணம் எனப்படும்.

இதில் சொல்லப்படும் கதைப்பாத்திரங்கள் எல்லாம் சைவசித் தாந்த தத்துவக் குறியீடுகளாக இருப்பதைக் காணலாம்.

கதைச் சுருக்கத்தை நோக்கினால் தேவர்கள் எண்ணில்லாத காலமாக சூரபன்மன் முதலான அசுரர்களால் சிறைப்பட்டு வருந்து கிறார்கள். துன்பத்துக்காற்றாது சிவபெருமானிடம் முறையிடுகிறார்கள். சிவபெருமான் தனது நெற்றிக் கண்ணொளியிலிருந்து கந்தப் பெருமானைத் தோற்றுவிக்கின்றார். கந்தப்பெருமான் சூரன் முதலான அசுரர்களின் வலிமை எல்லாவற்றையும் அழித்துத் தேவர்களைச் சிறைமீட்டு அருள்புரிகின்றார்.

சைவசிந்தாந்தம் கூறும் உண்மை இறைவன் ஒருவர். ஆன்மாக் கள் எண்ணில்லாதன. அவை அநாதிகாலம் தொடக்கம் ஆணவம் கன்மம் மாயை எனும் மும்மலங்களால் பீடிக்கப்பட்டு அறிவிழந்து பிறந்தும் இறந்தும் துன்புறுகின்றன. அவை எப்போ இறைவனுடைய துணையை நாடுகின்றனவோ அப்போது இறைவன் தனது திரு வருளால் மும்மலபந்தத்தை நீக்கி ஆன்மாக்களுக்குப் பேரின்பத்தைக் கொடுப்பார். எனும் இந்தக் கருத்தே கந்தப்புராணக் கருவாக உள்ளது.

சைவசிந்தாந்த முப்பொருள் உண்மை கந்தபுராணத்தில் விளக்கப்பட்டுள்ளது. காசிபர் உபதேசத்தில்

**சான்றவர் ஆய்ந்திடத்தக்கவாம் பொருள்**
**மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன**
**ஆன்றதோர் தொல்பதி, ஆருயிர்த்தொகை,**
**வான்திழ் தளையென வகுப்பர் அன்னவே.**

என்று சொல்லப்படுகின்றது.

தக்கவர் ஆராய்ந்தறிய வேண்டிய அநாதியான உண்மைப் பொருள்கள் மூன்று உள்ளன. அவை வேதாகமங்கள் சொல்கின்ற அநாதியான பதி ஒருவர். இயல்பாகவே மலங்களால் பீடிக்கப்பட்டு உழல்கின்ற எண்ணில்லாத ஆன்மாக்கள். இந்த ஆன்மாக்களை இயல்பாகவே பீடித்துள்ள ஆணவம், கன்மம், மாயை எனும் மலங்கள் எனும் பதி, பசு, பாசங்கள் என்றுமுள்ள முப்பொருள்கள் ஆகும்.

சிவபெருமானை வழிபாடு செய்தால் அவருடைய திருவருளே குருவடிவாக வந்து மலபந்தங்களை நீக்கி ஆன்மாக்களுக்கு முத்திப்பேறு நல்கும் என்ற சைவசித்தாந்த உண்மையே கந்த சட்டிக் காலமாகிய சூரன்போர் மூலம் உணர்த்தப்படுகின்றது. தேவர்கள் சிவபெருமானை வேண்டுதல் செய்ய அவர் தனது திருவருளே திருமேனியாகக் கொண்டு கந்தப் பெருமானாக வந்து ஆணவமாகிய சூரனையும், கன்ம மலமாகிய சிங்கனையும், மாயை மலமாகிய தாரகனையும் மற்றும் அசுரர்களையும் வதம் செய்து தேவர்களை சிறைமீட்டு அருள்புரிந்தார்.

திருவருள் துணைகொண்டு பக்குவ ஆன்மாக்கள் மலபந்தம் நீங்கி இறையின்பம் பெறும் செய்தியை கந்த சட்டிக் காலத்தில் இவ்வுண்மையையுணர்ந்து நோன்பிருந்து இறையருள் பெற முயல்வோம்.

**புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கிமேலாம்**
**நன்னெறி ஒழுகச்செய்து நவயறுகாட்சி நல்கி**
**என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கியாண்ட**
**பன்னிருதடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி**

உ
சிவமயம்

# முருகப்பெருமான்

சூரன் முதலான அசுரர்களின் ஆட்சியில் தேவர்கள் சொல லொணாத் துயர் அடைந்தார்கள். சிவபெருமானிடம் சரண டைந்தார்கள். அவர் முருகப்பெருமானை உதிக்கச் செய்தார். முருகன் சூராதி அசுரர்களை அழித்துத் தேவர்களைக் காத்தருள் செய்தார்.

கடவுள் ஒருவன்தானே. அவரே சிவன். அப்படியானால் முருகன் என இன்னொருக் கடவுள் எப்படி இருக்க முடியும் என்னும் சந்தேகம் பலருக்கு உண்டு. கந்தபுராணம் இந்தச் சந்தேகத்துக்கு விளக்கம் தருகிறது.

**அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்**
**பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்**
**கருணைகூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டே**
**ஒருதிருமுருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய**

என்பது முருகப் பெருமான் தோன்றியமை குறித்த கந்தபுராணப் பாடல்.

அருவமாயும், உருவமாயும், அநாதியாயும், பலவாயும், ஒன்றா யும் உள்ள பரம்பொருளாகிய சோதிப்பிழம்பு ஒரு வடிவுதாங்கி கருணைபுரியும் ஆறுமுகங்களும், பன்னிரண்டு கரங்களும் கொண்டு திருமுருகனாக வந்து உதித்தது என்பது இப்பாடலின் பொருள். எனவே ஞானஜோதியாய் விளங்கும் பரம்பொருளே முருகனாக வந்தார் என்பது தெரிகிறது. ஆதலால் சிவன் வேறு முருகன் வேறு அல்ல, ஒருவரே என்பது புலனாகிறது.

அசுரர்களை அடக்கி தேவர்களை வாழ்விப்பதற்காகச் சிவப்பரம்பொருளே சங்கற்பமாத்திரையில் முருகனாக அருள் திருமேனி கொண்டு வந்தார். சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலிருந்து

புறப்பட்ட ஆறுதீப்பொறிகள் சரவணப் பொய்கையை அடைந்து ஆறு குழந்தைகளாகிட உமாதேவியார் எடுத்தணைக்க ஆறும் ஓருருவாகி ஆறுமுகனானார்.

சிவபெருமானுக்கு தற்புருஷம், வாமம், அகோரம், சத்தியோசாதம் என நான்கு திக்குகளை நோக்கிய முகங்கள் நான்கும் மேல்நோக்கிய ஈசானமுகமும், கீழ்நோக்கிய அதோமுகமும் என ஆறுமுகங்கள் உள. இந்த ஆறுமுகங்களிலுமுள்ள நெற்றிக் கண்களின் சோதியிலிருந்தே ஆறுமுகன் தோன்றினார். சிவபரம்பொருளே முருகன் என்பதற்குக் கந்தபுராணத்தில் கச்சியப்பர் சிவன் வாக்காகவே சொல்கின்றார்.

**ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்**
**பேதகமன்றால், நம்போல் பிரிப்பிலன், யாண்டும் நின்றான்,**
**ஏதமில் குழவிபோல்வான், யாவையும் உணரும் நீரான்**
**போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருளவல்லான்.**

என்பது அப்பாடல். தமது சக்திதான் முருகன் என்றும், தாமும் அவனும் வேறல்ல என்றும், தன்னைப்போலவே எங்கும் நிறைந் துள்ளான் என்றும் ஞானம் நல்கும் குழந்தையாயுள்ளான் என்றும் என் போல் எல்லாம் அறிந்தவன் என்றும் வீட்டின்பத்தையும் அருளவல்லான் என்றும் குறிப்பிடுவது கொண்டு சிவப்பரம்பொருளே முருகன் என்பதையுணரலாம்.

ஆதலால் இக்கலியுகத்தில் முருகப்பெருமானைச் சிவப்பரம் பொருள் என்றே நினைந்து வழிபட்டுப் பேரின்பப் பெருவாழ்வு பெறுவோம்.

**விழிக்குத்துணை திருமென்மலர்ப்பாதங்கள்**
**மேன்மைக்குன்றா மொழிக்குத்துணை முருகா எனும் நாமங்கள்**
**முன்பு செய்த பழிக்குத்துணையவன் பன்னிருத்தோளும்**
**பயந்ததனி வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே**

உ
சிவமயம்

# வள்ளிதிருமணம்

சிவமுனி என்பவர் தவஞ் செய்யும்போது ஒருமான் வந்தது. முனிவர் அதைப் பார்த்தார். அது கருக்கொண்டு வள்ளிக் கிழங்ககழ்ந்த குழியில் ஒரு பெண்குழந்தையை ஈன்றுவிட்டுச் சென்றது.

அதை வேடர் தலைவனாகிய நம்பி எடுத்து வளர்த்து வந்தான். வள்ளிக்குழியிலிருந்து எடுத்ததால் வள்ளியெனப் பெயர் இட்டான். வள்ளி வளர்ந்து 12 வயதானாள். வேடர்குல வழக்கப்படி அவளைத் தினைப்புனம் காக்க வைத்தனர்.

நாரதர் இதையறிந்து முருகப் பெருமானிடம் போய் வள்ளி நாயகியின் செவ்வியை விண்ணப்பித்தார். முருகன் மானுட வடிவங் கொண்டு வந்து வள்ளியைக் கண்டு உரையாடினார். அப்போது வேட்டுவர் தலைவன் வர முருகன் வேங்கை மரமாகி நின்றான். நம்பி போக மீண்டும் மானுட வடிவங்கொண்டு வள்ளி நாயகியாருடன் உரையாடினார். மீண்டும் நம்பிராசன் வர முருகன் சந்நியாசியாகி வேடர்தலைவனை ஆசீர்வதித்தார். அவர்கள் போனபின் வள்ளிநாயகி அவருக்கு தேனும் தினைமாவும் நீரும் கொடுக்க உண்டுவிட்டு வள்ளிநாயகியாரைத் தழுவ முயன்றார்.

வள்ளி மறுத்து விலகி ஓடினாள். முருகன் விநாயகரை நினைக்க யானை வடிவங்கொண்டு அவர் வந்தார். வள்ளி யானைக்குப் பயந்து முருகக் கடவுளின் பின்னே ஒதுங்கினார். முருகன் தன் உண்மை வடிவத்தைக் காட்டி அவளை அணைத்தார்.

தினைப்புனம் காவல் நீங்கியது. வள்ளி நம்பிராசன் வீட்டில் இருந்தாள். முருகன் இரவில் வள்ளிநாயகி இருந்த குடிசைக்குப் போய் தோழி துணையாக வள்ளியைக் கூட்டிப் போனார். இதையறிந்த வேடர்கள் கோபங்கொண்டு முருகக் கடவுளை எதிர்த்தார்கள். முருகன் கட்டளைப்படி சேவல் கூவ எல்லாரும் வீழ்ந்திறந்தார்கள். பின்பு இறந்தவர்களை எழுப்பி வள்ளிநாயகியாருக்குத் தெய்வத் திருக்கோலம் அருளிச் செய்து மணஞ்செய்தார்.

இது புராணக்கதை. இதற்குள் ஒரு பக்குவ ஆன்மாவைத் திருவருள் தேடிவந்து ஆட்கொண்டு பேரின்பம் நல்கும் தத்துவம் சொல்லப்பட்டிருக்கிறது. இது வெறும் உலகியல் கதையல்ல.

வள்ளி நாயகி ஒரு பக்குவ ஆன்மா. முற்பிறப்பில் சுந்தரவல்லி எனும் பெயருடன் முருகனை அடையத் தவம் இருந்தவர். அதன் பேறாக சிவமுனிவர்க்கு மகளாகப் பிறந்தார். வேடுவ சேரியில் வளர்ந்தார். வேடுவ சேரி எனப்படுவது இந்த உடம்பு. ஐம்புலன் களாகிய வேடுவர்கள் தாம் நினைத்ததையே செய்யப்புகும் உடம்பினுள் ஒருபக்குவ ஆன்மா நல்வினைகளையே செய்வது போல வள்ளி தினைப்புனம் காத்தாள். ஆன்மாவின் பக்கவநிலை கண்டு திருவருளே குருவடிவாக வந்து ஆட்கொள்வதுபோலத் திருவருள் வேடனாயும், விருத்தனாயும் வந்து ஆட்கொள்ள வள்ளியாகிய அந்த ஆன்மாவின் மலம் பாகப்படாததால், யானையை அழைத்தார். அது பிரணவ மந்திரம். பிரணவ மந்திரத்தையுணர்ந்ததும் ஆன்மா மலபந்தம் நீங்கி இறைவனைக்காணும்.

இறைதரிசனம் உண்டாகத் தன் செயல் என்பது முற்றும் நீங்கி அயரா அன்பில் அரன் கழல் சேரும். பக்குவ ஆன்மா திருவருள் வயப்பட்டு இறைவனை அடைதலையே வள்ளிதிருமணமாகக் காட்டப்பட்டுள்ளது. இதையுணர்ந்து நாமும் பக்கு ஆன்மாக்களாகிப் பரமனடி சேர முயல்வோம்.

**ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்**
**தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு**
**அன்னியம் இன்மையின் அவன்கழல் செலுமே**

என்னும் சிவஞான போதச் செய்தியே வள்ளிதிருமணம் ஆகும்.

# இலக்கியத்தமிழின்பம்

# பொருளடக்கம்


| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 105 |
| | அறிமுகவுரை | 107 |
| | அணிந்துரை | 110 |
| 01. | உள்ளுறை உவமை அணிநலம் | 114 |
| 02. | சிலப்பதிகாரத்தில் முப்பரிமாணக்கோலம் | 119 |
| 03. | அகநானூற்றில் ஓர் அகத்திணைக் கவியின்பம் | 125 |
| 04. | ஈழநாட்டுப் புலவர்களின் நாற்கவியின்பம் | 130 |
| 05. | கூந்தல் அவிழ்ந்ததும் கொற்றம் கவிழ்ந்ததும் | 137 |
| 06. | பொறுமைகாத்துப் பெருமைபெற்ற காவிய நாயகர்கள் | 143 |
| 07. | பசிவந்திடப்பத்தும் பறந்துபோம். | 150 |
| 08. | நிகண்டு இலக்கியம் | 156 |
| 09. | எண்ணலங்கார அணிநலம் | 164 |
| 10. | மறைபொருள் கூற்றுக்கவியின்பம் | 168 |
| 11. | பசிப்பிணி மருத்துவர் | 172 |
| 12. | சிலேடை அணிநலம் | 177 |

# முன்னுரை

**சைவப்புலவர் சு. செல்லத்துரை**

பாடசாலைப்பருவத்திலே எனக்கு இலக்கிய இரசனையை ஊட்டிப் பேச்சுக்கலையைப் பயிற்றிவிட்டவர் மெய்கண்டான் அதிபரும் எனது தமிழ் ஆசிரியருமாகிய திரு.ச. சுப்பையா அவர்கள். ஆசிரிய கலாசாலையில் கற்கண்டுப் பண்டிதர் கிருஷ்ணபிள்ளை அவர்கள் அதைவளம்படுத்திவிட்டார். அன்று முதல் இன்று வரை சமய, இலக்கியப் பேச்சுக்களை எனது மனம் விரும்பும் கலையாகவே நிகழ்த்தி வருகின்றேன்.

1960 முதல் இலங்கை வானொலியில் நற்சிந்தனை, சமய இலக்கியப் பேச்சுக்களை நிகழ்த்தி வருக்கின்றேன். 1998 இல் அப்பேச்சுக்களில் சிலவற்றைத் தொகுத்து **வாக்கும் வாழ்வும்** எனும் நூலாக வெளியிட்டேன்.

அண்மைக்காலத்தில் இலங்கை வானொலி **கலைக்கோலத்தில்** பேசிய பேச்சுக்களில் சிலவற்றைத் தொகுத்து இலக்கியத்தமிழ் இன்பம் எனும் பெயரில் நூலாக வெளியிடுகின்றேன்.

என்னுடன் இணைதுணையாக வாழ்ந்து என் கலைஇலக்கிய வளர்ச்சிக்கு உரை கல்லாகவும், ஊக்கியாகவும் விளங்கிய என் துணைவி **சிவகாமசுந்தரியின்** மூன்றாவது ஆண்டு நினைவாக இதனை அவர்க்கே சமர்ப்பணம் செய்து வெளியிடுகின்றேன். அவருடைய ஆத்மா இன்றும் என்னுடனே உறுதுணையாய் இருக்கின்றது. அவர் இறந்தபோது நான் விடுத்த

**என்னினிய நாயகியே என்னவளே சிவகாமி**
**உன்னையென துளத்தினிலே ஒளிவிளக்காய் ஏற்றிவைத்தேன்**
**என்னுயிர் இங்குள்ளவரை உன்நினைவே கதியம்மா**
**என்னுயிருக்குயிராகி எனக்குவழி காட்டிடம்மா**

எனும் வேண்டுகோள் வீணாகவில்லை.

முதலாவதாண்டு (2011) நினைவாக எனது கட்டுரைகள் சிலவற்றை **வாழ்வாங்கு வாழ்தல்** எனும் நூலாகவும், இரண்டாவ தாண்டு (2012) நினைவாக என்கவிதைகள் சிலவற்றை **சிவகாமிதமிழ்** எனும் நூலாகவும் மூன்றாவதாண்டு (2013) நினைவாக எனது வானொலிப் பேச்சுகள் சிலவற்றை **இலக்கியத்தமிழ்இன்பம்** எனும் நூலாகவும் வெளியிடுகின்றேன்.

இலங்கை வானொலி கலைக்கோலத்தில் என்னைப் பேசவைத்து இந்த நூலுக்குப் பொருத்தமான அறிமுகவுரை தந்த இலங்கை வானொலி மூத்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர் செல்வி சற்சொருபவதி நாதன் அவர்களுக்கு நன்றியுடையேன்.

அழகிய நயம்மிக்க அணிந்துரை தந்த உலகறிந்த எழுத்தாளர் இலக்கியவித்தகர் கோகிலா மகேந்திரன் அவர்களுக்கும் நன்றியு டையேன்.

# அறிமுகவுரை

தொடர்பியல் வித்தகர்
செல்வி சற்சொருபவதி நாதன்

கலாபூஷணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் அண்மைக்காலங்களில் **கலைக்கோலம்** நிகழ்ச்சியில் ஒலிபரப்பிய உரைகளில் சிலவற்றை எழுத்து வடிவில் நூலாக **இலக்கியத்தமிழ் இன்பம்** என்னும் தலைப்பில் வெளியிடுவது பெரும் மகிழ்ச்சிக்குரிய செயலாகும். வெகுஜனத்துறை பற்றிய தமிழ் நூல்கள் குறைவாக உள்ளன என்னும் ஆதங்கத்தை இந்த முயற்சி குறைத்துவிட்டது என்றே கூறலாம். வானொலிக்கு எழுதுவது எப்படி என்று தொடர்பாடல்துறை பற்றிக்கற்க முற்படுவோர் எழுப்பும் வினாவுக்கு பதிலளிக்கும் நல்லதொரு கையேடு ஒலிபரப்புத்துறைக்குக் கிடைத்து விட்டது என்று நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

வானொலிக்கு எழுதுவது ஒரு தனிக்கலை. மேடையில் பேசுவதற்கும் வானொலியில் உரையாற்றுவதற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. வானொலிக் கலையகத்தில் தனியாக ஒலிவாங்கிமுன் அமர்ந்து பல கட்டுப்பாடுகள் மத்தியில் உரையாற்றுவது ஒரு கடினமான பணி. சில சமயங்களில் தயாரிப்பாளர் மேசைமுன் அமர்ந்திருப்பார். பேச்சை வாசிக்கும் போது மெதுவாக வாசியுங்கள் வேகமாக வாசியுங்கள் இன்னும் இரண்டு நிமிடங்களே உள்ளன போன்றவற்றை அவர் ஊமைச் சைகையாக வெளிப்படுத்துவார். நேரக்கட்டுப்பாடு எமக்கு பெரிதும் வேதனை தரும். குறுகிய நேரத்துள் தனியாக அமர்ந்து பலரின் முன்னால் பேசுவது போன்ற பாவனையுடன் பேசுவது வானொலிப்பேச்சு. இந்தப் பேச்சை நாம் எழுதிக் கொண்டே சென்று பேசுகின்றோம். இதனால்தான் சைவப்புலவரின் அரிய பேச்சுக்கள் எழுத்துருவில் தொகுப்பாக வெளியிடப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வானொலியில் பேச்சு எவ்வாறு அமைய வேண்டும் என்று நன்கு தெரிந்துகொண்ட சைவப்புலவர் பல தடவைகள் நான் தயாரித்து வழங்கிய கலைக்கோலம் நிகழ்ச்சிக்கு உரை வழங்கிச் சிறப்பித்துள்ளார். இவை நேயர்களிடம் அமோக வரவேற்பைப் பெற்றன.

வானொலிப் பேச்சின் வெற்றியில் ஒரு பகுதி விடயத்தைப் பொறுத்ததெனில் அதனை விளக்கும் தோரணையிலும், சொல்லும் தொனிப் பேதங்களிலுமே அவ்வெற்றியின் பெரும்பகுதி அடங்கியுள்ளது. புலவரின் பேச்சுக்கள் இவ்விரண்டையும் அடக்கிய வெற்றிப் பேச்சுக்களாக அமைந்தன.

கலைக்கோலம் நிகழ்ச்சியில் கலை, இலக்கியம் சார்ந்த விடயங்களே ஒலிபரப்பாகின்றன. அன்றன்று நிகழும் நிகழ்ச்சி விபரங்கள் போன்றல்லாது. பல காலத்துக்கும் பொதுவான கலை இலக்கிய நயத்தில் நேயர்கள் நிழல்காண உதவும் விதத்தில் ஒலிபரப்பாகும் இந்நிகழ்ச்சியில் முத்திரை பதித்துள்ள அறிஞர்தான் சைவப்புலவர். தனது பேச்சுக்கள் காற்றோடு போய்விடமால் அச்சிலே அமைந்தால் பயன்படுமென்ற எம்போன்ற நேயர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய இத்தொகுப்பை வெளியிடுகின்றார். இலக்கியத் திறனாய்வுகள் இன்னும் சரியாக உருப்பெறவில்லை. ஆயினும் இலக்கியச்சுவையை எவ்வாறு நுகர வேண்டும் என்பதை உணர்த்தும் பல கட்டுரைகள் வெளியாகி இருக்கின்றன. இந்தவகையில் இலக்கியத்தமிழின்பம் நூலும் அமைந்துள்ளதாக வாசகர்கள் கருதினால் அது நூலாசிரியருக்கு திருப்தியளிக்கும். மரபு ரீதியாக இலக்கியக்கல்வி பெற்றோரும் இலக்கிய ரசனைக்கே முதலிடம் கொடுத்துள்ளனர்.

கவிதை, நாடகம், கட்டுரை, பேச்சு என்று பல்வேறு துறைகளில் தடம்பதித்துவரும் புலவர் பரந்துபட்ட இலக்கியப் பரவையுள் நுழைந்து அழகழகான முத்துக்களை எடுத்து தொகுத்த மாலையாகிய இந்நூலைத் தந்துள்ளார். இதை வாசிப்போர் இலக்கிய ஆர்வம் மிகுந்து தமிழ் இலக்கியங்களைத் தேடிப்படிப்பர் என்பதில் ஐயமில்லை. ஒரே துறை சார்ந்ததாக பாடல்கள் அமைந்தாலும் புலவர்களின் பாடல்கள் ஒரே கருத்தை பல்வேறு வகையில் வெளிப்படுவதில்தான் இலக்கிய நயம் காண்கின்றோம். இந்தப் பணியையே சைவப்புலவரும் சிறப்புற ஆற்றியுள்ளார். அவற்றை நீங்கள் வாசித்து நயக்கப் போகின்றீர்கள். எனவே அவை பற்றி மேலும் விபரிக்காமல், நான் வெகுவாக ரசித்த ஒரு சில பகுதிகள் பற்றி சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

**கூந்தல் அவிழ்ந்ததும் கொற்றம் கவிழ்ந்ததும்** அருமையான தலைப்பு. மங்கல மங்கையரின் கூந்தல் அவிழ்ந்ததால் ஏற்பட்ட அவலங்கள் அமர காவியங்கள் ஆகியுள்ளன. இதனை நன்கு

விபரித்துள்ளார் சைவப்புலவர். கண்ணகியின் கூந்தல் அவிழ்ந்ததும் துரியோதனன் சபையில் பாஞ்சாலியின் கூந்தல் அவிழ்க்கப்பட்டதும் கைகேயி தன் கூந்தலை அவிழ்த்ததும் எவ்வாறு நிகழ்ந்தன எத்தகைய அவலங்கள் ஏற்பட்டன. என்பதை சுவைபட இலக்கியம் கூறும் பாங்கினை அழகாக சுருக்கமாக புலவர் எடுத்துரைத்துள்ளவிதம் என்னை வெகுவாகக் கவர்ந்தது.

பசிப்பிணி மருத்துவர் என்ற தலைப்பில் உள்ள கட்டுரையில் பல புதுமையான விடயங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. பசிவந்திடப் பத்தும் பறந்துபோம் என்ற உண்மையை ஔவை பாடவைத்த கதை நயக்கத்தக்கது.

மிகவும் காத்திரமானதொரு விடயத்தை சுலபமாக எவரும் புரிந்துகொள்ளும் விதத்தில் நிகழ்த்தப்பட்ட உரை **நிகண்டு இலக்கியம்.** அகராதிகள் வருவதற்கு முன் இருந்த நிகண்டு பொருளுக்குரிய சொற்களை தொகுத்துக்கூறும் ஒரு இலக்கியமாக இருந்ததை ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ளார். நிகண்டு என்ற சொல்லின் பொருள் தமிழ் மொழிக்கு பொருள் காட்டும் நூல் என்று அவர் கூறும் விளக்கம் ஏற்புடைத்து. சொற்களஞ்சியத்தைப் பெருக்குவதற்கு பெருந் துணையாய் இருப்பன நிகண்டுகள் என்று அவர் குறிப்பிட்டிருப்பது முக்கிய தகவலாகும்.

தமிழ்ப்பணியையும் சைவப்பணியையும் ஒரு தொண்டாகவே செய்து கொண்டிருக்கும் சைவப்புலவர் எழுபத்தைந்து வயதைக்கடந்த நிலையிலும் ஓயவில்லை. சனிக்கிழமைகளில் கொழும்புத் தமிழ்ச் சங்க **தமிழ்ப் பட்டயகற்கை நெறி** வகுப்பில் கற்பித்தல், ஞாயிற்றுக்கிழமைகளில் திருவாவடுதுறை ஆதீன **சைவசித்தாந்த, திருமுறை பயிற்சி நெறியில்** கற்பித்தல் புதன்கிழமைகளில் இலங்கை வானொலியில் **திருமந்திர விளக்கவுரை** வியாழக்கிழமைகளில் வெள்ளவத்தை கிரியா பாபாஜீ ஆரணியத்தில் **திருமந்திரம் கற்பித்தல்** என நாளும் தமிழ்ப்பணிக்கே தன்னை அர்ப்பணிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இலக்கியத்தமிழ்இன்பம்** வாசிக்கவாசிக்க அறிவுக்கு விருந்து படைத்து இன்பத்தை தரும் நூல். இதனை தனது அன்புத்துணைவியின் நினைவாக வெளியிட்டுள்ள சைவப்புலவருக்கு தமிழ் அன்பர்கள் சார்பிலும் ஒலிபரப்புத்துறை சார்ந்தோர் சார்பிலும் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்.

# அணிந்துரை

**கோகிலா மகேந்திரன் அவர்கள்**

"கவிதை என்பது சிறந்த சொற்கள் சிறந்த ஒழுங்கில் அமைவது என்று சொல்வார்கள். நாம் காணும் விடயங்களை எல்லாம் வர்ணிப்பதில் கவிதை வந்து விடுவதில்லை. காண்பவன் அக் காட்சியில் பெறும் மனநிலையும் அந்த மனநிலையை வெளிக் கொணரும் திறனும் நல்ல கவிதையின் வேர்கள். படிப்பவன் இடத்திலும் அது அதே மனநிலையை ஏற்படுத்த வேண்டும்.

கவிதையின் பொருள் உயர்ந்தது. கவிதை நடையும் உரை நடையை விடச்சிறந்தது. இதனால் கவிதையைப் புரிந்து கொள்வது அவ்வளவு இலகுவாக இருப்பதில்லை. வழக்கில் இல்லாத சொற்கள் பாவிக்கப்படுவதாலும் சொல்ல வந்த கருத்தை வளைத்துக் கூறுவதாலும் கவிஞன் நினைத்த அளவிற்கு எல்லாருக்கும் அது புரிவதில்லை. கவிதையின் நோக்கம் படிப்போர்க்கு இன்பம் தருவதாயினும் அந்த இன்பத்தைச் சுவைப்பதற்குப் பயிற்சி தேவைப்படுகிறது.

**"பாவின் நயமெல்லாம் நானும் பகரவல்லனோ**
**ஆவின் பாற்சுவையை நாழி அளந்து காட்டிடுமோ"**

என்று கவிமணியே கேட்பார். ஆகவேதான் கவிதையை நயப்பதற்குக் காலந்தோறும் தமிழ் கற்றோரின் உதவி தேவைப் படுகிறது.

சைவப்புலவர் கலாபூஷணம் சு. செல்லத்துரை அவர்கள் இந்த நூலிலே அந்தப் பேருதவியைச் செய்ய வருகிறார். காலந் தோறும் கலைக்கோலம் நிகழ்ச்சியில் அவர் ஆற்றிய உரைகளின் தொகுப்பாக இந்த நூல் வருகிறபோதும் அவற்றில் அநேகமான உரைகள் கவிதை பற்றி அமைகின்றன.

"பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திடவேண்டும்" என்றான் பாரதி. தமிழ்ப் பாட்டு ஒரு நீண்ட பாரம்பரியத்தைக் கொண் டது. அந்த மரபணுத் தொடர்ச்சி சங்க இலக்கியங்களில் தவழ்ந்து, கலித் தொகை போன்ற இசைப்பாடல்களில் நடந்து, சிலம்பில் சிரித்து,

தேவார திருவாசகங்களில் பொலிந்து, சிந்தாமணியால் சீர் பெற்று கம்பரால் வைரத்திருமுடி வைத்து வந்த ஒரு சங்கிலி. அந்தச் சங்கிலியைப் பாரதி அறிந்திருந் தான். அதனால்தான் அவனால் மற்றொரு விளக்கை ஏற்ற முடிந்தது. சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களும் இந்தச் சரித்திரம் தெரிந்தவர். அவர்பெற்ற கல்வி என்னும் கண்ணாடி ஊடு சங்கப் புலவர்கள் ஆகிய சிறு நட்சத்திரங்களையும், இளங்கோ என்ற நட்சத்திரத்தையும் சேக்கிழார் "அல்பா சென்ரோதி" என்ற விடிவெள்ளியையும், திருவள்ளுவர் என்ற பூரணசந்திரனையும் கம்பர் என்ற சூரியனையும் ஒரே நேரத்தில் காண்பதோடமையாது எமக்கும் காட்டி இன்புறுகிறார்.

"உவமை கவிதைக்கு உடைபோன்றது, உவமையைக் கவிதையில் இருந்து பிரித்தெடுக்க முடியாது" என்பார் தொல்காப்பியர். அணிகள் எல்லாமே உவமை என்ற ஓர் அணியின் வாயிலாகப் பிறந்தவையே எனக் கூறுவார்கள். பெண்களுக்குப் புறநகைகளை விடக்கற்பும் கல்வியும் ஆகிய அகநகைகளே பேரழகைத் தருவன என்று கூறுவார்கள். அதே போலவே கவிதையிலும் புறத்திலே காணும் ஆடம்பர அணிவகைகளை விடப் பாடலொடு பாடலாய்ப் பொருந்தி உறவாடும் அணிகள் சிறந்தவை. **உள்ளுறை உவமை அணிநயம்** என்ற கட்டுரை அந்தச் சிறப்பைத் தேர்ந்த உதாரணங்களுடன் தெளிவாய் முன்வைக்கின்றது. சிலப்பதி காரத்தில் கானல்வரி என்ற காதை முழுவதுமே உள்ளுறை பொதிந்து வியாபிக்கும் சிறப்பை அறிஞர் போற்றுவார்.

இலக்கணம், கற்பனை, சொல்வளம், ஒலிநயம், யாப்புமுறை, அணிநலன், தொடைநயம், படிமங்கள், சுவைகள், கவிதை கூறும் உண்மை இவை எல்லாவற்றுக்கும் அப்பால் நல்ல கவிதை ஒரு நாடகக் காட்சிபோல மனதில் திரையிடும் அழகை "**அகநானூற்றில் ஓர் அகத்திணைக் கவியின்பம்**" என்ற கட்டுரை சுட்டுகிறது.

சைவப்புலவர் அவர்கள் ஒரு அறிஞர், கவிஞர் என்பதற்கு மேலே நல்லதோர் ஆசிரியர். கவிதை பற்றி மாணவர்களுக்கு எவ்வாறு தெளிவாகக் கற்பிக்க அவரால் முடிகிறது என்பதற்கு "**ஈழநாட்டுப்புலவர்களின் நாற்கவி இன்பம்**" என்ற கட்டுரை சான்றாகிறது.

ஒரு இனத்தின் கலாசாரக் கூறுகள் பல அந்த இனத்தின் இலக்கியங்களோடு பின்னிப் பிணைந்திருக்கும். தமிழ்ப் பெண்களின் கூந்தல் அலங்கார முறைகளிலே "கூந்தலை விரித்துவிடும்" அலங்காரமுறை ஏன் ஏற்றுக் கொள்ளப்படுவது இல்லை என்பதைக் "**கூந்தல் அவிழ்ந்ததும் கொற்றம் கவிழ்ந்ததும்**" என்ற கட்டுரை எடுத்துரைக்கிறது. "உலகமயமாதல்" வலையில் சிக்கி "கூந்தலை விரித்தே இருப்பது" என்று சபதம் செய்தவர் போல உலாவரும் எமது பெண்களை எந்த வகையிலும் குறை கூறாமல் இலக்கியச் செய்தியை மட்டும் இசைவாக எடுத்தியம்பும் நூலாசிரியரின் திறமை உவக்கத்தக்கது.

உடலும் உள்ளமும் நல்ல நிலையில் இருக்கும்போதே இலக்கியங்களை ரசிக்க முடியும். மறுதலையாக நல்ல இலக்கியங்களை இரசித்துப் படிப்பதால் உடலும் உள்ளமும் ஆரோக்கியம் பெறுகின்றன. "பொறுமை" என்ற உயர்குணத்தை நாம் ஏன் கடைப்பிடிக்க வேண்டும் என்ற சிந்தனையைத் தூண்டும் எழுத்தோட்டம் ஒன்று இரண்டு காவியப் பாத்திரங்களூடு விளக்கப் பெறுவதை "**பொறுமை காத்துப் பெருமை பெற்ற காவிய நாயகர்கள்**" என்ற கலைக்கோல உரை ஆழமாய் அழகுடன் முன்வைக்கிறது. அதேபோல மகிழ்வு என்பது பணத்தைச் சேர்ப்பதாலோ அல்லது சாதனைகளைச் செய்வதாலோ வருவதில்லை. சக மனிதர்களுக்கு உதவி செய்து அவர்கள் உள்ளத்தில் இடம்பிடித்து வளரும் மனித உறவுப் பிணைப்பிலேயே உண்மையான பரவசம் ஏற்படுகிறது என்ற உளவியல் உண்மையை இலக்கிய ஆதாரங்களுடன் கோத்துத்தருகிறது. "**பசிவந்திடப் பத்தும் பறந்து போம் உண்டி கொடுத்து உயிர் காப்போம்**" என்ற உரை.

பலவேறுவகை அகராதிகளைப் பாவித்துச் சலித்து இன்று "ஈ அகராதி" யுகத்திற்கு வந்திருக்கிற மனிதர்களுக்கு **நிகண்டு இலக்கியம்** பற்றிய செய்திகள் நினைவூட்டப்பட வேண்டியவை.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்று சொல்லப் பட்டாலும் எண்ணுக்கும் எழுத்துக்கும் அதிகம் தொடர்பில்லை என்பதே

பலரது கருத்து. கணித நுண்மதியும், மொழியியல் நுண்மதியும் சற்று வேறுபட்டவை என்று உளவியலாளரும் கருதுவர். ஆனால் எண்கள் கவிதையில் இடம் பெறும் முறைபற்றிய விடயம் நயத்தற்குரியது. குறிப்பாக சம்பந்தர் பாடிய **திருவெழுகூற்றிருக்கை** பற்றிய செய்தி வாசகர் பலருக்குப் புதிதாகவே இருக்கும்.

ஒன்றும் தெரியாமலும் ஒரு கவிதையை ரசிக்கலாம். ஆனாலும் தெரியாமல் ரசிப்பதற்கும் தெரிந்து ரசிப்பதற்கும் இடையில் பெருத்த வேறுபாடு உண்டு. ஒன்றும் தெரியாமல் கார்ச்சாரதி இருக்கையில் அமர்கிறவனுக்கும் கார் தொழிற்படும் பொறிமுறை அனைத்தும் தெளிவாகத் தெரிந்து ஓட்டுபவனுக்கும் வேறுபாடு இல்லையா? கலாபூஷணம் சு. செல்லத்துரை அவர்களின் "**மறைபொருள் கூற்றுக் கவியின்பம்**" என்ற கட்டுரையைப் படிக்கிறபோது இந்த உண்மை தெளிவாகிறது. "நற்கருப்பஞ் சாற்றினிலே தேன்கலந்து, பால்கலந்து, செழுங்கனித்தீஞ் சுவை கலந்து, ஊன்கலந்து, உயிர்கலந்து" ஐயா தரும் போது பருகுவதற்கு நமக்கென்ன பஞ்சி.

நூலின் நிறைவுக் கட்டுரையாக அமையும் **சிலேடை அணிநயம்** நூலுக்கு முடிவைத்து நிற்கிறது. கற்றோரும், மற்றோரும் படித்துப் பயன் பெறத்தக்க இந்நூல் தமிழ் பேசும் மக்கள் வாழும் எல்லா மனைகளிலும் இருக்க வேண்டும்.

உ
சிவமயம்

# உள்ளுறை உவமை அணிநலம்

## (உள்ளுறை உவமம்)

ஒரு செய்தியைச் சொல்லும்போது வசனமாகவும் சொல்லலாம், கவிதையாகவும் சொல்லலாம். வசனத்திலும் பார்க்கக் கவிதையாகச் சொல்லும் போது கேட்பவர்க்குக் கவர்ச்சியாகவும் சுவையாகவும் இருக்கும். அதற்கும் மேலாகக் கவிதைக்கு அழகும் சுவையும் தருகின்ற அணிகளுடன் சொல்லும் போது ஒரு தனியான இலக்கியச் சுவை பிறக்கும்.

அழகான குழந்தைக்கு, வண்ண ஆடை, அணிமணிகள் புனைந்து கண்டுகளித்தல் போல, உளமார்ந்த பொருளுக்கு அணிகள் சேர்த்து, உவப்பான வர்ணனை கற்பனை கலந்து, வளமான செம்மொழியின் ஓசையோடு, வாண்மைதரும் கவிதையினை நயக்கவாரீர் என ஒரு கவிஞன் அழைக்கின்றான்.

செய்யுள் அணிகளிலே உவமையணி மாணவர் முதல், கற்றறிந்த புலவர்கள் வரை எல்லார்க்கும் இன்பம் தரும். உவமை எனப்படுவது தெரிந்த ஒரு பொருளைக் காட்டித் தெரியாத பொருளுக்கு விளக்கம் தருவதாக அமைவது. உவமை அணியில் பலவகையுண்டு. இங்கு ஒரு விசேடமான உவமையணியான உள்ளுறை உவமம் எனும் அணிநலம் பற்றிக் காண்போம்.

கவிஞன் தான்பாடவந்த காவியத்தில் பின்னால் நிகழப்போகும் செய்தியை முன்கூட்டியே குறிப்பாக உணர்த்துவதற்குக் கையாளும் அணியே உள்ளுறை உவமையணி எனப்படும். இது பெரிய காவியங்களைப் படைக்கும் பெரும் புலவர்க்கே இயலக்கூடியதாகும். அதை உணர்ந்து இன்புறுவதற்கும் இலக்கியத்திறன் வேண்டும். இதோ அத்தகையதொரு உள்ளுறை உவமை அணியைக் காண்போம்.

தெய்வப்புலவர் ஆகிய சேக்கிழார் பெரியபுராணத்தில் திருநாவுக்கரசு நாயனார் பிறந்த திருமுனைப்பாடி நாட்டு வளத்தைப் பாடுகின்றார். அந்நாட்டின் வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதக் காட்சி இது.

**கடைஞர்மிடை வயற்குறைத்த கரும்புகுறை பொழிகொழுஞ்சாறு**
**இடைதொடுத்த தேன்கிழிய, இழிந்தொழுகு நீத்தமுடன்**
**புடைபரந்து, ஞிமிறொலிப்பப் புதுப்புனல்போல் மடையுடைப்ப**
**உடைமடைஅக் கரும்படு கட்டியினடைப்ப ஊர்கள்தோறும்.**

இப்பாடலில் சொல்லப்பட்ட செய்தி : மருதநிலத்திலே விளைந்த கரும்பு வயலிலே, கரும்புகளை உழவர்கள் வெட்டி எடுத்தபின், வெட்டப்பட்ட அடிக்கட்டையிலிருந்து கருப்பஞ்சாறு சுரந்துவடிகின்றது. தேன்வண்டுகள் அங்கு, கூடுகட்டுகின்றன. கருப்பஞ்சாறு வயல் நிறைந்து புதுவெள்ளமாகித் தளம்பி அத்தேனை எடுக்க வந்த தேன்வண்டுகள் ரீங்கார ஆரவாரம் செய்ய வரம்பை உடைத்து வீணே காட்டில் பாய்கிறது. இதைக் கண்ட உழவர் கருப்பஞ்சாறு நிரம்பிய வயலிலே திரண்டிருந்த கருப்பஞ்சாற்றுக் கட்டிகளை அள்ளியெடுத்து, உடைத்த வரம்பைத் தடுத்துக்கட்டி, அக்கருப்பஞ்சாறு வெளியேறாமல் தடுக்கின்றார்கள்.

இது மருதநிலத்தில் கரும்பு வயலின் செழிப்பைக் காட்டும் ஒரு அற்புதக் காட்சி. இந்தக் காட்சி ஒரு வெறும் காட்சி மட்டும்தானா அல்லது இதற்குள் வேறும் ஏதாவது உள்ளுறை உண்டா என ஆராய்ந்து பார்க்க வேண்டும். மீண்டும் பாடலைப் பார்ப்போம்

- கடைஞர்மிடைவயற்குறைந்த கரும்புபொழி கொழுஞ்சாறு - கரும்பு வயலிலே உழவர்களால் வெட்டப்பட்ட அடிக்கட்டையிலிருந்து சுரந்துவந்த செழிப்புமிக்க கருப்பஞ்சாறு,
- இடைதொடுத்த தேன்கிழிய, இழிந்தொழுகு நீத்தமுடன் புடைபரந்து - அக்கரும்படிகளில் கட்டப்பட்டிருந்த தேன் கூடுகளின் இடையே பரந்து அவற்றையும் உடைத்துக்கொண்டு பாய்ந்து.
- ஞிமிறொலிப்பப் புதுப்புனல்போல் மடையுடைப்ப - தேன்வதைகள் உடைந்ததால் தேன்வண்டுகள் நிலைகுலைந்து ரீங்காரம்

செய்து ஆரவாரிக்கப் புதுவெள்ளம் போலத் தேன் அலையெறிந்து பாய்ந்து வரம்பை உடைத்து வெளியே பாய- உடைமடைஅக் கரும்படு கட்டியினடைப்ப ஊர்கள்தோறும் - வரம்புடைத்துப் பாயும் வழியை உழவர் கருப்பஞ்சாற்றில் விளைந்த கட்டிகளைக் கொண்டு அடைக்கின்றார்கள்.

இங்கு கரும்புவயல் - வெட்டப்பட்ட கரும்படிகளிலிருந்து சுரந்துபாயும் கருப்பஞ்சாறு — அது வரம்பை உடைத்து வெளியே பாய்தல் - அவ்விதம் பாயாமல் கருப்பஞ் சாற்றில் விளைந்த கட்டியைக் கொண்டு அடைத்தல் ஆகிய காட்சிகள் காட்டப்படுகின்றன. இங்கு உவமை உருபோ, பொதுத் தன்மையோ வெளிப்படையாகக் காட்டப்படவில்லை. ஆனால் திருநாவுக்கரசர் கதையைப் பாடவந்த புலவர் அவர் பிறந்த நாட்டுவளம் காட்டுவதன் மூலம் பின்னால் நிகழப்போவதை உய்த்துணர வைக்கின்றார்.

திருநாவுக்கரசர் சைவசமயத்தில் பிறந்தார், பின் சைவத்தை விட்டுச் சமணத்துக்குப் போனார். அவ்விதம் போனவரைத் தடுத்துத் திலகவதியார் மீண்டும் சைவத்தில் நிலைக்க வைத்தார் என்பது சேக்கிழார் தரும் தகவல்.

சைவசமயமே கரும்புவயல் - அங்கு சுரந்த கருப்பஞ்சாறே திருநாவுக்கரசர், கருப்பஞ்சாறு வரம்புடைத்துப் பாய்தலே திருநாவுக்கரசர் சைவத்தைவிட்டுச் சமணத்துக்குப் போதல், கருப்பஞ்சாற்றில் விளைந்த கட்டியே - அக்கா திலகவதியார், உடைத்தவரம்பைக் கருப்பஞ்சாற்றின் கட்டிகொண்டு அடைத்தலே திலகவதியார் அவருக்கு நீறிட்டுத் திருநாவுக்கரசர் ஆக்கியமை.

இச் செய்தியை உய்த்துணரவைக்கும் சேக்கிழாரின் உள்ளுறை உவமை அணிநலம் இலக்கிய இன்பத்தை அள்ளித்தருவதை நினைத்து நினைத்து இன்புறலாம். உள்ளுறை உவமைச் சிறப்பிற்கு சேக்கிழாரின் இன்னோர் பாடலையும் சுவைக்கலாம்.

* * *

சான்றோர்க்கிருப்பிடமான தொண்டை நாட்டின் வளம்பாட வந்த சேக்கிழார் தொண்டை நாட்டின் வளம் சுரக்கும் பாலாறு பற்றிப் பாடுகின்றார்.

**பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்,**
**மள்ளர் வேனிலின் மணல்திடர் பிசைந்து, கைவருட**
**வெள்ளநீர் இருமருங்கு கால்வழி மிதந்து,ஏறிப்**
**பள்ளநீர் வயல் பருமடை உடைப்பதுபாலி**

தொண்டை நாட்டுச் சான்றோர் கைவரண்டகாலத்தும்கொடுப்பர், வேனில் வரட்சியிலும் பாலாறு அடி சுரந்து நீர் உதவும் என்னும் பழமொழிகளை மெய்ப்பிக்கும் காட்சி இதோ.

வேனில்காலம், அதாவது கோடைகாலம், பாலாறு நீர்வற்றி விட்டது. வயலில் பயிர்வாடுகின்றது. நீர் பாய்ச்ச என்னவழி என்று உழவர்கள் சிந்திக்கின்றார்கள். வேனில் வரட்சியிலும் பாலாறு அடிசுரந்து நீர் உதவும் என்னும் முன்னோர் மொழி நினைவுக்கு வருகிறது. உடனே ஓடிப்போய் ஒருமணல் திடரைக் கைகளால் தோண்டுகிறார்கள். என்ன ஆச்சரியம், நீர் கொப்பளித்துக் கொண்டு பாய்ந்து வருகிறது. இருபக்கமும் பாய்ந்து வாய்க்கால்வழி மிதந்து ஏறிப்பள்ள வயலின் மடையையும் உடைத்துப் பெருகுகின்றது. ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் இடத்திலும் ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் பாலாற்றின் அதிசய வள்ளன்மை எதுபோல் இருக்கிறது என ஒரு உவமையைக் காட்டுகிறார். குழந்தை பால்குடிப்பதற்காகத் தாயின் மார்பைப் பிசைந்து தடவுதலும், உடனே தாய் முலையில் பால் சுரந்து குழந்தையின் பசியைப் போக்குவது போல இருக்கிறது பாலாறு நீர்சுரக்கும் பாங்கு என்கிறார்.

பிள்ளை தைவரப் பெருகு பால் சொரி முலைத்தாய் போல் - பிள்ளைகைகளால் தடவி வருட உடனே பால் சுரந்து பெருகும் மார்பையுடைய தாய் போல - மள்ளர் வேனிலின் மணல்திடர் பிசைந்து கைவருட - வேனில் கோடையில் உழவர்கள் மணல்திட்டினைக் கைகளால் பிசைந்து தோண்ட - வெள்ளநீர் இருமருங்கால் வழிமிதந்துஏறி - அங்கு சுரந்த நீரானது வெள்ளம் போலப் பிரவாகித்து வாய்க்காலின் வழி ஓடிமிதந்து. - பள்ளநீர் வயல் பருமடை உடைப்பது பாலி - பள்ளமான வயலில் பாய்ந்து மடையையும் உடைத்து வயலில் நிரம்பும் நீர்வளம் மிக்கது பாலாறு.

இங்கு தொண்டை நாட்டுச் சான்றோர் கைவரண்டகாலத்தும் இல்லையென்னாமற் கொடுப்பர் என்னும் சிறப்பை இக்காட்சி மூலம் உய்த்துணர வைக்கின்றார். அதுமட்டுமல்ல, இன்னுமோர் செய்தி

உய்த்துணர்தற்குரியது. இந்தப்பாடல் பெரியபுராணத்தில் திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் புராணத்தில் வருகிறது.

திருக்குறிப்புத் தொண்டர் சிவபக்தர் ஏழை. சிவனுக்கோ சிவனடியார்க்கோ தானதர்மம் ஏதும் செய்வதற்கு வசதியற்ற வறுமையான வாழ்வையுடையவர். ஆனாலும், ஏதாவது சிவதர்மம் செய்ய வேண்டும் என மனம் தவிக்கிறது. அவர் குலத்தொழில் துணி வெளுத்துக் கொடுப்பது. சிவனடியார் களுக்கு இலவசமாகத் துணி வெளுத்துக் கொடுக்கும் திருப்பணி செய்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றார்.

எத்தனை வறுமை வந்தாலும் தான் செய்யும் தொழிலூடே சிவப்பணி செய்த திருக்குறிப்பு தொண்டரின் தொண்டினைப் பாலாறு நீர்வற்றினாலும் கைபிசைந்து தோண்ட நீர் சுரந்தோடும் உவமை மூலம் உய்த்துணரவைக்கின்றார் புலவர்.

எடுத்த பொருளை இலகுவாகச் சுவைபட விளக்கும் உவமை அணியில் நுட்பமாக உய்த்துணர வைக்கும் உள்ளுறை உவம அணியின் திட்பநுட்பம் நினைந்து நினைந்து இன்புறத்தக்கதாகும்.

இலங்கை வானொலி கலைக்கோலம் நிகழ்ச்சியில் 2009.08.06 இல் பதிவு செய்யப் பெற்றது.

உ
சிவமயம்

# முத்தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரத்தின் முப்பரிமாணக் கோலம்

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமெனப் பாரதியாராற் போற்றப்பட்ட சிலப்பதிகாரம் தமிழில் எழுந்த முதற்காப்பியம், இது தமிழ் மண்ணில் மலர்ந்த முத்தமிழ்க் காப்பியம். குடிமகனையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டமக்கள் காப்பியம். தென்னகமாம் தமிழ் நாட்டில் கருக்கொண்டு வடபால் கங்கைக் கரைவரை விரிந்தகதை கூறும் காப்பியம். தமிழ் மண்ணில் மலர்ந்த, அத்தனை கலைகளையும் திட்ப நுட்பமாகக் காட்டும் காப்பியம். இப்படியே சிலப்பதிகாரத்தின் சிறப்பினை அடுக்கிக் கொண்டே போகலாம்.

முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரம் மூன்று மூன்றாக மலர்ந்து மணம்பரப்பி விரியும் தனித்துவமும் சிறப்பும் நயத்தற் குரியன. இவ்வித முப்பரிமாண மலர்ச்சியைக் காண்போம்.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழுக்கே உரிய சிறப்பான

1) இக்காவியம் உருவாகக் கால்கோள் இட்டவர்கள் மூவர். அவர்கள்

   சேரன்செங்குட்டுவன், இளங்கோ, புலவர்சாத்தனார் எனும் மூவர்.

2) காப்பியத்தின் குறிக்கோள்கள் மூன்று. அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதும் என மூன்று.

3) நூலின் மங்கல வாழ்த்தில் இடம்பெற்ற இயற்கைக்கூறுகள் திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும், மாமழை போற்றுதும் என மூன்று.

4) திருமணவாழ்த்தில் காதலர் பிரியாமல், கவவுக்கை நெகிழாமல், தீதறுக என மூன்று.

5) கதைநிகழ் நாடுகள் சோழநாடு, பாண்டி நாடு, சேர நாடு என மூன்று.

6) காப்பிய நாயகிகள் கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி என மூவர்.

7) கதையில் வரும் பெருஞ் சமயங்கள் சைவம், வைணவம், சமணம் என மூன்று.

8) காப்பியக் கதைகூறும் காண்டங்கள் புகார்க்காண்டம், மதுரைக் காண்டம்,வஞ்சிக் காண்டம் என மூன்று.

9) கதை சொல்லக் கையாண்ட மொழிநடைகள் உரைநடை, பாட்டு, செய்யுள் என மூன்று.

10) முத்தமிழ்க் காப்பியத்துக்குரிய உரையும், இசையும், ஆடலும் எனும் முத்திறக்கலைகளும் நூல்முழுவதும் விரவிவருவதும் தனிச்சிறப்பாகும். இவ்விதமாகச் சிலப்பதிகாரத்தை முப்பரி மாணமாக மலரவைத்த இளங்கோவடிகளைப் "**பாவடிகள் தேன்வடியப்பாடும் இளங்கோவடிகள்**" எனப்புலவர்கள் போற்று தல் எத்தனை பொருத்தம் என்பதை இன்னும் விரிவாகப் பார்ப்போம்.

## காப்பியம் உருவாவதற்குக்கால்கோள் இட்டவர் மூவர் :-

கதை முடிவிலிருந்து தொடங்குகிறது. கண்ணகி தெய்வமாகித் தேவ லோகத்திலிருந்து கோவலன் கொணர்ந்த தேரில் வானுலகெய்திய செய்தியைக் குன்றக்குறவர் கூறக்கேட்ட சேரமன்னன் செங்குட்டுவன், அதுபற்றி விபரமறிய புலவர் சாந்தனாரிடம் கேட்கின்றார். சாந்தனார் நடந்த செய்தியெல்லாம் விபரமாகச் சொல்கின்றார். கூடவே சேரன் செங்குட்டுவனின் தம்பி இளங்கோவும் இருக்கின்றார். கதையைக் கேட்ட செங்குட்டுவன் அதனைக் காவியமாகப் பாடும்படி சாத்தனாரைக் கேட்கின்றான். சாத்தனார் இது மூவேந்தர் நாடுகளிலும் நடந்தகதை ஆதலால் பற்றற்ற துறவியாகிய இளங்கோவே பட்சபாதகமின்றிப் பாடத்தக்கவர் – "**முடிகெழுவேந்தர் மூவர்க்கும் உரியது அடிகள் நீரே அருளுதிர்**" – என வேண்டுகின்றார். இங்கே காவியம் உருவாதற்குச் செங்குட்டுவன், இளங்கோ, சாத்தனார் ஆகிய மூவர் கால்கோள் இட்டதைக் காண்கிறோம்.

காப்பியக் குறிக்கோள் மூன்று :-

கண்ணகி கதையைக் காப்பியமாகப் பாடச்சம்மதித்த இளங்கோ

**"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும்**
**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதும்**
**சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்**
**சிலப்பதிகாரம் என்னும் பெயரால்**
**நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"**

என மூன்று குறிக்கோள்களை உலகத்துக்கு உணர்த்தக் கூடியதாகப் பாடுவதாகச் சொல்கிறார். இங்கும் மூன்றின் பரிமாணங்கள் கதையாக மலர்வதைக் காண்கின்றோம்.

**மங்கலவாழ்த்தில் மூன்று இயற்கைப் பொருள்களை** வைத்துப் பாடுகின்றார். சந்திரனையும், சூரியனையும், மழையையும் வாழ்த்துகின்றார்.

- **திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்**
**கொங்கலர் தார்ச்சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்**
**அம்கண் உலகு அளித்தலான்.** எனச்சந்திரனையும்

- **ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**காவிரி நாடன் திகிரிபோல்**
..................................................
எனச் சூரியனையும்

- **மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்**
**நாம நீர்வேலி உலகிற்கு அவன் அளிபோல்**
**மேல்நின்றுதான் சுரத்தலான்**
என மழையையும் வாழ்த்துகின்றார்.

இங்கும் மூன்று வாழ்த்துக்களை அமைத்துப்பாடியுள்ளார். ஒவ்வொரு வாழ்த்தும் மும்மூன்று வரிகளில் சிந்தியல் வெண்பாவில் அமைத்து இங்கும் மூன்றின் பரிமாணத்தைக் காட்டுகின்றார்.

**மண வாழ்த்து மூன்று :-**

காவிரிப்பூம் பட்டினத்தின் பெருவணிகன் மாசாத்துவான் மகன் கோவலனுக்கும் மாநாய்க்கன் மகள் கண்ணகிக்கும் மாமுது பார்ப்பான் மறைவழி காட்டத் திருமண விழா நடக்கின்றது. அங்கு மங்கல மங்கையர்கள் மலர்தூவி வாழ்த்துகிறார்கள்.

**"காதலர் பிரியாமல், கவவுக்கை ஞெகிழாமல்**
**தீதறுக என்று சிலவாழ்த் தெடுத்தார்கள்"**

என இளங்கோ இங்கும் மூன்று வாழ்த்தையே கூறுகின்றார். வாழ்த்துகள் மங்கலச் சொற்களில் பாடப்பட வேண்டியவை இங்கு காதலர்பிரியாமல் என்பதில் பிரிவு எனும் அமங்கலச் சொல்லும், கவவுக்கை ஞெகிழாமல் என்பதில் நெகிழ்தல் எனும் அமங்கலச் சொல்லும் தீதறுக என்பதில் தீது எனும் அமங்கலச் சொல்லும் இடம்பெறுகின்றன. இது பின்னால் கோவலன் கண்ணகி பிரிதலும், கோவலன் கண்ணகியைக் கைவிடுதலும் அவன் கொலையுண்டு தீதாய் முடிதலும் ஆகிய மூன்று நிகழ்வுகளும் முதலிலேயே உய்த்துணர வைக்கப்படுகின்றன.

**கதை நிகழ் நாடுகள் மூன்று :-**

சாத்தனார் இளங்கோவிடம் "முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது அடிகள் நீரே அருளுதிர்" என வேண்டியபடி சோழ, பாண்டிய, சேர நாடுகளாகிய மூவேந்தர் நாடுகளிலும் நடந்த கதை நிகழ்வுகளைப் பாடுகிறார்.

சோழநாட்டிலே கோவலனும் கண்ணகியும் பிறந்து மணங் கொண்டதும், மாதவியின் நாட்டிய அரங்கேற்றமும் மாதவி நட்பால் செல்வமிழந்த கோவலன் கண்ணகியிடம் மீண்டுவந்து அவள் காற்சிலம்பு விற்க அவளுடனே பாண்டிநாடு சென்று கள்வனென்று கொலையுண்டதும் கண்ணகி தன் கற்பின் கனலால் மதுரை மாநகரை எரித்தலும் அதன்மேல் அவள் சேர நாடு சென்று தெய்வமானதும் ஆகிய கதை நிகழ்ந்த நாடுகளும் மூன்றாகக் காட்டுகின்றார். இங்கு மூன்று நாடுகளின் பெருமையும் பேசப்படுகிறது.

**காப்பிய நாயகிகள் மூவர் :-**

வணிகர் குலத்துதித்த கண்ணகியும், கணிகையர் குலத்துதித்த மாதவியும் அரச குலத்துதித்த கோப்பெரும்தேவியுமாகிய மூன்று பெண்கள் காவிய நாயகிகளாகப் பாடப்படுகின்றார்கள். கதை நிறைவில் ஈற்றில் வணிகர்குலக் கண்ணகி தெய்வமாகிறார். கணிகையர் குல மாதவி குலமாதர் ஒழுக்கத்துடன் துறவு பூண்கிறாள். அரசர்குலக்கோப்பெருந்தேவி கணவன் இறந்தவுடன் தன் உயிர்நீத்து மானங்காத்துத் தெய்வஉலகு சேர்கிறாள். காப்பிய நாயகிகள் மூவருமே உயர்வு பெறுகிறார்கள்.

**கதையில் வரும் பெரும் சமயங்கள் மூன்று :-**

பலவகைப்பட்ட கிராமிய வழிபாடுகள் சொல்லப்பட்டாலும் சைவம், வைணவம், சமணம் ஆகிய முப்பெரும் சமயங்களும் செல்வாக்கு பெற்றிருந்தமையும் அவ்வச் சமய ஒழுக்கங்களும் திட்பநுட்பமாகச் சொல்லப்படுகின்றன.

பிறவாயாக்கைப் பெரியோன் கோயில் எனச் சிவன் கோயிலும் நீலமேனி நெடியோன் கோயில் எனத் திருமால் கோயிலும். பள்ளி, கோட்டம், விகாரம் ஓம்படையென சமணக் கோயில்களும் பாடப்படுகின்றன.

**காப்பியக்கதை கூறும் காண்டங்கள் மூன்று :-**

மூன்று காண்டங்களில் அமைத்து காவியத்தைப் பாடுகின்றார். முதலாவது காண்டம் புகார்க்காண்டம், இரண்டாவது காண்டம் மதுரைக்காண்டம், மூன்றாவது காண்டம் வஞ்சிக்காண்டம்.

சோழ நாட்டின் தலைநகர் பூம்புகார் என்னும் புகாரிலும், பாண்டி நாட்டின் தலைநகர் மதுரையிலும், சேர நாட்டின் தலைநகர் வஞ்சியிலும் கதையின் முக்கிய நிகழ்வுகள் நடைபெறுவதால் அவை முப்பெரும் காண்டங்களாகப் பெயரிடப் பெற்ற சிறப்பும் நயக்கத்தக்கதே.

**கதை சொல்லக் கையாண்ட மொழிநடைகள் மூன்று :-**

"உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்" என்பார். எடுத்து உரைக்கப்படுவது உரை - அதுவே வசன நடை, பாடப்படுவது பாட்டு. செய்யப்படுவது செய்யுள். எனவே உரைநடையிலும்,

இசைப்பாடலிலும், செய்யுள் வடிவிலும் கதை சொல்லப்படும் சிறப்பும் கவனிக்கத்தக்கது.

**முத்தமிழ்க் காப்பியம் :-**

**உரையும் செய்யுளும் இயற்றமிழிலும்**
**வரிப்பாடல்கள் இசைத்தமிழிலும்**
**பல்வகை ஆடல்கள் நாடகத்தமிழிலும்**

சிறப்பாக மாதவியின் நடன அரங்கேற்றம், உரையும், இசையும், ஆடலும் ஒருங்கே அமைந்த அரங்க ஆற்றுகையாக அமைந்து வேறு எந்தக் காவியத்துக்கும் இல்லாத தனிப்பெருமையைச் சிலப் பதிகாரத்திற்குத் தேடிக்கொடுக்கின்றன.

எனவே முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரம் முப்பரி மாணத்தில் மூன்று மூன்றாக விரிந்து பரந்து மலர்ந்து மணம்பரப்புதல் தமிழுக்கு மட்டுமல்ல தமிழராகிய எமக்கும் பெருமையே.

முப்பரிமாண ஓவியங்கள் மூன்று பக்கத்தையும் காட்டுவது போல இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தை மூன்று மூன்றாக விரித்துக் காட்டும் முப்பரிமாணக் கோலம் சிந்திப்பார்க்கு இன்பம் தருவதாம்.

இலங்கை வானொலி கலைக்கோலம் நிகழ்ச்சியில் 2009.08.26 இல் பதிவு செய்யப் பெற்றது

உ
சிவமயம்

# அகநானூற்றில் ஓர் அகத்திணைக் கவியின்பம்

தமிழ் இலக்கியப் புலத்தில், சங்க இலக்கியங்கள் தனித்துவம் மிக்கவை. அவை பிற்கால இலக்கியங்களுக்கு ஊற்றுக்கண் போன் றவை என்பது அறிஞர் கருத்து. வயல் நிலம் எப்படிக் காலமெல்லாம் விளைவுதந்து கொண்டிருக்கின்றதோ, அப்படியே சங்கச் செய்யுள் களும் புதிது புதிதான இலக்கிய ஆக்கங்களைத் தந்து கொண்டி ருக்கும் பண்புடையவை. சங்கப்பாடல்களில் இக்காலத்திற்குச் சற்றுக் கடினமான சில சொற்களும், தொடர்களும் இருந்தாலும் சொல்லும் முறையும் சொல்லப்படும் செய்திகளும் எக்காலத்தும் இன்பம் பயப்பனவாகும்.

ஒவ்வொரு செய்யுளும் தனித்தனி ஒவ்வொரு கதைப்பண்பு உடையதாக நாடகக் காட்சியாக விரிந்து இலக்கிய இன்பம் தரவல்லவை.

பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண் கீழ்க்கணக்கு என்பவை சங்க இலக்கியங்களாகும். இவற்றில் தனிப்பாடல்களிலிருந்து தொகுக்கப்பட்டவை எட்டுத் தொகை நூல்கள். இவற்றில் அக ஒழுக்க மாகிய காதல் வாழ்வு சார்ந்த 400 பாடல்களை உடையது அக நானூறு. இதைத் தொகுத்தவர் உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திர சன்மன் என்னும் பெரும்புலவர். தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி.

அகநானூற்றில் 1,3,5,7,9 ஆகிய ஒற்றை எண் பாடல்கள் பாலைத் திணைக்கும் 2,8 எண்ணுடையவை குறிஞ்சித் திணைக்கும் 4 முல்லைத் திணைக்கும் 6 மருதத் திணைக்கும் 10 நெய்தல் திணைக்கும் உரியவை.

இந்த நானூறு பாடல்களில் முதல் 120 பாடல்கள் களிற்றி யானை நிரை எனவும், அடுத்த 180 பாடல்கள் மணிமிடைபவளம் எனவும், இறுதி 100 பாடல்கள் நித்திலக்கோவை எனவும் அழகான காரணப்பெயர் கொண்டு அழைக்கப்படும் சிறப்பு நயக்கத்தக்கது.

ஒவ்வொரு பாடலும் அகவல்யாப்பில் 13 அடி முதல் 31 அடிவரை உடையவையாயிருப்பதும் இதன் தனித்துவமாகும்.

இங்கு 2 எண்ணுக்குரிய புலவர் கபிலரால் பாடப்பெற்ற குறிஞ்சி நிலப் பாடல் ஒன்றை நோக்குவோம். ஒரேயொரு செய்யுள் ஒரு தனிக் கதைப் பண்புடையதாக நாடகக் காட்சிபோல விரிக்கவிரிந்து இலக்கிய இன்பம் தரும் அகத்திணைச் செய்யுள் களுக்கு இது ஒரு அருமையான எடுத்துக்காட்டாயிருப்பதை அறியலாம். புலவர் கபிலர் கண்ட குறிஞ்சிக் காட்சி இது.

கடுவன் எனப்படும் ஒரு ஆண்குரங்கு, மிளகுக் கொடிகள் படர்ந்திருக்கும் ஒரு பெரிய சந்தன மரத்தை நோக்கித் தாவிப்பாய்ந்து வருகிறது. வரும் வழியில், தானாக முற்றிக் கனிந்த மலைவாழைக் கனியைக் காண்கின்றது. நாவூற வாழையிற் பாய்ந்து வாழைக்கனிகளைப் பறித்து உண்கிறது. அப்போது அதன் அயலில் நிற்கும் சாரற்பலாவில் பழுத்திருந்த பலாப்பழத்தின் வாசனை அதன் கவனத்தைத் திருப்புகிறது. உடனே பலாவிற் பாய்ந்து பலாக்கனியைப் பறித்துப் பிய்த்து அதன் தேன் ஒழுகும் சுளைகளைக் சுவைக்கிறது. இனிமை மிகுதியால் அதனை முழுமையாக உண்ண முடியாமற் தெவிட்டுகிறது. கீழே பாறையிலேயிருந்து சுரந்துவரும் குளிர்ந்த சுனை நீர் போலத் தெளிந்ததேன் கண்ணிற் படுகிறது. இறங்கிவந்து நன்றாக விளைந்த நறுந்தேனை ஆசைதீர அருந்துகிறது.

எதிர்பாராமல் கிடைத்த வாழையின் தீங்கனியையும், பலாவின் இனிய சுளையையும், விளைந்த நறுந்தேனையும் அடுத்தடுத் துண்டால் என்ன செய்யும் என்பதை அறியாது உண்ட மந்தி தான் நினைத்து வந்த சந்தனமரத்தில் தாவமுடியாமல், தடுமாறிப் பக்கத்தே கிடந்த பூம்பந்தலில் இன்ப மயக்கத்தில் கிடக்கிறது.

இக்காட்சியைக் கண்ட புலவருக்குத் தூரத்தே இன்னொரு காட்சியும் தெரிகிறது. அழகும் இளமையும் ஒருங்கே அமைந்த தலைவன் ஒருவன் தன் தலைவியைக் காண்பதற்காகப் பகல் நேரத்தில் குறித்த இடத்திற்கு வருகின்றான். தலைவியைத் தேடுகின்றான் எங்கும் காணவில்லை. அங்கு தோழி வருகின்றாள், தலைவனுக்கு ஏதோ சொல்லிவிட்டு மலர்ந்திருக்கும் வேங்கை மரத்தையும் காட்டிவிட்டுச் செல்கின்றாள். என்ன சொல்லியிருப்பாள், எனப் புலவரின் கற்பனை ஓடுகின்றது. தான் கண்ட இருகாட்சிகளையும் இணைத்துப் பார்க்கிறார்.

குறிஞ்சித்திணைக்குரிய அற்புதமான செய்யுள் ஒன்று அவர் மனதில் சுரந்து வருகிறது.

செய்யுள் இதோ நாமும் சுவைப்போம்.

**கோழிலை வாழைக் கோள்முதிர் பெருங்குலை ஊழுறுதீங்கனி**

செழுமையான மலைவாழையின் பெருங்குலையில் தாமாகவே முற்றிக்கனிந்த இனியவாழைப் பழத்தையும்

**உண்ணுனர்த்தடுத்த வேரற்பலவின் சுளையொடு**

உண்பவர்களைத்தம் இனிமைமிகுதியினால் தெவிட்டச் செய்து அதிகமாக உண்ணாதபடிதடுக்கும் சாரற்பலாவின் இனிய சுளைகளை யும்

**ஊழ்படுபாறை நெடுஞ்சுனை விளைந்ததேறல்**

முறைமையான பாறையிலிருந்து நன்குவிளைந்த நறுந் தேனையும்

**அறியாதுண்டகடுவன்**

தன்அறியாமையினால் அடுத்தடுத்துண்ட ஆண்குரங்கு

**கறிவளர் சாந்தம் ஏறாது நறுவீ அடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும்**

பக்கத்தே மிளகுக்கொடிகள் படர்ந்த சந்தனமரத்தில் தாவி ஏறமுடியாததாகிக் கீழே கிடந்த நறுமணம் மிக்க பூக்களாகிய படுக்கையில் களிப்புடன் கிடந்து உறங்கும்.

**குறியா இன்பம் எளிதின் நின்மலைப்பல்வேறு விலங்கும் எய்தும் நாட**

இவ்விதம் தாம் எதிர்பாராத இன்பத்தை நின்மலை வாழும் பல்வேறு விலங்கினங்களும், எளிதாகப் பெற்றுமகிழும் மலைநாடனே.

**குறித்த இன்பம் நினக்கெவன் அரிய**

எதிர்பார்த்து வரும் இன்பம் உனக்கு எவ்வாறு அரியதாகும்.

**வெறுத்த ஏர்வேய்புரை பணைத்தோள் நிறுப்பநில்லா நெஞ்சமொடு**
**நின்மாட்டு இவளும் இனையள் ஆயின்**

மிக்க அழகினையுடைய மூங்கிலையொத்த பணைத்த தோள்களையுடைய இவளும் நிறுத்தவும் நில்லாது நின்னையே தொடர்கின்ற நெஞ்சத்தை உடையவளாக நின்னிடத்தே காதல் உடையவள் என்றால்.

**தந்தை அருங்கடிக்காவலர் சோர்பதன் ஒற்றிக்கங்குல் வருதலும் உரியை**

இவளுடைய தந்தையின் கட்டுக்காவலில் உள்ள காவலர்கள், சோர்ந்திருக்கும் நேரம் அறிந்து இரவிலே நீ வருவாயாக,

**பைம்புனல் வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன**

பசியபுதர்கள் சூழ்ந்த வேங்கை மரங்களும் ஒளிபொருந்திய பூக்கொத்துக்களை விரியப் பெற்றுள்ளன,

**நெடுவெண் திங்களும் ஊர் கொண்டன்றே**

தண்மையான சந்திரனும் நிரம்புதலையுற்றுப் பூரணையா யுள்ளது. அதனையும் அறிவாயாக. எனத்தோழி தலைவனுக்குச் சொல்வதாகப் புலவர் பாடுகின்றார்.

இச்செய்யுளில் உய்த்துணரவைக்கும் ஓர் இனிமை பயக்கும் உள்ளுறை உவமை நயத்தையும் காணலாம். தோழி தலைவனுக்கு அறமுரைக்கும் வகையில் அமைந்தது இப்பாடல்.

கடுவன் குரங்கு எவ்வித முயற்சியுமின்றித் தானாகக் கிடைத்த வாழைக் கனியையும், பலாச்சுளையையும், நறுந்தேனையும் உண்டு களித்து அந்த இன்ப மயக்கத்தில் தான் அடைய வேண்டிய சந்தனமரமாகிய இலக்கை மறந்து சோம்பிக்கிடப்பதைப் போல் தலைவன் சிரமமின்றிப் பகற்குறியில் களவாக வந்து தலைவியைச் சேர்ந்து இன்புற்றுப் போகாமல் கட்டுக்காவலைக் கடந்து போய்த் தலைவியைக் கற்புமணம் புரியவேண்டும் என்பது தோழியின் மூலம் உய்த்துணர வைக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி வேங்கை மலர்ந்துவிட்டது. சந்திரன் நிரம்பி விட்டது என்று தோழி குறிப்பாகக்காட்டும் செய்தி கற்பு மணத்துக்குரிய பருவகாலம் வந்துவிட்டது மங்கல மணவிழாவுக் கேற்ற வளர்பிறை காலமும் வந்துவிட்டது. என்பதைச் சொல்லாமற் சொல்வதும் உய்த்துணரத் தக்கதாகும். தமிழர்க்கேயுரிய அன்பின் ஐந்திணைப் பண்பை இச்செய்யுள் ஒன்றே முழுமையாகக் காட்டும் சிறப்பும்

சிந்திக்கத்தக்கது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணையும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்னும் முப்பொருட் பண்புகள் உடையவை.

முதற்பொருள் எனப்படுவது காலமும் நிலமும்மாகும். இச் செய்யுளில் குறிஞ்சித் திணைக்குரிய நிலமாகிய மலையும் மலைசார்ந்த இடத்தின் செப்பமும் செழிப்பும் காலமாகிய வேங்கைமரம் பூக்கும் வேனிற்காலமும், சந்திரன் நிரம்பும் வளர்பிறைக் காலமுமாகிய பெரும் பொழுதும் பகற்குறி இரவுக்குறி ஆகிய சிறுபொழுதுகளும் சொல்லப்படுகின்றன. கருப்பொருள் என்பது மரமும் மக்களும் விலங்கும் உணவும் என்பனவாகும். இங்கு சந்தனமரம் வேங்கை, பலா, வாழை முதலான மரங்களும், மலைவாழ் மக்களாகிய குறவர் தலைவன் தலைவி, தோழி, தந்தை, காவலர் ஆகியோரும் கடுவன் ஆகிய குரங்கும் கனிகளும் நறுந்தேனும் காட்டப்படுகின்றன. குறிஞ்சிக்குரிய உரிப்பொருள் புணர்தல் ஆகும். இங்கு பகற்குறியில் சந்தித்து களவு நெறியில் இன்புற்ற தலைவனும், தலைவியும் இரவுக்குறில் சந்தித்துக் கற்புமணம் புரிதலாகிய புணர்தல் ஒழுக்கமும் காட்டப்படுகின்றன.

இந்த ஒரேயொரு அகநானூற்றுப் பாடலில் அகத்திணைப் பண்பின் முழுமையும் காட்டப்படும் சிறப்பு நோக்கத்தக்கது. சங்கச் செய்யுட்கள் கதைப்பண்புடையதாக நாடகக் காட்சியாக விரிந்து இலக்கிய இன்பம் தரவல்லன என்பதற்கு இச் செய்யுள் பொருத்தமான சான்றாகும்.

---

இலங்கை வானொலி கலைக்கோலம் நிகழ்ச்சியில் 2009.11.12
இல் பதிவு செய்யப் பெற்றது

உ
சிவமயம்

# ஈழநாட்டுப் புலவர்களின் நாற்கவி இன்பம்

## (மதுரகவி, ஆசுகவி, சித்திரக்கவி, வித்தாரக்கவி)

கற்றோர்க்கு இன்பம் தரும் கவிதைகளை நான்கு வகையாகக் காட்டுவார்கள். அவை மதுரகவி, ஆசுகவி, சித்திரக்கவி, வித்தாரக்கவி என்பனவாகும். கவி என்பது கவிதையையும் அதேவேளை அக்கவி தையைப் பாடும் புலவனையும் குறித்து வரும். இங்கு

**மதுரகவி என்பது** - சுவையாகப்பாடும் புலவனையும் பாடலையும், **ஆசுகவி என்பது** - நினைத்தவுடன் பாடும் புலவனையும் பாடலையும், **சித்திரக்கவி என்பது** - நுட்பமாகப் பாடும் புலவனையும் பாடலையும், **வித்தாரக்கவி என்பது** - வியக்கும் வண்ணம் பாடும் புலவனையும் பாடலையும் குறிக்கும்.

இங்கு நாம் மதுரகவி, ஆசுகவி, சித்திரக்கவி, வித்தாரக்கவி என்பவற்றில் வகைக்கொரு கவி நயத்தைக் காண்போம்.

**மதுரகவி**

கடந்த தலைமுறைக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த வித்துவான் வேந்தனார் எனும் கவிஞரின் சில கவிதைகளை நோக்கு வோம். இவர் யார் கவிஞன்? என்ற கேள்விக்கு விடையாகப்பாடும் கவிதை ஒன்று இதோ. இது மதுரமான இனிமை தவழும் பாடலாதலால் மதுரகவியாகக் கொள்ளத்தக்கது.

யார் கவிஞன்? எது கவிதை?

**பாடுகின்றார் எல்லாரும் கவிஞரல்ல**
**பாட்டென்றால் பண்டிதர்க்கே உரிமையல்ல**
**ஓடுகின்ற பெருவெள்ளப் பெருக்கே போல**
**உணர்ச்சியிலே ஊற்றெழுந்த ஒளியால் ஓங்கி**
**வாடுகின்ற மக்களினம் மகிழ்ச்சி கொள்ள**
**மறுமலர்ச்சிப் பெருவாழ்வை வழங்குமாற்றல்**
**கூடுகின்ற கொள்கையினால் எழுச்சி கொண்டு**
**குமுறுகின்ற கோளரியே கவிஞனாவான்.**

பாடல்கள்

ஓடுகின்ற பெருவெள்ளப் பெருகேபோல உணர்ச்சியிலே ஊற்றெடுக்க வாடுகின்ற மக்களினம் மகிழ்ச்சிகொள்ள மறுமலர்ச்சி வேண்டும். பெருவாழ்வை வழங்க வேண்டும்.

புலவன்

எழுச்சி கொண்டு குமுறுகின்ற கோளரியே கவிஞனாவான். என்று கவிதைக்கும் கவிஞனுக்கும் வரைவிலக்கணம் கூறுகின்ற மதுரகவி இது.

இக்கவிதையின் இலகுவான தூய செந்தமிழ் நடையும் ஆற்றொழுக்குப் போன்ற கவிதை ஓட்டமும் கருத்து விளக்கமும் மதுரமாக இருக்கின்றதல்லவா.

யார் கவிஞன் எது கவிதை எனக்கூறிய மதுரகவி **கவிதை மொழி** எது என இன்னோர் மதுரகவியில் கூறுகின்றார்.

**அன்னைதரும் முலைப்பாலும் தூயதாக**
**அமையாதேல் அருந்தும் பிள்ளைக்கு**
**இன்னல்தரும் என்றுணர்வோம் இலக்கியத்தைப்**
**படைத்திடுங்கால் இனியதூய**
**கன்னல்தரும் சுவைமொழியால் தமிழ்மரபு**
**கடவாமல் கவின யாத்து**
**தொன்மைநிலைச் செந்தமிழே எங்கள்திரு**
**எனுஞ்சிறப்பைத் துலங்க வைப்போம்.**

பால்நினைந்தூட்டும் தாயின் முலைப்பால் கூடத் தூயதாக இருந்தால் தான் குழந்தை செழிப்புடன் வளரும், இல்லையேல் பிள்ளைக்குத் துன்பம்தரும் அதுபோல.

கவிதையைப் படைக்கும் போது கரும்பின் சுவைபோன்ற இன்பம் தரும் செந்தமிழ் சொற்கள் கொண்டு தமிழ் மரபு கடவாமல் கவிதை பாடவேண்டும். செந்தமிழ் இன்பமே எங்கள் செல்வம் என்பதைக் கவிதை துலங்கவைக்க வேண்டும். அதுவே மதுரகவி என்கின்றார்.

* * *

**சிறுவர் கதைப்பாடல்**

ஒரு ஏழைப் பிச்சைக்காரன் காலில் புண்ணுடன் கூனிக்குறுகி நொண்டிக்கொண்டு வரும் காட்சியைக் கண்ட சிறுவன் உள்ளத்தில் மனித நேயம் பிறக்கிறது.

சிறுவர்க்கினிய கதையையே பாடலாகக் காட்டும் கன்னல்போல் இனிக்கும் கவிதை இதோ, சிறுவனே தனக்குரிய சொற்களஞ்சி யத்தில் சொல்லெடுத்துப் பாடுகின்றான்.

**காலில்லாத நொண்டி மிகவும் களைத்துப்போனான் அம்மா**
**கோலை ஊன்றி நடந்துமுதுகு கூனிப்போனதம்மா**
**பாவமந்த நொண்டி எங்கள் பள்ளிக்கூடத் தெருவால்**
**போகும்போது கண்டேன் ஐயோபுண்கள் காலில் அம்மா**
**இனிப்புக்கடலை வாங்கக்காசு இனிமேல் கேட்க மாட்டேன்**
**தனித்த நொண்டி தவிப்பைப் போக்கத் தாரும் அம்மா காசு.**

பிஞ்சு உள்ளத்தில் மனிதநேயம் ஊற்றெடுத்துக் கொப்பளித்துப் பாயும் மதுரகவி தரும் இன்பம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறதல்லவா.

* * *

**ஆசுகவி**

இனி ஆசுகவி ஒன்றைச் சுவைப்போம். ஆசுகவி என்பது நினைத் தவுடன் எடுத்த எடுப்பிலே பாடப்படும் கவி.

நாம் நன்கறிந்த மட்டக்களப்பு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களும், யாழ்ப்பாணத்து ஆசுகவி கல்லடிவேலுப்பிள்ளை அவர்களும் யாழ்ப்பாணத்திலிருந்து பஸ்வண்டியில் திருகோண மலைக்குப் போகின்றார்கள். நல்ல வெய்யில் வெப்பம், பஸ்ஸில் சனநெரிசல், வியர்த்துக் கொட்டுகிறது. முன் ஆசனத்தில் ஆசுகவி பின்னாசனத்தில் புலவர்மணி. இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்கிறார்கள். அந்த அனுபவத்தைக் கவிதை மொழியில் ஒருவர்க்கொருவர் பேசுகிறார்கள்.

ஆசுகவி - **மனமும் விறைத்தது மார்பும் விறைத்தது** என்கிறார்
புலவர்மணி - **மாதர் கனதனமும் விறைத்தது எனத்**தொடர்கிறார்.
ஆசுகவி - **தாங்காத வெப்பம் தகித்திட ஆசனமும் விறைத்தது**

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பஸ் நடத்துநர் மேலும் மேலும் சனத்தை ஏற்றுகின்றார். புலவர்மணி தொடர்கின்றார்.

புலவர்மணி - **ஆள்மேல் ஆளை ஏற்றச் சனமடைவிசனமும் உரைப்பதென்ன**

ஆசுகவி - **பஸ் பயணமும் பெருஞ் சங்கடமே** என முடிக்கின்றார்.

இந்தக்கவிதை உரையாடல் ஒரு அருமையான ஆசுகவியாக – கட்டளைக் கலித்துறைப் பாடலாக – வரிக்குப் 17 எழுத்துக்கள் கொண்டு அமைகிறது. புலவர்கள் உரையாடல் பாடலாவதைப் பாருங்கள்

**மனமும் விறைத்தது மார்பும் விறைத்தது மாதர்கன**
**தனமும் விறைத்தது தாங்காத வெப்பம் தகித்திட வா**
**சனமும் விறைத்த தாள்மேலாளை ஏற்றச் சனமடைவி**
**சனமும் உரைப்பதென் பஸ்பயணம் பெருஞ்சங்கடமே**

தங்கள் துன்பச் சுவையான அனுபவத்தை எடுத்த எடுப்பிலே உரையாடல் போன்று அதேநேரத்திலே எழுத்தெண்ணிப்பாடும் கட்டளைக் கலித்துறைப் பாடலுக்குரிய யாப்பிலே ஆசுகவியாகப் பாடிய கவிஞர்களின் கவித்துவம் வியக்கத்தக்கதல்லவா.

* * *

**சித்திரக்கவி**

இனியோர் சித்திரக்கவியைப் பார்ப்போம். சித்திரக்கவி மாலை மாற்று, யமகம், ஏகபாதம், சக்கரபந்தம், நாகபந்தம், ஏகபாதம், எழுகூற்றிருக்கை எனப் பலவாகும். இங்கு இயமகம் எனும் சித்திரக்கவி யொன்றைக் காண்போம்.

இயமகம் என்பது ஒரு தொடர் இருவேறுவிதமாகப் பிரிந்து நின்று வெவ்வேறு பொருள் தரப்பாடப்படுவது.

சித்திரக்கவியில் வல்லவரான மாவைக்கவி மயில்வாகனப்புலவர் ஆறுதலை எனும் தொடரை வைத்துக் கொண்டு சிவன் இருக்கும் இடம் எதுவென வினாவி விடையும் சொல்லும் விசித்திரத்தைக் காணலாம்.

நகுலேஸ்வரத்தின் மீது பாடப்பட்ட சித்திரக்கவி இது

**ஆறுதலை சேர்ந்தார் ஆறுதலை ஈந்தார்**
**ஆறுதலை யார்தந்தை ஐந்துதலையார் – மாறில்நகர்**
**நங்கை நகுதி நரலை முதலிடையோ**
**டங்கடையின் என்றா றறிந்து.**

இது ஒரு யமகமாயமைந்த நேரிசை வெண்பா. ஒவ்வொரு தொடரும் இருவித பொருள் தரும் நுட்பத்தைக் காணலாம்.

| | | |
|---|---|---|
| ஆறுதலை சேர்ந்தார் | - | ஆறுதலை சேர்ந்தர் ஆறு ஆகிய கங்கையைத் தலையில் சேரப் பெற்றவர். |
| ஆறுதலை ஈந்தார் | - | ஆறுதல் ஐ ஈந்தார் மன ஆறுதலைத் தந்தார் |
| ஐந்தலையார் | - | ஐந்து தலைகளையுடைய சிவபெருமான் ஈசானம், தற்புருஷம், வாமம், அகோரம், சத்தியோசாதம் எனும் ஐந்து முகத்தை |
| மாறினகர் | - | மாறு இல் நகர் – குற்றமற்ற அவர் இருக்கும் இடம் எது வென்றால் |
| நங்கை, நகுதி நரலை | - | முதல் இடையோடு அம்கடையின் |
| நங்கை என்பதன் முதல் | - | ந |
| நகுதி என்பதன் இடை | - | கு |
| நரலை என்பதன் கடை | - | லை |

அதாவது நகுலை என்றார் அறிந்து – நகுலை நகுலேஸ்வரம். சிவன் இருக்கும் இடம் எதுவென வினவி நகுலைநகர் என வெகு விசித்திரமாகக் கவியிலே விடைகாட்டும் சித்திரம் வியக்கதக்கதல்லவா.

வித்தியாசமான இன்னுமோர் சிலேடையில் அமைந்த கவியைக் காண்போம். இது நாயகன் நாயகி சம்வாதமாகக் கவிதையில் பேசுதலைக் காட்டுகிறது. மலை எனப்பொருள் தரும் பல சொற்களை

வைத்துச் சிலேடையாகப் பேசுகிறார்கள். நகுலமுனி வாழ்கின்ற இடம் எதுவெனக் கேட்ட நாயகிக்கு நாயகன் பதில் சொல்லுவதாய மைந்தது.

நகுலமுனி வாசமெதென் றிரந்து கேட்ட நாயகிக்கு
நாயகனும் **நாகம்** என்றான்
பகையொடது கடியாதா வென்றாள் பெண்ணே
பகரரிய **சிலம்பு** என்றான் காலைப்பார்த்தாள்
**நகமெ**ன்றான் விரலைப் பார்த்தாள்
**குத்திரம்** என்றான் தகுதியோ கபடமென்றாள்
**கோத்திரம்** என்றான் எதிர்த்தழைப்பே னென்றாள்
**மலை**யென்றேன் மகிழ்ந்தாளன்றே

நாயகன் மலையை நாகம் என்றான். நாயகி நாகபாம்பென்று நினைத்துக்கடியாதா என்றாள். அவன் மலையைச் சிலம்பு என்றான். அவள் காற்சிலம்பென நினைத்தாள். அவன் மலையை நகம் என்றான். அவள் கால் நிகம் என்று நினைத்தாள். அவன் மலையை ருத்திரம் என்றான். அவள் கபடம் என்று நினைத்தாள். அவன் மலையை கோத்திரம் என்றான். அவள் குலம் என நினைத்தாள். மலை என்று சொன்னபின்தான் அவளுக்கு விளங்குகிறது.

* * *

**வித்தாரக்கவி**

வித்தாரக்கவி என்பது பிறர் வியக்கும்படி வசையாகப்பாடுவது. ஆசுகவி கல்லடிவேலன் அவர்கள் வழக்கொன்றிற்காகத் தனது கட்சிக்காக வாதாடுவதற்கு ஒரு சட்டவாதியை முற்பணம் கொடுத்து அமர்த்தியிருந்தார். அவர் சரியாக வாதாடாமல் வழக்கைத் தள்ளுபடி செய்ய வைத்துவிட்டார். சட்டவாதி இருபக்கத்திலும் பணம் வாங்கிக் கொண்டு மோசடி செய்து விட்டதை ஆசுகவி அறிந்து கொண்டார். கோபம் பொங்கிக் கொண்டுவர வித்தாரக் கவியொன்று வீறுகொண்டு வந்தது. நீதிமன்றத்தில் அத்தனைபேர் முன்னிலையிலும் வைத்து வைது பாடிவிட்டார்.

உலகெலாம் நகையாட ஓடேந்தி உண்கின்ற
உணர்வில் பிச்சைக் காரனோ?
உடையற்ற பித்தனோ? உலுத்தனோ? பிறரை
ஊம்பிச் சீவனம் செய் பவனோ
அளவிலா வேழைகளை யேய்த்து வயிறோம்புமொரு
அசடனோ? அதிபகலிலே
அறிவிலார் பொருள்கவரும் ஒருகள்வனோ என்று
அறைகுவேன் குமரவேளே.

இரண்டு பக்கமும் பணம் வாங்கிக் கொண்டு என்னை ஏமாற்றிய இச்சட்டவாதி

ஓடேந்தும் பிச்சைக்காரனோ
பித்துப்பிடித்த விசரனோ
உணர்வில்லாத உலுத்தனோ
ஊம்பிக்கெஞ்சிவாழும் ஊதாரியோ
அசட்டுத்தனமான முட்டாளோ
பகற்கொள்ளைக் காரனோ

என்று வாய்க்கு வந்தபடி செய்யுள் யாப்புச் சிதையாமல் வித்தார மாகப் பாடலிலே திட்டித் தீர்த்த விசித்திரமும் நயக்கத்தக்கதே.

எனவே, இங்கு நால்வகைக் கவிகளாகிய மதுரகவி, ஆசுகவி, சித்திரக்கவி, வித்தாரக்கவி ஆகிய நாற்கவி இன்பத்தை நம்நாட்டுக் கவிஞர்களின் கவிதைகள் கொண்டு நயந்தோம். நம்மவரான வித்துவான் வேந்தனார், புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை, ஆசுகவி கல்லடிவேலன், சித்திரக்கவி மாவைமயில்வாகனப்புலவர் ஆகிய நான்கு கவிஞர்களின் கவித்துவமும் நயக்கத்தக்கதே.

இலங்கை வானொலி கலைக்கோலம் நிகழ்ச்சியில் 2009.11.12 இல் பதிவு செய்யப் பெற்றது

உ
சிவமயம்

# கூந்தல் அவிழ்ந்ததும் கொற்றம் கவிழ்ந்ததும்

தமிழரின் பண்பாட்டு நெறியிலே மங்கலப்பொருட்களாகக் கொள் ளப்படும் அத்தனை பொருட்களுக்கும் தலைமை பூண்டு இருப்ப வர்கள் மங்கையர்கள். ஆதலால் இவர்களை மங்கல மங்கையர் என்கிறோம். எந்தச் சுபகருமங்களிலும் மங்கல மங்கையர்களே முன் வைக்கப்படுவார்கள். அவர்கள் வீட்டுக்கு வந்த மகாலட்சுமிகள் எனப் போற்றப்படுவார்கள். அவர்களது மங்கலக் கோலத்தில் பொட்டும் பூவும் முக்கிய இடம்பெறும். நெற்றியில் பொட்டும் கொண்டையில் பூவும் அவர்கள் மங்கல மங்கையர்கள் என்பதை எடுத்துக் காட்டும் மங்கலச் சின்னங்கள் ஆகும். முகத்தை அழகு செய்து பொட்டு வைப்பது போலக் கூந்தலில் அழகான கொண்டையிட்டுப் பூச்சூடு வார்கள்.

கூந்தலை அழகு செய்வது ஒருகலையாகவே பேணப்பட்டு வந்துள்ளது. விதம் விதமான கூந்தல் அலங்காரங்கள் செய்து கொண்டைகள் இட்டு அழகிற்கு அழகுசெய்வது போலக் கொண்டை மாலையும் அணிவது நம்மவர் பண்பாடு. இதனை எங்கள் இலக்கியங் களில் பரக்கக்காணலாம்.

குமரகுருபரர் தனது சகலாகலாவல்லி மாலையில் சரஸ்வதியின் கூந்தல் அலங்காரத்தை வெகுவாகப் போற்றுகின்றார்.

**நாடும்பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்**
**பாடும்பணியில் பணித்தருள்வாய் பங்கயாசனத்திற்**
**கூடும் பசும் பொற் கொடியே கனதனக்குன்றும் ஐம்பால்**
**காடும் சுமக்கும் கரும்பே சகலகலாவல்லியே**

எனும் பாடலில் ஐந்துவிதமான தலை அலங்காரத்தைச் சுமக்கின்ற கரும்பு போன்றவளே - ஐம்பாற்காடும் சுமக்கும் கரும்பே சகலாகலாவல்லியே என்கிறார். சரஸ்வதியின் கூந்தலில் போடப்

பட்டுள்ள ஐந்து வித அலங்காரக் கொண்டைகளையும் பார்க்கும் போது கரும்பு இனிப்பது போல இனிக்கிறதல்லவா.

மங்கல வாழ்வுக்குரிய இந்தக் கூந்தலை மங்கையர்கள் விரித்தால் அல்லது மங்கையர் கூந்தல் விரிக்கப்பட்டால் அமங்கலமே விளையும் என்பதை நமது இலக்கியங்கள் எமக்குச் சொல்லாமற் சொல்கின்றன.

தன் கணவன் கோவலன் அநியாயமாகக் கொலையுண்டதைக் கேட்ட கண்ணகியின் கூந்தல் அவிழ்ந்தது அதனால் பாண்டியன் கொற்றம் - அரசு கவிழ்ந்தது. இது சிலப்பதிகாரச் செய்தி.

துரியோதனனின் சபைக்குப் பாஞ்சாலியைக் கூந்தல்குலையப் பிடித்து இழுத்து வந்தான் துச்சாதனன். அதன் விளைவு கௌரவர் கொற்றம் - அரசு கவிழ்ந்தது. இது மகாபாரதச் செய்தி.

தசரதனிடம் தான் நினைத்தவரத்தைப் பெறுவதற்காகக் கைகேயி தானே தன் கூந்தலை அவிழ்த்துக்குலைத்தாள் தசரதன் கொற்றம் - அரசு கவிழ்ந்தது. இது இராமாயணச் செய்தி.

இவையெல்லாம் எப்படி நிகழ்ந்தன என்பதை எங்கள் இலக்கியங் களில் இருந்து சிந்திப்பது சிந்தைக்கு விருந்தாகும்.

சோழநாட்டில் பெருவணிகர் குலத்தில் பிறந்து கண்ணகியை மணங்கொண்டு கலா இரசனையால் ஆடல் அழகி மாதவியை விரும்பிச் சிலகாலம் அவளுடன் வாழ்ந்து பொருள் எல்லாம் இழந்து வெறுங்கையனாய்க் கண்ணகியிடம் மீண்டு வருகின்றான் கோவலன். கண்ணகி வெறுக்காமல் வரவேற்று அவனை வருந்தவிடாமல் தன்காற் சிலம்பை விற்று மீண்டும் வணிகம் செய்து வாழலாம் என அவனுக்கு ஆதரவு கூறுகின்றாள். இருவரும் சிலப்பு விற்கப் பாண்டிநாடு செல்கின்றனர். கண்ணகியை ஓர் இல்லத்தில் இருக்கவைத்துக் கோவலன் மதுரை மாநகர்ப் பொற்கொல்லர் வீதியில் சிலம்பு விற்கப் போகின்றான். அரச மாளிகைப் பொற்கொல்லன் தான் அரசியின் சிலம்பைக் களவெடுத்ததை மறைக்க இவன்தான் களவெடுத்தான் எனப் பழிசுமத்தி விடுகின்றான். கோவலன் அரசதண்டனைக்கு ஆளாகித் தலை வெட்டப்பட்டிறக்கின்றான்.

இதைக் கேள்விப்பட்ட கண்ணகி கூந்தல் அவிழத் தாங்காத சோகத்துடன் தலைவிரிகோலத்தில் அவ்விடம் சென்று இக்கோரக் காட்சியைக் கண்டு புரண்டு அழுது துடிக்கின்றாள். சோகம் கோபமாகக்

கொப்பளிக்கின்றது. பாண்டியனிடம் நீதிகேட்கப் போகின்றாள். போன கோலம்.

**மெய்யிற் பொடியும் விரிந்த கருங்குழலும்**
**கையிற் தனிச்சிலம்பும் கண்ணீரும் – வையைக்கோன்**
**கண்டளவே தோற்றான் அக்காரிகைதன் சொற்செவியில்**
**கொண்டளவே தோற்றான் உயிர்.**

மன்னன் பார்க்கின்றான் மெய்யில் புழுதிப்பொடி, விரிந்த கூந்தல், கையிற்சிலம்பு, கண்களில்நீர், இந்தக் காட்சி அவனை நிலைகுலைய வைக்கின்றது. விரிந்த கருங்கூந்தல் அவள் கணவனை இழந்தவள் என்பதைக் காட்டி நெஞ்சம் பதறவைக்கிறது. கண்ணகியின் வாதுக்கு எதிர் வாதின்றிச் சிம்மாசனத்திலிருந்து பாண்டியன் வீழ்ந்து உயிர் விடுகின்றான். பாண்டிமாதேவியும் உடன் உயிர்விடுகிறாள், கண்ணகி யின் கூந்தல் குலைந்தது பாண்டியன் கொற்றம் கவிழ்ந்தது. அத்துடன் முடிந்ததா? விரித்த கூந்தல் காட்டிய வெஞ்சினத்தால்.

**மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்**
**பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்**
**ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்என்**
**பட்டிமையும் காண்குறுவாய் நீ**

என்று தன் இடமுலைதிருகி மதுரைமா நகர்மீதெறிந்தாள், மன்னன் அரசு கவிழ்ந்தது மட்டுமல்ல மதுரை மாநகரே சாம்பரானது. யானுமோர் பத்தினியேயாமாயின் ஒழிப்பேன் மதுரையை எனும் இளங்கோவடிகளின் வாக்கு - கற்புடைப் பத்தினியர் கூந்தல் விரியார் என்பதையும் விரித்தால் அழிவே விளையும் என்பதையும் உணர்த்து வது எத்துணை நுட்பமும் உறுதியுமானது.

* * *

இனி, மகாபாரதத்தில் கூந்தல் அவிழ்த்த செய்தியைப்பார்ப்போம். பாண்டவர்கள் தலைவன் தருமர் கௌரவர்களுடன் சூதாடி நாடுநகர் செல்வம் தம்பிமார், மனைவி துரௌபதி எல்லாரையும் இழந்து அடிமையாகி விடுகிறார்.

துரௌபதியைச் சபைமுன் அவமானம் செய்ய வேண்டுமெனத் துரியோதனன் கட்டளைப்படி தம்பி துச்சாதனன் அவளின் கூந்தலிற் பிடித்துச் சபைமுன் இழுத்து வருகிறான். இக்காட்சியைப் பாரதியார்.

**மாடு நிகர்த்த துச்சாதனன் – அன்னை**
**மைக்குழல் பற்றி இழுக்கிறான்**
**ஆவிகுலைவுற்று நிற்கிறாள் – அவள்**
**ஆவென்றழுது துடிக்கிறாள்.**

என்கின்றார். ஒரு மங்கல மங்கையை ஒரு முரடன் மயிர்பிடித்து இழுத்துவந்தால் அதையார்தான் தாங்குவார்கள் - மாடுநிகர்த்த துச்சாதனன் அன்னை மைக்குழல் பற்றி இழுக்கிறான். இவன் மனிதனா மாடு போன்று இழுக்கிறானே எனக் கொதிக்கிறார்.

துரௌபதியின் துகிலை உரிந்தார்கள். அது வளர்ந்தது, சேலை மலைபோல் குவிந்தது, மாடு நிகர்த்தவனும் மயங்கி வீழ்ந்தான். அப்போது தன்கூந்தலை அவிழ்த்தவனையும், அதற்கு ஏவியவர் களையும் பார்த்து அவள் செய்யும் சபதம் பெண்களின் கூந்தலின் பெருமையைச் சிந்திக்க வைக்கிறது.

**தேவிதுரௌபதி சொல்வாள் – ஓம்**
**தேவிபராசக்தி ஆணை உரைத்தேன்**
**பாவிதுச்சாதனன் செந்நீர் – அந்தப்**
**பாழ்த்துரியோதனன் ஆக்கை இரத்தம்**
**மேவி இரண்டும் கலந்து – குழல்**
**மீதினில் பூசி நறுநெய்குளித்தே**
**சீவிக்குழல் முடிப்பேன் நான் – இது**
**செய்யுமுன்னே முடியேன் என்றுரைத்தாள்**

இன்று என் கூந்தலைக் குலைத்த பாவி துச்சாதனனின் இரத்தத் தையும், இதற்கு ஏவிய பாழ்த்துரியோதனன் இரத்தத்தையும் கலந்து கூந்தலில் பூசி அல்லது இன்று விரித்த கூந்தலை முடிக்கமாட்டேன் எனச் சபதமிட்டாள், கூந்தலையே தம் மானத்தின் சின்னமாகக் கொண்ட மங்கையர் குலத்தின் மாண்பை இச்சபதம் உலகிற்கு உணர்த்துவதை இங்கு காண்கின்றோம்.

பாண்டவர் வனவாசம் பன்னிரண்டு வருடம், அஞ்ஞான வாசம் ஒரு வருடம் ஆகப் பதின்மூன்று வருட காலம் துரெளபதி கூந்தல் முடிக்கவில்லை விரித்தபடி தான் இருந்தது, அவள் சொன்ன சபதப்படி 13 வருடத்தின் பின் வந்த பாரதப் போரில் கௌரவர் கொற்றம் கவிழ்ந்தபின் தான் அக்கொடியவர் இரத்தத்தைப் பூசிக் கூந்தல் முடித்தாள் என்பதை மகாபாரதம் கற்பிக்கின்றது. இங்கு கொடியவர்கள் மங்கல மங்கையின் கூந்தலை அவிழ்த்ததால் அவர்களுடைய கொற்றம் மட்டுமல்லக் குலமும் கவிழ்ந்து அழிந்து மாறாப்பழிக்கு ஆளாகியதைக் காண்கின்றோம்.

* * *

இனி இராமாயணத்தில் கைகேயி தானேதன்கூந்தலை அவிழ்த்த தால் அக்கொற்றம் கவிழ்ந்ததைக் காண்போம்.

கூனிஎனும் வஞ்சகத்தோழியால் மனம் மாறுபட்ட கைகேயி தசரதரிடம் தான் விரும்பிய வரத்தைப் பெறுவதற்காகத் தன் மாளிகையில் தானே தன் கூந்தலை அவிழ்த்துக் கலைத்துத் தலைவிரி கோலமாகக் கிடக்கிறாள். கம்பர் சொல்கிறார்.

**கூனிபோனபின் குலமலர்க் குப்பை நின்றிழிந்தாள்**
**சோனைவார் குழற்கற்றையில் சொருகியமாலை**
**வானமாமழை நுழைதரு மதிபிதிர்ப் பாள்போல்**
**தேனவாவுறு வண்டினம் அலமரச் சிதைத்தாள்**

மலர் படுக்கையில் இருந்த கைகேயி நிலத்தில் வீழ்ந்தாள். தன் அழகான தலையலங்காரம் செய்யப்பட்ட அடர்த்தியான கூந்தலில் சொருகிய மலர் மாலையை, கரிய மழை மேகத்தின் இடையேயுள்ள சந்திரனைப் பிடித்துப் பிய்த்தெறிவது போல சிதைக்கின்றாள். அதுமட்டுமா,

**தாவில் மாமணிக் கலன்மற்றும் தனித்தனிசிதறி**
**நாவில் ஒதியை நானிலம் தைவரப்பரப்பி**
**காவி உண்கண் அஞ்சனம் கான்றிடக் கலுழா**
**பூவுதிர்ந்ததோர் கொம்பெனப் புவிமிசைப் புரண்டாள்.**

தான் அணிந்திருந்த பொன்னாலும் மணியாலும் புனைந்த அணிகலன்கள் எல்லாவற்றையும் கழற்றி எறிந்துவிட்டு தன் நறுமணம் கமழும் கூந்தலையும் நிலத்திலே பரப்பிவிட்டுப் பூவுதிர்ந்த கொம்பர் போல் நிலத்தில் கிடக்கிறாள்.

இங்கு அவள்தன், **நாவில்ஓதியைத் தானேநானிலத்தில்** பரப்பிவிட்டுக் கிடக்கிறாள். வந்த தசரதன் இந்த அமங்கலக்காட்சியால் உள்ளம் தடுமாறி அவள் பிடிவாதத்தை மாற்றமுடியாமல், கேட்டவரத்தைக் கொடுத்துத்தன் உயிரை விடுகின்றான். அயோத்தியின் கொற்றம் கவிழ்கிறது. மாறாப்பழி இன்றும் நிலைக்கிறது.

இங்கு மங்கலமங்கையான கைகேயி வஞ்சக எண்ணத்தால் **தானே தன் கூந்தலை அவி**ழ்த்துக் கலைத்தாள். இந்த அமங்கலத்தால் மன்னன் மாண்டான் அயோத்தியின் கொற்றம் கவிழ்ந்தது.

பாரதத்தில் மங்கல மங்கையான துரௌபதியின் கூந்தலை வஞ்சகன் **துச்சாதனன் அவிழ்த்துக் குலைத்தான்** அந்த அமங்கல கோலத்தால் மகாபாரதப் போர் நிகழ்ந்து கௌரவர் கொற்றம் கவிழ்ந்தது.

சிலப்பதிகாரத்தில் மங்கல மங்கை கண்ணகியின் கூந்தல் துன்பத்தால் தானே அவிழ்ந்தது அந்த அமங்கலத்தால் பாண்டியன் கொற்றம் கவிழ்ந்தது. இப்படி இன்னும் பலகாட்சி களைக் காணலாம்.

**மங்கல மங்கையர் களின் கூந்தல்**
**தானாக அவிழ்ந்தால் என்ன**
**தன்னாலே அவிழ்க்கப் பட்டால் என்ன**
**மாற்றாரால் அவிழ்க்கப்பட்டால் என்ன**
**அந்த அமங்கலத்தால் விளைவது அழிவே**

என்பதை எங்கள் இலக்கியங்கள் கற்பிக்கும் பாடமாகக் கொண்டு மங்கையர்கள் மங்கல வாழ்வு வாழ்வார்களாக.

இலங்கை வானொலி கலைக்கோலம் நிகழ்ச்சியில் 2009.11.12
இல் பதிவு செய்யப் பெற்றது

உ
சிவமயம்

# பொறுமை காத்துப் பெருமை பெற்ற காவிய நாயகர்கள்

மனிதவாழ்வை மேம்படுத்தவல்ல பண்புகள் அன்பு, அறம், வாய்மை, பொறுமை முதலாகப்பல சொல்லப்பட்டுள்ளன. நமது அறநூல்களாகிய திருக்குறள், நாலடியார் போன்றவை இப்பண்புகளை மனிதவாழ்வுக்கு இலக்கணங்களாக வகுத்துச் சொல்கின்றன.

நமது இதிகாச இலக்கியங்கள் இப்பண்புகளை வாழ்வியலிற் காட்டி நமது நல்வாழ்வுக்கு வழிகாட்டுகின்றன. இப்பண்புகளில் சிலவற்றை இலகுவாகக் கைக்கொள்ள முடியும், சிலவற்றைக் கடைப்பிடித்து வாழ்வது கடினம். அப்படி வாழ்ந்தோர் வரலாற்றில் போற்றப்படுகிறார்கள்.

அவ்வித பண்புகளில் ஒன்று பொறுமை என்பது, தனக்கு எவ்வித துன்பம் வந்த இடத்தும், எவ்வளவு அவமானம் வந்த இடத்தும் அல்லது எவ்வளவு செல்வம், அதிகாரம் வந்த இடத்தும் பொறுமை காப்பவர்கள் பெரியோராகச் சான்றோராக மதிக்கப்படுகிறார்கள்.

இந்தவகையில் இங்கு பொறுமை காத்ததால் பெருமை பெற்ற இரு காவிய நாயகர்களைப் பற்றிப் பார்ப்போம். நமது தமிழ்க் காப்பியங்கள் மனித வாழ்வியற் பண்புகளைத் தருவதில் கடல் போன்றவை. கடல்படு திரவியங்கள் அள்ள அள்ளக் குறையாதவை அது போலக் காவியங்களில் உள்ள வாழ்வியற் பண்புகளும் அள்ள அள்ளக் குறையாதவை.

பொறுமை பற்றி வள்ளுவப் பெருமான் சொல்லும் போது "அகல்வாரைத் தாங்கும் நிலம்போலத், தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை" என்கின்றார். நிலத்திலே நின்று கொண்டு தன்னைத் தாங்குகின்ற அந்த நிலத்தையே கடப்பாரை, மண்வெட்டி கொண்டு ஒருவன் கொத்தியும், கிண்டியும் தோண்டும் போதும் அந்த நிலம் அவனுக்குக் கெடுதி செய்யாமல் அவனைத் தாங்கிக் கொண்டு

இருக்கும். அதேபோல மனிதர் ஆகிய எமக்கும் எம்மில் தங்கி வாழ்வோர் தீமை செய்த போதும் அதைத் தாங்கிக் கொள்ள வேண்டும். நம்மை இகழ்பவரையும் நாம் பொறுத்துக் கொள்ள வேண்டும். என்பது வள்ளுவர் கூற்று.

சாதாரண மனிதர் மட்டத்தில் மட்டுமல்ல நாடாள்கின்ற மன்னர் களானாலும் இந்தப் பொறுமையைக் கைக்கொள்ள வேண்டும் என்று அறநூல் கூறுகின்றது.

ஒருகாலமும் துன்பம் இல்லாமல் ஒருவரால் இன்பமாக வாழ முடியுமா என்று வினவினால் நாம் சாதாரணமாக முடியாது என்று தான் பதில் சொல்வோம். முடியும் என்று ஒருவர் சொல்வாரானால் எப்படி முடியும் என்று கேட்போம். இதோ முடியும் என்று சொல்பவர் ஒருவர் எப்படி முடியும் என்று சொல்வதைக் காணலாம்.

**அறிவது அறிந்து அடங்கி அஞ்சுவதுஅஞ்சி**
**உறுவது உலகு உவப்பச் செய்து – பெறுவதனால்**
**இன்புற்று வாழும் இயல்பினான் எஞ்ஞான்றும்**
**துன்புற்று வாழ்தல் அரிது**

இங்கு எக்காலத்தும் துன்பமில்லாமல் இன்புற்று வாழ்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய நான்கு படிமுறைகளைச் சொல்கின்றார். முதலாவது அறிவதறிந்து - அறவாழ்வுக்குரிய நல்லறிவைக் கற்றறிந்து, இரண்டாவது அடங்கி - கற்றறிந்த அளவிலே திளைத்து, மூன்றாவது அஞ்சுவதஞ்சி - அஞ்ச வேண்டிய தவறான செயல்களைச் செய்வதற்கு அஞ்சி அவற்றை விலக்கி, நான்காவது உறுவது உலகுவப்பச் செய்வது - செய்பவற்றை இந்த உலகம் மகிழும் படியாக, உலகு இன்புறும் படியாகச் செய்பவனுக்கு, அதாவது அறநூல்களைக் கற்று உணர்ந்து தீச் செயல்களை விலக்கி பிறர் மகிழ வாழ்பவன் எவனோ அவன் வாழ்வில் துன்பமில்லை இன்பமே என்னாளும் என்கின்றது இப்பாடல்.

இதற்கு ஏற்பவாழ்ந்த இரண்டு காவிய நாயகர்களைப் பார்ப்போம். அதுவும் அறிவதறிந்து அடங்கி அஞ்சுவதஞ்சி உலகு உவப்ப வாழ்ந்ததால் உலகுள்ளவரை உலகிற்கே நாயகர்களாகப் பேசப்படும் இராமாயணநாயகர் இராமனையும், பாரத நாயகர் தருமரையும் பார்ப்போம். இவர்கள் வாழ்வில் பொறுமைகாத்த பேராண்மையையும் பார்ப்போம்.

இராமனுக்கு நாளை முடிசூட்டு விழா என்ற மகிழ்ச்சியான செய்தி தசரதரால் அறிவிக்கப்படுகின்றது. அயோத்திநகர் இராமன் முடிசூட்டு விழாக்காணக் கோலகலமாக, ஆரவாரமாக மகிழ்ச்சிக் கடலில் முழ்கியுள்ளது.

இராமனை அவனுடைய அன்புக்குரிய சிற்றன்னை கைகேயி அழைக்கிறாள். யாருமே எதிர்பாராத ஒரு செய்தியை அவள் இராமனுக்குச் சொல்கிறாள், இராமா!

**ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீபோய்த்**
**தாழிரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவம்மேற்கொண்டு**
**பூழிவெங்கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி**
**ஏழிரண்டாண்டில் வா என்றியம்பினன் அரசன் என்றாள்**

இராமா உனது அரசன், உன் தந்தை உனக்கு இட்ட கட்டளை ஒன்றுண்டு. அது அயோத்திக்குப் பரதனே முடிசூடி ஆள வேண்டும். நீ தவக்கோலம் பூண்டு வனம்சென்று தவம் செய்து, தீர்த்த யாத்திரையும் செய்து பதினான்கு ஆண்டுகள் கழித்துத்தான் அயோத்திக்குத் திரும்ப வேண்டும் என்கின்றார். முடிசூடத் தயாராயிருந்தவனுக்கு நீ முடிதுறக்க வேண்டும் நாட்டைவிட்டுக் காட்டுக்குப் போக வேண்டும். அங்கு துன்பத்தை தாங்கித் தவம் செய்ய வேண்டும். பதினான்கு ஆண்டுகளின் பின்தான் நாட்டுக்கு திரும்ப வேண்டும் என்று மன்னன் நேரில் கட்டளையிடவில்லை; மன்னன் கட்டளை என்று சிற்றன்னை சொல்கிறாள். எப்படி இருக்கும் எமக்கென்றால்.

இங்கேதான் இராமன் பொறுமைகாத்த பேராண்மையைக் காண்கின்றோம். கைகேயியின் கட்டளையைக் கேட்டமறுகணமே இராமன் சொல்கின்றான், அம்மா

**மன்னவன் பணிஅன்று ஆகில் நும்பணி மறுப்பேனோ?என்**
**பின்னவன் பெற்றசெல்வம் அடியனேன் பெற்றதன்றோ**
**என்னினி உறுதி அப்பால் இப்பணிதலைமேற் கொண்டேன்**
**பொன்னொளிர் கானம்இன்றே போகின்றேன்கவிடையும் கொண்டேன்**

மன்னவன் எனக்கு நேரில் சொல்லாவிட்டாலும் மன்னவன் சொன்னதாக நீ சொல்வதை நான் மறுப்பேனோ? என்தம்பி பரதன்

அயோத்தி அரசு பெற்றதை நான் பெற்ற செல்வம் போல மகிழ்கின்றேன். இதற்குமேல் எதுவும் ஆராய வேண்டியதில்லை. இப்பொழுதே உங்கள் கட்டளையைச் சிரமேற் கொண்டு செல்கின்றேன். இப்போதே நான் வனம் செல்கின்றேன். உங்களிடமும் விடைபெறுகின்றேன் என்று கூறிய இராமன் மனத்தில் எவ்வித சலனமும் இன்றி வனம் செல்கின்றான். அப்பொழுது இராமனின் முகப்பொலிவு எப்படி இருந்திருக்கும் நாம் நினைப்பது போலப் பொறாமையால் எரிந்து பொங்கிக் கருகி இருக்குமா இல்லை இல்லை.

**இப்பொழுதெம்மனோரால் இயம்புதற் கரிதேயாரும்**
**செப்பரும் குணத்திராமன் திருமுகச் செவ்விநோக்கில்**
**ஒப்பவே முன்புபின்பு அவ்வாசகம் உரைக்கக்கேட்ட**
**அப்பொழுது அலர்ந்த செய்தாமரையினை வென்றதம்மா**

பொறாமையால் முகம் கருகவில்லை பொறுமையால் அப் பொழுது அலர்ந்த செந்தாமரைபோல் பொலிந்திருந்தது என்கிறார் புலவர். இராமன் பொறுமையின் சிறப்பைச் சொல்லவந்த கம்பருக்கு இன்னும் சொல்ல வேண்டும் போலிருக்கிறது. வனவாச காலத்தில் இராவணனின் சிறையில் தனிமையில் இருந்து தவிக்கும் சீதை இராமனின் பொறுமையின் பெருமையை நினைந்து வியப்பதாகச் சொல்கின்றார்.

**மெய்த்திருப்பதம் மேவென்றபோதினும்**
**இத்திருத்துறந் தேகென்ற போதினும்**
**சித்திரத்தி னலர்ந்த செந்தாமரை**
**ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்**

அயோத்தி மன்னனாக நாளை முடிசூடுவாய் என்ற போதும், இன்றைக்கே எல்லாவற்றையும் விட்டுக் காட்டுக்குப்போ என்ற போதும் எதிர்மாறான இருவேறு நிலைகளிலும், பெருஞ் செல்வம் பெற்றபோதும் அச் செல்வத்தை இழந்தபோதும் ஒரே மாதிரி சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை ஒத்திருக்கும் இராமன் முகத்தை நினைத்து வியக்கிறாள் சீதை. அப்பொழுது அலர்ந்த செந்தாமரை வாடாதிருப்பது போலப் பொறுமையில் மலர்ந்த இராமன் முகம் அவன் பொறுமையால் பெற்ற பெருமையைக் காட்டுகிறதல்லவா? இராமன் பெருமை தான் பொறுமை காத்ததால் மட்டுமல்லத் தன்னைச் சேர்ந்தாரையும் பொறுமைகாக்கச் செய்ததாலும் மேன்மை பெறுகின்றது.

இராமன் வனவாசம் புறப்பட்டான் என்பதையறிந்த தம்பி இலக்குவன் ஓடோடிவருகின்றான். அண்ணா இதென்ன கொடுமை இப்பொழுதே இச்செயல் செய்தாரைக் கொன்றொழித்துவிட்டு உனக்கு நான் முடிசூட்டுவேன் என்று பொங்கி எழுகின்றான். தம்பியைக் கையமர்த்திய இராமன், தம்பி!

**நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை அற்றே**
**பதியின்பிழையன்று பயந்து நமைப்புரந்தாள்**
**மதியின் பிழையன்று மகன்பிழையன்று மைந்த**
**விதியின்பிழை இதற்கென்கொல் வெகுண்டது என்றான்**

இலக்குமணா, ஆற்றில் நீர் இல்லாமல் வற்றினால் அது ஆற்றின் பிழையா? ஆற்றைக் கோபிக்கலாமா? அது போல இந்த நிலை வந்ததற்குக் காரணம், நம் அரசனாகிய, நம் தந்தை தசரதன் பிழையன்று, நமை அன்புடன் வளர்த்ததாய் கைகேயியின் பிழையுமன்று, தம்பி பரதனின் பிழையுமன்று - இது விதியின் பிழை - விதியின் பிழைக்கு நீ இவர்களை வெறுக்கலாமா? என்று தான் பொறுமை காத்தது போலத் தன் தம்பியின் பொறுமையையும் அயோத்தியுள்ளார் எல்லாரின் பொறுமையையும் காத்த நாயகன் இராமன், பொறுமைக்கு நாயகன் என்பது எவ்வளவு பொருத்தம்.

* * *

மகாபாரதத்தில் அதன் கதாநாயகன் தருமர் சூதும் வாதும் வேதனை செய்யும் என்பதறிந்தும் கௌரவருடன் சூதாடுவதற்குச் சம்மதித்து விடுகின்றான். வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் முதலான தம்பிமார் மறுத்தும் விதிவசத்தால் சூதாடுகின்றான்.

வஞ்சகச் சகுனியின் சூழ்ச்சியால் பந்தயப் பொருளாக வைத்த எல்லாவற்றையும் இழந்து தன் தம்பியரையும் தன்னையுமே இழந்து விடுகின்றான். இந்நிலையில்கூட அவர் பொறுமை இழக்கவில்லை.

**இன்னதாயம் வேண்டும் என்று எறிந்தபோது மற்றவன்**
**சொன்னதாயமேயுருண்டு சோர்விலாது வருதலின்**
**தன்னதாய அரசு வாழ்வு தரணி மன்னன் நல்கினான்**
**அன்னதாயபோதும் நெஞ்சு அசைந்திலன் அசஞ்சலன்**

எல்லாம் இழந்தபோதும் நெஞ்சம் பொறுமையிலிருந்து அசைய வில்லை. சஞ்சலம் என்பதையே அறியாப் பொறுமையின் இருப்பிடமான

தருமரை அசஞ்சலன் என்று புலவர் பாராட்டு கின்றார். சஞ்சலம் இல்லாதவன் அசஞ்சலன் என்கிறார்.

இத்துடன் முடிந்ததா? இல்லை சகுனி ஆசைகாட்டுகின்றான். இன்னும் ஒருபொருள் உன்னிடம் இருக்கிறதே அதைப் பணயமாக வைத்து ஆடி இழந்த அனைத்தையும் மீட்டிடலாமே என்கிறான். அது என்ன பொருள்? ஐவர்க்கும் பத்தினியான துரௌபதை என்னும் விலைமதிக்கமுடியாத பொருளையும் வைத்துஆடி இழந்து விடுகின றான்.

இந்த நிலைகண்டு தம்பியர் பொறுமை இழந்து பொங்கி எழுகின்றனர்.

**வீமன்கதைமேல் கைவைக்க விசயன்சிலைமேல் விழிவைக்க**
**தாமம் புனைதோள் இளையோரும் தத்தம் கருத்தில் சினம்காட்ட**
**தூமம்படு செந்தழல் அவியச் சோனைமேகம் சொரிவது போல்**
**நாமம் தருமன் எனத்தக்கோன் இளையோர் ஆற நவில்கின்றான்.**

சூதில் எல்லாவற்றையும் தருமன் இழந்த நிலைகண்டு கோபத்தை அடக்க முடியாமல் வீமன் தன்கதாயுதத்தைத் தூக்கு கின்றான் அர்ச்சுனன் தன் காண்டீப வில்லில் நாணேற்றப் பார்க்கின்றான். வெற்றிமாலை அணிந்த வீரர்களான நகுல சகாதேவர்கள் கண்களில் கோபாக்கினி பொறிபறக்கப் பொங்கி எழுகின்றார்கள். பொறுமையே உருவான தருமர் - சுவாலித்து எரிகின்ற காட்டுத்தீயை அணைக்கவல்ல சோனாவாரியான மழைபோல அவர்களது கோபம் அடங்கக் கூடியதகாப் பின்வருமாறு கூறுகின்றான்.

தம்பியர்களே!

**தேம்போதனைத்தும் மெய்சாயும், சிலபோதலரும், சிலபோது**
**வேம்போது அங்கு வாழ்வ எலாம் வெங்கானுடனே வேகாவோ**
**ஆம்போதாகும் அதுவன்றி ஆயபொருள்கள் அம்முறையே**
**போம்போதனைத்தும் போம், முன்னம் பொறுத்தீர் இன்னும் பொறும்.**

தேன் சொரிந்து மணங்கமழும் பூக்கள் சிலவாடும் போது வேறு சிலமலரும் சிலவேளை மலர்க்காடு எரியும் போது அங்குள்ள மலர்கள் எல்லாமே எரிந்து விடுவதும் உண்டல்லவா. அது போல

ஆகும் காலத்தில் எல்லாம் ஆகும். போகும் காலம் வந்தால் எல்லாம் போய்விடும் என்பதை மறவாதீர்கள். இவ்வளவு காலமும் பொறுத்திருந்த நீங்கள் இன்னும் பொறுத்திருங்கள் என்று கூறித் தான்பொறுமை காத்தது போலத் தம்பிமாரையும் பொறுமைகாக்க வைக்கின்ற தருமரின் பெருமையே பெருமை.

**"ஆவது ஆகும்காலத்து ஆவதும் அழிந்து சிந்திப்**
**போவது போகும்காலம் போவதும்" இயற்கையே**

எனும் பாடத்தை இக்காவிய நாயகன் எமக்கும் சொல்லித் தருகின்ற பெருமைக்கு உரியவராகின்றார் அல்லவா. எனவே இராமாயாண காவிய நாயகன் இராமனும் மகாபாரத காவிய நாயகன் தருமரும் தமக்கு வந்த இழப்புக்களைத் தாங்கிப் பொறுமைகாத்த பெருமைக்குரிய - பொறுமையின் நாயகர்களாக விளங்குகிறார்கள் என்பது எவ்வளவு பொருத்தம்.

**"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றும் துணையும் புகழ்"**

என்னும் பொய்யாமொழி என்றும் பொய்யாமொழியல்லவா?

இலங்கை வானொலி கலைக்கோலம் நிகழ்ச்சியில் 2010.04.01 இல் பதிவு செய்யப் பெற்றது.

உ
சிவமயம்

# பசிவந்திடப் பத்தும் பறந்து போம் உண்டிகொடுத்து உயிர் காப்போம்

இந்த உலகில் வாழும் மாந்தரை எண்ணில்லாத நோய்கள் அடிக்கடி வந்து வருத்துகின்றன. ஆனால் அவற்றுக்குரிய மருந்துண டதும் மாறிவிடுகின்றன. எல்லா நோயும் எல்லார்க்கும் வருவதில்லை. எல்லார்க்கும் எல்லா நாட்களும் வரும் நோய் ஒன்று உண்டு. அது மாறாத நோய். அந்த நோயைப் போக்குவதற்காகவே மக்கள் பாடுபட்டுழைக்கிறார்கள். விலங்குகள் பறவைகள் கூட இதற்கு விதிவிலக்கல்ல. அதுதான் பசிஎன்கிற நோய். இதனை இலக்கியங்கள் பசிப்பிணி எனப் பாடுகின்றன. பசிப்பிணி பற்றிப் பாடாத இலக்கியங்களே இல்லை எனலாம்.

மகாகவி பாரதியார் கூட "வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்" என்று சொன்னது மட்டுமல்ல "தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்தச் சகத்தினை அழித்திடுவோம்" என்றும் ஆவேசமாகப்பாடுகின்றார். பசிப்பிணி அவ்வளவு கொடியதா. இது என்ன தான் செய்யும் என்று ஔவையாரிடம் கேட்டுப் பார்க்கலாம் ஏனெனில் தமிழ்ப் புலவர்களில் ஔவையார் தான் பசிப்பிணியாலே பெரிதும் துன்பப்பட்டவர். இந்த உலகிற்குக் கல்வி அறிவுபுகட்ட வேண்டும் என்பதற்காகத் தனது இளமைக் கோலத்தையே துறந்து முதுமைக் கோலம் பெற்று ஔவைக்கிழவியாகி ஊரூராகச் சென்று தமிழுக்கு அரும்பணி யாற்றியவர்.

ஔவைக்கிழவி பசியாற் பட்ட அவமானங்கள் பல. தன் பசி தீர்க்க நாவற் பழத்திற்காக - சுட்ட பழத்திற்காகப் பாடினார். தவிட்டுக் கூழுக்காகப் பாடினார். பல இடங்களில் பாடியபோதும் பசிதீர உணவு கிடையாமல் ஏமாற்றமுற்றார். அப்படிப்பட்ட ஔவையார் தனது பட்டறிவைக் கொண்டு பசியின் கொடுமை பற்றிப் பாடிய பாடலொன்று

எங்கள் பட்டி தொட்டியெல்லாம் பசிவந்திடப் பத்தும் பறந்திடும் என்னும் பழமொழி யாகவே வழங்கி வருவதைக் காண்கின்றோம்.

**மானம் குலம் கல்வி வண்மை பொறையுடைமை**
**தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை – மானின்**
**கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்**
**பசிவந்திடப் பறந்து போம்.**

எனும் அழகிய வெண்பாவால் பசிவந்திடப் பத்தும் பறந்து போம் எனப் பாடுகின்றார். பசிவந்தால் பிறரிடம் உணவுக்காக இரக்க வேண்டி வரும், அதனாலே தன்மானம் போய்விடும், குலப் பெருமை குன்றிவிடும், எவ்வளவு கல்வியால் பெரியவரானாலும் கல்விப் பெருமையும் கலைந்துவிடும். வாண்மையாகிய ஈந்து உவக்கும் இன்பம் தொலைந்துவிடும். பொறுமை நம்மை விட்டுப் போய்விடும். செய்ய வேண்டிய தானதர்மங்கள் தவறிவிடும், தவம் கூடச் சித்திக்காது. வாழ்வில் காணவேண்டிய உயர்ச்சிகள் தவறித் தாழ்வடைய வேண்டி வரும், செய்ய வேண்டிய முயற்சிகள் எல்லாம் தவறிவிடும் மனதுக்கு இன்பம் தரும் மகளிர் மீது கொள்கின்ற காதல் கூடக் கைகூடாது என்கின்றார்.

மனிதர் மனிதராக மாண்புடன் வாழ்வதற்குரிய பண்புகள் ஒன்றிரண்டல்லப் பத்தையுமே பசி பறக்கடித்துவிடும் என ஔவைக் கிழவி சொல்லும் பட்டறிவுப் பாடல் எம்மை விழிப் படையச் செய்கிறது.

அப்படியானால் இந்தப்பத்து மனித விழுமியங்களையும் காப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும். உழைத்து வாழ வேண்டும் பிறர் உழைப்பில் வாழ நினைக்கக் கூடாது. இதனையே வள்ளுவர்

**பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
**வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்**

என்கின்றார் பழிக்கு அஞ்சி அறநெறி நின்று பாடுபட்டுழைத்து அதனை இல்லாதோர்க்குப் பகுத்துக் கொடுத்து வாழ்ந்தால் பசி மட்டுமல்ல இந்தத் துன்பப்பிறவியே இல்லாமல் இறையின்பம் பெறலாம் என்கின்றார்.

* * *

ஔவைக் கிழவி பசியின் கொடுமை பற்றி இவ்வளவும் சொன்ன பட்டறிவையும் பார்த்தல் பயன்தரும். தனக்கென ஒரு ஊரோ, வீடோ, உறவோ இன்றி "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உயர் நெறியில் ஊருக்கு உபகாரியாக வாழ்ந்த ஔவையார் ஒரு நாள் வழிநடந்து களைத்துப் பசியால் வருந்திப் போம் போது ஒரு குடிசை கண்ணுக்குப் பட்டது. அங்கு ஏதாவது பெற்றுப் பசியாறலாம் என்று உள்ளே போகிறார். அங்கு ஒரு மெலிந்த பெண் கண்ணுக்குப் படுகிறாள். அம்மா, பசிதாங்க முடியவில்லை ஏதாவது தருவாயா என்று கேட்கின்றார். அந்தப் பெண் என்னிடம் தவிட்டுக் கூழ்தான் இருக்கிறது. அதுவும் போதியது இல்லை அதிற் கொஞ்சம் உனக்கும் தருகிறேன் என்கிறாள். ஔவையார் ஆறியிருந்து அவளுடைய வீட்டுச் சுவரைப் பார்க்கிறார். அங்கு ஒரு அழகான பாடல் இரண்டு அடிகள் எழுதியிருக்கு. இன்னும் பாட்டுப் பூர்த்தியாக்கப்பட வில்லை. புலவர் அல்லவா இந்தப் பாடல் ஔவையைக் கவர்ந்து விடுகிறது. பாடலைப் படித்துப் பார்க்கிறார்.

**தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே**
**மண்ணாவதும் சோழமண்டலமே – பெண்ணாவாள்**

என்று பாடல் குறையில் நிற்கிறது ஔவையார் அந்தப் பெண்ணைப் பார்த்து அம்மா நீயும் ஒரு புலவரா அழகான பாடல் எழுதியிருக்கிறாயே. ஏன் அதை முடிக்கவில்லை என்று கேட்கின்றார்.

அந்தப்பெண்ணோ அம்மா நான் புலவர் அல்ல ஒரு பேராசை யால் செல்வம் எல்லாம் இழந்து தவிட்டுக் கூழுக்கும் வழியில்லாமல் தவிக்கும் ஏழையாகி விட்டேன் என்கிறார். என்ன நடந்தது விபரமாகச் சொல் என ஔவையார் ஆவலுடன் கேட்க அந்தப் பெண் சொல்கிறாள். என்பெயர் சிலம்பி "**புலவர் பாடும் புகழுடையார்**" என்று பெருமையாகச் சொல்கிறார்களே அந்தப்புகழில் எனக்கும் ஆசை வந்தது. கம்பர் வாயால் பாடப்பட வேண்டும் என்ற ஆசையுடன் அவரிடம் போனேன். அவர் என்னைப் பாடச் சம்மதித்தார். ஆயிரம் பொன் தரவேண்டும் என்று கேட்டார். பொன்னைத் தேடிவை உன் வீட்டுக்கு வந்து உன்னைப் பாடுகிறேன் என்று சொன்னார். சொன்னபடி வந்தார் நான் அவர் வருமுன் என்னிடமிருந்த நகைநட்டு, பொருள்பண்டம் எல்லாம் விற்றும் ஐந்நூறு பொன் தான் தேறியது கம்பர் வந்தார், பொன்னைக் கேட்டார் நான் உள்ளதைச் சொல்லி

ஐந்நூறு பொன்னையும் கொடுத்தேன் அவர் ஐந்நூறு பொன்னுக்கு அரைப்பாட்டு என்று சொல்லிவிட்டு இந்தச் சுவரில் இரண்டு வரி எழுதிவிட்டுப் போய்விட்டார். என் பொன்னும் போனது பாதிப் பாட்டின் பொருளும் தெரியவில்லை. பாட்டில் என்பெயரையும் காணவில்லை. இப்போ தவிட்டுக் கூழுக்குத் தவிக்கிறேன். என் நிலை யாருக்கும் வரக்கூடாதம்மா என்று அழுதாள்.

நீ அழாதே என் பசிக்கு கூழ்தந்தால் போதும் இதோ அந்த மீதிப் பாட்டை நானே எழுதிவிடுகிறேன் என்று சொல்லிக் கூழைக்குடித்துவிட்டுப் பாட்டைப் பூர்த்தி செய்தார் ஒளவை.

**தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே**
**மண்ணாவதும் சோழமண்டலமே –பெண்ணாவாள்**
**அம்பொற்சிலம்பி அரவிந்தத்தாள் அணியும்**
**செம்பொற் சிலம்பே சிலம்பு.**

தண்ணீரிலே தலை சிறந்தது காவிரி நீர். மன்னர்களில் சிறந்தவன் சோழமன்னன், மண்டலங்களிலே சிறந்தது சோழ மண்டலம், அதுபோல பெண்களுக்குள்ளே சிறந்தவள் இந்த சிலம்பி தான் என்று சரஸ்வதியின் காலில் உள்ள பொற்சிலம்பே நீ இந்த உலகமெல்லாம் சொல் என்று ஒளவையார் பாடலின் பொருளையும் சொல்லி முடித்தார். சிலம்பியின் மகிழ்வுக்கு எல்லையில்லை நான் ஆசைப்பட்டது போலக் கம்பரும் ஒளவையும் சேர்ந்து பாடும் புகழ் கிடைத்ததே இனி இறந்தாலும் பறவாயில்லை எனக் கூறி அம்மா என்னிடம் தரப் பொன்னில்லை இந்தத் தவிட்டு கூழ் முழுவதையும் நீங்களே குடியுங்கள் என்று கொடுத்தாள்.

சிலம்பிக்கு மகிழ்ச்சி, ஒளவையாருக்கோ கம்பன் ஐந்நூறு பொன்னுக்குப் பாடினான், நான் அரைவயிறு கூழுக்கு பாடும் நிலைக்கு இந்தக் கொடியபசி ஆளாக்கிவிட்டதே என மனதுக்குள் அவமானத்தால் துவண்டாள். இவ்விதமான பட்டறிவுதான். பசிவந்திடப் பத்தும் பறந்து போம் என்ற உண்மையைப் பாடவைத்தது.

* * *

இவ்விதமான காட்சிகளை எமது தமிழ் இலக்கியங்களில் பரக்கக் காணலாம். இரட்டைக் காப்பியங்கள் எனப் போற்றப்படுபவற்றுள்

ஒன்றான மணிமேகலை பசிப்பிணி தீர்ப்பதையே இலக்காகக் கொண்ட காப்பியம். மணிமேகலா தெய்வம் கோவலன் மாதவி மகளாகிய மணிமேகலைக்குக் கொடுத்த அள்ளஅள்ளக் குறையாத அட்சய பாத்திரம் எனும் அமுதசுரபி கொண்டு பசி தீர்த்த வரலாறு உண்டு. புறநானுற்றிலே குடபுலவியனார் எனும் புலவர்

**நீர் இன்றமையா யாக்கைக்கெல்லாம்**
**உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டிமுதற்றே உணவின்பிண்டம்**

எனப்பாடுகின்றார். நீரும் உணவும் இன்றி வாழ முடியாத இந்த உடலுக்கு உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் ஆவர். உணவு இன்றேல் உயிர் உடலைவிட்டுப் போய்விடும். ஆதலால் உணவின் பிண்டமாகிய இந்த உடலுக்கு உணவு கொடுத்தல் உயிர் கொடுத்தல் ஆகும். எனக் கூறுகின்றார். இதன்மூலம் பசித்தோர்க்கு உணவளித்தலின் உயர்வை உணரவைக்கின்றார்.

இதனால் தான் நம்மவர் பசித்தோர்க்கு உணவளித்தலைத் தலையாய தர்மமாகக் கொண்டனர். மகாபாரத யுத்தத்தின் போது சேரமன்னன் சேரலாதன் பாண்டவர் கௌரவர் சேனைகளுக்கு யுத்தகளத்திலே சோறிட்டான். இதனால் அவன் பெயர் பெருஞ்சோற்றுச் சேரலாதன் என்று இன்றும் புகழுடன் நிலைக்கிறது.

திருமூலர் கூடத்தனது திருமந்திரத்தில் "ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்" என்கின்றார் பசித்தவரை இன்னார் இனியார் என்று ஆராயாது உணவளித்து அவர் உயிர் காக்கவேண்டும் என்கின்றார்.

சேக்கிழார் பெருமானும் "மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்" என்கிறார். இந்தப் பூமியில் பிறந்த பயனே அடியவர் பசிதீர்க்கத்தான் என அறுதியிட்டுச் சொல்கின்றார்.

* * *

புறநானூற்றிலே இன்னும் ஒரு புதுமையான பாடல் நாம் ஒவ்வொருவரும் பசிப்பிணி மருத்துவர்களாக இருக்க வேண்டும் எனச்

சொல்கிறது. வழமையாக அரசர்களை வள்ளல்களை புலவர்கள் பாடுதல்தான் மரபு இங்கு பசித்தோர்க்கு உணவளிக்கும் பசிப்பிணி மருத்துவனாகிய சிறுகுடிக்கிழான் பண்ணனைச் சோழன்குளமுற்றத்துத் துஞ்சியகிள்ளிவளவன் எனும் அரசனே பாடுகின்ற புதுமையைக் காண்கின்றோம்.

பசியால் வருந்திய பாணர்கள் இங்கே பசிப்பிணி மருத்துவர் ஒருவர் இருக்கிறாராமே அவர் வீட்டுக்குப் போகும் வழியாதோ எனக் கேட்கின்றனர். அதோ மழைக்காலத்தில் முட்டை கொண்டு திட்டை ஏறும் எறும்புக் கூட்டம் போன்று ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் வரிசையாகச் சோற்றுப் பொதியுடன் போவதைப் பாருங்கள் அதுதான் பசிப்பிணி மருத்துவன் பண்ணன் வீட்டுக்கு வழி எனக்காட்டப்படுகிறது.

**முட்டை கொண்டு வன்புலம் சேரும்**
**சிறுநுண் எறும்பின் இல்ஒழுங்கு ஏய்ப்ப**
**சோறுடைக்கையர் வீறுவீறு இயங்கும்**
**இருஞ்சிளைச்சிறார்க் கண்டும் கண்டும்**
**மற்றும் மற்றும் வினவுதும் தெற்றென**
**பசிப்பிணி மருத்துவன் இல்லம்**
**அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே**

என்பது அப்புறநானூறு.

பசிப்பிணிமிகக் கொடியது அது உயிரை மட்டுமல்ல மானம் குலங்கல்வி முதலான மனித விழுமியங்களையே போக்கடிக்கக் கூடியது. ஆதலால் நாம் ஒவ்வொருவரும் வள்ளுவர் வாக்கை நோக்கி இல்லார்க் கொன்றீவதே ஈகை என உணர்ந்து பசிப்பிணி மருத்துவர்களாகப் பகுத்துண்டு வாழ்ந்து வாழ்வின் பயனைப் பெறுவோமாக.

இலங்கை வானொலி கலைக்கோலம் நிகழ்ச்சியில் 2010.12.23 இல் பதிவு செய்யப் பெற்றது

உ
சிவமயம்

# நிகண்டு இலக்கியம்

இக்காலத்தில் நாம் நம் தமிழ் மொழியிலுள்ள சொற்கள் அனைத்தையும் பார்க்க வேண்டுமானால் அகராதியில் பார்க்கலாம். அகராதியில் அவற்றின் பொருளையும் பார்க்கலாம். தமிழில் முதன்முதல் அகராதியை அறிமுகம் செய்து வைத்தவர் மேனாட்டி னின்றும் வந்த வீரமாமுனிவர் ஆவர். அவர் தமிழ்ச்சொற்களை நான்குவகையாகப் பகுத்துத் தொகுத்து அச்சிற் பதித்து சதுரகராதி எனப் பெயரிட்டுத் தந்தனர். அதனைக் கண்ட பின்னரே தமிழ் அறிஞர்கள் அகராதி தொகுக்கும் முறையைக் கண்டனர். யாழ்ப்பாண அகராதி, கதிரவேற்பிள்ளை தமிழ்மொழி அகராதி, தமிழ்ச்சங்க அகராதி சென்னைப் பல்கலைக்கழக அகராதி முதலிய பல அகராதிகள் இன்று உலவக் காண்கின்றோம்.

அகராதி முறை தமிழுக்கு வரமுன்பு நிகண்டுமுறையே தமிழில் இருந்தது. அகராதி சொற்களுக்கு பொருள் கூறும் பண்புடையது. தமிழ் நிகண்டு முறை பொருளுக்குரிய சொற்களைத் தொகுத்துக் கூறும் இயல்புடையது. அது ஒரு இலக்கியம் போலவே பயிலப்பட்டது.

பண்டைக் கால நூல்களைச் செய்யுள் வடிவாகவே செய்தனர் புலவர். எளிதில் பொருள்காண இயலாத செய்யுட்கள் அமைந்த நூல்களும் உள்ளன. பொருள் காண்பதற்குக் கருவியாக நிகண்டு எனும் பெயருடைய நூலும் இயற்றினர். நிகண்டு என்ற சொல்லின் பொருள் தமிழ் மொழிக்குப் பொருள்காட்டும் நூல் என்பது போலும். திவாகர நிகண்டு பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு எனக்கூறும் வழக்கு உள்ளது.

சென்ற நூற்றாண்டில் தமிழ்க் கல்விக்கு அடிப்படையாக அமைந்தவை நிகண்டுகள். நிகண்டு மனப்பாடம் செய்த பின்னரே மற்ற இலக்கிய இலக்கணம் கற்கத் தொடங்குவது முற்கால மக்கள் நூல்பயிலும் முறையாக இருந்தது. இம்முறையை நன்னூல் பாயிர உரையில் நிகண்டுகற்று இலக்கியப் பயிற்சி செய்தபின் இந்நூல் கேட்கத்தக்கது என வரைந்திருப்பது கொண்டு அறியலாம்.

இன்று கிடைக்கின்ற தமிழ் நூல்களில் முதல்நூல், முதன்மை யான நூல், எழுத்து சொல் பொருள் ஆகிய முப்பொருளையும் கூறும் நூல் தொல்காப்பியம். தொல்காப்பியம் தமிழின் விதை தமிழ்ப் பண்பாட்டின் ஆணிவேர்.

தொல்காப்பியம் தொடங்கி இன்றுவரை சொற்கள், வளர்ந்து கொண்டிருக்கின்றன. தொல்காப்பியத்தில் அடிச்சொற்களாக 3500 சொற்கள் இருக்கலாம். சங்க இலக்கியத்தில் அடிச் சொற்களாக 10ஆயிரம் இருக்கலாம். இன்று தமிழ் மொழியில் ஒரு இலட்சத்து 25ஆயிரம் சொற்களுக்கு மேல் உள்ளன. இதற்கெல்லாம் அடிப்படை யாக அமைவது தொல்காப்பியத்தின் உரியியல். அதனை உரிச்சொல் இயல் என்றும் சொல்லலாம். சொல்லுக்குப் பொருள் தருவது உரியியல்.

அடிப்படைச் சொற்களை பெயர், வினை, இடை, உரி என்ற நான்கு நிலைகளில் இலக்கணத்தில் கூறுவர். பாட்டு எழுதுவதற்கு இயற் சொல் திரிசொல், திசைச் சொல், வடசொல் என்ற நான்கு வகையான சொற்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று தொல்காப்பியர் கூறுவார்.

நிகண்டு என்ற சொல்லுக்குப் பொருள் மிகத் தெளிவாக அறுதியிட்டு கூறமுடியாத போதும் நிகண்டுகள் பல சொற்களுக்குப் பொருளும் விளக்கமும் தருகின்றன. பல்வகையான சொற்களின் கோவையாக பெயர்களின் களஞ்சியமாக அமையும் இவை இலக்கண இலக்கியச் செய்திகளும் தந்து இலக்கிய ஆக்கத்துக்கு உதவும் களமாகவும் காணப் பெறுகின்றன.

நிகண்டு என்ற சொல்லை இடுகுறிப்பெயராகக் கருதும் பாங்கு இறையனார் களவியலில் உண்டு. நூற்பெயர் என்பது நூலது பெயர் என்றவாறு நூல் பெயர்பெறுமிடத்துப் பலவிகற்பத்தால் பெயர் பெறும். எப்படியெனில் செய்தானால் பெயர் பெறுதலும், செய்வித்தானால் பெயர் பெறுவதும் இடுகுறியால் பெயர் பெறுதலும், அளவினால் பெயர் பெறுதலும், சிறப்பினால் பெயர் பெறுதலும் உண்டு. இடுகுறியால் பெயர் பெற்றது நிகண்டு.

எனினும் நன்னூல் சூத்திர உரை நிகண்டு என்பது கூட்டம் எனும் பொருள் கொள்ள இடமளிக்கின்றது என்பர். "கூட்டம் எனினும் நிகண்டு எனினும் ஒக்கும்" என்பது சங்கர நமச்சிவாயர் நன்னூல் உரையில் தரும் குறிப்பாக உளது.

வடமொழியகராதி நிகண்டு என்பதைச் சொற்தொகுதி எனப்புரிந்து கொள்ள உதவுகின்றது. கண்ட என்பது மணியைக் குறிக்கும். அது எழுப்பும் ஒலி அடிப்படையில் பேச்சுக்கு ஆகிச் சொல்லைக் குறித்து அதன் தொகுதிக்கும் ஆகியிருக்கலாம் என அறிஞர் கருதுவர்.

வடமொழியில் பழமைவாய்ந்ததாகக் கொள்ளப்படும் நிகண்டுகள் வேதச் சொற்களின் தொகுதியாகவே இருந்தன. புலவர்களுக்குச் சொற்தொகுதி அளிக்கும் நூல்களாக இவை இருந்தன. தமிழ் நிகண்டுகளும் அப்படியே.

நிகண்டு என்ற சொல்லைத் தமிழ்ச் சொல்லாகக் கொண்டு நீண்ட என்ற அடிப்படைச் சொல்லின் வேறுவடிவமாகக் கருதிக் கூறுவர். சொற்களின் பட்டியல் நீண்டு கொண்டு போதலின் நிகண்டு எனும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கலாம் எனவும் கருதுவர்.

நிகண்டுகளுக்கு அடிப்படையாக அமைவது தொல்காப்பியம் கூறும் கருப்பொருள்தான். கருப்பொருளாகத் தொல்காப்பியர்

**தெய்வம் உணாவே மா மரம் புள் பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருஎன மொழிப** - என்பார்

தெய்வம் - தெய்வப் பெயர்த் தொகுதி
உணவு - உணவின் வகை
மா - விலங்கின் பெயர்த் தொகுதி
மரம் - மரப்பெயர்த் தொகுதி
புள் - பறவை வகை
பறை - தோற்கருவி வகை
செய்தி - தொழில், ஆயுதவகை
யாழ் - யாழ்த்திறவகை

இந்த ஒழுங்குமுறையிலேயே நிகண்டுகளில் சொற்கள் தரப் பட்டுள்ளன. இந்தவகையில் திவாகர நிகண்டில் தெய்வப் பெயர்த் தொகுதியில் சிவன் பெயர்களாக 64 கூறப்பட்டிருக்கின்றன.

**சங்கரன் இறையோன் காமதகனன்**
**கங்காதரனே கறைமிடற்றண்ணல்**
**கூற்றை உதைத்தோன் குன்றவில்லி**
**ஏற்றுவாகனம் திரியம்பகன் சோதி**
**நக்கன் சடையோன் நாரிபாகன்**
**முக்கட்பகவன் பசுபதி பரமன்**

எனத் தொடர்ந்து கண்ணுதல் மூர்த்தி கயிலை ஆளி என்று எண்ணிய நாமம் இன்னும் பலவே என முடிகிறது. இதில் சிவனைக் குறிக்கும் 64 பெயர்கள் இருப்பதைக் காணலாம். இவ்விதமே திருமால், பிரம்மா, கணபதி, முருகன் முதலான தெய்வங்களுக்குரிய பெயர்கள் தொகுதியாகச் செய்யுள் நடை யில் அமைந்திருக்கின்றன. இவ்விதமே உணவு முதலானவற்றின் வகுதிப் பெயர்களும் தொகுதியாகக் கூறப்படக் காணலாம்.

இலக்கணமும் நிகண்டுகளும் இலக்கியம் போன்று கற்பனையில் எழுதப் பெறுவதில்லை. இலக்கியங்கள் அனைத்தும் கற்பனையில் அமையும்.

தொல்காப்பியர் காலத்திலிருந்து 19ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் வழங்கிய சொற்களின் தொகுப்புத்தான் நிகண்டுகள். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பும் மிகுதியான வளமான தமிழிலக்கியங்கள் இருந்தன. இல்லையென்றால் தொல்காப்பியம் போன்ற ஒரு இலக்கண நூல் தோன்றியிருக்க முடியாது. அதனால் முதல் நிகண்டு ஆகிய திவாகர நிகண்டில் சங்ககாலச் சொற்களும், இடைக்காலச் சொற்களும் அமைகின்றன.

இதுவரை எழுந்த நிகண்டுகள் எல்லாம் கிடைக்காவிட்டாலும் பதினெட்டு நிகண்டுகளைத் தொகுத்து மெய்யப்பன் பதிப்பகத்தினர் இருபாகங்களாக வெளியிட்டுள்ளனர்.

முதற்பாகத்தில் திவாகரம், பிங்கலம், உரிச்சொல்நிகண்டு, கயாதரம், பாரதிதீபம், சூடாமணி, அகராதிநிகண்டு, கைலாசநிகண்டு, சூளாமணி ஆசிரியநிகண்டு என்பனவும் இரண்டாம் பாகத்தில் வடமலைநிகண்டு, அரும்பொருள் விளக்கநிகண்டு, பொதிகைநிகண்டு, நாமதீமநிகண்டு, பொருட் தொகைநிகண்டு, நாநார்த்த தீபிகை,

அகராதிநிகண்டு எனும் ஒன்பது நிகண்டுமாகப் பனெட்டு நிகண்டுகள் பதிப்பில் வெளிவந்துள்ளன.

நிகண்டுகள் பாடல்களாகவே செய்யப்பட்டுள்ளன. தமிழ் நிகண்டு எழுதுவதற்கு ஆசிரியம், வெண்பா, கலித்துறை விருத்தம் ஆகிய யாப்புகள் முறையாகப் பயன்படுத்தப்பட்டன என்பதை நிகண்டுகளைப் படிக்கும் போது தெரிகிறது.

திவாகரரும், பிங்கலரும் நூற்பா எனும் சூத்திரத்தில் நிகண்டு செய்தார்கள். பின்வந்தோர் நூற்பாவிலும் இலகுவானவையான ஆசிரியம், வெண்பா, கலித்துறை, விருத்தம் ஆகிய யாப்பு வகைகளைப் பயன்படுத்தியமை நிகண்டுகளின் வரலாற்றை ஆராயும் போது தெரிகிறது.

பழங்காலத் தமிழ்க் கல்வியில் நிகண்டுகள் முதலிடம் பெற்றன என்று கண்டோம். அதற்குக்காரணம் தமிழ்ச் சொற்களின் ஆற்றலை வளர்த்துக் கொள்வது, அதாவது சொற்களஞ்சியத்தை வளர்த்துக் கொள்வதற்காகும். முற்கால இலக்கியங்களைக் கொண்டு நிகண்டுகள் அமைந்த காரணத்தால் இலக்கியங்கள்பற்றியும் இலக்கிய வகைகள் பற்றியும் நிகண்டுகளைக் கற்கும் போதே தெரிந்து கொள்ள முடிந்தது.

தொடை அகராதி நிகண்டுகள் இலக்கிய ஆக்கத்தில் கவிஞனுக்கும் கற்போனுக்கும் சலிப்பையும் சோர்வையும் நீக்கத்துணைபுரிந்தன. இலக்கியத்திலிருந்தே நிகண்டுகளில் பட்டியல் அமைக்கும் முறை தோற்றம் கொண்டது என்பதற்குப் புறநானூறு சிலப்பதிகாரம் போன்றன சான்றாயமைகின்றன.

நிகண்டுகள் வெறும் சொற்பொருள் கூறும் அகராதிகள் அல்ல அவையே இலக்கியங்கள். அகராதியில் எடுத்துக் கொண்ட சொல்லின் பொருளை மட்டுமே பார்க்க முடியும். நிகண்டில் எடுத்துக் கொண்ட பொருளைக் குறிக்கும் சொற்கள் அனைத்தையும் காணமுடியும் நிகண்டுகள் பல்துறைச் செய்திகளைத் தொகுத்துக் கூறும் களஞ்சியங்கள். எண்ணற்ற அகராதிகள் தோன்றினாலும் நிகண்டுகளில் உள்ள பயன் அகராதிகளில் இருக்காது.

நிகண்டுகள் வாயிலாக சமயம், இலக்கியம், இசை, மருத்துவம் போன்ற பல வகையான பண்டைய மரபுச் செய்திகள் நமக்குக்

கிடைக்கும் புதிய சொல்லாக்கங்களுக்கும், மொழி பெயர்ப்புச் செய்வோர்க்கும் பயன்படும். மொழிப்பயிற்சி செய்வோர் சொல் வளத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு இவை துணையாகின்றன. மொழிவரலாற்றுச் சான்றுகள் மட்டும் அல்லாமல் சமுதாய தமிழக வரலாற்றின் குறிப்புக்கள் பலவற்றையும் அறியலாம்.

இனி, உதாரணங்கள் சிலவற்றை ஒப்பீட்டு ரீதியாக நிகண்டுகளில் இருந்து காண்போம்.

திவாகர நிகண்டில் சிவனைக்குறிக்கும் பெயர்கள் 28ஐப் பார்த்தோம்.

பிங்கல நிகண்டில்

**அரன்சிவன் அருபிஅனந்தன் உருத்திரன்**
**பரன்கறை மிடற்றோன் பார்பதி கொழுநன்**

எனத் தொடர்ந்து ஆசிரியப்பாவில் 95பெயர்கள் கூறப்படுகின்றன.

உரிச்சொல் நிகண்டில்

**சங்கரன் தாணு சயம்புதிரியம்பகன்**
**அங்கணன் ஆதி அனலேந்தி – பைங்கயிலை**
**வெற்பன் விடையன் விமலன் விரிசடையன்**
**நற்பன்னகப் பூணினான்**

எனத்தொடங்கி 6 வெண்பாக்களில் 68பெயர்கள் கூறப்படுகின்றன.

கயாதர நிகண்டில்

**ஆதிஅநாதி அரன்சிவன் ஈசன் ஆனந்தன் அத்தன்**
**சோதி பினாகி உருத்திரன் பிஞ்ஞகன் சூலிசுத்தன்**
**பாதிஉமாபதி சங்கரன் கங்காதரன் பகவன்**
**பூதிபுனை பாண்டரங்கன் பரமன் புராந்தகனே**

எனத் தொடங்கி கட்டளைக் கலிப்பாக்கள் இரண்டில் 21 பெயர்கள் கூறப்படுகின்றன.

பாரதி தீபம் நிகண்டில்

**அரன்இறைவன் சிவன்சங்கரன் நித்தன் அமலன் கங்கா**
**தரன் உமைபங்கன் மலைவில்லி தற்பரன் தாணுசம்பு**

எனத் தொடங்கி 4 கட்டளைக் கலிப்பாவில் 66 பெயர்கள் கூறப்படுகின்றன.

சூடாமணி நிகண்டில்

**சங்கரன் இறையோன் சம்பு சதாசிவன் பேயோடாடி**
**பொங்கர வணிந்த மூர்த்தி புராந்தகன் பூதநாதன்**

எனத் தொடங்கிக் கட்டளைக் கலிப்பாவில் 66 பெயர்கள் கூறப்படுகின்றன.

கைலாச நிகண்டு சூடாமணியில்

**பிறைமுடிக் கடவுள் பெம்மான் பித்தன்**
**கண்ணுதற் பரமன் கங்கா வல்லபன்**

எனத் தொடங்கி ஆசிரியப்பாவில் 100க்கு மேற்பட்ட பெயர்கள் கூறப்படுகின்றன.

ஆசிரிய நிகண்டில்

**சங்கரன் சம்பு சதாசிவன் உமாபதி**
**தாணு ஏ பூதநாதன்**

எனத் தொடங்கும் இரண்டு அறுசீர் ஆசிரிய விருத்தத்தில் 87 பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

பொதிகை நிகண்டில்

**சங்கரன் உமாபதி பிரான் நம்பன்யோகி**
**சயம்பிறை சதாசிவன் கங்காளன் மானேந்தி**

எனத் தொடங்கி 3 எண்சீர் விருத்தத்தில் 101 பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

நாமதீப நிகண்டில்

**நந்திபெம்மானாலமர்ந்தோன் நம்பனிறை சோதி**
**அந்திவண்ணன் தாணுநித்தன் ஆனந்தன்**

எனத் தொடங்கி 10 வெண்பாக்களில் 100க்கு மேற்பட்ட பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

அபிதான மணிமாலை நிகண்டில்

**சங்கரன் இறையோன் புங்கவன் புனிதன்**
**அங்கணன் அறுகுணன் எண்குணன் அநகன்**

எனத் தொடங்கி ஆசிரியப்பாவில் 100க்கு மேற்பட்ட பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

இவ்விதம் தொல்காப்பியத்தில் கூறப்பட்ட கருப்பொருள்களின் ஒழுங்கில் தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, செய்தி, யாழ் எனும் ஒவ்வொரு தொகுதிக்குள் வரும் பொருள்கள் பற்றி இலக்கியத்தில் வழங்கும் சொற்களைத் தொகுத்து இலக்கிய நயம்மிக்க செய்யுள் வடிவில் தரும் நிகண்டுகள் படித்தும் ரசித்தும் பயன் கொள்ளத்தக்கன.

எமது சொற்களஞ்சியத்தைப் பெருக்குவதற்குப் பெருந்துணை யாவன நிகண்டுகள் எனில் தவறாகாது.

இலங்கை வானொலி கலைக்கோலம் நிகழ்ச்சியில் 2010.04.03 இல் பதிவு செய்யப் பெற்றது

உ
சிவமயம்

# எண்ணலங்கார நயம்

செய்யுள்களை அழகுபடுத்துவதற்குப் புலவர்கள் கையாளும் அணிகளில் ஒன்று எண் அலங்கார அணியாகும். எண்ணலங்காரம் என்பது ஒன்று முதலிய எண்களைப் பலவிதமாக ஒழுங்கமைத்து அதேவேளை பொருள்தரக்கூடிய விதமாகப் பாடுதல் ஆகும். ஒன்றிலிருந்து ஏறுநிரையில் அமைத்துப் பாடுதலும்,கூடிய எண்ணிலிருந்து இறங்கு நிரையில் அமைத்துப்பாடுதலும், ஏறி இறங்கி ஏறி இறங்கி மாறி மாறி வரப் பாடுதலும் ஆகப் பலவித எண்ணலங்காரங்கள் உண்டு. பெரும்பாலும் எண்ணலங்காரங்கள் கடவுளை முன்வைத்தே பாடப்படும்.

எல்லாருடைய காதுகளிலும் அடிக்கடி கேட்கும் பிரபல்யமான பாடல்.

**ஒன்றானவன் உருவில் இரண்டானவன்**
**ஓம்எனும் பிரணவத்தில் மூன்றானவன்**
**நன்றாய வேதத்தில் நான்கானவன்**
**நமச்சிவாயவென ஐந்தானவன்**
**இன்பச்சுவைகளுக்குள் ஆறானவன்**
**இனிய சுரங்களுக்குள் ஏழானவன்**
**அன்பர் மனங்களுக்குள் எட்டானவன்**
**அண்டங்கடந்தெங்கும் நின்றானவன்**

என்பது அப்பாடல் இதில் ஏறுநிரைப்படி இறைவன் குணங்களை ஒன்றிலிருந்து எட்டு வரை வைத்துப் பாடுகின்றார்.

இறைவன் ஒருவனாயுள்ளவர், சிவம்சக்தி என இரண்டாக உள்ளவர். ஓம் எனும் பிரணவத்தில் அ, உ, ம் என மூன்றானவர், வேதங்களில் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கானவன். பஞ்சாட்சரத்தில் ந,ம,சி,வா,ய என ஐந்தெழுத்தானவன். இன்பச்சுவைகளாகிய இனிப்பு, புளிப்பு, உறைப்பு, கைப்பு, கார்ப்பு,

துவர்ப்பு என ஆறு சுவைகளாக இருப்பவன். ஏழு சுரங்களிலும் ச,ரி,க.ம,ப,த,நி என ஏழு ஓசையாய் உள்ளவன். அன்பர்களுடைய மனங்களுக்குள் எட்டு மூர்த்திகளாயும் உள்ளவன். என ஒன்றிலிருந்து எட்டு வரை ஏறு நிரையில் எண்ணலங்காரம் நயம் தருகின்றது. இப்பாடலில் ஏறுநிரையில் ஒன்றிலிருந்து 8 வரை எண்ணலங்காரத்தைப் பார்த்தோம்.

இனி இறங்கு நிரையில் பன்னிரண்டிலிருந்து ஒன்று வரையான எண்ணலங்காரப் பாடலைப் பார்க்கலாம். இப்பாடல் குற்றாலக் குறவஞ்சியில் திருகூடராசப்பக் கவிராயர் பாடிய கடவுள் வணக்கப் பாடல்களில் ஒன்று.

**பன்னிருகை வேல்தாங்கப்**

**பதினொருவர் படைதாங்கப் பத்துத்திக்கும்**

**நன்னவ வீரரும்புகழ மலைகள் எட்டும்**

**கடலேழும் நாடி ஆடிப்**

**பொன்னின்முடி ஆறேந்தி அஞ்சுதலை**

**எனக்கொழித்துப் புயம்நான் மூன்றாய்**

**தன்னிருதாள் தரும் ஒருவன் குற்றாலக்**

**குறவஞ்சித் தமிழ் தந்தானே**

| | |
|---|---|
| இதில் பன்னிருகை வேல் தாங்க என்பதில் | 12 |
| பதினொருவர் படைதாங்க என்பதில் | 11 |
| பத்துத்திக்கும் என்பதில் | 10 |
| நவ வீரர் என்பதில் | 9 |
| மலைகள் எட்டு என்பதில் | 8 |
| கடலேழும் என்பதில் | 7 |
| பொன்னின்முடி ஆறேந்தி என்பதில் | 6 |
| அஞ்சுதலை என்பதில் | 5 |
| புயம்நால் மூன்று என்பதில் | 4, 3 |
| தன்னிருதாள் என்பதில் | 2 |
| ஆடும் ஒருவன் என்பதில் | 1 |

ஆகப் பன்னிரண்டில் இருந்து ஒன்றுவரை எண்கள் இறங்கு நிரையில் வரத்தக்கதாகப் பாடல் அமைவதைக் காணமுடிகிறது. இந்த எண்களில் சொல்லப்பட்ட பொருள்களும் முருகப்பெருமானுடன்

சம்பந்தப்பட்டதாக எளிதில் யாவரும் விளங்கக் கூடியதாக அமைந்துள்ளது.

முருகனின் பன்னிரு கைகளும் வேல்தாங்கியுள்ளன. பதினொரு உருத்திரர்களும் படைக்கலங்களைத் தாங்கிக் காவல்காக்கின்றனர். பத்துத் திக்குகளிலும் ஒன்பது வீரர்களும் புகழ் பாடுகின்றார்கள். எட்டு மலைகளிலும் ஏழு கடல்களிலும் பாடி ஆடிக் கொண்டு ஆறு தலைகளிலும் பொன்முடி தாங்கி எமது அஞ்சுதலை நீக்கி புயங்கள் நால் மூன்றாய் (பன்னிரண்டு) தன் இருதாள்களால் ஆடும் ஒருவனுமாகிய முருகன் குற்றாலக் குறவஞ்சி பாடத் தமிழ் தந்தானே என்பது இதன் பொருளாகும்.

ஏறுநிரையில் எண்ணலங்காரம் அமைந்ததையும் இறங்கு நிரையில் எண்ணலங்காரம் அமைந்ததையும் பார்த்தோம்.

இனி ஏறி இறங்கி மாறிமாறி வரும் எண்ணலங்காரத்தைக் காணலாம். இது எழுகூற்றிருக்கை எனப்படும் 121, 12321, 1234321, 123454321, 12345654321, 1234567 என ஏழுவரை எண்கள் ஏறிச் சென்று பின்னர் இறங்கி 7654321, 12345654321, 123454321, 1234321, 12321, 121 இவ்விதம் ஏறியும் இறங்கியும் எண்ணலங்காரத்தில் வரும் பாடல்கள் இலக்கியத்தில் மிக அருமையே யாகும். இது சித்திரக்கவிகளுள் ஒன்று.

தமிழ் இலக்கியத்தில் இயமகம், மாலை மாற்று, சக்கரமாற்று முதலான சித்திரக்கவிகளை முதன்முதல் பாடித் தொடக்கி வைத்தவர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் ஆவார். இவருடைய சித்திரக்கவிகளை இலக்கிய மாகக் கொண்டு தான் தமிழ்க் கவிதை யாப்பில் சித்திரக் கவியாப்பு செய்யப்பட்டது என ஆராய்ச்சியாளர் கூறுவர். இதனால் தான் சம்பந்தர், தமிழ்ஞான சம்பந்தர், தமிழ்விரகர் முதலான போற்றுதல்களுக்கு ஆளானார். சம்பந்தர் பாடிய திருவெழுகூற்றிருக்கை 47 அடிகளை உடையது. ஒன்று முதல் ஏழுவரை படிப்படியாக ஏறியும் இறங்கியும் 85 எண்களில் பொருள் பொருந்தப் பாடப்பட்டுள்ளது.

**ஓர்உருவாயினை மானாங்காரத்து**
**ஈரியல்பாய் ஒருவிண்முதல்பூதம்** 121
**ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்**
**படைத்தளித்தழிக்கமும் மூர்த்திகளாயினை** 123

| | |
|---|---|
| **இருவரோடொருவனாகி நின்றனை** | **21** |
| **ஓரால் நீழலுன் கழல் இரண்டும்** | |
| **முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி** | **1234** |
| **காட்டினை நாட்டமூன்றாகக் கோட்டினை** | |
| **இருநதி அரவமோடு ஒருமதி சூடினை** | **321** |

இவ்வண்ணம் பதினொருமுறை ஏறி இறங்கி ஏறி இறங்கி 85 எண்களுக்குப் புதுப்புதுப் பொருள் தந்து பாடுவது வியப்புக்குரியதாகும்.

எண்ணலங்காரத்தின் நயமும் எண்களின் வைப்பு முறையும், எண்களுக்குரிய பொருள் வைப்பு முறையும் தமிழ் இலக்கியத்தில் சுவைபயப்பன.

இங்கு நாம் ஏறு நிரையில் அமைந்த எண்ணலங்காரத்தை

**ஒன்றானவன்உருவில் இரண்டானவன்..........**

எனும் பாடலில் பார்த்தோம்.

இறங்கு நிரையில் அமைந்த எண்ணலங்காரத்தை குற்றாலக் குறவஞ்சியில் திரிகூடராசப்பக் கவிராயரின்

**பன்னிருகை வேல்தாங்கப் பதினொருவர் படைதாங்க.......**

எனும் பாடலில் பார்த்தோம்.

ஏறுநிரையிலும் இறங்கு நிரையிலும் மாறிமாறி 11 முறை ஏறி 7 இன் உச்சிக்குச் சென்று ஏறி இறங்கியதை ஞானசம்பந்தரின் திருவெழு கூற்றிருக்கை ஆகிய

**ஓருருவாயினை மானாங் காரத்து**
**ஈரியல்பாய் ஒரு விண்முதல்பூதம்**

எனத் தொடரும் 47 அடிகள் கொண்டபாடலில் பார்த்தோம்.

மனிதனுக்கு ஆள்பாதி ஆடைபாதி என்பதுபோலச் செய்யுளுக்கும் பொருள்பாதி அணிபாதி என்னலாம். அழகிய அணிநலங் கனிந்த பாடல்களை நுகர்ந்து இன்புறுவோம்.

இலங்கை வானொலி கலைக்கோலம் நிகழ்ச்சியில் 2012.06.14 இல் பதிவு செய்யப் பெற்றது

உ
சிவமயம்

# மறைபொருள் கூற்றுக்கவியின்பம்

புலவர்கள் தாம் செய்யும் கவிதைக்குப் பலவித அழகுகளைப் புனைவார்கள். நேரே பொருளைச் சொல்வதிலும் பார்க்கச் சொல்லும் முறையில் பலவித அழகுகளைப் புனைந்து பாடும் போது அதற்கு ஒரு கவர்ச்சியும் நயமும் இருக்கும். ஒரு குழந்தையைச் சாதாரணமாகப் பார்ப்பதிலும் பார்க்க அழகிய அணிகலன்களைப் பூட்டிப் பட்டுச் சட்டையைப் போட்டுப் பொட்டும் வைத்துப் பார்க்கும் போது அந்தக்குழந்தை எவ்வளவு கவர்ச்சியாய் எழிலாய் இருக்குமோ அதே போன்றதுதான் அணிநலம் சேரப்பாடும் கவிதையுமாகும்.

கவிதைக்குரிய அணிநலங்களிலே பலவகையுண்டு. அதை வகைப்படுத்தும் தண்டிஅலங்காரம் என்னும் ஒரு தனி இலக்கண நூலே இருக்கின்றது என்பதை எல்லாரும் அறிவர்.

நாம் இங்கு ஒருபுதுவிதமான அணிநலம் பொதிந்த செய்யுள் நயத்தைப் பார்ப்போம். இந்தச் செய்யுளைச் சாதாரணமாகப் படித்துப் பார்க்கும் போது அது ஒரு வேடிக்கையான செய்தியைச் சொல்வது போல இருக்கும். ஆழ்ந்து பார்த்தால் அதுவும் புலவன் சொல்லும் விளக்கத்தைப் பார்த்தால் வியப்பு வரும். ஆகா இதற்குள் இத்தனை ஆழமான பொருள் இருக்கிறதா என்ற ஆச்சரியமும் மனநிறைவும் வரும், அந்த அணிதான் மறைபொருள் கூற்று எனப்படுவது.

இதோ ஒரு திருமந்திரப் பாடலைப் பார்ப்போம்,

**வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது**
**புழுதியைத் தோண்டினேன் பூசணிபூத்தது**
**தொழுது கொண்டோடினர் தோட்டக்குடிகள்**
**முழுதும் பழுத்தது வாழைக்கனியே**

பாடலைப் படிக்க வேடிக்கையாக இருக்கிறதல்லவா இதைச் சற்று விரித்துப் பார்ப்போம்.

ஒரு தோட்டச் சொந்தக்காரன் பயிர் செய்வதற்காகத் தனது தோட்டத்தைக் கொத்துவித்தான். அதற்கெனப் பல தொழிலாளர் களையும் அங்கு குடியமர்த்தினான். அவர்கள் அவன் சொன்னபடி வேலைகளை ஒழுங்காகச் செய்தனர். தோட்டம் கொத்திப் பண்படுத்தி எருவிட்டு நீர்பாய்ச்சவும் ஒழுங்கு செய்யப்பட்டது. தோட்டக்காரன் தோட்டம் முழுதும் கத்தரி நடமுடிவு செய்தான். அவன் எண்ணப்படி கத்தரி விதைகள் தோட்டம் முழுவதும் நடப்பட்டது. நீர் பாய்ச்சப்பட்டது. சில நாட்களால் தன் தோட்டம் எப்படி இருக்கிறது என்று பார்க்கத் தோட்டக்காரன் அங்கு போனான். தோட்டத்தைப் பார்த்தான் அவனுக்குத் தலை சுற்றியது. காணாததைக் கண்டவனாகத் திகைத்தான்.

கத்தரி விதை நட்ட இடத்தில் பாகல்முளைத்து வளர்ந்து காய்த்திருந்தது. என்ன சங்கதி என்று கத்தரி விதை நட்ட புழுதியைத் தோண்டிப் பார்த்தான் மறுபக்கத்தில் பூசணி முளைத்துப் படர்ந்து பூத்திருந்தது. நாலா பக்கமும் திரும்பிப் பார்த்தான் வாழைகள் குலைதள்ளி நின்றன. அவனுக்கு திகைப்பாய் இருந்தது. தோட்டக் குடிகளைக் கூப்பிட்டு இது என்ன நடந்தது என்று கேட்டான். அவர்கள் ஐயையோ நாம் ஒன்றும் அறியோம். நாம் நீங்கள் தந்த கத்தரி விதையைத்தான் நட்டு நீர்பாய்ச்சினோம். எல்லாம் இப்படிக் கிடக்கிறது இதென்ன விபரீதம் நாமறியோம் எங்களை விட்டுவிடுங்கள் என்று சொல்லிவிட்டுத் தோட்டத்தை விட்டு ஓடிவிட்டார்கள். அவர்கள் ஓடியபின் தோட்டக்காரன் நாலுபக்கமும் பார்த்தான் வாழைகள் எல்லாம் கனிந்து பழுத்துச் சொரிந்தன. தோட்டக்காரன் எடுத்து சுவைத்துச் சுவைத்து உண்டு மகிழ்ந்தான். இந்தக் காட்சிதான் இப்பாடலில் எமக்கு வெளிப்படையாய்த் தெரிகிறது.

இதன் உள்ளே என்ன செய்தி சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பாடியபுலவரிடம் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். இதைப் பாடியவர் சாதாரண புலவர் அல்ல. திருமந்திரம் தந்த திருமூலர். இதில் ஞானம் பெறுவதற்குரிய யோக வழிபாட்டின் போது நிகழும் செயல்களையும் பெறும் பயனையும் கூறுகின்றார். அவர் தரும் விளக்கத்தைப் பார்ப்போம்.

வழுதலை என்பது கத்தரி - வழுதலை வித்து என்பதன் மறை பொருள் யோகப் பயிற்சி, பாகல் முளைத்தது என்பதன் மறை பொருள் கசப்பான மன அதிர்வு என்பது, புழுதியைத்

தோண்டினேன் என்பதன் மறைபொருள் மனதை ஆராய்ந்தேன் என்பதாகும். பூசணி பூத்தது என்பதன் மறைபொருள் தலை உச்சியின் உள்ளே மஞ்சள் நிறமான பொன்வண்ண சிவஒளி தெரிந்தது. தோட்டக் குடிகள் என்பது எமது உடலை இயக்கும் கரணங்கள். தொழுது கொண்டோடினர் என்பது செயலற்று அடங்கினர் வாழைக்கனி என்பதன் மறைபொருள் முத்தி சித்தித்தது என்பதாகும்.

இதன் உட்பொருள் நான் மனதை அடக்கி யோகவழிபாட்டில் ஈடுபட்டேன். யோகம் சித்தித்தவுடன் மனதில் இனந்தெரியாத அதிர்வு அலைகள் தோன்றின. யோகத்தைத் தொடர்ந்தேன் சகஸ்ராரம் என்னும் தலை உச்சியின் உள்ளே சிவஒளிக் காட்சி தெரிந்தது அந்த அளவில் பொறிபுலன்கள் அந்தக் கரணங்கள் எல்லாம் அடங்கின. முத்திப்பேறு கனிந்தது. பேரின்பத்தை நுகர்ந்து இன்புற்று இருந்தேன் என்பதாகும்.

நேரே செய்யுளில் வெளிப்படையாக இந்தக் கருத்தைப் பாடினால் மனதுக்கு இதமாயிருக்காது கவர்ச்சியும் அழகும் இருக்காது. இவ்விதம் தோட்டத்தில் நடக்கும் ஒரு சுவாரஸ்யமான காட்சிபோல மனதில் நடைபெறும் அகக் காட்சியைச் சொல்லும் முறை நயக்கத்தக்க தல்லவா.

இனி, இன்னுமொருவிதமான அணியழகைப் பார்க்கலாம். ஒரு சரக்குக் கடை வியாபாரத்தைச் சுவைபடச் சொல்வது போல வாழ்க்கையின் நிலையாமையைச் சொல்லும் சிலேடைப் பாடல் இது. இது ஒரு வெண்பா

**வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன**
**இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை – மங்காத**
**சீரகத்தைத் தந்தீரேல் வேண்டேன் பெருங்காயம்**
**ஏரகத்துச் செட்டியாரே.**

ஏரகத்து செட்டியாரின் சரக்குக்கடையில் வெங்காயம் இஞ்சி மிளகு திப்பிலி எனப்படும் சுக்கு, வெந்தயம், சீரகம், பெருங் காயம் முதலான சரக்குகள் இருக்கின்றன. ஒருவர் சரக்கு வாங்க வருகின்றார். வெங்காயத்தைப் பார்க்கின்றார் அதற்குள் இஞ்சி மிளகு திப்பிலி என்பன கலந்துபோய் கிடக்கின்றன. முகத்தைச் சுழிக்கின்றார். கடைக்காரர் நல்ல வெந்தயம் இருக்கிறது என்கின்றார். வெந்தயத்தைத் தனிய வாங்கி என்ன செய்வது இந்தச் சரக்குகள் சரியில்லை

என்கிறார். கடைக்காரர் நல்ல பெருங்காயம் இருக்கிறது வாங்குங்கள் என்கிறார். அப்படியா நல்ல சீரகம் இருந்தால் தாரும் பெருங்காயம் வேண்டாம் என்கிறார். சரக்குக் கடைக்காரர் ஏரகத்துச் செட்டியார்க்கும் சரக்கு வாங்கப் போனவருக்கும் நடந்த உரையாடல் இது. சுவாரஸ்யமான உரையாடல்.

இதன் உண்மைப்பொருள் சிலேடையாகச் சொல்லப்பட்டிருப்பதை அறியும்போது மனதில் மகிழ்ச்சி உண்டாகும். இதோ

வெங்காயம் என்பது வெங் + காயம் எனப் பிரிந்து நாம் விரும்பும் உடம்பு எனப் பொருள் தரும். சுக்கு ஆனால் என்பது சிதைந்து துகள்களாகப் போனால் எனப்பொருள்படும். வெந்தயம் என்பது வெந்த + அயம் அதாவது உடல் வெந்து சாம்பரானால் அதனால் என்ன பயன். ஆதலால் இந்தச் சரக்கை அதாவது உடலை இங்கு ஏன் வீணாகச் சுமந்து கொண்டிருக்க வேண்டும். இதற்குள் பிரகாசமான சீர் அகத்தை சிறப்பான மனத்தைத் தந்தீரானால் எனக்குப் பெருங்காயம் இந்தப் பெரிய காயம் ஆகிய உடல் தேவையில்லை என்பது இதன் உட்பொருள்.

இதன் தெளிபொருள் திருவேரகத்தில் இருக்கும் பெருமானே இந்தப் பெரிய உடம்பு இறந்து சாம்பராய்ப்போகும். இதனால் ஒரு பயனும் இல்லை. ஆதலால் எனக்குச் சீரான நல்ல மனத்தைத்தாரும் இந்த உடல் வேண்டாம் என்று ஒரு ஆன்ம ஈடேற்றம் விரும்பும் சித்தர் கேட்பதாக இது அமைந்துள்ளது.

சாதாரண சரக்குகளின் பெயர்களைப் பயன்படுத்தி ஒரு முத்தி இரகசியத்தைச் சுவைபடச் சொல்லும் இச் சிலேடைப் பாடல் நயம் தருவதாகும்.

இலங்கை வானொலி கலைக்கோலம் நிகழ்ச்சியில் 2012.06.14 இல் பதிவு செய்யப் பெற்றது.

உ
சிவமயம்

# பசிப்பிணி மருத்துவர்

உயிர் வாழ்வதற்கு உடல் வேண்டும். உடல் வாழ்வதற்கு உணவு வேண்டும். ஆகவே உணவு இன்றி உயிர்வாழ முடியாது. இவ்வுண்மையை எமது சங்கப்புலவர் குடபுலவியனார் என்பவர் புறநானூற்றுப் பாடல் ஒன்றில்

**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**

எனப்பாடுகிறார். உண்டி எனப்படுவது உணவு. உணவு கொடுத்தவரே உயிர் கொடுத்தவர் ஆவார். உணவை முதலாகக் கொண்டதே இந்த உடம்பு. உடம்பை அவர் உணவின் பிண்டம் என்கிறார். அதாவது உணவால் ஆனது உடம்பு என்பதை உணர்த்துகிறார்.

உணவாக உட்கொள்ளப்படுகின்ற பலவிதமான போஷாக்குச் சத்துக்களாலேதான் உடம்பு உருவாகின்றது. தாயின் கருப்பையில் உயிர் உற்பத்தியாகிய காலம்முதலே தாயின் தொப்பூழ்க் கொடியின் மூலம் கிடைக்கின்ற ஊட்டச்சத்துக்களின் மூலமே கருஉருவாகி வளர்கிறது. பின் பிறந்து இறக்கும் வரை உடலுக்கு உணவு தேவைப்படுகின்றது. உணவு இல்லாவிட்டால் உடல் இயங்காது.

உணவினால் உருவாகிய உடம்பிற்கு வேறு எது இல்லா விட்டாலும் உணவு தேவை. எரிபொருள் இல்லாவிட்டால் இயந்திரம் இயங்காது. அதுபோல மாயாயந்திரமாகிய உடம்பு இயங்குவதற்கு எரிபொருளாயுள்ளது உணவு. உட்கொள்கின்ற உணவு சமிபாட்டு உறுப்புக்களினூடே சக்தியாக - கலோரியாக மாறி உடம்பை இயக்குகிறது.

இந்த உடலுக்கு உணவு தேவைப்படுகின்ற போது பசி உண்டாகின்றது. பசிவந்துவிட்டால் வேறு எந்தவேலை இருந்தாலும் அதைவிடுத்துப் பசிக்கு உணவு வழங்கப்பட வேண்டும். பசிவந்து

விட்டால் பத்தும் பறந்துபோம் என்பது எல்லோர்க்கும் நன்கு அறியப்பட்ட பழமொழி. பசி வந்தால் உடனே பறந்து போகின்ற பத்தும் எவையென ஔவையார் ஒரு பாட்டில் பட்டியல்போட்டுக் காட்டுகின்றார்.

**மானம் குலம் கல்வி வண்மை பொறையுடமை**
**தானம் தவம் முயற்சி தாளாண்மை – மானின்**
**கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்**
**பசிவந்திடப் பறந்து போம்.**

என்கிறார். பசிவந்திட்டால் முதலில் பசிதீர்க்க உணவு தேவை. அந்த உணவைப் பெறுவதற்காகப் பசித்தவர் தனது தன்மானத் தைக் கைவிட்டுக் குலப்பெருமையைக் கைவிட்டுத் தான் பெரிய கல்விமானாக இருந்தாலும் அந்தப் பெருமையையும் கைவிட்டு, கொடைப்பண்பு, பொறுமை, தானம், தவம், தன் முயற்சி, காதல் முதலிய எல்லாவற்றையும் தள்ளி வைத்துவிட்டு உணவையே பெரிதாக மதித்து உணவு தேடுவதிலேயே ஈடுபடுவர். பசிக்குமுன்னால் அவருக்கு வேறு எதுவும் பெரிதாகத் தெரிய மாட்டாது.

உடலுக்கு அவ்வப்போது பலவித நோய்கள்வரும். அவற்றுக் குரிய மருந்தைப் பாவித்தால் நோய் மாறிவிடுகிறது. பசியும் உடலுக்கு வருகின்ற ஒரு நோய்தான். மற்ற நோய்களைவிடக் கொடிய நோய் பசி. பசிக்கு மருந்து உணவு. உணவு உண்ணப்பசி மாறிவிடும். ஆனால் மருந்து உண்ண நோய்மாறுவது போல மறாது. பசி நோய் மீண்டும் மீண்டும் வரும். உண்ட உணவு சமித்தவுடன் மீண்டும் பசி வரும். பசியை முற்றாக நீக்கவல்ல மருந்து உலகில் இல்லை. அதனால் பசியைப் பசிப்பிணி என்று புலவர்கள் சொல்வர். அது தொடர்ந்து பிணித்துக் கொண்டே வரும். ஆதலால் பசியைப் பிணி என்றார்.

காலையில் வந்தபசி காலை உணவு உண்ணமாறும். மீண்டும் மதியம்வரும். அது மதிய உணவு உண்ண மாறும் மீண்டும் இரவு வரும். இரவு உணவு உண்ண மாறும் மீண்டும் காலையில் வரும். இப்படியே சங்கிலித் தொடர் போல வந்து கொண்டே இருக்கும். உணவுப் பசிப்பிணியால் உயிர்கள் படும் பாட்டை ஔவையார் ஒரு பாடலில் அழகாகக் கூறுகின்றார்.

**ஒருநாள் உணவை ஒழிஎன்றால் ஒழியாய்**
**இருநாளைக்(கு) ஏல்என்றால் ஏலாய் – ஒருநாளும்**
**என்நோ அறியாய் இடும்பைகூர் என்வயிறே**
**உன்னோடு வாழ்தல் அரிது.**

பசிப்பிணியின் இருப்பிடம் வயிறு. பசி வயிற்றில் இருந்து தான் எழும். அதனால் வயிற்றையே விழித்துப் பாடுகின்றார். பசியுள்ள வயிறு சாதாரணமானதல்ல எந்நேரமும் இடும்பையாகிய துன்பத்தைத் தந்துகொண்டிருக்கும். அதேவேளை உணவை இடும் பையாகவும் இருக்கிறது. அதனால் வயிற்றைப் பார்த்து இடும்மை கூர் என்வயிறே நீ ஒருநாள் உணவை ஒழி, விட்டுவிடு என்றாலும் விடமாட்டாய். அதேவேளை இன்று நல்ல உணவு கிடைத்திருக்கிறது. நாளைக்கும் சேர்த்து உண்டுகொள் என்றாலும் ஏற்கமாட்டாய், என்னுடனே இருந்து கொண்டு என்னுடைய நோவை அறியாதிருக்கின்றாயே. உன்னோடு என் வாழ்நாளைக் கழிப்பது மிகக் கடினமாக இருக்கின்றதே என்று ஒருவித நகைச்சுவையுடன் கூறுகின்றார்.

சாதாரணமாகப் பாமரமக்கள் சொல்வதுகண்டு "இந்த ஒருசாண் வயிற்றுக்காகத்தானே இந்தப்படாத பாடுபடுகின்றோம்" என்று வேறு எதையும் ஒறுத்து வாழலாம், வயிற்றுப்பசியை ஒறுத்துவாழ முடியாது.

இதனை அருளாளர்கள் கூடக் குறிப்பிடத்தவறவில்லை சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூடத்தனது தேவாரத்தில்.

**வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்**
**பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்**

எனப்பாடுகின்றார். இந்த உடம்புபசியாகிய நோயால் நிரம்பிய பறியாகும் என்கின்றார். பசிப்பிணிக்கு அதாவது பசியாகிய நோய்க்கு மருந்து கொடுக்கும் மருத்துவர்களும் யாரும் உளரோ என வினவும் ஒருகாட்சியைப் புறநானூற்றில் காண்கின்றோம். பொதுவாக வள்ளல்களைப் புலவர்கள் பாடுவதுதான் வழக்கம். இங்கு பண்ணன் எனும் ஒரு வள்ளலை அரசனாகிய சோழன் குளமுற்றத்துத் துஞ்சியகிள்ளிவளவன் என்பவர் பாடியுள்ளார்.

பசியால் வருந்திய பாணர்கள் சிலர் பசிக்கு உணவு தருவார் யாரும்உளரோ என வழிப்போக்கர்களைக் கேட்கின்றார்கள். "பசிப்பிணி

மருத்துவன் இல்லம் அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே'' என வினவ, அதோ பாருங்கள், மழைவரப்போவதறிந்த சிறிய எறும்புகள் தமது முட்டைகளையும் காவிக்கொண்டு பாதுகாப்பான மேட்டு நிலம் நோக்கிச் சாரிசாரியாக வரிசை யாகச் செல்வதுபோலச் சோற்றுப் பொதிகளைக்கைகளில் ஏந்தியவர்களாகப் பெரியவர்களும் சிறியவர்களும் கூட்டங் கூட்டமாகச் செல்வதைப் பாருங்கள். அவர்கள் சிறுகுடிக்கிழான் பண்ணன் என்னும் பசிப்பிணி மருத்துவன் இல்லத்தில் பசியார உண்டு விட்டு மறுநாளும் உண்பதற் காகப் பண்ணன் கொடுத்த சோற்றுப் பொதியுடன் போகின்றார்கள். அந்த வழியிலே நீங்களும் போங்கள். பண்ணன் வீடுவரும். வீட்டுக்குள்ள அடையாளத்தையும் கூறுகின்றேன் கேளுங்கள்.

பழுத்த பெரிய மரத்தின் கனிகளை உண்பதற்காக நாலாபக்கங் களிலுமிருந்து வந்த பறவை இனங்கள் ஆரவாரிப்பது போல, உணவு உண்பவர்களின்ஆரவாரம் கேட்கும். அந்தவீடுதான் பசிப்பிணி மருத்துவன் வீடு. அங்கு போங்கள், பசிதீர உணவுதருவான், வீட்டுக்குக் கொண்டு பொகவும் தருவான், நாளையும் தருவான். கூசாமற்போங்கள் என்று கூறிவழிப்படுத்து கின்றார். அத்துடன் நில்லாமல் பசிப்பிணி மருத்துவனாகிய சிறு குடிகிழான் பண்ணன் நான் வாழும் நாளையும் பெற்று நீடூழி வாழ்வானாக என்று தன்வாழ் நாளையும் கொடுக்க முன்வரும் அரசனின் கொடைத் திறனையும் இங்கு காணலாம். இதோ பாடல்.

**யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய**
**பாணர்காண்க; இவண்கடும்பினது இடும்பை**
**யாணர் பழுமரம் புள்இமிழ்ந்தன்ன**
**ஊண்ஒலிஅரவம் தானும் கேட்கும்;**
**பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி**
**முட்டைகொண்டு வன்புலம்சேரும்**
**சிறுநுண் எறும்பின் சில்ஒழுக்கு ஏற்ப**
**சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்**
**இருங்கிளைச் சிறார்க் காண்டும்; கண்டு**
**மற்றும்மற்றும் வினவுறும்; தெற்றென்**
**பசிப்பிணி மருத்துவன் இல்லம்**
**அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே**

இந்தச் செய்தி மூலம் பசிப்பிணி நீக்கும் மருத்துவர்களும் உளர் என்பது அறிகின்றோம். நாம் ஒவ்வொருவரும் பசிப்பிணி மருத்துவர்களாக வாழ வேண்டும் என்பது திருமந்திரம் தந்த திருமூலர் சுவாமிகள் வாக்கு. அவர் "யாவர்க்குமாம் உணும் போதொரு கைப்பிடி" என்கிறார். நாம் உண்ணும்போது எமது உணவில் ஒருபிடி பசித்த ஏழைக்கு கொடுத்தல் எல்லாரும் செய்யக்கூடிய புண்ணியச் செயல் என்கிறார்.

"இல்லார்கொன்றீதலே ஈகை" எனச் சொன்ன வள்ளுவப் பெருமான்.

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**உதிய மில்லை உயிர்க்கு**

என்கின்றார். இல்லாதவர்க்கு ஈய்ந்து பசியாற்றி அதனால் வருகின்ற ஈந்து உவக்கும் இன்பத்தால் விளையும் புகழுடன் வாழ்தலே இல்வாழ்வின் உண்மைப்பயன் என்பதைத் தனது "புகழ்" எனும் அதிகாரத்தில் விளக்குகின்றார்.

பசித்தோர்க்கு உணவழித்தலையே கருப்பொருளாகக் கொண்ட மணிமேகலை எனும் காப்பியம் எங்கள் தமிழில் உள்ள ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று. அது அறம் கூறும் காப்பியம்.

சிலப்பதிகாரக் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த பெண் மணிமேகலை அவள் தந்தை தாயாரின் துன்ப வாழ்வு கண்டு இளமையில் துறவுபூண்டு மணிமேகலா தெய்வத்திடமிருந்து அட்சய பாத்திரம் அதாவது அள்ளஅள்ளக் குறையாத அமுத சுரபியைப் பெற்றுப் பசித்தோர்க்கு உணவளித்து உண்டி கொடுத்து உயிர் காத்த பசிப்பிணி மருத்துவராக விளங்கினாள்.

தானங்களில் உயர்ந்த தானம் அன்னதானம் என்பார்கள் அறவோர்கள். அதுவே உண்டிகொடுத்து உயிர் காக்கும் தானமாகும். நாம் ஒவ்வொருவரும் பசிப்பிணி மருத்துவர்களாக வாழ்வோம். இவ்வுலகிலிருந்து பசிப்பிணியை ஒழித்திடலாம். ஈந்து உவந்து இன்புற்று வாழ்வோம்.

இலங்கை வானொலி கலைக்கோலம் நிகழ்ச்சியில் 2012.12.11 இல் பதிவு செய்யப் பெற்றது

உ
சிவமயம்

# சிலேடை அணிநயம்

சில சொற்களும், சில தொடர்களும் நாம் மொழியைக் கையாளும் விதத்தைப் பொறுத்து இருவிதப் பொருளைத் தருவதுண்டு. அவ்விதம் இரு பொருள் தருவது சிலேடை எனப்படும். ஒரு சொல் இரு பொருள் தருமாயின் அது சிலேடை அணி என்று சொல்லப்படும். சிலேடைத் தொடர்களைப் பிரித்துப் பொருளுணர்ந்து பார்க்கும் போது மனதுக்கும், சொல்லும் போது கேட்போருக்கும் இன்பம் தரும். இதனைச் சிலேடை அணிநயம் என்று இலக்கியத்தில் கண்டு இன்புறலாம்.

தனிச்சொற்கள் சிலேடையாய் வருவதையும் சில தொடர்கள் சிலேடையாய் வருவதையும் சில பாடல்கள் சிலேடையாய் வருவதையும் இங்கு காண்போம்.

## வாரும் இரும்படியும்

ஒருவர் தனது நண்பர் வீட்டுக்கு வருகின்றார். அவரை வரவேற்ற வீட்டுக்காரர் "வாரும் இரும்படியும்" எனக்கூறி வரவேற்கின்றார். வந்தவர் ஒரு கணம் திகைத்துப்போய் நிற்கின்றார். வாரும் இரும்படியும் என்று இவர் என்ன பொருளில் சொல்கிறார் என்று சிந்திக்கின்றார். அவருக்கு இரு பொருள் படுகிறது. வரவேற்றவரையே கேட்டு விடுகிறார். நண்பரே நீர் என்னை வாரும், இரும், படியும் என்று சொன்னீரா அல்லது வாரும் இரும்பு அடியும் என்று சொன்னீரா என்று கேட்கின்றார். சற்று குறும்புத் தனமுடைய வீட்டுக்காரர். உம்மை நான் இருப்படிக்கச் சொல்வேனா, இரும் படியும் என்றுதானே சொன்னேன் என சமாளித்து விடுகின்றார். இங்கு இரும் படியும் என்ற தொடர் இரும், படியும் என்ற பொருளிலும் இரும்பு, அடியும் என்ற பொருளிலும் சிலேடையாக இரு பொருள் தந்த சிறப்பை நயக்கலாம்.

## தலைவிதிவசம்

இப்படியே தலைவிதிவசம் என்ற தொடரைத் தலை, விதி, வசம் எனப் பிரித்தால் எல்லாம் தலைவிதிப்படி நடக்கும் எனவும். தலைவி திவசம் எனப் பிரித்தால் தலைவி அதாவது மனைவியின் திவசம் எனவும் பொருள் தருவதைக் காணலாம்.

## தங்கவில்லை

ஒருவர் தனது குருநாதருக்கு தங்கக் காசுகளாலான தங்க வில்லை மாலை செய்து கொடுத்தார். தங்க வில்லைகள் என்றால் தங்கக் காசுகள். சில நாட்களின் பின் அவரைப் பார்க்கப் போனபோது அவருடைய கழுத்தில் தங்கவில்லை மாலையைக் காணவில்லை. தங்கவில்லை எங்கே என்று கேட்டார். குருநாதர் தங்கவில்லை தங்கவில்லை என்றார். இவருக்கு விளங்கவில்லை. குருநாதரே நான் தந்த தங்க வில்லை எங்கே என்றுதான் கேட்கிறேன் நீங்கள் தங்கவில்லை தங்கவில்லை என்கிறீர்களே என்றார். குருநாதர் சொன்னார் சீடனே நீதந்த தங்கவில்லையை யாரோ திருடன் கவர்ந்து விட்டான். அதனால்தான் நீ தந்த தங்கவில்லை என்னிடம் தங்கவில்லை என்று சொன்னேன் என்றார், தங்கவில்லை என்ற சிலேடைத் தொடர் பிரிக்காமல் அப்படியே இரு பொருள் தந்த சிறப்பை நயக்கலாம் அல்லவா.

## எலிமிச்சம் பழம்பத்திரம்

ஒருவர் சந்தையில் சில வகைப் பழங்கள் வாங்கி வந்தார். மனைவியை அழைத்து "எலிமிச்சம் பழம் பத்திரம்" என்று சொல்லிக் கொடுத்தார். மனைவி அதை வாங்கிப் பிரித்துப் பார்த்துவிட்டு எலிமிச்சம் பழம் பத்திரம் என்கிறீர்கள் இதற்குள் எலிம்பிச்சம் பழத்தைக் காணவில்லை என்கிறார். அவர் பெண்ணே நான் எலிம்பிச்சம் பழத்தை சொல்லவில்லை வாங்கி வரவுமில்லை வீட்டிலே எலி மிச்சம் அதாவது எலிகள் அதிகம் அதனால் பழங்கள் பத்திரம் என்றல்லவா சொன்னேன் என்றார். ஓகோ நீங்கள் எலி மிச்சம், பழம் பத்திரம் என்றா சொன்னீர்கள். நான் எலிமிச்சம்பழம் பத்திரம் என்று சொல்கிறீர்கள் என்று நினைத்து ஏமாந்து விட்டேன் என்றாள். இங்கு எலிமிச்சம் பழம் பத்திரம் என்றும் எலிமிச்சம்பழம் பத்திரம் என்றும் இத் தொடர் இருவகையாகப் பிரிந்து நின்று சிலேடைப் பொருள் தந்ததல்லவா.

**தங்கச்சிவந்தியா**

ஒரு வீட்டுக்கு பக்கத்து வீட்டுப் பெண்ணொருத்தி வந்தாள். முற்றத்திலிருந்த பூந்தோட்டத்தை பார்த்தாள், அங்கு தங்க நிறத்தில் செவ்வந்தி பூத்திருந்தது அதைக் காட்டி தங்கச்சிவந்தியா என்று கேட்டா, வீட்டுக்குள் நின்ற தங்கச்சி ஒன்று இதோ வந்தேன் என்று ஓடிவந்தது. அவசொன்னா நான் தங்கச்சி வந்தியா என்று உன்னை அழைக்கவில்லை இந்தப்பூ தங்கச் செவ்வந்தியா என்று அல்லவா கேட்டேன் என்றார். வந்தபெண் தங்கச் செவ்வந்தியில் சொக்கிப்போனா. ஓடிவந்த தங்கச்சி வெட்கிப்போச்சு. இங்கு தங்கச் செவ்வந்தியா என்றும் தங்கச்சி வந்தியா என்றும் இத்தொடர் இருவேறு விதமாகப் பிரிந்து நின்று சிலேடைப் பொருள் தந்த சிறப்பைப் பார்க்கலாம்.

**பணியாரம்தோசைவரும்**

ஒருவர் கோயிலில் சைவப்பிரசங்கம் கேட்கப் போனார். பிரசங்கியார் விகடமாகப் பேசவல்லவர். இவரும் அவரின் பேச்சைக் கேட்டு ரசித்துவிட்டு வீட்டுக்கு வந்தார். வீட்டில் இருந்தவர்களைப் பார்த்து "பணியாரம் தோசைவரும்" என்றார். வீட்டில் இருந்தவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி என்ன பணியாரம் தோசை வருமா? நல்லதாய்ப் போச்சு சாப்பிடலாமே என்றனர்.

அவர், பணியாரமும் இல்லை தோசையும் இல்லை இன்றைய பிரசங்கியார் பணியாரம்தோசைவரும் என்று சொன்னார். நாங்களும் ஏமாந்து போனோம். திகைத்துப் போய் இருந்தோம். அவர் விளக்கம் சொன்னார். பணியாரம் தோசைவரும் என்ற தொடரை பணியார் அந்தோ சைவரும் எனப்பிரித்து அந்தோ சைவரும் பணியார் என்று சேர்த்து ஐயையோ சைவர்களும் பணிய மாட்டார்கள் என்று விளங்கப்படுத்தினார். நானும் அதைத்தான் இங்கு சொன்னேன் என்றார். இத்தொடர் பணியாரம் தோசை வரும் என்றும் அந்தோ சைவரும் பணியார் என்றும் இருவகை யாகப்பிரிந்து நின்று சிலேடைப்பொருள் தந்த சிறப்பைநயக்கலாம்.

காளமேகப் புலவர்வசை பாடலில் வல்லவர் இம்மெண்ணு முன்னே எழுநூறு எண்ணூறு பாடல்கள் பாடவல்லவர். ஒருவழியிலே போய்க்கொண்டிருந்தார். வழிப்போக்கன் ஒருவன் வாழைப் பழக்குலை யுடன் வரக் குறுக்கே ஒரு பாம்பு வந்தது. பாம்பைக் கண்டவுடன் வாழைப்பழக்குலையைப் போட்டுவிட்டு ஓடினார். இதைக் கண்ட

காளமேகப் புலவருக்கும் பாடல் ஒன்று வந்தது. வாழைப்பழக் காரனைக் கூப்பிட்டார். ஏன் அப்பா ஓடுகின்றீர் பாம்பும் வாழைப்பழமும் ஒரேமாதிரியானவைதானே பாடுகின்றேன் கேள் என்று பாடினார்.

**நஞ்சிருக்கும், தோல் உரிக்கும், நாதர்முடி மேல்இருக்கும்**
**வெஞ்சினத்தில் பட்டால் மீளாது – விஞ்சுமலர்த்**
**தேம்பாயும் சோலைத் திருமலைராயன் வரையில்**
**பாம்பாகும் வாழைப்பழம்**

தேன்சொரியும் மலர்ச்சோலைகள் சூழ்ந்த திருமலை நாயக்கன் மலையில் பாம்பும் வாழைப்பழமும் ஒரே இயல்புள்ளவை. எப்படியென்று கேள் சொல்கின்றேன்.

பாம்புக்கு நஞ்சிருக்கும், வாழைப்பழம் நைந்திருக்கும், பாம்பு தோல் உரிக்கும். அதாவது செட்டை கழற்றும். வாழைப்பழமும் தோலுரிக்கும். பாம்பு சிவனின் முடியில் இருக்கும். வாழைப்பழமும் பஞ்சாமிர்தத்தில் சேர்ந்து அபிஷேகத்தின் போது சிவனின் முடியில் இருக்கும். பாம்பு கோபங்கொண்டால் கடிபட்டவர் தப்பமாட்டார். வாழைப் பழமும் பசியால் கோபங் கொண்டவர் வாயில் பட்டால் மீண்டுவராது. பார்த்தாயா பாம்புக்கும் வாழைப்பழத்துக்கும் உள்ள தொடர்பை என்றார். ஒரு தொடர்பும் இல்லாத பாம்புக்கும் வாழைப்பழத்துக்கும் சிலேடை பாடிய புலவர் காளமேகம் புகழ்வாழ்க.

பாம்பும் வாழைப்பழமும் நஞ்சிருக்கும், தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும், வெஞ்சினத்தில் பட்டால் மீளாது. சிலேடையின் பொருத்தப்பாடுதான் என்னே.

காளமேகப்புலவர் ஒருநாள் நண்பரின் வீட்டுக்குப் போனார். நண்பரின் நாய் குரைத்துக்குரைத்து அவரைக் கலைத்துக் கொண்டு வந்தது. நாய்க்கு எறிவதற்காக முற்றத்தில் கிடந்த தேங்காயை எடுத்தார். எறிவதற்கிடையில் நண்பர்வந்து நாயைப் பிடித்துக் கொண்டார். காளமேகத்தின் கற்பனையில் ஒரு கவிபிறந்தது. என்ன நண்பரே! உன்வீட்டு நாயும் தேங்காயும் ஒரேமாதிரி இருக்கே எனச் சிலேடையாகப் பாடினார்.

**ஓடும் இருக்கும் உள்வாய் வெளுத்திருக்கும்**
**நாடும் குலைதனக்கு நாணாது**

நண்பரே தேங்காய்க்கு ஓடும் இருக்கு, நாயும் ஓடும் களைத்தால் இருக்கும். தேங்காயை உடைத்தால் அதன் உட்பக்கம் வெள்ளையாய் இருக்கும். நாய்க்கும் உள்வாய்ப் பக்கம் வெள்ளையாய் இருக்கும். தேங்காய் குலையில் ஒழுங்காக இருக்கும். நாய் எசமானை நாடி விளையாடும். குலைப்பதற்கு நாணாமல் குலைத்துக் கொண்டிருக்கும். என்று சிலேடையாக நாயையும் தேங்காயையும் பொருத்திக் காட்டும் காளமேகத்தின் புலமையே புலமை.

இனி அழகிய சொக்கநாதபிள்ளையின் சிலேடைப் பாடல் ஒன்றைப் பார்க்கலாம். இவர் சிவனுக்கும் தேங்காய்க்கும் சிலேடை யாகப் பாடிய பாடல் இது.

**கல்லால் அடியுறலால் கண்மூன்றிருப்பதனால்**
**எல்லோரும் பூசைக்கு எடுத்திடலால் – வல்லோடு**
**கொள்ளுகையால் கங்காகுல முத்துசாமி மன்னா**
**கள்ளிதழி யான்நிகர் தேங்காய்**

**கல்லால் அடியுறலால்** - சிவன் கல்லால் மர அடியில் இருப்பதாலும் தேங்காய் கல்லால் அடித்து உடைக்கப்படுவதாலும்.

**கண்மூன்று இருப்பதனால்** - சிவனுக்கு மூன்று கண்கள் இருப்பதனாலும் தேங்காய்க்கும் மூன்றுகண்கள் இருப்பதனாலும்.

**எல்லோரும் பூசைக்கு எடுத்திடலால்** - சிவனை எல்லாரும் பூசை செய்ய எடுப்பதனாலும், தேங்காயை பூசைக்கு எடுப்பதனாலும்.

**வல்லோடு கொள்ளுகையால்** - சிவன் பிச்சை எடுக்க வலிய தலையோட்டை எடுப்பதனாலும், தேங்காய் வலிய ஓட்டை உடைய தாயிருப்பதாலும்

சிவனும் தேங்காயும் நிகரானவை எனச் சிலேடையாகப் பாடுவது பெருநயம் தருவதல்லவா.

இலங்கை வானொலி கலைக்கோலம் நிகழ்ச்சியில் 2012.12.11 இல் பதிவு செய்யப் பெற்றது

## சைவப்புலவர் சு. செல்லத்துரையின் நூல்கள்

1. கலைவாணி இசைப்பாடல் – கீதம்
2. சித்திரத் தேரில் சிவகாமி அம்மை – பாடல்
3. ஆனந்த மாலை – பாடல்
4. வாக்கும் வாழ்வும் – வானொலிப்பேச்சு
5. காரைக்கால் வரலாறும் திருவூச்சலும்
6. வள்ளல் ஏழூர் – சிந்துநடைக்கூத்து
7. அண்ணா பொன் ஏடு – வரலாறு
8. வாழ்வாங்கு வாழ்தல் – வானொலிப்பேச்சு
9. அரங்கப்படையல் – முத்தமிழ் நூல்
10. சிவநெறி – ஐரோப்பிய சிவநெறிக்கழகப் பாட நூல்
11. ஐயனார் புராண உரை
12. கல்வளை அந்தாதி – உரைவிளக்கம்
13. பஞ்சபுராணம் – உரை
14. மங்கல மனையறம்
15. மங்கலத் திருமணம்
16. சிவகாமிதமிழ் – கவிதை

## பண்டிதர் சி.அப்புத்துரையுடன் இணைந்து எழுதியவை

1. தொடக்கும் தொடர்பும்
2. அபரக்கிரியை விளக்கம்
3. பூப்புனித நீராட்டல்
4. திருமணக்கிரியை விளக்கம்